வாரித்தமிழ் வழங்கும் வள்ளல்

# பண்டிதர் மு. ஆறுமுகன்



# நூற்றாண்டு விழா மலர்

1914 - 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருப்பவர்கள்: பண்டிதர் மு ஆறுமுகன், நீ மு தியாகராஜா, நீ மு குமாரசுவாமி, நீ மு கணபதிப்பிள்ளை
நிற்பவர்கள்: Dr. கிருஷ்ணபிள்ளை, நீ மு பாலசுந்தரம், Dr. கிருஷ்ணபிள்ளையின் கார் ரைவர் - 1952

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரித்தமிழ் வழங்கும் வள்ளல்
# பண்டிதர் மு ஆறுமுகன் அவர்களின்
# நூற்றாண்டு விழா மலர்



*1914 2014*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதர் மு ஆறுமுகன், அவரது மனைவி மகேஸ்வரி தேவி,

மகள் தமிழரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


i முகவுரை ........................................................ 5
ii வாழும் வழி நன்குணர்ந்த மாமனிதன் ......................... 7
iii புங்குடுதீவு கல்விப்பாரம்பரியத்தின் முதுபெரும் சொத்து ... 29
iv அறிவுப்பிச்சை தந்த என் ஆசான் ..............................37
v பாவற்குளத்தில் பண்டிதர் ஆறுமுகன் ஐயா .................. 40


# தொடுத்த முத்துக்கள்

## பண்டிதர் மு ஆறுமுகன் எழுதியவை


1. பாலைதீவு ........................................................ 45
2. பொன் ஏட்டில் புகழ் பெற்ற புங்குடுதீவு ...................... 47
3. இனிய தமிழும் இயற்கையும் நடமிடும் தீவகங்கள் .......... 57
4. உள்ளக் குமுறல் ................................................ 61
5. உயிர்த் தமிழை ஈழத்தொளிர வைப்போம் .................... 64
6. முத்தமிழ் இன்பம் ...............................................65
7. இறைவன் ஆராய்ந்த அன்பு வாழ்க்கை .........................70
8. கற்பின் பெருமை ...............................................74
9. சிலேடை பாடிய நயினை நாகமணிப் புலவர் ..................79
10. உண்மைப் புலவன் ..............................................83
11. கடன்கொடுத்தால் அறவிடத் தெரியாதவர்களுக்கு ..........87
12. புயலடித்துச் சென்ற வள்ளம் .................................. 91
13. ஊரைதீவு வரகவி முத்துக்குமாருப் புலவர் .................... 96
14. சனிபிடித்திடு காக்கையே ...................................... 100
15. தெய்வ அருளும் வரும் தரும் .................................. 102
16. மனிதர் அநுபவிக்கும் சுவைகள் ............................... 105
17. தந்தையின் கடமை .............................................. 107
18. கீதை சொல்வதென்ன? ....................................... 108
19. சொல்லும் பொருளும் ........................................... 111
20. வாழ்வாங்கு வாழ ................................................ 116
21. இருமருந்து .......................................................118
22. பகையை வெல்லுதல் ............................................ 120
23. பொருளின் தேவை ............................................... 122
24. வள்ளியைக் கெஞ்சி மணந்தவண்டா! ........................ 126




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. திருக்கோணேஸ்வரர் வணக்கப் பாமலர் ....................128
26. மடத்துவெளி பாலமுருகன் வணக்கப் பாமலர் ............. 136
27. கிளிநொச்சிக் கந்தவேள் வணக்கப் பாமலர் ................ 139
28. பள்ளி எழுச்சி ................................................... 147
29. ஏழிசைச் சுரங்களும் பிறந்தன இங்கே ..................... 148
30. மாந்தையில் எழுந்த தூங்கெயில் ........................... 156

## பண்டிதர் மு ஆறுமுகன் பற்றிச் சொன்னார்கள்

31. பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள் ............................ 167
32. பண்டிதர் ஆறுமுகனார் மிகத்தெள்ளியனே ................. 168
33. பொன்னாடு புக்க புங்கை ஆறுமுகன் .................... 170
34. தமிழ் ஈழத்துக்கும் தமிழ் இனத்துக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு ........................................................... 171
35. செயற்திறன் மிக்க பண்டிதர் ................................. 173
36. பண்டிதமணியின் வழியில் வாழ்ந்த பண்டிதர் ................ 174
37. வாரித் தமிழ் வழங்கும் வள்ளல் ............................. 175
38. புங்குடுதீவின் முதற் பண்டிதர் ............................... 177
39. தமிழ்த்தாயின் தவப்புதல்வன் ................................ 180
40. குருவும் சீடனும் ................................................ 181
41. தமிழ்ப்பயிர் வளர்க்கும் தனிமுகில் ஒப்பாய் ................ 182
42. பொற்புடைய புகழ் உடம்பு .................................. 183
43. என்றுமே மறக்க முடியாதவர் ................................ 184
44. பெருமையாக நினைந்து வாழ்கிறோம் ...................... 185
45. ஈழத்து முத்தாவார் ........................................... 186
46. பண்டிதர் மாமா ................................................189
47. தனக்கென வாழாத் தன்மையாளன் ......................... 191
48. எம் நாட்டிற்கு பெருமை தேடித்தந்தவர் .................... 197
49. மறவாத நினைவுகள் .......................................... 198
50. பண்டிற் மாமா ................................................. 202
51. Pandit M Arumugan ......................................... 207
52. Inaugurating memories of Late Pandit M Arumugan209
53. Aasai Aiyaa ..................................................... 213
54. தந்தையின் குளிர் நிழலில் .................................... 214



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்
தந்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு" - (மூதுரை: 27)

என்ற ஔவையின் மூதுரைக்கு இணங்க வாழ்ந்து, தான் சென்ற இடமெல்லாம் மாணவர்க்கு கல்வியறிவையூட்டி வாழ்வாங்கு வாழ வழிசெய்த பண்டிதர் மு ஆறுமுகன் அவர்களின் நூற்றாண்டு விழாமலர் இது.

மனிதவாழ்வில் பிறப்பும் இறப்பும் யாவருக்கும் பொதுவானது. இவற்றுக்கு இடையே நாம் செய்யும் செயல்கள் எம்மை வேறு படுத்துகிறது. தன்குடும்பத்திற்காக மட்டும் வாழ்வாரிடையே மற்றோருக்கு உதவி செய்து பிறருக்காக வாழ்ந்தோரை இவ்வுலகம் போற்றக் கடமைப்பட்டு இருக்கிறது. அந்தக்கடமையின் வெளிப்பாடே இம்மலர்.

நல்லாசிரியராய் உலகியல் வாழ்வுக்குத் தேவையான விரிந்த பார்வையுடன் கூடிய அறிவொளியை மாணவர்க்கு ஏற்றியோரை மாணவர்கள் என்றும் மறப்பதில்லை. அதிலும் மாணவரது மனதில் மட்டுமல்லாமல் பெற்றோரின் மனதிலும் இடம்பிடித்து நிலைத்து நிற்கும் ஆசிரியர் மிகமிகச் சிலரே. தன்வீடு தன்வேலை என்று வாழும் ஆசிரியர்களைவிட மனிதநேயத்தைப் பேணிவாழும் ஆசிரியப் பெருமக்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

எந்த நடுஇரவு என்றாலும் பண்டிதர் ஆறுமுகனார் வீட்டுக் கதவு மாணவர்களுக்காகத் திறந்திருந்தது. கலப்புத்திருமணம் செய்த பெற்றோரையும் அவர்கள் பெற்ற பிள்ளைகளையும் அன்றைய சமூகம் என்னகொடுமைகள் செய்தது என்பதை இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் அறியாது. முஸ்லீமானவள் பெற்றாள் என்பதற்காக அடிபட்டு ஓடிச்சென்ற என்னை ஆதரித்துக் காப்பற்றிய பெருந்தகையே ஆறுமுகனார். அவர் சிலம்பம் சுற்றினால் சிலம்பம் அவரிடம் படித்திருக்குமா? என்ற நினைப்பு வரும். ஒருதடியால் எத்தனை பேரையும் எதிர்த்து வெல்வார். பெருவீரன். அந்தப்பெருமகனாருக்கு நூற்றாண்டு விழாவெடுக்க விழைந்த எமது எண்ணத்தை நிறைவுசெய்ய முன்வந்த அவரது மகள் தமிழரசி சிவபாதசுந்தரம் அவர்களுக்கு நன்றி.

பண்டிதர் ஆறுமுகனார் இனமதம் கடந்தவர் ஆயினும் தமிழும் சமயமும் சமுதாயமும் வாழத் தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். அவர் 1930களிலே எழுதத் தொடங்கிய சிறந்த எழுத்தாளன். எதையும் ஆராய்ந்து பேசுவார். அவரைப்பற்றி அவரவர் அறிந்ததை அவரது மாணவர்களும், நண்பர்களும், உறவுகளும் இம்மலரின் தேனாய் சிந்துகிறார்கள்.


பண்டிதர் ஆறுமுகனார் எழுதிய கட்டுரைகளை, கவிதைகளைத் தேடித் தொடுத்து 'தொடுத்த முத்துக்கள்' என்ற பெயரில் அவரது மகள் தமிழரசி தந்திருக்கிறார். இம்மலருக்கு மனம் மகிழ்ந்து ஆக்கங்கள் தந்தும், படங்கள் தந்தும் உதவியவர்க்கும், தம்மிடமிருந்த பண்டிதரின் ஆக்கங்களைத் தந்தோருக்கும், தினகரன் வாரமலரில் பண்டிதர் மு ஆறுமுகனார் எழுதியவற்றை தேடி எடுக்க ஏற்பாடு செய்த பண்டிதரின் பேரனுக்கும், குறைந்த காலத்துள் அவற்றைத்தேடி வாசித்து, எடுக்கவைத்து அனுப்பிய நல்ல உள்ளம் கொண்ட உயர்திரு இரத்னகுமார் அவர்களுக்கும், நூற்றாண்டு மலரின் அட்டையை வடிவமைத்து தந்த ஷியாமளனுக்கும் ஆறுமுகனாரின் மாணவர்கள் சார்பாக நன்றியைக் கூறுகிறேன்.

முகமது சலீம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும்வழி நன்குணர்ந்த 'மாமனிதன்'



பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள் புங்குடுதீவின் முதற் பண்டிதர் என்ற பெருமைக்குரியவர். புங்குடுதீவின் முத்துடையார் வழித்தோன்றலான நீலயினார் முத்துக்குமார் அவர்கட்கும் ஆறுமுகம் நாகம்மை (சிதம்பரநாயகி) அவர்கட்கும் ஐந்தாவது மகனாக 12/03/1914 அன்று பிறந்தார்.

குமாரசுவாமி, தியாகராஜா, பொன்னம்மா, கணபதிப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, நாகரத்தினம், பாலசுந்தரம் ஆகியோர் அவருடன் பிறந்தோராவர். மலேசியா புகழ் வைத்தியரும் பல்கலை விற்பனருமான அவரது தந்தை முத்துக்குமார் அவர்களிடம் மிகச்சிறுவயதில் தமிழ், இலக்கியம், இசை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாசம், சமயம், சோதிடம், வைத்தியம், சித்திரம் போன்றவற்றைக் கற்றார்.

தந்தை மலேசியா சென்றிருந்த பொழுது, மூத்த தமயன்மார் இருவரும் கொழும்பிலிருந்த சமயம், கணபதிப்பிள்ளை அண்ணன், பொன்னு அக்கா இருவரது உதவியுடன் பத்துவயது சிறுவனாய் இளையப்பா வாத்தியார், நல்லதம்பி வாத்தியார் போன்றோரின் தூண்டுதலால் புங்குடுதீவு முற்றவெளியில் புராண படனம் செய்யத் தொடங்கினார். அவரின் புராணபடனத்தைக் கேட்ட தீவுப்பகுதி மக்கள் அவரைக் கொண்டாடினர்.

அதனையறிந்த அவரது அண்ணன் தியாகராஜா கவலை கொண்டு, தனது தம்பி ஆழமாகக் கற்கவேண்டும் என நினைத்து, மலேசியாவிலிருந்து தந்தை வந்ததும் நடந்ததை எடுத்துச் சொல்லி புங்குடுதீவு கணேச வித்தியாசாலையில் படித்தவரை யாழ்ப்பாணம் முத்துத்தம்பி வித்தியாலயத்தில் சேர்த்தார். பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்களிடம் சங்க நூல்களையும், புராணங்களையும் கற்கவைத்து, மகா வித்துவான் சி கணேசையரிடம் இலக்கண நூல்களையும், குமாரசுவாமிப் புலவரிடம் திருமுறைகளையும் கற்க வைத்தார்.


ஆறுமுகனின் வசிகரமான தோற்றம், பேச்சாற்றல் இளவயதில் புராண படனம் செய்தது யாவும் பல அறிஞர்களின் அன்பை அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. பதினான்கு வயதில் எஸ் எஸ் ஸி பரீட்சையில் அதிவிசேட சித்தியடைந்தார். அதைக்கண்ட சைவவித்தியா விருத்திச்சங்க திரு தவராசரத்தினம், முத்துத்தம்பி வித்தியாலயத்தில் ஆசிரியராய் அமர்த்தினார். அந்நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் முதன் முதல் பதினைந்து வயதில் ஆசிரியரானார் என்ற பெருமை அவருக்குக்கிடைத்தது.

எஸ் எஸ் ஸி பரீட்சை எழுதிய பின் அதன் பெறுபேறு வரும் வரை கொழும்பில் இருந்த அவரது அண்ணனது கடையில் மனேஜர் போல் இருந்தாராம். அப்போது கொழும்பு தியேட்டர்களில் ஓடும் ஆங்கிலப் படங்கள் பார்ப்பதும், ராம்கார் [Tram car] ஓடிக்கொண்டிருக்கும் போது அதன் படிகளில் பாய்ந்து ஏறி விளையாடுவதும் அவரது பொழுது போக்காக இருந்ததாம்.



யாழ்ப்பாணம் சென்றிருந்த தியாகராஜா அண்ணர் திரும்பி வந்து "முதலாளி நீங்க சுகமா? பரீட்சைப் பெறுபேறு வந்துவிட்டது தெரியுமா? தொடர்ந்து படிக்கலாமே!" என்றாராம். வேண்டா வெறுப்பாய் "படிக்கவா!" என்பது போல் தமையனைப் பார்த்தாராம். "வா!" எனச் சைகையால் கூப்பிட்ட தமையன் அங்கிருந்த அலுமாரிகளுக்குப் பின் கூட்டிச் சென்று, "முதலாளியாகவிருப்பமோ" என்று கேட்டாராம். தானும் "ஓம்" என்று சொல்ல, தன் கன்னத்தில் மின்னல் மின்னியதாம். என்றுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்திராத தமையன் ஓரடி கொடுத்து "புறப்படு யாழ்ப்பாணம் போக" என்றாராம். அடித்ததற்காகவும், பரீட்சையில் சித்தியடைந்ததற்காகவும் உடனே காகில்ஸ் [Cargills] கூட்டிச்சென்று ஒரு ரலி சைக்கிலும் [Raleigh bicycle], சின்னப் பியானோ [piano] ஒன்றும் வாங்கிக் கொடுத்தாராம். அந்த அடியே, அவரைப் பண்டிதனாக்கியது என்பார்.

தீவுப்பகுதியில் ஆசிரியர்கள் பலர் இருந்தனர். ஆனால் அவர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகவோ பண்டிதர்களாகவோ இருக்கவில்லை. ஆறுமுகன் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் படித்து பதினெட்டு வயதில் (1932ல்) பயிற்சி பெற்ற ஆசிரியரானார். அதனால் மிக இளவயதில் பயிற்சி பெற்ற ஆசிரியரானவர் என்ற மதிப்பும் அவருக்குக் கிடைத்தது. தான் கற்ற ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியராக, ஆசிரியப்பணியைத் தொடர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் படிப்பித்த பொழுது யாழ்ப்பாணம் போல் புங்குடுதீவும் வளர்ச்சி அடையவேண்டும் என விரும்பினார். புங்குடுதீவில் பாடசாலைக்குச் சென்று படியாது பத்துப் பதினைந்து வயதாகியும் விளையாடித் திரிந்தவர்களை படிப்பிப்பதே அதற்குச் சிறந்த வழி எனக்கண்டார். அதற்கு என்ன செய்தார்? அதில் வெற்றி பெற்றாரா?

அதை "பண்டிதரின் பழைய வீடு ஒரு குருகுலம் போன்றே விளங்கியது. வீட்டின் முகப்பில் ஒரு கொட்டகை. இரவு முழுவதும் 'பெற்றோமாக்ஸ்' ஒளி தந்து கொண்டிருக்கும். என்னைப் போன்ற நாற்பது ஐம்பது மாணவர்கள் இரவு வேளைகளிலும், சனி, ஞாயிறுகளிலும், விடுதலைக் காலங்களிலும் அவருடைய கொட்டகைப் பந்தலில் அமர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்போம். படிக்கும் ஒவ்வொரு மாணவர்க்கும் ஒரு குப்பி விளக்கில் திரி போட்டு எண்ணெய் விட்டுத் தருவார். அதனை வீட்டுக்கு எடுத்துச் சென்று அந்த எண்ணெய் முடியும் வரை படிப்போம். அவர் அளித்த ஊக்கம் புங்குடுதீவில் ஒரு ஆசிரிய சமுதாயத்தை உருவாக்கியது. 'ஒருமரமும் தோப்பாமோ' என்பது பல ஆண்டுகளின் முன்னரே அவர் எனக்கு அறிவுறுத்திய தொடர். அவர் ஓர் ஆலமரம். எம்மைப் போன்ற பல மரங்களை உருவாக்கினார். அவருடைய தோப்பில் வளர்ந்து - கிளைத்து ஓங்கிச் செழித்து நிற்கும் மரங்கள் பலப்பல. அவர் கனவை நனவாக்கிவிட்டோம். பன்மரங்கள்! பல தோப்புக்கள்! பார்த்து மகிழ்ந்தார் பண்டிதர்." என அவருடைய மாணவன் வித்துவான் சி ஆறுமுகம் போற்றியுள்ளார்.

ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் படித்தபொழுது பலமுறை இந்தியா சென்று வந்ததால் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாருடன் தன் நட்பை வளர்த்துக் கொண்டார். அந்நாளில் இந்தியா செல்ல விசா எடுக்கும் வழக்கம் இருக்கவில்லை. ஆதலால் தீவுப்பகுதி மக்களுக்கு தலைவாசலும் வீடும் போலவே இந்தியா இருந்தது. அது அவருக்கு வாய்ப்பாக அமைந்தது.

பண்டித பரீட்சை எழுத விரும்பினார். எனினும் தந்தையின் விருப்பத்திற்காக இந்தியா சென்று ஹோமியோபதி மருத்துவம் கற்று, முதல் மாணவனாகத் தங்கப்பதக்கம் வென்று தேர்ச்சியடைந்தார். அவர் ஹோமியோபதி மருத்துவத்தில் தங்கப்பதக்கம் பெற்ற செய்தி இலங்கைப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அவரது படத்துடன் வெளிவந்தது. அதன் பின்னர் பண்டித பரீட்சை எழுதி சித்தி எய்தி புங்குடுதீவின் முதல் பண்டிதர் என்ற புகழையும் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் ஆறுமுகன் அவர்கள்
**18** வயதில்
பயிற்சி பெற்ற ஆசிரியராய் வந்ததற்கும்
ஹோமியோபதி மருத்துவத்தில் தங்கப்பதக்கம் வென்றதற்கும்
அவரது அண்ணன் நீ மு தியாகராஜா அவர்கள் வெளியிட்ட
**POST CARD [1932]**



இருப்பவர்கள்: பண்டிதர் மு ஆறுமுகன், நீ மு தியாகராஜா
நிற்பவர்கள்: க கந்தையா, க வேலாயுதபிள்ளை
[நால்வரும் மூன்று சகோதரிகள் பெற்ற பிள்ளைகளாவர்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் படித்த பொழுது, புங்குடுதீவுக்கு வள்ளத்தில் வந்து கொண்டு இருந்த வேளையில் [1931] மிகப்பெரிய சூறாவளியில் அகப்பட்டு அவர் வந்த வள்ளம் உடைய கடலினுள் மூழ்கினாராம். அப்போது வயலூர் முருகனை நினைத்துக் கதறக் கூர்வாய் மகரமீன் ஒன்று கவ்விவந்து பாலைதீவில் இட்டுச் சென்றதாம். அவர் சொன்ன கூர்வாய் மகரமீன் டொல்வினாக [Dolphin] இருக்கலாம் என நினைக்கின்றேன்.

இந்தியாவிலிருந்த போது இசையின் மேல் அவருக்கிருந்த காதலால் முறையாக சங்கீதம் கற்றதோடு, வீணைத் தனம்மாளிடம் வீணையும் கற்றார். வீணை தனம்மாள் போலவே சியாமாசாஸ்திரியின் பாடல்களில் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார். பாவற்குளத்தில் சுத்தானந்த பாரதியாருக்கு வீணையை மேலே நிமிர்த்தி வைத்து வாசித்துக் காட்டியதை நான் பார்த்துள்ளேன்.

இந்திய இசைவானில் பவனிவந்த M L வசந்தகுமாரி அவருடன் இசை (வாய்ப்பாட்டு) பயின்றவரில் ஒருவராவார். அந்த நட்பின் காரணமாக அவர் நடாத்திய மகாநாடுகளில் M L வசந்தகுமாரி பணம் பெறாது பாடிச் சென்றார். அவர் பண்டிதராக முன்பு 'சங்கீதம்' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரை, உ வே சுவாமிநாதையர் போன்ற பேரறிஞர்கள் எழுதிய கட்டுரைகளுடன் 'உரைநடைச் சிலம்பு' எனும் நூலில் வெளிவந்தது. அந்நூல் இந்தியாவிலும் இலங்கையிலும் உயர்வகுப்பு பாடநூலாக 1958 வரை இருந்தது.

1951ல் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்விழாவில் இலங்கை, இந்திய அறிஞர்கள் கலந்து கொண்டனர். பண்டிதர் ஆறுமுகன் "பார்ப்பானை அய்யன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற காலமும் போச்சே" என்ற தலைப்பில் தனது உரையை நிகழ்த்தினார். அப்போது அவர்

"வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன"

என்ற அகநானூற்றுப் பாடல் வரிக்கு 'வேளாளப் பார்ப்பனர் என்றும், யாகம் பண்ணாத ஊர்ப்பார்ப்பான் என்றும் கூறி பார்ப்பனர் சங்கு அறுத்ததற்கு பலர் பொருள் கூறுகிறார்கள். ஆனால் அப்பாடலின் பொருள் மிகத்தெளிவாகவே உள்ளது. 'வேளாப்பார்ப்பான்' என்ற சொல்லே சங்ககாலத்தில் பார்ப்பனர் என்ன தொழில் செய்தார்கள் என்பதை சொல்கிறது. வேள் + ஆ + பார்ப்பான் = வேளாப்பார்ப்பான். வேள் என்றால் வேள்வி, ஆ என்பது பசு. வேள்விக்கு வேண்டிய பசுவைப் பார்த்தவனே வேளாப் பார்ப்பான். மேற்பார்வையாளர் என்றும் கண்காணி (கங்காணி) என்றும் சொல்வதைப் போன்றதே பார்ப்பான். அது அவர்களது தொழில், சாதி அல்ல. அப்படி வேள்விப்பசுவைப் பார்த்த பார்ப்பானுக்கு வேள்விப்பசு சொந்தமானது அல்ல. அவன் பார்க்கும் பசுக்கள் எல்லாம் ஒருநாள் வேள்வித்தீயில் வெந்து நீறாய்விடும். அப்போது அவன் வாழத் தொழில் வேண்டாமா? உயிர்ப் பசுவை வேள்வித்தீயில் இடும் பார்ப்பானுக்கு, அரத்தால் சங்கை அறுத்து சங்கின் தலையை வேறாக்கும் தொழில் செய்வது கடினமா?' என்று பேசினார் அவர் கூறிய உரைப்பொருத்தங் கண்டு அறிஞர் மு வரதராசன் அவர்கள் எழுந்து பண்டிதர் ஆறுமுகனாரைக் கட்டித் தழுவினார்.

சப்ததீவுகளிலும் அந்நாளில் (1939) சாதி, சமயப் பெருமை இருந்தது. சாதிமான்கள் பலர், தங்கள் பிள்ளைகள் மற்றைய பிள்ளைகளோடு படிப்பதை விரும்பாது, பாடசாலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்து, ஆசிரியர்களை அடித்தனர். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினருக்கு அது தீர்க்கமுடியாத பிரச்சனையாக இருந்தது.

"அப் பிரச்சனையை தன்னால் தீர்க்க முடியும் என்றும், சிறுவனாகப் புராணபடனம் செய்து சப்ததீவு மக்களின் உள்ளங்களை வென்றதால் தன்னை யாரும் அடிக்க மாட்டார்கள். எதுநடந்தாலும் எதிர்க்க முடியுமென திரு தவராசரத்தினத்திடம் ஆறுமுகன் கூறினார். அவரின் விருப்பப்படி கிழமையின் ஒவ்வொரு நாளும் [காரைநகர், வேலணை தவிர்ந்த] ஒவ்வொரு தீவாகச்சென்று, அங்குள்ள பாடசாலைகளில் கல்வி கற்பித்ததோடு, கல்வியின் தேவையையும், இலக்கியங்களை மேற்கோள்காட்டி தமிழர் சாதி, மதம் கடந்தவர்கள் என்பதையும் எடுத்துச் சொன்னார். பெண்கல்வியின் அவசியத்தை தீவுப்பகுதி மக்களிடம் விதைத்தார்.

எப்போது காற்றடிக்கும், கடல் குமுறும், கருமேகம் சூழ்ந்து மழை பொழியும் என்பனவற்றை அறியமுடியாத காலமது. அதுவும் நெடுந்தீவு, அனலைதீவு, எழுவதீவு செல்வது கடினமாயிருந்தது. ஒவ்வொரு நாளும் பிரயாணம் செய்வதை அவரது தந்தை விரும்பாதபோதும் அவரின் தன்னம்பிக்கைக்கு மதிப்பளித்து நாகனாதி என்ற சுழிகாரரோடு அனுப்பிவைத்தார். அதனால் கொந்தளிக்கும் கடலில் நீந்தவும், சுழியோடவும் கற்றுக்கொண்டார். பின்னாளில் அதனைத் தன் தம்பிமாருக்குக் கற்றுக்கொடுத்ததோடு எனக்கும் கற்றுத்தந்தார். பலஇன்னல்கள் அப்பிரயாணங்களின் பொழுது ஏற்பட்டபோதும் நயினை நாகமணிப்புலவர் போன்ற அறிஞர் பலரின் அன்பும் ஆசியும் அவருக்குக் கிடைத்தது. பத்திரிகைகளில் நயினை நாகமணிப் புலவரின் பாடல்களின் விளக்கங்களை எழுதியதோடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்ததீவுகளுக்கும் புராணங்களுக்கும் உள்ள தொடர்புகளையும் எழுதினார்.

கோயில் பெயர்களைக் கூறிக்கொண்டு வரும் தண்டல் காரருக்கு, அந்நாளைய புங்குடுதீவுப் பெண்கள், கோற்காலியில் சேமித்து வைத்திருக்கும் நெல்லு, தினை, வரகு, குரக்கன், பயறு, உழுந்து போன்ற தானியங்களைச் சுளகு சுளகாகக் கொட்டிக் கொடுப்பதைக் கண்டார். அவர்களது அறியாமையை நீக்க யாழ்ப்பாணத்தில் இருந்து பன்னிரண்டு பேரை அழைத்து வந்து வட்டாரத்திற்கு ஒருவராய் காலையிலிருந்து மாலை இரண்டு மணிவரை 'வயித்துமாரி அம்மன்கோயிலுக்கு' என்று தண்ட விட்டார். ஐந்து மணிக்குப் புங்குடுதீவு மக்களை முற்றவெளிக்கு வரும்படி பறை அறைவித்து, அவர்கள் சேகரித்த ஏழுவண்டி நிறைய இருந்த பொருட்களைக் காட்டி "இவ்வளவு பொருட்களை கொட்டிக் கொடுத்த உங்களில் எவராவது 'வயித்துமாரி அம்மன்கோயில்' எங்கே இருக்கிறது என்று கேட்டீர்களா? என் தாய்க்கு, அண்ணனுக்கு, பிள்ளைக்கு வந்த நோய்களுக்கு வயித்துமாரி அம்மனுக்கு நேர்ந்ததாகக் கூறிக் கொடுத்தீர்களே! அது சரியா? எனது வயிற்றையே 'வயித்து மாரி அம்மன்' என்றேன். இனியாவது தண்டலுக்கு வருவோருக்கு கடவுளுக்குப் பயந்து கொட்டிக் கொடுக்காதீர்கள்" என அறிவுறுத்தினார்.

அதற்குக் காரணம் பெண்களுக்குக் கல்வியறிவு இல்லாமையே என்பதை உணர்ந்தார். பெண்கள் யாழ்ப்பாணம் சென்றும் கற்கலாம் என்பதை எடுத்துக் காட்டத் தனது தங்கை நாகரத்தினம், மருகி தையல்நாயகி போன்றோரையும் படிப்பில் ஆர்வமாக இருந்த தனது உற்றாரின் பிள்ளைகளையும் உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர்கல்லூரி, இராமநாதன் மகளிர்கல்லூரி போன்ற கல்லூரிகளில் சேர்ப்பித்து கல்வி கற்கச் செய்தார்.

விதைவைகள் விரும்பினால் மறுமணம் செய்யலாம் என்பது பண்டிதரின் கொள்கை. திருமணம் செய்து கணவனை இழந்தவர்களை மட்டும் விதவை என்று எமது சமுதாயம் எண்ணவில்லை. அதற்கும் மேலே ஒருபடி சென்று, திருமணம் நிச்சயித்தவன் இறந்தாலும் விதவை என்றே கருதப்பட்டாள். அத்தகைய ஒரு நிகழ்வு அவரது குடும்பத்தில் நிகழ்ந்த போது உறவினர்களை எதிர்த்து, மீண்டும் கல்வி கற்கவைத்து திருமணம் செய்து வைத்தார்.

புங்குடுதீவில் 'மகாவித்தியாலயம் கட்டி முடித்த பின்பு வீடு வீடாகச் சென்று உயர்கல்விகற்க மாணவரைச் சேர்ப்பது மிகக்கடினமாக இருந்ததென்றும் பலர் தன்னை அடிக்க வந்தார்கள் என்றும் சொன்னார். பண்டிதர் அடிவாங்கிக் கொண்டுபோய்ச் சேர்த்தவர் படித்து நியுசிலாந்தில் வேலை செய்வதைப் பார்த்து மகிழ்ந்தார். ஏழாம் எட்டாம் வகுப்புக்கு மேல் படிக்கும் காலத்தில் கொழும்புக் கடைகளில் வேலை செய்து பிள்ளைகள் உழைப்பார்கள் என பெற்றோர் எண்ணினராம். பெற்றோரின் முழு ஆதரவும் கிடைத்திருந்தால் இன்னும் அறிவும் ஆற்றலும் உள்ள மக்களை புங்குடுதீவு பெற்றிருக்கும்' எனக் கூறிக் கவலைப்பட்டார்.

அவர் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் (இணுவில் இந்துக்கல்லூரி) கற்பித்த போது வீரமணிஐயர் வீட்டில் தங்கி இருந்தார். சிறுவனான வீரமணி ஐயருக்கு தமிழ் கற்பித்து திருக்குறளில் பாடல்கள் எழுதவும் கற்பித்தார். வீரமணி ஐயரின் ஆடல் திறமையைக் கண்டு புங்குடுதீவு முற்றவெளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமணிஐயரின் நாட்டிய (அந்நாளில் கூத்து என்பர்) நிகழ்ச்சியை நடாத்தி, காசுசேர்த்து இந்தியா சென்று படிக்க பொற்கிழியாகக் கொடுத்துதவினார்.

விடத்தத்தீவில் கற்பித்த காலத்தில் கந்தையா வைத்தியநாதன் போன்றோருடன் சேர்ந்து திருக்கேதீஸ்வரத்து தொல்பொருள் ஆய்விலும், அங்கு சைவமகாநாடு நடைபெறுவதற்கும் உதவினார். திருக்கேதீஸ்வர கள ஆய்வு நடந்த நாளில் மாந்தை மாண்மியத்தின் தரவுகளைக் கொண்டு திருக்கேதீஸ்வரம் - மாந்தை பற்றிய ஆய்வு நூலை எழுதி 'மறைந்த மாநகரம்' என்ற பெயரில் வெளியிட்டார்.

இசையிலும் நாட்டுப்பாடல்களிலும் கொண்ட காதலால் ஈழத்தின் பல பகுதிலும் சேகரித்து, 3000க்கு கூடிய நாட்டுப் பாடல்களை ஒரு தேட்டமாக வைத்திருந்தார். அவர் எழுதிய நாட்டார் பாடல் கட்டுரைகள், சங்கத்தமிழ் கட்டுரைகள் டாக்டர் (PhD) பட்டம் பெறுவதற்கும் உதவின. பெண்கல்வி, சாதிஒழிப்பு, சங்க இலக்கியம், சைவசித்தாந்தம், கோயில்வரலாறுகள், அறிஞர்களின்சரிதையையும் ஈழகேசரி, வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற நாளிதழ்களிலும், விழாமலர்களிலும் எழுதினார்.

Dr. A C கனகசபை அவர்களின் பேத்தியும், ஓவசியர் தம்பிப்பிள்ளை பசுபதியம்மா தம்பதியினரின் மகளுமான மகேஸ்வரிதேவியை அனுராதபுரத்தில் திருமணம் செய்தார். அவர்கள் இருவரும் புதுமண மக்களாய் புங்குடுதீவுக்கு வந்த போது கணேசவித்தியாசாலையில் புங்குடுதீவே திரண்டு நிற்க திரு பசுபதிப்பிள்ளை, சின்னத்துரை விதானையார் போன்றோர் வரவேற்பளித்தனர். அவரது திருமண வாழ்வில் பெற்ற ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுக்கு தமிழரசி என்று பெயரிட்டு தனது தமிழ் மொழிப்பற்றை வெளிப்படுத்தினார்.

பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள் 1952ல் கொழும்பில் நடந்த தமிழ்மறைக் கழகத்தின் முதலாவது திருக்குறள் மகாநாட்டிற்கு வீணை வாசிக்கத் தன்னை முதன் முதல் கொழும்புக்கு அழைத்து வந்ததோடு, தமிழகத்து அறிஞர்களை அழைத்ததையும் லால்குடி ஜெயராமனின் சகோதரி வீணைக் கலைஞர் பத்மாவதி அவர்கள் சமீபத்தில் நினைவுகூர்ந்தார்கள்.

புங்குடுதீவில் சிலப்பதிகார விழாவை நடாத்த பண்டிதர் மு ஆறுமுகன் என்ன செய்தார் என்பதை அவ்விழாவிற்கு தலைமை தாங்கிய சிலம்புச் செல்வர் சிவஞானகிராமணியார் (மா பொ சி) அவர்கள், தாம் எழுதிய இரண்டு புத்தகங்களில் பதிவுசெய்து வைத்திருக்கிறார். அவற்றில் நம் ஊர் மக்கள் குடிப்பதற்கான நல்ல தண்ணீரை காசு கொடுத்து வாங்கி வருவோருக்கு சும்மா கொடுப்பதாகவும், ஒருவரின் இடுப்பில் இருக்கும் வெற்றிலையை மற்றவர்கள் கேட்காமல் எடுத்துப் போடுவதாகவும் எழுதியுள்ளார்.

அனுராதபுரம் எல்லாளன் ஆண்ட தமிழ்மண் என்ற காரணத்தால் அங்கே திருக்குறள் மகாநாடு நடக்கவேண்டும் என அவர் விரும்பினார். Dr. A C கனகசபை [மனைவியின் பாட்டனார்] புகழோடு அனுராதபுரத்தில் வாழ்ந்ததால் அக்குடும்பத்தினர் அங்கே பெருமதிப்புடன் வாழ்ந்தனர். அவர் அந்தச் செல்வாக்கை திருக்குறள் மகாநாடு நடாத்தப் பயன்படுத்திக் கொண்டார்.

அதனால் 1954ல் தமிழ் மறைக் கழகத்தின் திருக்குறள் மகாநாடு அனுராதபுரம் விவேகானந்தா வித்தியாலய மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திருக்குறள் ஏட்டுச்சுவடியை கதிரேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் யானையின் அம்பாரியில் வைத்து மகாநாட்டிற்கு எடுத்துச் சென்றனர். இலங்கை இந்திய அறிஞர்கள் அம்மகாநாட்டிற் பங்குபற்றினர். எனினும் தீவுப்பகுதியிலும் யாழ்ப்பாணத்திலும் தன்னிடம் படித்துப்பட்டம் பெற்றவர்களை அழைத்துப் பெருமைப்படுத்தினார். அனுராதபுரத்தில் அதற்குப் பின் அத்தகைய ஒரு தமிழ்மகாநாடு நடக்கவேயில்லை. இனி நடக்குமா? காலம் தான் பதில் தர வேண்டும்.

கொழும்பு நில்வீதி மத்தியகல்லூரியின்(அன்றைய) தமிழ்த்துறைத் தலைவராக பணிபுரிந்த காலத்தில் இலங்கை வானொலியின் கல்விச்சேவைக்கு பல விரிவுரைகளை வழங்கினார். அந்நாளில் அவரிடம் படித்து மெருகேற்றப்பட்டு வானொலிக்கு சென்றவர்களே எழுத்தாளர் சண்முகமும், திருமதி இராஜேஸ்வரி சண்முகமும் ஆவர். பண்டிதரின் மறைவின் போது தனது அளப்பரிய அன்பை இலங்கை வானொலியில் கொட்டித்தீர்த்தார் திருமதி இராஜேஸ்வரி சண்முகம்.

நில்வீதிமத்திய கல்லூரியிலிருந்து அதிபராக பொலநறுவை சென்றார். இலங்கையில் 1957ம் ஆண்டு தொடர்ந்து பெய்த மழையால் ஆறுகள் பெருகி, குளங்களுடைய, இலங்கையின் பல பகுதிகள் ஒருசில மாதங்களுக்கு வெள்ளத்தில் மூழ்கி இருந்தன. பொலநறுவையும் வெள்ளத்தில் மூழ்கியது. வீடுகளுக்கு மேலாகவும் வெள்ளம் பாய்ந்தது. அவருக்கு சுழியோடவும் நீந்தவும் தெரிந்ததால் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பலரை நீந்திக் காப்பாற்றியும், வீடு இழந்தோரை மீட்டுத் தான் படிப்பித்த பாடசாலை மண்டபத்திலும், குழந்தைகளை தன் வீட்டிலும் தங்கவைத்து உணவு கொடுத்தார். இன மத பேதமற்று அவர் செய்த அச்சேவை மனிதாபிமானச் செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வெள்ளப் பெருக்கில் யானைக் கூட்டத்திலிருந்து தவறி கல்லின் இடையே அகப்பட்டு இருந்த யானைக் கன்று ஒன்றை காப்பாற்றி வளர்த்தார். பின்னர் அதனை தெகிவளை மிருகக்காட்சிச் சாலைக்குக் கொடுத்தார். அது 'மெனிக்கா' என்ற பெயருடன் அங்கு பலகாலம் வாழ்ந்து இறந்தது. அவரது மிருகநேயத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

1958ம் ஆண்டின் இனக்கலவரம் அவர் பொலநறுவையில் படிப்பித்த போது நடந்தது. பொலநறுவை, அநுராதபுரப் பகுதியில் வாழ்ந்த தமிழரே அக்கலவரத்தில் அதிகம் தாக்கப்பட்டனர். 1958ம் ஆண்டு மே 22ம் திகதி தொடங்கிய அந்தக்கலவரம் ஒரு கிழமைக்கு மேல் நீடித்தது. அவரின் மனைவி குழந்தையுடன் தன் பெற்றோரைப்பார்க்க அனுராதபுரம் சென்றிருந்தார். அன்று சம்பளநாள். மற்றைய ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுத்தபின் சென்றதால் அனுராதபுரம் செல்லும் பேரூந்தைத் தவறவிட்டு, வேறு வண்டியில் அநுராதபுரம் வந்தார். அந்தஇரவு (22ம் திகதி) இனக்கலவரம் வெடித்திருப்பது அவருக்குத் தெரியாது.

அதிகாலையில் அவரது வீடு தடதட எனத்தட்டப்பட்டது. கதவைத் திறந்தால் அங்கே தமிழர் சிலர் ஓடிக் களைத்து இரத்தம் வடிய நின்றனர். அவர்களில் சுப்பிரமணிய வாத்தியாரும் இன்னொரு வாத்தியாரும் அவரது பாடசாலை ஆசிரியர்கள். பண்டிதரிடம் சம்பளத்தை வாங்கிக்கொண்டு அவருக்கு முன்னர் பேரூந்தில் சென்றவர்கள். மோதிரத்திற்கும் கைக்கடிகாரத்திற்கும் அவர்களது விரலும் கையும் துண்டிக்கப்பட்டு இருந்தன. உள்ளே வந்த சுப்பிரமணிய வாத்தியார் "பண்டிதர்! சிங்களக் காடையர் எங்களை கொல்லத் துரத்தி வருகிறார்கள், கதவைமூடுங்கள்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருப்போரின் நிலையைக் கண்ட பண்டிதர் துப்பாக்கியை [அனுமதிப்பத்திரம் பெற்ற துவக்கு] எடுத்துக் கொண்டு வீட்டுக்கு முன்னிருந்த கல்லுமலையின் மேல் ஏறிநின்று பார்த்தார். மலைக்கு அப்பால் இருந்த தமிழர் வீடுகள், குறவர் சேரி யாவும் தீப்பற்றி எரிய, ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிதறி ஓடுவதைக் கண்டார்.

அதைக்கண்ட பண்டிதர், வானத்தை நோக்கிச் சுட்டார். அம்மலையில் குகைகள் இருந்ததால் அவ்வெடிச்சத்தம் பலவெடியாக எதிரொலித்தது. அதைக் கேட்ட காடையர்கள் அங்கிருந்து சென்றனர். 1958ல் துவக்கு ஒருசிலரிடமே இருந்தது. அந்தக் கும்பலைச் சேர்ந்தோர் கத்தியும் கோடாரியும் நெருப்பும் கொண்டே தமிழரைத் தாக்கினர். எரியும் வீடுகளையும் மனிதரையும் காப்பாற்ற மலையிலிருந்து இறங்கிவந்தார்.

வெடிச்சத்தங்கேட்ட அவரது மாமனாரும் மைத்துனனும் அயலில் வாழ்ந்த சிங்கள வீட்டாரும் வெளியே வந்தனர். அவர்களது வீடுகள் வெசகிரிய கல்லுமலையோடு S போல் வளையும் இடத்தில், இன்றைய புனித நகரத்திற்குள் இருந்தது. கல்லுமலைக்கு அந்தப்பக்கம் வீடுகள் எரியும் புகை வானளாவிப் போவதைக் கண்டனர். அங்கு வந்த பண்டிதர் 'தமிழர் வீடுகள் தீக்கிரை' ஆக்கப்பட்டதைக் கூறி அங்கிருந்தவர்களுடன் சென்று காப்பாற்றாக்கூடியவற்றைக் காப்பாற்றினர். பண்டிதரின் மாமனார் தம்பிப்பிள்ளையின் நண்பனும் அநுராதபுரத்தில் அரசாங்க அதிபராக (GA) இருந்த வெள்ளைக்காரர், மாமனாரின் நிலைமை அறிய அங்கு வந்தார். துவக்குடன் பண்டிதர் நிற்பதைக் கண்டதும் நீயும் சிறுபான்மை, நானும் சிறுபான்மை. நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளவேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சொல்லி, துப்பாக்கி, பட்டி பட்டியாக தோட்டாக்களும் கொடுத்துச் சென்றார். அன்று தமிழரைக் காப்பாற்றிய சிங்களவர்களும் தாக்கப்பட்டனர். தமிழர், சிங்களவர் எனும் பாகுபாடின்றி மனிதர் காடையர்களால் தாக்கப்படுகின்றனர் என்ற நிலையே அங்கு நிலவியது. அதனால் அங்கிருந்த பெற்றோல்நிலையத்தின் சொந்தக்காரச் சிங்களவர் தற்பாதுகாப்புக்கு பெற்றோல் பொம் செய்ய பெற்றோல் கொடுத்தார். இரவில், காய்ப்பட்டோரும் ஆண்களும் அங்கேயே இருக்க, அயல் வீடான சாலிசில்வா என்பவரது வீட்டில் பெண்களும் குழந்தைகளும் தங்கவைக்கப்பட்டனர்.

பண்டிதரின் வீடு



முப்பதிற்கும் மேற்பட்ட தமிழ்க்குடும்பங்கள் காப்பாற்றப்பட்டன. அவரின் முயற்சியால் அக்குடும்பத்தோர் தருமபுரத்தில் (கிளிநொச்சி) குடியமர்த்தப்பட்டனர். இப்போது அபிவிருத்தி அடைந்திருக்கும் விசுவமடு, அக்கராயன் குளம் போன்ற பகுதிகள் அந்நாளில் யானைக் காடாகவே இருந்தன. தருமபுரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளும், சிறியபாடசாலையும் இருந்ததால் தர்மபுரத்தையே ஸ்ரீகாந்தா அவர்கள் சிபார்சு செய்தார்கள்.

அந்த இனக்கலவரத்தின் பின்னர் தமிழனுக்கு என்று ஓர் இடம் வேண்டும் என்ற கொள்கை உடையவராக பண்டிதர் மாறினார். பொலநறுவையிலிருந்து, பாவற்குளப் பாடசாலைக்கு அதிபராக அவரை இலங்கைக் கல்வித்திணைக்களகம் அனுப்பியது. அவரது கடிதத்திலிருந்த முகவரியில், பாடசாலையோ அதிபருக்கான வீடோ இருக்கவில்லை. அக்கிராமத்தில் பாடசாலையில்லாது, படிக்கவாய்ப்பற்று, நூற்றுக்குமதிகமான பிள்ளைகளிருப்பதைக் கண்டு, தனது கடிதத்தில் பாடசாலையின் முகவரி தவறுதலாக அச்சடிக்கப் பட்டிருப்பது தெரிந்திருந்தும், அதை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். வவுனியா அரசாங்க அதிபரைச் சந்தித்து அப்பாடசாலை நிலத்தில் கொட்டகை போடவைத்து, பாடசாலையை ஆரம்பித்தார். அவ்வூரில் இருந்த படித்தவர்களை ஆசிரியராகக் கொண்டு, பத்தாம் வகுப்புவரை மாணவர்களைத் தரம்பிரித்து பாடசாலையை நடாத்தினார். (அந்நாளில் அதிபர்கள் ஆசிரியர்களை நியமனம் செய்யலாம் என்ற சட்டமிருந்தது.)

இவர் போகவேண்டிய பாடசாலையினர் அதிபர் வரவில்லை என்பதைக் கல்வித் திணைக்கழகத்துக்கு அறிவிக்க கல்வித்திணைக்கழகம் பண்டிதர் எங்கே? எனத்தேடியது. அவரோ ஒன்றரை மாதத்தின் பின் தன் சம்பளம் வரவில்லை என கல்வித்திணைக்கழத்திற்கு அறிவித்தார். கல்வித்திணைக் கழகம் தான் விட்டபிழையை மூன்று மாதங்களின் பின் புரிந்துகொண்டது. எனினும் ஏழு, எட்டு மாதங்களின் பின்பே அவரது சம்பளப்பாக்கியைக் கொடுத்தது. அவருக்கோ கல்விக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கும் மாணவர்க்கு பாடசாலை ஒன்றைக் கட்டிக் கொடுத்த திருப்திகிடைத்தது. அப்பாடசாலையின் புதுக் கட்டத்தை அவரது நண்பனான சுத்தானந்த பாரதியாரைக் கொண்டு திறந்து வைத்தார்.

புங்குடுதீவின் கோட்டைக்காட்டில் கோட்டைகட்டி வாழ்ந்த மாறவர்மன் குலசேகரபாண்டியனின் மகள் எழுதிய சுயசரிதை ஏடுகள் அவரின் தந்தை முத்துக்குமாரர் வீட்டின் பெட்டகத்தில் ‘குலதனம்’ எனப்போற்றப்பட்டது. அவ்வேடுகள் பதிநான்காம் நூற்றாண்டுக்கான எழுத்தமைதியோடு இருந்தன. பண்டிதரின் தந்தை இறந்தபின், அவர் அவற்றை வாசித்ததால் அவள் தன் சுயசரிதையில் குறிப்பிட்ட இடங்களை ஆய்வுசெய்ய, அந்த இடங்களில் தங்கியிருக்க வேண்டியதை உணர்ந்து வவுனிக்குளத்திற்கு அதிபராகச் சென்றார்.

அங்கே வாழ்ந்த பரியாரி(வைத்தியர்), கடவுளப்பா என்ற இருவருடனும் சேர்ந்து காட்டுக்குள் தேடுவாரற்றிருந்த பண்டைய பாலிநகர் சிவன்கோவில், சிவலிங்கம், உடைந்த ஆவுடையார், நீராழி மண்டபம் போன்றவற்றைக் கண்டு பிடித்தார். அரசாங்கத்திடமிருந்து ‘சிவபுரம்’ கோயிலுக்கான நிலத்தைப் பெற்றுக்கொடுத்தோடு, அந்தக் கோயில் கட்டுவதற்கு முத்தமிழ் மகாநாடுகள் [1962, 1963, 1964] நடாத்தி நிதிசேர்த்துக் கொடுத்தார். இந்தியாவில் இருந்து சிற்பி கணபதியை அழைத்து வந்து கோயில் வேலையை ஆரம்பித்து வைத்தார்.

1964ல் வடகிழக்கு மாகாணத்தைக் கதிகலக்கிய சூறாவளி வீசிய போது மல்லாவியில் அதிபராயிருந்தார். அங்கும் சூறாவளியால் வீடிழந்தோரை பாடசாலையில் தங்கவைத்த தோடு, தான் சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தில் கற்ற தேற்றாங்கொட்டையை (தேத்தா) பாவித்து குடிநீரை தெளியவைத்துக் கொடுத்து மாணவர் பலரை வாந்தி பேதியிலிருந்து காப்பாற்றினார். மற்றோர் புகழ்வதற்காகச் எதனையும் அவர் செய்ததில்லை. நாற்பது வருடகால ஆசிரியப்பணியின் பின்னர் அவரது ஐம்பத்தியாறாவது வயதில் ஓய்வு பெற்றார். மதுரைமீனாட்சி, சிதம்பரம், வயலூர், திருக்கோணேஸ்வரம், புங்குடுதீவில் கண்ணகி அம்மன், கலட்டிப் பிள்ளையார், முருகமூர்த்தி, மடத்துவெளி பாலமுருகன்; கிளிநொச்சியில் கிளிநொச்சிகந்தசுவாமி, ஜெயந்திநகர் மீனாட்சிஅம்மன், கனகாம்பிகை அம்மன் போன்ற பல கோயில்களுக்கு பத்தும் பதிகமும் பாடியிருக்கிறார்.

மனைவி, மகள், பேரனுடன் நோயுற்ற நிலையில் பண்டிதர் **1982.**



மகள் கர்ப்பமாக இருப்பது தெரிந்து, தனக்கு வந்த நோய்பற்றி மகளுக்கு அறிவிக்காது தடுத்தார். குழந்தை பிறந்ததும் அவரது உடல்நிலைமை மகளுக்கு தெரிவித்தார். மகளும் பிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்தே நாளான குழந்தையுடன் இலண்டனில் இருந்து தந்தையைப் பார்க்கச் சென்றார். மகளையும் பேரனையும் கண்ட மகிழ்ச்சியில் மரணப்படுக்கையிலிருந்து கொண்டும் இரவிரவாக மகளுக்கு வீரமாதேவியின் ஏடுகளையும், மாந்தைமாண்மிய ஏட்டையும் கற்றுக் கொடுப்பதில் மிகுந்த அக்கறை காட்டினார்.

தான் நினைத்தவற்றை உடனே செய்துமுடிக்கும் ஆற்றல் அவரிடமிருந்தது. "என் மகளே சுடலை சென்று கொள்ளிவைக்க வேண்டும், என் மனைவி வெள்ளைச்சீலை உடுக்கக்கூடாது, பூவும், பொட்டும் வைக்கவேண்டும், மரணவீட்டில் எவரும் அழக் கூடாது. பறைமேளம் வேண்டாம். சங்கு சேமக்கலம் போதும். சலவைத்தொழிலாளியோ, முடிதிருத்துபவரோ சுடலையில் செய்யும் காரியங்கள் செய்யத் தேவையில்லை" என தனது மரணச்சடங்கிலும் பல புதுமைகளை செய்யும்படி எழுதிவைத்தார். அவர்

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்னும் வள்ளுவன் வாய்மொழிக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்.

அவரிடம் படித்து, அறிஞராய் புகழ்பெற்ற நூற்றுக் கணக்கானவர்களில் வித்துவான் ஆறுமுகம், வித்துவான் வேலன், பண்டிதர் கந்தசாமி, பண்டிதை புனிதவதி, கவிஞர் நாக சண்முகநாத பிள்ளை, திருப்பூங்குடி ஆறுமுகம், இணுவில் வீரமணிஐயர், மு தளையசிங்கம், மு பொன்னம்பலம், திருமதி இராஜேஸ்வரி சண்முகம், போன்ற பலரைக் குறிப்பிடலாம். தமிழும் கல்வியும் கருந்தனம் என்பதை நன்கறிந்து மாணவர்க்காக வாழ்ந்த அந்த ஞானச்சுடர் [25-07-1982]ல் அணைந்த போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தன்மைக் குற்றம் இயற்றிடினும் தாய்பொறுக்கும்
அத்தன்மைத் தாயதொரு ஆசானை நாமிழந்தோம்!
கற்றவரை மதித்துக் காசினியில் ஏற்றிவைக்கும்
நற்றமிழில் வல்லோனை நாமிழந்து விட்டோமே!
இனத்தார் துயர்துடைக்க எந்நேரமும் முந்தும்
மனத்தானை எண்ணி மனங்கலங்கி நிற்கின்றோம்!
ஈயும் உளங்கொண்டு இரவா உளம்படைத்த
தூயோனை எண்ணிமிகத் துயருழந்து வாடுகிறோம்!"

என அவரது மாணவி பண்டிதை புனிதவதி வருந்த,

"ஏழுபெருந் தீவகமும் ஏத்தெடுப்ப
இனிதோங்கி எழுந்த நல்லோன்
வாழும்வழி நன்குணர்ந்த 'மாமனிதன்'
முத்துடையார் மரபில் வந்த
ஆழமிகு பேரறிஞன் ஆறுமுகன்
பண்டிதனெம் அண்ணல் நாமம்
ஏழ்பிறப்பும் மறப்போமோ எம்இனிய
வழிகாட்டி! குருவே! வாழி!"

என அவரது மாணவன் வித்துவான் சி ஆறுமுகம் அவர்கள் வாழ்த்தினார்.

ஈழமெங்கும் தமிழை அள்ளி அள்ளிக் கொடுத்துப் பல அறிஞர்களை உருவாக்கி அவர்கள் வாழ்த்த வாழ்ந்த என் தந்தைக்கு மகளாய் என்னைப் படைத்திட்ட இயற்கை என்னும் பெரும் சக்தியைப் போற்றுகிறேன்.

தொகுத்தது,
பண்டிதர் மு ஆறுமுகனின் மகள் தமிழரசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு கல்விப்பாரம்பரியத்தின் முதுபெரும் சொத்து

பேராசிரியர் கா குகபாலன் யாழ்பல்கலைக்கழகம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமேற்கே அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவுக்கிராமம் நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டு பாய்க்கப்பலின் உருவத்தைப் போன்ற நிலத்தோற்றத்தினைக் கொண்டு உள்ள தீவாகும். இத்தீவு வாழ்மக்கள் வரலாற்றுக் காலத்திலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுடனும் தென்னிந்தியாவுடனும் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தொடர்பினைப் பேணிவந்துள்ளதை பல்துறைசார் அறிஞர்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாகத் தென் இந்தியாவில் ஏற்பட்ட பௌதிக மற்றும் அரசியல் மாற்றங்களால் தமிழக மக்களில் குறிப்பிடத் தக்கோர் புங்குடுதீவு உட்பட்ட தீவுப்பகுதிகளில் வந்து குடியேறிய சந்தர்ப்பங்கள் இருப்பதாக வரலாற்றறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட சாசனத்தில் பியாங்கு தீபம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பியாங்கு தீபம் காலப்போக்கில் புங்குடுதீவு என மருவியதாக தெரிவிக்கின்றனர். தென்னிந்தியாவில் இஸ்லாமியப் படையெடுப்பின் விளைவாக, அவர்களது கொடுமையின் காரணமாக தப்பி தமது கன்னிப் பெண்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இத்தீவில் வந்து குடியேறினர் எனவும் அவர்களால் இடப்பட்ட பூங்குடி என்ற பெயர் காலப்போக்கில் மருவி புங்குடுதீவு என வழக்கில் வந்துள்ளது எனக்கொள்வாரும் உளர். ஐரோப்பிய ஆட்சிக்காலத்தில் குறிப்பாக போர்த்துக்கீசர் கொங்கடிவா (Congardiva) ஒல்லாந்தர் மிடில்பேக் (Middleburg) எனவும் பெயரிட்டு அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க புங்குடுதீவுக் கிராமத்தில் 1901ம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பீட்டின் பிரகாரம் 5201 மக்கள் வாழ்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1982ம் ஆண்டு 14622 மக்களாக அதிகரித்த போதிலும் 1980களைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக புங்குடுதீவிலிருந்து 1991ம் ஆண்டு நிகழ்ந்த மாபெரும் மக்கள் வெளியேற்றத்தினால் 2012ம் ஆண்டு 4750 மக்களே வாழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. வரலாற்றுக் காலத்திருந்து இத்தீவில் வாழ்ந்து வந்த மக்கள், வாழ்வியலில் விவசாயத்தை முதன்மைப்படுத்தி தமது பொருளாதாரத் தேட்டத்தினை பெற்றுக்கொண்ட சமூக அமைப்பில் கல்விப்பாரம் பரியமும் மக்களோடு இணைந்து வளர்ந்து வந்ததை வரலாற்றுக் காலங்களிலிருந்து செவிவழிச் செய்திகளாக, ஆவணங்களாக எம்மூத்தோர் தொகுத்து அளித்துள்ளதை காணமுடிகின்றது.

குறிப்பாக குருசீட பரம்பரையாக திண்ணைப்பள்ளிகள், நிலாப் பள்ளிகள், குருகுலப்பள்ளிகளை நிறுவி கல்வியில் ஆர்வம் உள்ளோரின் கல்விவளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துள்ளனர். உதாரணமாக ஏறத்தாழ 200 வருடங்களுக்கு முன்னர் சட்டம்பி சேதுகாவலர், பெருங்காடு புட்டினிக் குளத்தின் வடகரையில் திண்ணைப்பள்ளி நிறுவி கல்வி போதித்தார் என வரலாறு கூறுகின்றது. இவர்களைத்தவிர குமரகுரு சட்டம்பியார், பரமானந்த சட்டம்பியார், சி கணபதிப்பிள்ளை, நீ சேதுபதி, வைத்தியர் வே கணபதிப்பிள்ளை, நீ ஆறுமுகவாத்தியார், நாகமணியர், நா தில்லையம்பலவாத்தியார் போன்ற பலர் 19ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் புங்குடுதீவுக் கிராமத்துக் கல்வியில் பெரும் பங்கு கொண்டிருந்தனர் எனலாம். 1830களைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சியில் கத்தோலிக்க மற்றும் அமெரிக்க மிசனரிமார் மடத்துவெளி, சந்தையடி, பெருங்காடு, சின்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுப்பிட்டி கிராமங்களில் முறைசார்ந்த கல்விக்கூடங்களை நிறுவினர். றிச்சட் கணபதிப்பிள்ளை அவர்களைத் தொடர்ந்து பொன்னையா வாத்தியார், அமரசிங்க வாத்தியார் போன்றோர் மாணவர்களின் கல்விவளர்ச்சிக்குத் தம்மாலான பங்களிப்பினை நல்கினர். இந்நிலையில் தமிழையும் சைவத்தையும் வளர்த்தற் பொருட்டு கல்வியியாளர்கள் பசுபதிப்பிள்ளை விதானையாருடன் சேர்ந்து சைவப் பாடசாலைகளை நிறுவ முயற்சி செய்து 1910ம் ஆண்டு புங்குடுதீவு கணேசவித்தியாசாலையினை ஆரம்பித்தார்கள். இதனைத் தொடர்ந்து படிப்படியாக இந்துப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்து 1940களில் ஒன்பதாக இருந்துள்ளது. இவை தவிர 1945ம் ஆண்டு மூன்று அரசபாடசாலைகளை அரசு ஆரம்பித்ததன் விளைவாக 1990ம் ஆண்டு புங்குடுதீவுக் கிராமத்தில் 15 பாடசாலைகள் இயங்கி வந்துள்ளன. 1991ம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் தற்போது எட்டுபாடசாலைகளே இயங்கிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பௌதீக ரீதியாக பலம் குறைந்த புங்குதீவுக் கிராமத்தில் 20ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் மக்கள் எண்ணிக்கை படிபடியாக அதிகரித்துக் கொண்டு செல்லவே சகலரும் விவசாயத்தில் ஈடுபட்ட போது அவர்கள் தம் வாழ்வாதாரத்திற்கு உற்பத்திகள் போதுமானதாகவிருக்காத நிலையேற்படவே திரை கடலோடியும் திரவியம் தேடு என்பதற்கிணங்க யாழ்குடாநாட்டிற்கும், நாட்டின் ஏனையபகுதிகளுக்கும் தொழில்நிமித்தம் இடம்பெயரத் தொடங்கிய போதிலும் அவ்விடப்பெயர்வு தற்காலிக இடப்பெயர்வாகவே காணப்பட்டது. இவை தவிர இக்கிராம மக்கள் தமது பிள்ளைகளை கல்வியினூடாக வளம்முள்ளவர்கள் ஆக்கவும் முயற்ச்சி செய்யலாயினர். இதன் விளைவாக இக்கிராமத்தினைச் சேர்ந்த பலர் ஆசிரியர்களாகவும் அரச தொழில்களில் ஈடுபடுபவர்களுமாக உருவெடுத்தனர். குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவம், பொறியியளாளர், கலை, விஞ்ஞானம், இயல், இசை, நாடகத்துறைகளில் கணிசமானவர்கள் உள்வாங்கப்பட்டனர். இந்நிலையானது 1940களிலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1960களைத் தொடர்ந்து புங்குடுதீவு மாணவர்களின் கல்வி மேன்மையுறலாயிற்று எனலாம். இவர்களின் கல்வி, கலாச்சார, பண்பாட்டு வளர்ச்சிக்கு இக்கிராமத்தில் வாழ்ந்த பலர் தமக்குரிய பங்களிப்பை நல்கி உள்ளனர். அவர்களின் கிராமத்து வாசம் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட சமூகத்தினை உருவாக்குவதற்கு பெரிதும் பங்கு கொண்டிருந்ததைக் காணமுடிகின்றது.

இவர்களில் புங்குடுதீவுக் கிராமத்தின் கல்விப்பாரம்பரியத்தில் ஒளிவிளக்காக திகழ்ந்தவர் பண்டிதர் முத்துக்குமாரு ஆறுமுகன் அவர்களாவர். இக்கிராமத்தின் கல்வி கேள்விகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியது மட்டுமல்லாது ஈழத்தமிழர்களின் கல்வி, சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றிய பெருமைக்குரியவராகத் திகழ்கின்றார். குறிப்பாகத் தமிழ் இலக்கியத்தில் மிகுந்த பாண்டித்தியம் கொண்டவராக திகழ்ந்தமையினால் உள்நாட்டிலும் தமிழகத்திலும் கல்விப் புலத்தினரால் பெரிதும் மதிக்கப்பட்டவர். தீவகத்தில் சமூக அடக்குமுறைக்கெதிராக குரல் கொடுத்து சமூகப் புரட்சியை ஏற்படுத்தியவர். கல்வியை வேண்டி நிற்போருக்கு தனது பட்டறிவைக் கொண்டு கல்விச்செல்வத்தை வழங்கியவர்.

இவ்வாறான பல்முகப்பார்வை கொண்டவராக வாழ்ந்த உயர்திரு பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள் இக்கிராமத்தின் முதுபெரும் சொத்தாக விளங்கியவர். படோபாகாரத்தை விரும்பாது தனது அறிவையும் ஆற்றலையும் தமிழ் சமூகத்திற்கு வாழ்நாள் முழுதும் வழங்கியவர். நாட்டில் நிகழ்ந்த அசாதாரண சூழ்நிலைகளினால் அவரால் வெளியிடப்பட்ட ஆய்வுகளை முழுமையாகப் பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. குறிப்பாக அவரது சமகாலத்தவர்கள், மற்றும் மாணவர்களின் இழப்புக்கள், மற்றும் புலம்பெயர் இடப்பெயர்வின் விளைவாக அவரால் வெளியிடப்பட்டாய்வுகள் கிடைக்கப்பெறா விடினும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆய்வுகளும் முத்தமிழுக்கு ஆற்றிய அரிய தொண்டுகள் பற்றிய அரிய பல தகவல்களின் மூலமும் இவர் ஆழ்ந்த புலமை கொண்ட பண்டிதராக இக்கிராமத்தில் வலம் வந்துள்ளார் என்பதையிட்டு நாம் ஒவ்வொருவரும் புளகாங்கிதம் கொள்கிறோம்.

புங்குடுதீவு கிழக்கு முத்துடையார் பரம்பரையினரான முத்துக்குமாரு நாகம்மை தம்பதியினர் செய்த தவத்தின் பயனாக பிறந்த எட்டுக்குழந்தைகளில் பண்டிதர் ஆறுமுகம் 1914ம் ஆண்டு பிறந்தார். பல்கலை விற்பன்னரான முத்துக்குமாருவால் அவர் சிறுவயதிலிருந்தே தமிழ் இலக்கியம், சமயம், இசை, சோதிடம், வைத்தியம், சித்திரம் போன்ற துறைகளைக் கற்றுத்தேர்ந்தார். இளவயதிலேயே மாகாவித்துவான் கணேசையர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை போன்றவர்களுடன் கல்வி தொடர்பான நட்பு கிடைக்கப் பெற்றது. சங்க இலக்கியங்களையும், இலக்கண நூல்களையுங்கற்று இத்துறையில் தனக்கெனவுரிய இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதன் விளைவாக இவரது 15 வயதிலேயே சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஆசிரியப்பணி வழங்கப்பட்டது. 18வது வயதில் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி தான் கல்விகற்ற புங்குடுதீவு கணேசவித்தியாசாலையில் ஆசிரியராக இணைந்து கொண்டார். பண்டிதர் ஆறுமுகன் அவர்கள் இளமைத் துடிப்புடையவராக இருந்தமையால் தனது கிராமத்தில் சகலரும் கல்வியினூடாக உயர்வடைய வேண்டும் என்று எண்ணி, பாடசாலைக் கல்விக்குப் புறம்பாக தனது வீட்டில் இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளிலும் லீவு நாட்களிலும் திண்ணைப்பள்ளியினை நடாத்தி கிராமமக்கள் கல்வியில் நாட்டம் கொள்ளவைத்தார்.

பண்டிதர் ஆறுமுகன் அவர்கள் தனது கல்விப் பரப்பினை விரிவுபடுத்தும் முகமாக மதுரைத் தமிழ் சங்கத்தாருடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தி பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து, புங்குடுதீவில் முதலாவது பண்டிதர் என்ற பெருமைக்கு உரியவரானார். தமிழ் இலக்கியத்தில் பெற்ற புலமையானது பண்டிதரை ஒரு பெரிய ஆய்வாளராக உருவாக்கியது. இவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் பல அங்கீகரிக்கப்பட்ட ஆய்விதழ்களில் வெளிவந்தமை பற்றி எமது கிராமத்தினைச் சேர்ந்த மறைந்த இலக்கிய கலாநிதி க சிவராமலிங்கபிள்ளை அடிக்கடி கூறுவதைக் கேட்டிருக்கிறேன். மேலும் இவர் தான் பெற்ற கல்வியையும் கௌரவத்தினையும் தனது கிராம இளைஞர்களும் பெறவேண்டும் என்ற நோக்கில் பலரை வித்துவான்களாக, பண்டிதர்களாக, இசைக்கலைஞர்களாக, சைவ சித்தாந்தவாதிகளாக, சமூகத் தொண்டர்களாக உருவாக்கிய பெருமைக்குரியவராகத் திகழ்கின்றார்.

தந்தையாரின் வழிகாட்டலுக்கு அமைய வைத்தியத்துறையில் குறிப்பாக ஹோமியோபதி மருத்துவம் கற்று, சிறப்புத் தேர்ச்சி பெற்று பகுதிநேர மருத்துவராக தன்னை இணைத்துக் கொண்டார். தமிழ் இலக்கியத்தில் கொண்டிருந்த அளவற்ற காதலின் விளைவாக தமிழ் அறிஞர்களுடன் இணைந்து பல மகாநாடுகளை நடத்திய பெருமையும் பண்டிதருக்குரியதாகும். குறிப்பாக திருக்கேதீஸ்வரத்தில் சைவமகாநாடு, திருவாசகவிழா, மற்றும் பண்டிதர் கா போ இரத்தினம் அவர்களுடன் இணைந்து கொழும்பில் தமிழ் மறைக்கழகத்தினை நிறுவி திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா, கிளிநொச்சியில் 16வது திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாநாடு, புங்குடுதீவில் சிலப்பதிகார மகாநாடு போன்ற பல இலக்கிய மகாநாடுகளை நடாத்துவதற்கு பெரும்பங்கு கொண்டுழைத்து அம் மகாநாட்டு மலர்களின் ஆசிரியராக இருந்தும் அதில் பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதியும் புங்குடுதீவுக்கு புகழ் சேர்த்த பெருமகனாவார்.

பண்டிதர் ஆறுமுகம் அவர்கள் சமூகரீதியாக ஒதுக்கப்பட்டமக்கள் சமூகத்தில் சம அந்தஸ்துடன் வாழவேண்டும் என்ற சிந்தனையை புங்குடுதீவுக் கிராமத்தில் முதன்முதலாக வெளிப்படுத்தி அதனைச் செயலிலும் செய்துகாட்டியவர். குறிப்பாக இவரது இளைமைக் காலத்தில் சாதி அமைப்பு முறை இறுக்கமாக கடைப்பிடிக்கப் பபட்டதால் சமூகரீதியாக நலிவுற்ற மாணவர்கள் உயர் சாதி மாணவர்களுடன் சேர்ந்து படிப்பதில் வேறுபாடு காட்டப்பட்டது. இதற்கெதிராக விழிபுணர்வினை ஏற்படுத்தியதுடன் ஏனைய தீவுகளுக்குச் சென்று பரப்புரையில் ஈடுபட்டவர். பின்னாட்களில் எழுத்தாளர் மு தளையசிங்கம் சாதி வேறுபாட்டுக்கு எதிராக குரல்கொடுத்து வெற்றிபெற்ற போதும் அதில் தன்னுயிரையும் மாய்த்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டிதர் ஆறுமுகம் அவர்கள் தனது கிராமத்தில் அளவற்ற அன்பு கொண்டவராக இருந்த நிலையில் தனது ஆசிரியப் பணியின் நிமித்தம் அதிக காலத்தினை வன்னியிலும் தென்னிலங்கையிலும் வாழவேண்டிய நிலை உருவானது. பின்னாட்களில் கிராமத்துடன் ஆன தொடர்புகள் சற்றுத் தளர்வுற்ற போதும் அவரது சொல்லும் செயலும் கிராமத்துக்கு உரமூட்டியவையாகவே இருந்துள்ளன.

பண்டிதர் அவர்கள் புகழ்பூத்த குடும்பத்தைச் சேர்ந்த மகேஸ்வரிதேவியுடனான திருமண வாழ்வில் தமிழரசி என்ற மகளை ஈன்று தான் எவ்வாறு கல்வி கேள்விகளில் பாண்டித்தியம் பெற்றாரோ அதே போல மகளையும் கல்விப் புலத்தினூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுக்கு அறிமுகப்படுத்தினார். திருமதி தமிழரசி ஆளுமைமிக்க கல்வியாளராக, இலக்கியவாதியாக, கவிஞராக, கலை கலாசார விழுமியங்களில் தெளிந்தவராக பேச்சுத்திறனில் வல்லவராக, சாதி, சமய வேறுபாட்டுக்கு அப்பாற்பட்டவராக, வரலாற்றைத் தெளிவுறக்கற்றவராக வளர்தாளாக்கிய பெருமை பண்டிதர் ஐயாவையே சாரும். உதாரணமாக திருமதி தமிழரசி அவர்கள் 1977ம் ஆண்டு அம்பலவாணர் அரங்கு திறப்பு விழாவில் ஆற்றிய உரை பற்றி எமது கிராமத்துப் பெண் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் தந்தையார் தமது மகளுக்கு கல்வியையும் பேச்சாற்றலையும் சிறப்பாகவே கொடுத்துள்ளார் எனக்கூறி தந்தையையும் மகளையும் வாயாரப் புகழ்ந்ததை நேரில் கேட்கக் கூடியதாகவிருந்தது.

பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள் தொடர்பாக என்னால் எழுதப்பட்ட புங்குடுதீவு வாழ்வும் வளமும் என்ற நூலில் அவரது கல்விப்புலமை பற்றி எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் பல கனதியான ஆய்வுகள் பல எழுதியுள்ளமை பற்றி பலரும் தெரிவிக்கின்ற போதிலும் அவ்வாய்வுகளில் பல எங்கோ மறைந்து கிடக்கின்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறையினர் அவரது ஆய்வுகளைச் சேகரித்து ஆய்வு செய்வதன் மூலம் தமிழ்த்துறையைப் பெருமையடையச் செய்யலாம். தற்போது அவரது நூற்றாண்டு மலரில் என்னால் சேகரிக்கக் கூடிய தரவுகள், தகவல்களைக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரையை எழுதுவதற்குக் கிடைத்த வாய்ப்பினை பெருமையாக கொள்கிறேன்.

பண்டிதர் ஐயா அவர்களின் நாமம் எமது கிராமம் தொடர்பான கல்விப்பாரம்பரியத்தில் என்றும் நிலைத்து நிற்கும் என்பது வெள்ளிடைமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுப்பிச்சை தந்த என் ஆசான்!

பிச்சை

என்னுடன் பிறந்த தம்பி தாய்முகம் பார்க்க, தாயும் என்முகம் பார்த்து கண்ணீர் சிந்தினாள். நான் இரண்டாம் வகுப்பில் படிக்கும் போது, எம் தந்தையை இழந்து குடிக்கும் கூழுக்கு வழியின்றி வாடினோம். என் வயிற்றுப் பசியும் தாயின் கண்ணீரும் என்னைப் பிச்சை எடுக்க வைத்தது.
"பிச்சை ஏற்று உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதிலும்"
அச்சமின்றி வாழ்ந்தேன்.

துடிப்பான சிறுவனாய், தாய் கற்றுத் தந்த பாடல்களைப் பாடிப் பாடி எங்கள் ஊர்க் கடைகளில் பிச்சை எடுத்தேன். ஒரு நாள் அந்தக் கடைத்தெருவில் இருந்த சாப்பாட்டுக் கடையின் முன் ஒரு கார் வந்து நின்றது. அத்தெருவில் அத்திபூத்தது போலத்தான் காரைப் பார்க்கமுடியும். காரின் பின் சீட்டில் இருந்து புதுமணத் தம்பதியினர் இறங்க, முன் சீட்டில் இருந்து ஓர் இளைஞனும் அவர்களது கார் டிரைவரும் இறங்கினர். கார் ரைவரைப் பார்க்க சிங்களவர் போல் தோன்றினார். அவர்கள் நால்வரும் சாப்பிடக் கடைக்குள் சென்றனர்.

அவர்கள் வரும்வரை என் கொட்டாங்கச்சி வில்லை மீட்டியபடி காத்திருந்தேன். அந்த இளைஞன் வந்ததும் பிச்சை கேட்டேன். தந்தார். நான் மற்றவர்களிடம் ஏதும் கேட்கவில்லை. கீழே காற்றில் பறந்து போன காகிதத்துண்டின் பின் ஓடிச் சென்று எடுத்துப் படித்தேன். என்னைக் கடந்து சென்ற அவர்களின் கார் நின்றது. அவர் காரின் பின் சீட்டில் இருந்து இறங்கிவந்தார். 'உனக்குப் படிக்க விருப்பமா?' என்று கேட்டார். தொடர்ந்து என் கொட்டாங்கச்சியைக் காட்டி 'இதை மீட்டிப் பாடுவாயா?' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார். இரண்டுக்கும் தலையை ஆட்டினேன். பாடிக்காட்டு என்றார். பாடினேன். என் வீட்டு நிலைமையும் கேட்டறிந்தார்.

என்ன நினைத்தாரோ தெரியவில்லை தன் இளம் மனைவியையும் இறங்கி தன்னுடன் வரச்சொன்னார். என் வீட்டுக்கு அவர்கள் இருவரையும் அழைத்துப் போகச் சொன்னார். அங்கே சென்றதும், 'என்னைத் தங்களுடன் அழைத்துச் சென்று படிப்பிக்கப் போவதாக' என் தாயிடம் கூறினார். தனது மனைவி என்னைத் தன் பிள்ளை போல் பார்த்துக் கொள்வார் என்றும் கூறினார். என்னைப் படிக்கவைக்க முடியவில்லையே என்ற கவலையில் இருந்த என் தாயும், அவரின் இளம்மனைவியிடம் என் கையைப் பிடித்துக் கொடுத்தாள்.

அதுவரை வாயே திறக்காத அவரது மனைவி வாய் திறந்து, நாம் இவனைக் கூட்டிச் சென்றால் தாயும் கைக்குழந்தையும் சாப்பிடவேண்டாமா? என்று கணவனிடம் கேட்டுக் கொண்டே தன் கையில் போட்டிருந்த வளையலைக் கழற்றி என் தாயிடம் கொடுத்தார். மனைவியின் செயல்கண்டு கணவனும், என் தாயும் திகைத்து நின்றனர். எனக்கு அப்போது அது புரியவில்லை. அப்போது அந்த அம்மையாருக்கு வயது பதினாறு பதினேழு இருக்கும். இப்போது அந்த அம்மையார் நான் தொழும் தெய்வமாய் இருக்கிறார்.

அன்று என்னை என் தாயிடம் இருந்து தத்தெடுத்த புதுமணத் தம்பதியினர் வேறுயாருமல்ல. பண்டிதர் ஆறுமுகனும் அவர் மனைவியுமே ஆவர். அவர்கள் இருவரும் என்னை அழைத்து வருவதைக் கண்டதும், காரின் முன் சீட்டில் இருந்த இளைஞன் - அவரது தம்பி ஆயுள்வேத Dr கிருஷ்ணபிள்ளை அவர்கள், பண்டிதர் சொல்லாமலேயே எனக்கு உடைகளும் புத்தகங்களும் வாங்கினார். எத்தகைய பண்பட்ட குடும்பம் அது! இப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க கண்ணீர் கசிகிறது. கிழிஞ்ச ஆடையும், புழுதி ஏறிய என்னுடலும் சில மணி நேரத்தில் பளிச்சிட்டன. அந்த மகராசியின் கைராசியோ என்னவோ அன்று தொடக்கம் என் பிச்சை வாழ்க்கை என்னைவிட்டுப் பறந்து ஓடிப்போய்விட்டது.

ஆனால் பண்டிதர் இட்ட அறிவுப் பிச்சை என்னை மனிதனாக்கி இலங்கையின் கல்வித்திணைக்கழகத்தில் மிகவுயர் பதவி வகிக்க வைத்தது. எத்தனையோ அறிஞர்களை என் வாழ்நாளில் கண்டிருக்கிறேன். ஆனால் ஒரு பிச்சைக்காரப் பையனை, இன்முகம் காட்டி வரவேற்று அறிவுப்பிச்சை இட்ட என் ஆசானைப் போன்ற சான்றோர் ஒருவரை நான் கண்டதில்லை.

என்னால்கூட இன்றுவரை வேறொருவர் பெற்ற சிறுவனுக்கு ஒருதவியும் செய்யமுடியவில்லை. என் ஆசான் போல் அதற்கெனப் பிறவியெடுத்து வருபவர்களால் மட்டுமே, அத்தகைய அரிய செயல்களைச் செய்ய முடியும். கைமாறு கருதாத பெருங்கொடையாளன். எவரிடமும் தான் யார்யாருக்கு என்ன செய்தேன் என்று சொல்லாத தன்மை அவரிடம் இருந்தது. அது சான்றோருக்கே உரிய குணமாகும். அதனால் அவர் செய்தவற்றை, சிலர் தாம் செய்ததாகக் கூறும் நிலை தோன்றியிருப்பதை இன்று காணமுடிகிறது. அவரால் என்னைப்போல் பல சந்ததிகள் தழைத்து ஓங்கி நிற்பதை நேரில் கண்டவன் நான். அத்தகைய பெருமையுள்ள என் ஆசான் பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள் என் மனச்சிம்மாசனத்தில் என்றும் வீற்றிருக்கின்றார். அவர் புகழ் இவ்வுலகம் உள்ளவரை என்றென்றும் இந்நிலம் தொட்டு நிற்கும்.

அறிவுப்பிசை தந்த என் ஆசானே! வாழிய! நின் திருவடி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவற்குளத்தில் பண்டிதர் ஆறுமுகன் ஐயா

பரமேஸ்வரன் நாராயணபிள்ளை, வவுனியா

ஈழத்திரு நாட்டில் வடக்கில் உள்ள வவுனியா மாநகரில் மேற்குத் திசை நோக்கி ஒன்பது மைலுக்கு அப்பால் அமைந்துள்ளது, பாவற்குளம் என்ற அழகிய கிராமம். ஒரு பக்கம் மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலமாகவும் ஒரு பக்கம் வயலும் வயல் சார்ந்த மருத நிலமாகவும் ஒரு பக்கம் காடும் காடுசார்ந்த முல்லை நிலத்தோடு மிகப்பெரிய வாவியும் ஒரு பக்கம் குடியேற்றத் திட்டங்கள் அமைந்த நிறைந்த வீடுகளையும் கொண்டு இயற்கை அன்னை மகிழ்ந்து இருக்கும் அழகிய கிராமம் பாவற்குளம்.

அந்நாளில் அங்கிருந்த குளத்தருகே நிறைய குருவித்தலை பாகற்காய்ச் கொடி [Momordica balasamina] படர்ந்து வளர்ந்து இருந்த படியால் இக்கிராமம் பாகற்குளம் என அழைக்கப்பட்டது என்பர். பாகற்குளம் என்ற பெயர் மருவி இப்போது பாவற்குளம் என அழைக்கின்றோம் என நினைக்கின்றேன்.

நான் இந்தக் கிராமத்துக்கு வரும்போது எனக்கு ஒரு வயது. அப்போது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பிறந்த இடத்தைவிட்டு இங்கு குடியேற்றப்பட்டோம். பெற்றோர் சகோதரங்களுடன் எனது வாழ்க்கை இங்கு ஆரம்பமானது. எமது வீட்டுக்கு முன் ஒரு காணித்துண்டு காடாக இருந்தது. அது பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட இடம் என்று தந்தையார் கூறினார். அந்தக் காலத்தில் அந்தக் கிராமத்தில் பாடசாலை இல்லை. கல்வி கற்போர் மிகக்குறைவு. படிப்பவர் கூட தொலைதூரம் சென்றுதான் படித்து வந்தார்கள். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகட்டத்தில் 1959 என நினைக்கின்றேன் வெள்ளை நசனல் [national] உடையில் ஒருவர் வந்தார். உயர்ந்த மெலிந்த அழகான திடமான உடல், நேரான பார்வை, சாந்தமான முகம் அழகான தமிழ் உச்சரிப்புடைய பேச்சு, தன்னை ஒரு ஆசிரியர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு இந்தக் கிராமத்தில் பாடசாலை ஆரம்பிக்கப் போவதாகக் கூறி அதற்குரிய வேலையும் செய்ய ஆரம்பித்தர்.

மிகக் குறுகிய காலத்தில் ஒரு சிறிய பாடசாலை கிடுகினால் வேயப்பட்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தானாகச் சென்று வீடு வீடாக மாணவர்களைச் சேர்த்து முடிந்தவரை கல்வி புகட்டினார். இப்போதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது, அப்போது அங்கு படித்த மாணவர்கள் சிலர் வேட்டியுடனும், சாரம் அணிந்தும், பெண் பிள்ளைகள் சேலையும் பாவாடைத் தாவணியுடனும் வந்து படித்திருக்கிறார்கள்.

நானும் அப்பாடசாலையில் அரி வரி எனச் சொல்லப்படுகின்ற பாலர் வகுப்பில் கல்வி கற்றேன். சிறிது காலம் செல்ல அப்பாடசாலைக்கு அரசாங்கத்தினால் சிறந்த கட்டிடம் கட்டப்பட்டு பாவற்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடாசாலை எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்தியாவில் இருந்து கவிஞர் சுத்தானந்த பாரதியாரை அழைத்து திறப்புவிழாச் செய்து, நிறைய மாணவர்களுடனும் பல ஆசிரியர்களுடனும் திறம்பட நடாத்தினார்.

பாடசாலைக் கல்விமட்டும் அல்லாது விளையாட்டிலும் ஊக்கம் கொடுத்து மாணவர்களை விளையாட்டுக்குத் தயார்படுத்தி முதன்முதல் வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கான போட்டியில் பங்கு பெறவைத்து பல பரிசுகளையும் பெறக் காரணமாக இருந்தார். அன்றைய நாள் இன்றும் ஞாபகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது. அன்று பாடசாலைக் கொடியை ஏந்தி மாணவர்கள், ஆசிரியர்கள், ஊர்மக்கள் எல்லோரும் சேர்ந்து பாவற்குளத்திற்கு ஜெய்! புண்ணிய குளத்திற்கு ஜெய்! என்று கோசம் போட்டு, அந்தக் கிராமத்தை வலம் வந்தது இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கின்றது.

பாடசாலை விடயங்கள் மட்டுமல்லாது ஊரிலுள்ள பொது விடயங்களிலும் முன்னின்று நடாத்தி நன்மதிப்பைப் பெற்ற சேவையாளராகப் பணிபுரிந்தார். கல்வித்திணைக்கழகம் அவரை அதிபராய் பாவற்குளம் 2ம் யூனிற் பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்லப் பணிக்க வேண்டிய கடிதத்தில், தவறுதலாய் பாவற்குளம் 1ம் யூனிற் முகவரியை இட்டதால் அவர் எங்கள் கிராமத்துக்கு வந்தார். இங்கே பாடசாலை இல்லாது - இக்கிராமப் பிள்ளைகள் கல்வி கற்க முடியாதிருப்பதைக் கண்டு, பாடசாலையை உருவாக்கினார். இப்படிப்பட்ட பண்டிதர் ஆசிரியர் திரு ஆறுமுகன் ஐயா அவர்கள் பல காலமாக அரச ஊழியம் எதுவும் பெறாமல் அப்படிபட்ட அரிய பெரிய சேவைகளை ஆற்றியதை நான் பின்பு தான் அறிந்து கொண்டேன்.

அவர்களுடன் சேர்ந்து அவரின் துணைவியார், மகள் ஆகியோரும் சகல சேவைகளிலும் பங்குபற்றியுள்ளார்கள். அதன் பின் அவர்கள் பணி மாற்றலாகி வேறு இடம் சென்றுவிட்டார். பின் நாளில் அப்பாடசாலை பாவற்குளம் தமிழ் மகாவித்தியாலயம் எனத் தரம் உயர்த்தப்பட்டு 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் 25க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுடனும் G C E சாதாரண தர [கா பொ த] வகுப்பு வரையும் இருந்தது. ஆனால் அப்பாடசாலை இன்று நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம் மாற்றம் செய்யப்பட்டு இரண்டு ஆசிரியர்களுடனும் 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுடனும் 5ம் வகுப்புவரை நடைபெற்றுக் கொண்டு இருப்பதை அறியும் போது என் மனம் வேதனைப்படுகின்றது.

எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்து, படித்து தொழிலுக்காக மாற்றலாகி தற்செயலாகப் பாவற்குளக் கிராமத்திற்கு வந்த பண்டிதர் திரு ஆறுமுகன் ஐயா அவர்களால் கல்வியிலே பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடிந்தது. ஆனால் அந்த பாடசாலையில் படித்த எத்தனையோ மாணவர்கள், புத்திஜீவிகள், உலகம் முழுவதும் வாழ்ந்து வருகிறார்கள். நாம் படித்த இந்தப் பாடசாலைக்கும், நாம் பிறந்த இக்கிராமத்துக்கும் நாம் என்ன செய்யப்போகிறோம்? என்ற கேள்வியை பண்டிதர் ஆறுமுகன் ஐயா அவர்கள் விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அவர் இன்று எம்மோடு இல்லாவிட்டாலும் அவர் செய்த அரும் பெரும் சேவைகளையும் நற்பண்புகளையும் நாம் என்றும் நன்றியுடன் நினைவில் கொள்வோம். அவருடைய புகழும் பெருமையும் என்றும் பாவற்குளத்தில் நிலைத்திருக்கும்.

எனது கருத்துக்களை பண்டிதர் ஆறுமுகன் ஐயா அவர்களின் நூற்றாண்டு மலரில் வழங்குவதற்கு என்னை மதித்து என்னைத் தொடர்பு கொண்ட அவரது மகள் திருமதி தமிழரசி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடுத்த முத்துக்கள்

பண்டிதர் மு ஆறுமுகன்

---


தொடுத்தவர் தமிழரசி சிவபாதசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. பாலைதீவு

1931ல் ஹோமியோபதி மருத்துவம் கற்பதற்காக இந்தியா சென்றிருந்த பதினேழு வயதான திரு ஆறுமுகன் அவர்கள் வள்ளத்தில் புங்குடுதீவு திரும்பிய அன்று, பெரிய சூறாவளி வீசியது. அச்சூறாவளி தென்கிழக்கு ஆசியாவை கதிகலக்கியது. அதில் சிக்குண்டு வள்ளம் கடலினுள் மூழ்க, கடலலையில் அகப்பட்டு தத்தளித்து தமது குலதெய்வமான முருகனை நினைத்துக் கதறினார். அதற்கு முருகன் என்ன செய்தார் என்பதை கீழே உள்ள பாடலில் பாடியுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிக்குள் வீழ்ந்தஎனைச் சுழியலை அமிழ்த்திட
அதல பாதால மருவியே
ஆசைக்கொர் மூச்சுவிட வழியின்றி அலையுண்டு
அதினின்று மேலேற நான்
வாழ்விக்க வேண்டுமென நின்பாத நம்பியே
வழிபட்டு அவல முற்றேன்
வானோர் தொழும்வள்ளலே மகரமீனாக வந்து
வாயினிற் பற்றி வந்தாய்
நாழிக்கொரு நெற்கொண்டு நானில வுயிர்காத்த
நங்கையுமை தந்த நாதா
நாதமுடிவான வொரு சோதி நடராசர் பெற
வேதபொருள் ஓது குருவே
வாழிதிரு வடிகளென ஓதிமுனிவோர்க டொழ
வேல்கடவு வேத முதலே
வானவர்க் கரசந்தரு யானயும் குறவர்பெறு
மானையும் மணந்த பெருமானே!

அந்த மீன் அவரைப் பாலைதீவில் சேர்த்ததாம். மூன்றாவது நாள் மீனவர்கள் துணையோடு மண்டைதீவுக்குச் சென்று அங்கிருந்து புங்குடுதீவுக்குச் சென்றார். அதனால் அவரது இரண்டாவது அண்ணன் தியாகராஜா அவர்கள் ஒவ்வொரு வருடமும் பாலை தீவு அந்தோனியாருக்கு திருவிழா செய்வதை வழக்கமாகாக் கொண்டிருந்தார். பண்டிதர் அவர்கள் அந்நிகழ்வை பத்துப்பாடல் கொண்ட பத்தும் பதிகமாகப் பாடியிருந்தார். எனக்கு இப்பாடல் ஒன்றே கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. பொன் ஏட்டில் புகழ் பெற்ற புங்குடுதீவு

## புங்குடுதீவு ஶ்ரீகணேச வித்தியாசாலை பழையமாணவர் சங்க வெள்ளிவிழா மலர் (1951)

புகழ் மலர்ந்த நாடு புங்குடுதீவு. இதன் புகழ் இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளின் முன் பொன் ஏட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் புதை பொருளாராய்ச்சியாளர் யாழ்ப்பாண நகரின் வடகிழக்கேயுள்ள வல்லிபுரக் கோவிற் பகுதியை ஆராய்ச்சி செய்வித்தார்கள். பல புதையல்களுடன் ஓர் ஏடும் அகப்பட்டது. அது பொன் ஏடு. அதிற்பொறிக்கப்பட்ட உரையின் சாரத்தைப் பாருங்கள்.

"புங்குடுதீவில் ஒரு புத்த விகாரை இருக்கின்றது. அங்கே வாழும் மக்கள் விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் மிகவும் ஆர்வமுள்ளவர்கள். நாகரிகமும் வீரமும் ஒற்றுமையும் உடையவர்கள்." என்பது. இப்பொன் ஏடு இப்பொழுது கொழும்பு மாநகரிலுள்ள நூதனக் காட்சிச் சாலையில் இருக்கின்றது. இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளின் முன் பண்பட்ட மக்கள் புங்குடுதீவில் வாழ்ந்தனர் என்ற உண்மையை பொன் ஏட்டின் மூலம் அறிகின்றோம்.

ஆனால் இற்றைக்கு இரண்டாயிரத்து ஐஞ்ஞூறு ஆண்டுகளின் முன்னர் தென்னிலங்கை அடர்ந்த வனமாக இருந்தது. கொடிய விலங்குகளும் இயக்கரும் அங்கே வாழ்ந்திருக்க வேண்டும். அப்பொழுதும் அதற்கு அப்பாலும் நாகரிகம் முதிர்ந்த தமிழ் மக்கள் வட இலங்கையில் - நமது தீவகப் பகுதியில் வாழ்ந்தார்கள். ஏன்! இலெமூரியாக் கண்டம் கடல் வாய்ப்படுமுன் நமது அருமையான சிறு தீவகம், அதன் பகுதியாய ஒரு பெருந் தமிழகமாய்க் கூட இருந்திருக்கலாம். அதற்குரிய சான்றுகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான சரித்திர வாயிலாக இன்னும் மக்கள் அறியவில்லை. இங்குள்ள நில அமைப்பும் மக்களின் கலாச்சாரப் பண்பாடுகளும் தென் இந்தியாவுடன் ஒத்தனவாகவே இருக்கின்றன.

காப்பியன் வகுத்த தமிழை நமது தமிழகம் மறந்ததாயினும் இப்பொன் தமிழ்த்தீவகம் மறக்கவில்லை. ஏனைய பல நாடுகளில் வாழும் தமிழ் நண்பர்கள், 'சிரட்டையை' சிறட்டை என்றும் 'முகிழைப்' பணுவில் என்றும் 'புகையிலையைப்' பொயிலை என்றும் மழலை பயிலுகின்றார்கள். புங்குடுதீவு மக்கள் பண்பட்ட பழந்தமிழ்ச் சொற்களையே வழங்கி வருகின்றார்கள்.

பண்டைக்காலந் தொட்டே வட இலங்கைத் தீவகங்கள் மாதோட்டத்துடன் தொடர்புள்ளனவாய் இருந்தன. தமிழ் மக்களும் தமிழரசரும் இப்பகுதிகளில் நிலைபெற்றிருந்தார்கள். திருக்கேதீஸ்வரத்தில் வைத்தே சிங்கள வமிசத்து முதல் அரசன் விசயனுக்கும் பாண்டிய இராசகுமாரிக்கும் மணம் நடந்ததென யாழ்ப்பாண சரித்திர ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்கள். இத்தொடர்புகள் யாவற்றையும் ஆராயுமிடத்து நமது தாயகமாகிய தீவகத்தில் மக்கள் ஆதிதொட்டு வாழ்ந்து வருதல் புலப்படுகின்றது.

சோழ சேர பாண்டிய சாம்ராச்சியங்கள் வன்மை பெற்று மரக்கலமோட்டி, மாகடல் கடந்து வாணிபஞ் செய்த அந்த நாளிலும் இத்தீவக மக்கள் அவர்களுக்கு உறுதுணை புரிந்து சோறு கொடுத்து உதவினர் அன்றியும் அறத்தையும் தமிழையும் வளர்த்தும் வந்தனர்.

சாத்தனார் கூறும் மணிமேகலையில் பேசப்படும் மணிபல்லவம் நயினாதீவைக் குறிக்குமென ஆராச்சியாளர் கூறுகின்றனர். அதற்கு அருகேயுள்ள 'இரத்தினத்தீவம்' எனப்பேசப்படும் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவுதான் என்பது சிங்கள சரித்திரமூலம் உண்மையென வலுப்பெறுகின்றது. அதாவது புத்தபகவானின் உபதேசங்களைப் பயின்று கொண்டு தொள்ளாயிரம் புத்த குருமார் புங்குடுதீவில் வாழ்ந்தார்கள். அதனால் "போதத்தீவென' இத்தீவகம் அழைக்கப்பட்டது. இந்தியர் இங்கே இறங்கி மாதோட்டத்திற்குத் தரைமார்க்கமாகச் செல்லும் வழக்கம் இருந்தது என்றும் சிங்கள சரித்திரம் கூறுகின்றது. இதுவரை கூறிய விஷயங்கள் யாவும் இத்தீவுடன் பண்டைய வெளிநாட்டு மக்கள் கொண்டுள்ள தொடர்பைக் காட்டுகின்றன.

இவ்வூரின் பழங்குடி தமிழ்மக்கள் தங்களுக்கு வேண்டிய உணவு உடை ஆகியவற்றைத் தாங்களே ஆக்கினர். பிறருக்குங் கொடுத்துத் தாமும் உண்டு, உடுத்து வாழ்ந்தனர். ஒரு நாட்டின் உயர்ந்த நாகரிகம் அந்நாட்டில் வாழும் மக்களின் தொழில், கலை, பண்பாடு, இயற்கைவளம் ஆகியவற்றிலேயே தங்கியிருக்கின்றது. இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் மேலைத் தேசத்தினர் பருத்தியாடை அணியாது வாழ்ந்தார்கள். அந்நாளில் இந்நாட்டு மக்கள் பருத்தியை உண்டாக்கினார்கள். பஞ்சை எடுத்தார்கள். அதிலிருந்து நூல் உண்டாக்கி நுண்ணிய ஆடைகள் செய்து உடுத்து மகிழ்ந்து வாழ்ந்தார்கள்.

நிலத்துக்கு உரமிட்டு வளம்படுத்தி நெல்விதைத்தார்கள். குளம் தோண்டி நீர்தேக்கிவைத்து நெல் விதைத்தனர். அன்றியுஞ் சிறு தானியங்கள் செய்தனர். வைத்தியம், சோதிடம், சித்தாந்த தத்துவம் ஆகிய துறைகளில் கைதேர்ந்த பரம்பரையான எத்தனையோ குடும்பப் பெரியோர்கள் இன்றும் தமது கலைச் செல்வங்களை நாட்டுமக்கள் அநுபவிக்க வாழ்கின்றார்கள். ஊணழகும் உடையழகும் கொண்டு உடலழகு பார்க்காமல் உயிரழகு கொள்ள வழிகண்டிருந்தார்கள். எங்குமாகிய இறைவனை திருக்கோயில்களில் நியமித்துப் பூசித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் பழந்தமிழ்க் கோயில்கள் பலவுள. கோயிலால் பேர்பெற்ற கிராமங்களும் உள. அவற்றிலொன்று "கோயிற்காடு". அக்கிராமம் தற்பொழுது 'வீராமலை' என வழங்கப்படுகின்றது. 'வீராமலை' என்பது வீர + அமலை - (கற்பு) வீரம் பொருந்திய அம்பாள் - கண்ணகி வந்து சேர்ந்த இடம். வீரபத்தினியின் சிலைவந்து அடைந்த பின்பு வீராமலை என வழங்கப்படுகின்றது. 'வீராமலை'யுடன் கர்ணபரம்பரையாக ஒரு கதையும் வழங்கி வருகின்றது பாருங்கள்.

இன்றைக்கு அறுநூறு வருடங்களுக்கு முன்பு இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு பெருவேளாளனுடைய எருமை மாடுகள் வழக்காமாகாக் கிடக்கும் குளத்தில் ஒருநாள் காணப்படவில்லை. அவற்றை ஊருக்குள் பல இடங்களிலும் தேடினார். காணப்படவில்லை. அவர் தென்கரை ஓரமாகப் பார்த்துக்கொண்டு போனார். கடலில் ஒரு கூப்பிடு தூரத்தில் எருமைகள் கிடந்தன. சந்தோஷத்துடன் ஓடிப்போனார். கரைப்பக்கமாக அவற்றைக் கொண்டு வரும் பொருட்டு அடித்து நடத்தினார். தாம் கிடந்த இடத்தையே அவை சுற்றிச் சுற்றி ஓடின.

இப்படி அவற்றைக் கரையேற்றக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது அவைகளின் நடுவில் ஒரு பெட்டி கிடப்பதைக் கண்டார். உடனே அதனைத் தூக்கிக் கொண்டு கரைக்குப் போனார். அந்த ஐந்தறிவுப் பிராணிகள் எல்லாம் கதறிக் கொண்டு அவர்பின்பு சென்றன. அவர் கரையில் இரண்டு கயிற்றடி தூரம் [176 அடி] போனதும் பெட்டியை வைத்துவிட்டுத் தனது உடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு பின்னரும் அதனைத் தூக்கினார். ஆனால் அவரால் பெட்டியை அசைக்க முடியவில்லை. இந்தச் செய்தி வாய்த்தந்தி மூலம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணப்பொழுதில் ஊரெங்கும் பரவியது. ஊரார் பலரும் வந்து பெட்டியைத் திறந்து பார்த்தார்கள்.

அதனுள் அவர்கள் கண்டதென்ன! வீராமலை!! வீரபத்தினித் தெய்வம். ஆம்! கண்ணகியம்பாள் உருவம் இருக்கக் கண்டார்கள். அந்த அம்பாளுக்கு கோவில்கட்டிப் பூசித்தார்கள்.

ஆம்! அந்த அம்பாள் கோவிலுக்குப் போனால் உண்மையில் திருச்செந்தூரில் நிற்கின்றோம் என்ற நினைவே தோன்றும். பரந்த நீலக்கடலலை 'வா! வா! ஏன் வந்தாய்?' எனப்புரண்டு மோதிக் கொண்டிருக்கும். 'வெண்மணற்கரை, இப்படிக் கொஞ்சம் இருங்கள், ஏன் கால்வலிக்க நிற்கவேண்டும்?' என்னும், குளிர்ந்த பிராணவாயு மெத்தனத் தவழ்ந்து வந்து, நம்மை அன்புடன் அழைத்துக்கொண்டு போகும்.

தெய்வசக்தியும் இயற்கை அன்னையின் அழகும் ஒருங்கமைந்து அந்தக் கண்ணகையம்பாள் கோவில் பூலோக சுவர்க்கமென எவரையும் ஆனந்தமடையச் செய்யும். வரகவி முத்துக்குமாரப் புலவரால் (ஊரதீவு) இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளின் முன் பத்தும் பதிகமும் பாடிப் போற்றப்பட்ட தலமது. "மணிமந்திரரூபிநீ" என்று தொடங்கும் புலவரது செய்யுள் '"கன்னலொடு செந்நெல் விளை புங்கைநகர் தன்னிலுறை கண்ணகைப் பெண்ணரசியே" என முடிகின்றது. இவையாவும் நம் தமிழ் மக்கள் பண்பாட்டைக் காட்டுகின்றன.

இனி, மேலை நாட்டினருள் ஒல்லாந்தரும் முதலில் நமது நாட்டில் வந்து தங்கள் மிருகபலத்தினால் இங்குள்ள மக்களை அடக்கிக் கோட்டைகட்டி வாழ்ந்தனர். இந்தத் தீவகமும் அவர்கள் சுயதேசத்தைப் போலக் கடல்வளமுடைமையினால் போக்கு வரவுக்கு வசதியாய் இருந்தது. அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைகள் இருந்த இடம் 'கோட்டைக்காடென' இன்றும் பெயர் வழங்கிக் கொண்டிருக்கின்றது. அவர்களின் கோட்டைகள் அழிந்து சிதைந்து இப்பொழுதும் காணப்படுகின்றன. தற்பொழுது கோட்டைக் காட்டில் 'மன்னியாகுளம்' என்று சொல்லப்படும் ஓர் இடம் உண்டு. போர்த்துக்கீச ஒல்லாந்த தளபதிகள் பல இடங்களில் இருந்து வந்து மந்திராலோசனை செய்த இடமென்பர். (கோட்டைக்காடிலுள்ள சிதைந்த கோட்டையின் சுவடுகள் மேலை நாட்டினர் கட்டியதல்ல என்பதை இக்கட்டுரை எழுதிய பின், வீரமாதேவியின் ஏடுகள் மூலம் அறிந்து கொண்டார்). 'மன்னியாகுளம்' - 'மன்னர்குழாம்' என எந்த நாளில் வழங்கியதென்று முதியோர் சொல்கின்றார்கள். அவர்கள் அரசு புரிந்த காலத்தில் ஒரு நன்மையும் செய்து சென்றுள்ளார்கள். அதுதான் அவர்கள் கிறிஸ்தவ மதத்தை விட்டுச் சென்றதாகும்.

இவற்றைக் கூறுமுன்பு இந்நாட்டில் அன்று தொட்டு இன்றுவரையும் சைவசமயமே தழைத்தோங்கி வருகின்றது. புத்த மதத்தினர் இடையில் வந்து போனார்களே யொழிய இந்நாட்டு மக்கள் அம்மதத்தை அனுட்டிக்கவில்லை. அதன்பின் வந்த ஆங்கிலராட்சியில் இந்நாடும் மற்றைய நாடுகளுடன் அடிமைப்பட்டிருந்தாலும் ஓரளவு நன்மையும் அடைந்திருக்கின்றது. கல்வி, சமயம், போக்குவரத்துச் சீர்திருத்தம், நீதி என்பவற்றில் ஈழத்து ஏனைய நாடுகளுடன் போட்டி போடக்கூடியதாக இருத்தலே அது.

யான் இங்கே இத்தீவகத்தின் பழம் பெருமைகளை எடுத்துக் கூற வல்லேனல்லேன். இதைச் சரித்திரப் பேராசிரியர் திரு வையாபுரிப்பிள்ளை, தமிழாராச்சித் தலைவர் சுவாமி தனிநாயக அடிகள் போன்ற பெரியார்களுக்கு விட்டுவிடுவோம். அவர்களால்தான் இந்நாட்டின் பண்பு நலனையும் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்றமிழ் நலனையும் சரித்திர நில அமைவுகளையும் நன்றாக நுணுகி ஆராய்ந்து கூறமுடியும்.

இவ்வளவு நேரமும் நம்முடன் ஈடுபட்டுக்கொண்டிருந்த எங்கள் தந்தையார் நாட்டின் நீளம் ஆறுமைல், அகலம் நான்கு மைல், கோடைத் தென்றலும் மாரி வாடையும் பெறும் நாடு. தென்றல் தவழும் தென் சமுத்திரக்கரை ஓரத்திலே மாலை நேரத்திலே தண்டு கொண்டு தோணி தள்ளுதலே பேரின்பம். கீழைக் கடல் மதியும் மேலைக்கடல் ரவியும் நீலக் கடலலையில் உயர்வதும் தாழ்வதும் பூரணத் தினத்தில் பார்க்கும் அதிஷ்டர்களை இயற்கை என்னும் இறைவன் தனதிரு கண்களினால் அன்புடன் பார்ப்பதை ஒக்கும். மேற்குக் கடலின் ஓரத்தில் குறிகாட்டுவான் இருக்கின்றது. அதில் நின்று சப்ததீவுகளையும் பார்க்கும் பொழுது பாற்கடலில் மரகதப்பேழைகள் மிதந்து கொண்டு நம்மை நாடி வருவன போலத் தோன்றும்.

பண்டைக்கால சேர சோழ பாண்டிய வாணிபம் இன்றும் நடைபெறுகின்றதோ எனச்சிந்தனை பண்ணும் படி மகாபெரிய உருக்களும் படகுகளும் பண்டங்களை ஏற்றிப் பாயிழுத்து ஓடிவந்து மணிபல்லவத்தீவுக்கும் எங்கள் இரத்தினத்தீவுக்கும் இடையே பாயிறக்கி நிறுத்தி அவற்றிலுள்ள மரக்கலமோட்டிகள் கரையிரங்கி நல்ல நீர் மொள்ள விரைந்து செல்வர். அவர்களுடன் உரையாடினால் பண்டைய மன்னர் வாணிபமல்ல என்பதும், இன்றைய மக்களின் வாணிப மரக்கலங்களே என்பதும் நினைவுக்கு வரும். ஆனால் இந்தமேற்குக் கடற்பாதையின் கதை பெரிய பாரதக்கதை போன்றது. திசையறி கருவி முதலிய நவீனசாதனைகள் இல்லாத பண்டைக்காலத்தே இயற்கையோடு இசைந்து மரக்கலமோட்டிய பண்டையோர் தென் இந்தியக்கரை மறைய வட இலங்கைத் தீவகங்களை தமது வெறுங்கண்ணாற் காணக்கூடியதாக இருந்தது. அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பண்டை தொட்டு இன்றும் இப்பழம் பெருங் கடற்பாதையையே உபயோகித்து வருகின்றனர். வீடும் தலைவாசலும் போலப் புங்குடுதீவும் நயினைமணித்தீவும் இருப்ப அவற்றின் இடையேயுள்ள நீலமணி முற்றம் போல எங்கள் மேலைக்கடல் காட்சியளிக்கும்.

கீழைக்கடல் ஆழமான வாய்க்கால் போன்றது. யாழ்ப்பாண நகரம் போகும் இந்திய மரக்கலங்கள் எங்கள் தீவகத்தில் மேற்கு, தெற்கு, கிழக்கு ஆகிய மூன்று புறக்கடலிலும் ஓடியே போகவேண்டும். சுருங்கச் சொன்னால் எங்கள் தீவகத்தை வியாபார மரக்கலங்கள் வலம் வந்து கொண்டே எப்பொழுதும் இருக்கவேண்டும் என்பதுதான். ஈற்றில் வடகடற் புறத்தே போவோமேயானால் பச்சைசப்பசேலென்ற மாணிக்கத் தீவுகளையும் மரகதத்தீவுகளையும் அவற்றினிடையே அழகான கடல் நீரோடைகளையும் காண்போம். சின்னஞ்சிறிய அந்தத் தீவுகளில் மாரிகாலம் நீர் நிறைந்திருக்கும். அதனாலேதான் அதனை மேடுறுத்தி வீதிசமைத்து வெளிநாட்டினருடன் தொடர்பு கொண்டுள்ளோம்.

எங்கள் நாட்டில் இன்று பதினையாயிரம் மக்கள் வரையில் வாழ்வு நடாத்துகின்றார்கள். தமிழ்ப்பாடசாலைகள் பதிநான்கும் ஓர் ஆங்கிலப் பாடசாலையும் உட்பட பதினைந்து பாடசாலைகள் உள்ளன. நாட்டு மக்கள் கமத்தொழில், வாணிபத்தொழில் என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர். வாணிபத் தொழிலில் இவர்கள் பழம் பெருமை படைத்தவர்கள். இன்று நேற்று வாணிபத்துறையில் இறங்கவில்லை. பண்டுதொட்டே பல தேசங்களிலும் சென்று வாணிபம் நடாத்தி வருகின்றார்கள். இலங்கையில் சிறந்த நகரங்கள் எல்லாவற்றிலும் இத்தீவக மக்களின் வியாபாரத் தலங்கள் பிரபலமாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் நாட்டினர் இலங்கைப்பக்கம் வருமுன்னரே அதாவது அஞ்நூறு ஆண்டுகட்கு முன் தென்னிலங்கையில் உள்ள நகரங்களில் இவர்கள் சென்று அந்நாட்டு மக்களுடன் அன்புபெறப் பழகி "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்" "யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும்நன்றும் பிறர்தர வாரா" என்னும் புனித மொழிக்கு உவமைபெற வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்கள் சுறுசுறுப்பும் சுயமுயற்சியும் உடையவர்கள். எவரையும் எதிர் பார்ப்பவர்கள் அல்லர். திடகாத்திரமான உடலும் அதிவிவேகமும் உடையவர்கள். அறிஞர் பெரியோர் ஆதியோரை அன்புபெற வரவேற்று வணங்குவார்கள். தாம் எவ்வளவு பெருமை உடையவராய் இருந்தாலும் தம்மிடம் வரும் வயது முதிர்ந்தோர்க்கு என்றும் தளர்ந்து படியும் வழக்கமுடையர். ஒற்றுமையும் நன்றி மறவாத குணமும் உடையவர்கள். எப்பொழுதும் தாய்நாட்டின் நலனுக்காக கல்வியையும் செல்வத்தையும் முன்னரிலும் பார்க்க முனைந்து வளர்த்துக் கொண்டு வருகிறார்கள். உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்விபயின்ற மக்கள் இலங்கை அரசாங்கத்தின் பல பகுதிகளிலும் இருந்து தொண்டாற்றி வருகின்றார்கள்.

இந்திய இலங்கைச் சுதந்திரப் போரிலும் இவர்கள் பங்குபற்றி உள்ளார்கள். மகாத்மா காந்தியின் ஒரு சீடராக, தம் நாட்டையும் ஆடம்பர வாழ்வையும் விடுத்து மனைவியுடன் சென்று காந்தீய சேவா கிராமத்தில் நாலுமுழத் துண்டுடுத்து வாழும் தேசத் தொண்டர்களும் இங்கே பிறந்து போயிருக்கிரார்கள். கலையே பெரிது, கடமையே பெரிது, அறிவே பெரிது, ஒழுக்கமே பெரிது என்று போதிக்கும் ஆழ்ந்த அநுபவம் உள்ள ஆசிரியர்களும் பலர் இங்கே இருக்கின்றார்கள். விருப்பு வெறுப்பற்ற தேவபூசை செய்யும் ஞானிகளும் உளர். தம்நாட்டிற்காகப் பெருங்கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து மலாய்நாடு சென்று பொருளும் புகழும் வளர்க்கும் வீரப்பெருமக்களும் உளர்.

ஈழநாட்டின் பல பாகங்களிலும் சென்று காடுதிருத்திச் செந்நெற் கழனிகளாக்கி வீடுங்கட்டிக் குடியேறி வாழும் வீராதிவீரர்கள் எங்கள் நாட்டினரிற் பலர் இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் வருங்கால சமுதாய உயர்ச்சிக்குரிய கோட்டையை அமைக்கும் தீவிர சிற்பிகள் போன்று திகழ்கின்றனர். இவர்களின் எதிர்கால இலட்சியம் ஈடேறுவதாக.

குறிப்பு:

*இரண்டு கயிற்றடி தூரம் [தமிழர் நீட்டலளவை]

2 கோல் = 1 பெருங்கோல் = 11 அடி

8 பெருங்கோல் = 1 கயிறு

2 கயிறு = 176 அடி

இக்கட்டுரையில் புங்குடுதீவை நாடு என்றே குறிப்பிடுகின்றார். ஊர்கள் பல சேர்ந்திருப்பதே நாடு. புங்குடுதீவுக்குள் பல ஊர்கள் இருப்பதாலும் உயர்வு நவிச்சி அணிக்கமைய - தந்தையார் நாடு எனத் தான் பிறந்த புங்குடுதீவை புகழ்ந்து கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. இனிய தமிழும் இயற்கையும் நடனமிடும் தீவகங்கள்

[தினகரன் ஞாயிற்றுவாரமலர், கொழும்பு: 07 - 01 - 1951]

## புலவர்கள் பிறப்பிடமாகத் திகழும் நயினாதீவின் சிறப்பு தெள்ளுக்கு எள்ளுவமை கூறிய நாகமணிப்புலவரின் கவிதாவிருந்து

தீவுகள் என்று மெத்த இலேசாகச் சொல்லுவார்கள், அந்த வட இலங்கைத் தீவகங்களை. இயற்கை அன்னை நடமிடும் பூங்கா வனங்கள் அவை. பெரிய வள்ளல்கள், அறிஞர்கள், புலவர்கள், கற்புக்கரசிகள் வாழும் மணிமாடங்கள் தான் அவை.

அவற்றைப் பார்த்த புலவர்கள் என்ன சொல்கிறார்கள் பாருங்கள்:-

ஆழியங் கடலின் வலம்புரி முழக்கம்
            ஏழிசை மானும் நெடுந்தீவெனும் பதி
பணியெந்து செல்வி அணியுற விளங்கும்
            மணித்தீவகமெனும் நயினைமா நகரும்
நிலநலம் பொதுளிக் கனியுயிர் சோலை
            கலகல வெனமிளிர் அனலையம் பதியும்
வாரிதி தருநிதி பெண்ணையம் பெருநிதி
            ஓரிரு நிதியமுங் குறைவிலா எழுவை
நீரகம் பொலிந்து சீரிய செல்வர் வாழ்
            ஏரகம் மலிந்துள்ள காரை மாநகர்
எண்டிசைப் புகழும் இன்புற அடக்கும்
            மண்டைதீ வகமெனும் மாண்புறு நகரும்
பாற்கடல் நடுவண் முத்தென விளங்கும்
            பொன்கொடு தீவகமெனும் பெரு நகரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடற் பூங்கா வனமெனு மேழு
தீவகங் காக்கும் ஊர்காவற் றுறையும்
- (பண்டிதர் ஆறுமுகனின் பாடல்)

என்பன தான் அவர்களின் அன்புரைகள். ஊகாவற்றுறையுடன் மண்டைதீவு இணைந்துள்ள படியால் இவை சப்ததீவுகள் என அழைக்கப்படும். ஆதியில் அருமையான தமிழர்கள் இத்தீவகங்களில் குடியேறினார்கள். கல்வியையும் செல்வத்தையும் தங்கள் கண்போலப் போற்றினார்கள். சீரிய ஒழுக்கம் விழுப்பந்தர வாழ்வு நடத்தினார்கள். அக்காலந்தொட்டு இன்றும் தமிழ் மணம் அங்கே கமழ்ந்து கொண்டே இருக்கின்றது.

அவற்றுள் நயினாதீவு புலவர்களின் பிறப்பிடமாக விளங்குகிறது. அருட்சக்தியாகிய நாகராஜேஸ்வரி அம்பாளின் திருவடித் தாமரைகள் இயைந்து வீற்றிருக்கும் பதி அது. இன்று சிங்கள சகோதரர்களும் தங்கள் பூமியாக அதனைக் கொண்டாடுகிறார்கள். அங்கே தான் நாகமணிப் புலவர் பிறந்தார். அவரை அனவரும் நயினை நாகமணிப் புலவர் என்றே வழங்குவார்கள். அவர் ஒரு இயற்கைப் புலவன் - வரகவி. கம்பர், காளமேகம் இவர்களுடன் வைத்து எண்ணத் தகுந்த புலமையாளன். 'நயினை நீரோட்டயமக அந்தாதி' புலவரது நுட்பமான புலமையின் சிகரமாக விளங்குகின்றது. 'நயினை மான்மியம்' என்னும் பெரும் காப்பியம் ஒன்று இவராற் பாடப்பட்டுள்ளது. அது இன்னும் அச்சில் வரவில்லை. எத்தனையோ மணிமணியான தனிப்பாடல்கள் இவராற் பாடப்பட்டுள்ளன.

முப்பத்தைந்து ஆண்டுகள் இருக்கும், அந்நாளில் திருக்கேதீஸ்வரம் புனருத்தாரணஞ் செய்யப்பட்டது. தமிழர்கள் - இந்துக்கள் இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்தும் பலர் திருக்கேதீஸ்வரம் போனார்கள். யாழ்ப்பாணம் இருந்து வள்ளமேறி, விடத்தல் தீவில் இறங்கி, அங்கிருந்து நடந்துதான் அவர்கள் எல்லோரும் சென்றார்கள். அந்தப் பாதைதான் நெடுங்காலமாக யாழ்ப்பாணத்தார் திருக்கேதீஸ்வரம் போகும் பாதை. நயினை நாகமணிப்புலவரும் சில நண்பர்களும் திருக்கேதீஸ்வரம் போக யாழ்ப்பாணத்தில் வள்ளமேறி விடத்தல் தீவில் இறங்கினார்கள். அந்நேரம் பொழுதுபட்டு இருண்டுவிட்டது. அதன்பின் அங்கிருந்து திருக்கேதீஸ்வரம் போக முடியாது. ஆனபடியால் கடற்கரையில் இருந்த ஒரு வாடிவீட்டில் புலவரும் நண்பர்களும் படுத்துக் கொண்டார்கள். நித்திரை கொள்ள முடியவில்லை. ஏதோ ஒன்று அவர்கள் எல்லோருக்கும் பெரிய உபத்திரவங் கொடுத்துக்கொண்டு இருந்தது. புரண்டும், எழுந்தும், இருந்தும் நித்திரை கொள்ளப் பார்த்தார்கள். முடியவில்லை.

இப்படியே அவர்கள் வருந்திக்கொண்டு இருக்கக் கோழிகள் கூப்பிட்டன. காகங்கள் கரைந்தன. கிழக்கு வெளுத்தது. நண்பர்கள் புலவரைப் பார்த்தார்கள். "என்ன ஐயா! கொஞ்சமும் துங்க முடியவில்லையே" என்றார்கள். அப்பொழுது புலவர் இந்தப் பாடலை எழுதி அவர்களிடம் கொடுத்தார்.

"எள்ளிற் சிறிய பாதியிற் பாதி இருண்டுருண்ட
தெள்ளுக் கொடுமையத் தேவரலாதெவர் தீர்க்கவல்லார்
முள்ளிற் செடியிற்படுத்தாலும் முன்பின் உறக்கம்வரும்
துள்ளித் துடித்துக் கடித்தூர்ந்திடின் எவர்தூங்குவரோ"

பாருங்கள்! அத்தனை சிறிய பிராணி தெள்ளு, என்னவெல்லாம் செய்கிறது. துள்ளுகிறது. பலமுறை துடிக்கிறது. பின்பு கடிக்கிறது. கடித்த இடத்தில் இருக்கிறதா! இல்லை! மெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ந்து விடுகின்றது. தெள்ளுக்குத் திருவிளையாட்டு, மனிதனுக்கோ தூக்கமில்லை. விடியும்வரை தெள்ளை அகற்ற எடுத்த நடைமுறையொன்றும் பலிக்கவில்லை. ஆதலால் தெய்வந்தான் இந்தக்கொடுமைக் குணத்தைத் தெள்ளில் இருந்து தீர்க்க வேண்டும் என்று கூறுகிறார் புலவர்.

இறைவனது சிருஷ்டிகள் வாழ்வதில் தனக்கு ஒரு குறையும் இல்லையாம். ஆனால் பிறஉயிர்களுக்குத் தொல்லை கொடுக்கும் குணத்தைமட்டும் மாற்றிவிட்டால் போதும் என்கின்றார். தெள்ளுக் கொடுமைமட்டும் இல்லாமல் முள்ளோ செடியோ கிடைத்து அவற்றில் படுத்தாலும் முன் இரவிலோ அன்றிப் பின்இரவிலோ அலுப்பு நீங்கத் தூங்கி இருக்கலாமாம்.

தெள்ளுக்குப் புலவர் பிடிக்கும் உவமை மிக அற்புதமானது. சிறிய எள்ளு எடுக்க வேண்டும். அதனை இருபாதியாக்க வேண்டும். அதில் ஒரு பாதியைத் திரும்பவும் இரண்டாக்க வேண்டும். சிறிய எள்ளு நாலில் ஒன்றாகியும் தெள்ளுக்கு உவமிக்க இயலாதாம். திரும்பவும் அதனை உருட்டிக்கொள்ள வேண்டும். உருட்டும் போது கொஞ்சம் இருள்வர்ணமுஞ் சேர்த்துக்கொள்ள வேண்டும். இனிச்சரி - இப்பொழுது தெள்ளு போல இருக்கும். அப்படிச் செய்து பாருங்கள் தெள்ளுதான்.
சத்திமுற்றப் புலவர்

"பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக்கூர்வாய்"

உவமை கண்டதற்குப் பெரும் பரிசில் பெற்றமை அறிஞர்களுக்கு ஞாபகம் இருக்கும். இந்த எள்ளு உவமைக்கு உண்மையில் நயினை நாகமணிப்புலவரும் பரிசில் பெறவேண்டியவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. உள்ளக்குமுறல்

## 1956



1956ம் ஆண்டு யூன் மாதம் 5ம் திகதி ஈழமணித் திருநாட்டின் பாராளுமன்றத்தில் 'சிங்களம் மட்டும் அரசகரும மொழி' [Sinhala Only Official Language Act] என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதற்குமுன் ஆங்கிலமே அரசகரும மொழியாக இருந்தது. அந்தத் தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து, அன்றே இலங்கை பாராளுமன்றத்துக்கு முன்பாக, காலி முகத்திடலில் தமிழர்கள் சத்தியாக்கிரகம் இருந்தனர். அந்தச் சத்தியாக்கிரகத்தில் முன்னூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் பங்கேற்றனர். என் தந்தை பண்டிதர் மு ஆறுமுகனும் பங்கேற்றார். ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்களால் அவர்கள் தாக்கப்பட்டார்கள். எனினும் அவர்களைச் சிங்களவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றினர். அக்கலவரத்தின் பின்னர் எனது தந்தையால் எழுதப்பட்ட பாடல் இது:

ஈழமணித்திரு நாட்டில் - தமிழ்
வாழவழி செய்து வைப்போம்
கோழைத் தமிழர் களாமோ - எவர்
கூறுவர் முன்னின்று பார்ப்போம்

சிங்களம் நன்று தமிழ்தான் - இங்கு
தீதென்று கூறிடப் போமோ
சங்கந் தெரிந்த தமிழை - எவன்
தாழ்வு வரச்சதி செய்வான்

கள்ளுருளைப் பெரும்பான்மைப் - பலம்
காட்டி தமிழை மறைத்தார்
மெல்லத் தமிழன் விழித்தான் - இனி
மேன்மைத் தமிழ் அரசாளும்

மக்கள் அரசென்று கூறி - தமிழ்
மாண்பை அழித்தல் அழகோ
இப்புவி வாழ்விற் தமிழர் - உயிர்
இன்பத் தமிழை மறப்பரோ

வேற்றுமொழிபல கற்போம் - எங்கள்
மேன்மைத் தமிழை மதித்தால்
மாற்றுமொழி கற்று வாழ - நம்
வாழ்வென்ன தெய்வ மருந்தோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்சாண் உடம்பு வளர்க்க - எவன்
இன்பத் தமிழை மறப்பான்
வெங்காயக் கோழை அலிகள் - எம்
மேன்மைத் தமிழரில் இல்லை

தேவர் சமண முனிவர் - திருச்
செல்வச் சமய குரவர்
நாவலர் சங்கச் சான்றோர் - இன்று
நம்நிலை கண்டு நகைப்பர்

எலியென்ன செய்த ததனில் - நீ
ஏற்றமாய் யாது செய்தாய்
புலியென்ன வாழ்ந்த தமிழர் - குலப்
புதல்வர் தம்பாடு புகல்வாய்!

குறிப்பு:-
இந்தச் சட்டமே தமிழ், சிங்கள் இனவாதத்துக்கு காரணமாக எழுந்த பல இனக்கலவரங்களை உண்டாக்கியது. அச்சட்டம் நிறைவேறி ஐம்பத்திஎட்டு ஆண்டுகள் ஓடிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. உயிர்த்தமிழை ஈழத்தொளிர வைப்போம்
**[1956]**

பல்லவி

தமிழ்தமிழ் தமிழ்எங்கள் உயிர்தமிழ் தரணியில்
அமிழ்தினுமினிய செந்தமிழ் நிலை காப்போம்

சரணம்

இயல்இசை நாடகம் எனத்தளை தனித்தமிழ்
ஈசனும் ஏட்டினில் எழுதி மகிழ்ந்ததமிழ்

சங்கமிருந்த தமிழ் தரணியை ஆண்டதமிழ்
எங்கள் உயிர்த்தமிழை ஈழத்தொளிர வைப்போம்

அறம்பொருள் இன்பமும் வீடுமளிக்கும் தமிழ்
அகதியன் இலக்கணம் அருளிய வருந்தமிழ்

உலகினில் இயலுமா றாயிர மொழிகளுள்
முன்மொழி தமிழெனு மேன்மைதெளிய வைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. முத்தமிழ் இன்பம்

[வீரகேசரி - 1939 -]

"இருந்தமிழே உன்னாலிருந்தேனே தேவர்
விருந்தமுதம் ஆயிடினும் வேண்டேன்"
என்கிறார் சங்கச் சான்றோராய கபிலதேவர்.

"தமிழுக்கு அமிழ்தென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
என பொற்காலக் கவிஞர் பாரதிதாசனும் புகன்றுள்ளார்.

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்து ஓர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின்றாள்
- (வில்லி பாரதம்: சிறப்புப்பாயிரம்)

என நந்தீந்தமிழுக்கு ஒரு சரித்திரச் சுருக்கமும் இருக்கிறது.

இத்தகைய அரிய செந்தமிழ் - இயல், இசை, நாடகம் என மூன்று திறம்பட இயல்கின்றது. இவை மூன்றும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களைப் பற்றியும் துருவித் துருவி ஆராய்ந்து போதிக்கின்றன. தமிழ் இலக்கண இலக்கிய நூற்கடல்கள் யாவும் இயற்தமிழின் பாற்பட்டன. அறிவுத் துறைகளை, ஒழுகலாறுகளை, மனிதவாழ்வுக்கு இன்றியமையாத பண்பாடுகளை எல்லாம் எடுத்து இயம்புவது இயற்றமிழ் என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடார்வின் [Darwin] அவர்களின் அறிவுண்மைகளுக்கு நந்தீந்தமிழ்ச் சான்றோர்கள் அடியெடுத்து வைத்துள்ளனர்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் …………
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்த"

தாக மணிவாசகர் திருவாசகம் செய்துள்ளார். வள்ளுவப் பெருந்தகையாரும் தெள்ளுதமிழ் மறை புகன்று உலகத்தார் உள்ளுவதெல்லாம் உரைத்து முப்பாலில் நான்கறம் புகட்டிப் பேரின்பப் பெருவாழ்வுக்குத் தமிழ் மக்களை வழிநடத்திச் சென்றனர்.

கபிலதேவரும் சங்கச் செய்யுட்கள் மூலம் தமிழனின் நாகரிக உயர்வைச் சித்தரித்து பலப்பல அமிர்தக் கவிதைகள் புகன்று வைத்தனர். அவற்றுள் ஒன்று அவர் பாரிமகளிர்க்கு சொன்ன

"மாயோன் அன்ன மால்வரைக் கவான்
வாலியோன் அன்ன வயங்கு வெள் அருவி
அம்மலைக் கிழவோன் நம் நயந்து என்றும்
வருந்தினன் என்பது ஓர் வாய்ச்சொல் தேறாய்
நீயும் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந் தளவல் வேண்டும் மறுத்தரற்கு
அரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார், தம் ஒட்டியோர் திறத்தே"

என்னும் அருமந்த செய்யுளாகும். ஒரு கன்னிப் பெண் எவ்வாறு தனக்கு ஒரு வரனைத் தேடவேண்டும் என ஆராய்கிறார், அந்தக் கபிலத்தமிழ் முனிவர். தன்னுடன் பின்னி வாழ ஒருவனைத் தெரிவதானால் முதலில் அவனது குணங்களை ஆராயட்டுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னை தம் அன்னை, தந்தை, சகோதரர், பெரியோரிடமும் ஆராயட்டுமாம். அத்துடன் அறிவு அறிந்து - அறிவு மயங்காது அளவளாவட்டுமாம். பெரியோர் வரிசையில் நின்று நாடி நட்புப் பூண்க - நட்புப் பூண்டபின் நாடற்க. இவற்றை - இந்த அறிவுரைகளை எவராலும் மறுக்க முடியாது என்றும் வற்புறுத்துகின்றார்.

இவ்வரிய அறிவுரைகளை எல்லாம் கற்பதன் பயன் மெய்யறிவறிந்து பேரானந்தப் பெருவாழ்வை எய்தவே.

"கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்"

எனத் தேவரும் அருளிச் செய்தனர். முத்தமிழின் முடிபெல்லாம் மக்களை மாக்கள் நிலையின் நின்று உயர்த்தி, ஒழுகலாறுகளைப் பண்படுத்தி உடல் வளர்த்து உயிர் பூரித்து, உவகை இன்பம் பெற வாழ்ந்து, பிறவாநெறியை நல்கும் வீட்டின்பம் பெறச் செய்வதே. "தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக" மனிதன் எத்தனையோ கோடி யோனி பேதங்களில் பிறந்து இறந்து இருவினை புரிந்து மனிதப் பிறவி பெற்றே பக்குவமடைகின்றான், என்கிறார் மணிவாசகர்.

இயற்றமிழை உடலென எடுத்துக் கொண்டால் அதனைப் பல வழிகளிலும் இசைவிப்பது எது? அது, உயிர். அந்த உயிர் போன்று இயற்றமிழ் மூலம் மக்கள் அறிந்து கொண்ட ஒழுகலாறுகளை அனுபவங்களை உயிராய் நின்று இசையைச் செய்வது இசைத் தமிழ் என்க. ஆன்மாவின் குரலே இசை என்பர் சான்றோர். தெய்வத்தை அடைய இசைத்தமிழ் தோன்றியது என்றுங்கூடச் சொல்லலாம். கண்ணனின் குழலோசை கைலாசபதியை உருக்கியமையால் உலகினைக் காக்கும் பதத்தினை பெற்றனன் என்பர். அந்த முரளீகானம் கோபியர்களையும் இன்பமயக்கத்தில் சொக்க வைத்ததுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையாது எல்லா உயிர்களையும் வேறுபாடற்று மெய்மறக்க வைத்தது. புலியும் பசுவும் ஒருங்கு நின்று இசை கேட்டனவாம். மயில்கள் மீது மாநாகங்கள் மயங்கி விழுந்து மெய்மறந்தனவாம். இசைத்தமிழில் இசையாத உள்ளங்களே இல்லை எனலாம்.

இராவணன் இசைத்தமிழின் தலைவன் எனக் கருதப்படுகின்றான்.

"ஏழிசையாழ் இராவணனே"

எனத் திருஞான சம்பந்தரால் வாழ்த்தப்பட்ட பேரருளாளன். பெரிய சிவபக்தன். ஆணவமலையின் கீழ் அகப்பட்டு வீணாகானத் தமிழ் செய்து பெருவரம் பெற்றவன். பொன்னான பொதியமலை முனிவர் இசைத்தமிழ் மூலம் பெறற்கரிய பெரும் பேறு பெற்றவர். கோடானுகோடி பக்தர்கள், அருளாளர்கள் தமது இன்பப்பொழுது போக்குக்காக இறைவனைத் தம்முள் இசைவிக்கும் கருவியாக இசைத் தமிழையே பெரிதும் போற்றினர். உடலுழைப்பாளருங்கூட தனது வருத்தம் நீங்க இசைத்தமிழையே துணைக்கொண்டனர். இன்று ஒவ்வொரு மக்களும் இசைத்தமிழை மாந்தி இன்புறுகின்றனர்.

இசையுடன் கூடிய இயல் ஆன்மாவில் பதியுந் தன்மையை அடைகின்றது. பண்டைத் தமிழ் மன்னர்கள் இசையில் வல்ல ஒரு பிரிவினரையே வாழ்வித்தனர். பெரும்பாணர், சிறுபாணர் என்போர் அத்தகையினர் என்க. அவர்களில் விறலியர் விறல் தோன்ற - இசையின் இயலின் கருத்தை உடலால் வெளிப்படுத்தி நடமாடினர். பெருநாரை, பெருங்குருகு, முதுநாரை, முதுகுருகு போன்ற இசை நூல்களும் முறுவல், சயந்தம், செயிற்றியம், நூல், குணநூல், முதலிய நாடக நூல்களும் பண்டைத் தமிழர் இசைக்கும் நாடகத்திற்கும் கொடுத்த மதிப்பை எமக்கு அறிவிப்பன ஆயின. சமயகுரவர் நால்வரும் பிற்காலத் தமிழ் இசைக்குப் புத்துயிர் ஈந்த புனிதர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழோடிசைபாடல் மறந்தறியேன்"
என்றல்லவா திருநாவுக்கரசர் அருளியுள்ளார்.

இயல், இசை இவ்வளவிற்றாக நாடகத்தமிழ் இயலையும் இசையையும் கொண்டு மேலும் ஒருபடி உயர்ந்து உயிர் போன்ற இசைக்கும், உடல் போன்ற இயலுக்கும் முழுத்தெளிவும் கொடுத்து இறை போன்று நடம்புரிவதாகின்றது. அந்தத் தமிழ் இல்லையேல் உலக வாழ்வு பூரணம் அடையாது. நாடகன் கடந்த கால நிகழ்ச்சிகளைச் ஒன்பான் சுவைகள் மூலம் மக்கள் முன் நடித்துக் காட்டி எல்லா மக்களுக்கும் பூரண அறிவு பெறவைக்கின்றான்.

இயல் இசையால் எழுந்த ஒழுகலாறுகளை மக்களுக்கு மிக மிக நுணுக்கமாய் உணர்ச்சி வேறுபாடுகளுடன் உணர்த்த எழுந்ததே நாடகத் தமிழ். அதனை
"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம் "

எனப் பண்டைதமிழ் இலக்கண ஆசிரியரான தொல்காப்பியரும் சொல்லிப் போந்தார். இறைவனுக்குமே 'நடனராசர்' - 'மாணிக்கக்கூத்தர்' - 'ஆனந்தக்கூத்தர்' எனப்பல அன்புப் பெயரிட்டுப் போற்றினர். "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என மலைகிழவோனை அருணகிரி பணிகின்றார். ஔவைத் தமிழம்மையார் நான்கு அமுது ஈந்து முத்தமிழையும் விநாயகப் பெருமானிடம் இரந்து வைத்திருக்கிறார்.

உலக இன்பம் முற்றி பேரின்பம் பெற வழிவகுப்பன, நம் முன்னோர் போற்றிய முத்தமிழுமே. எனவே எவை இன்பமெனில் யாம் சொல்ல வல்லது இது ஒன்றே. அது முத்தமிழ் இன்பமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. இறைவன் ஆராய்ந்த அன்புவாழ்க்கை அது தமிழர் வாழ்வு நெறி

[ஈழகேசரி - 1940]

தமிழர்களின் அன்பு வாழ்வினைப் பற்றி சங்க இலக்கியங்கள் விமர்சிக்கின்றன. அவை தமிழ் என்ன சொல்லியுளது, "தமிழ் நுதலிற்றோ" எனின் "தமிழ் நுதலிற்று" என்பர். நுதலிற்றோ சொல்லுதல், நுதலிற்று - சொன்னது. தமிழ் என்றால் அன்பு என்று பொருள். எனவே சங்க இலக்கியம் அன்பை ஆராய்ந்தது.

"அன்புசிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்புசிவம் என்பது யாரும் அறிகிளார்
அன்புசிவம் எனப தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே"

தமிழை ஆராய்ந்து ஆராய்ந்து கொண்டு போக, அன்புதான் சிவமாக - சிவந்தான் அன்பாக அமர்ந்துள்ளதை அறிந்து கொண்டார்கள் என்க. அன்பு வாழ்க்கையை வாழ்ந்தார்கள்.

இலக்கியங்களிலே பேசப்படுவன உலகியல். உலகம் வாழ்த்த வாழவேண்டிய சீரிய நெறிகளே. சங்க இலக்கியங்கள் போற்றப்படக் காரணமும் உலகியல் நெறிகளில் அதியுயர்ந்த - அன்பு வாழ்வினை - இன்புற இல்லற உலகியலில் பொருத்திக் கூறுவதனாளேயே.

சங்க இலக்கியங்கள் பகரும் அன்புக் காதற்காட்சியைப் பாருங்கள். அழகிய இளநங்கை தன் வீட்டினுள் நடந்தாள். அவள் நடப்பதைக் கண்ட அவளுடைய அருமைத் தந்தை மகளுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதங்கள் நிலத்திலே தோய்ந்து நடக்கப் பொறுக்கமாட்டாது,
"எவனடி குறுமகள் இயங்குதி என்னும்"
'என் அழகு மகளே! ஏன் நடக்கிறாய்! பூமியில் பாதம் படாமல் - நடந்து திரியாமல் மெத்தையில் இரு!' என உறுமுகிறான்.

அவளோ,
"யாக்கைக்கு உயிரியைந்தன்ன துவரா நட்பில்
இருதலைப் புள்ளின் ஓருயிரம்மே" என்கிறாள்.

உயிரம் - உயிரினை உடையோம் என்று பொருள். உயிர(ம்)மே - 'ஏ'காரம் ஈற்றசை. உயிரோமாயுள்ளோம் என்றவாறு. ஒரு நாள் அவள் உடன் போய்விட்டாள் - காதலித்தவனுடன் போய்விட்டாள்.

தோழி சிற்றன்னை ஓடித்தேடுகிறாள்.
என்மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி காட்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ பெரும!
என வழியில் வருவோரை உசாவுகிறாள் - வினாவுகிறாள்.

அந்தணர் சொல்கிறார்
"காணோமல்லேம் கண்டனம் கடத்திடை
ஆணெழில் விடலையொடு அருஞ்சுரம் முன்னிய
மாணெழில் கற்பின் தாயிர் நீர் போறிர்.......
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாட்கவைதாமென் செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கனையளே....
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலைப் பிரியா ஆறுமற்றதுவே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இருவரும் ஒன்றாய்ப் போனது சரி. அது தர்மம் தலைப்பிரியாத தமிழர் வாழ்வு நெறி. நீர் இனிக் கவலையின்றிப் போகலாம் என்கிறார் அந்தணர்.

அவர்களுக்கு திருமணமும் முடிந்தது. அவளின் காதற்கணவன் பொருள் தேடிச் செல்கின்றான். அவன் சென்றதும் அவள் வீட்டில் இருந்து அழுதாளாம். அவள் மனதால் அழவில்லை. கண்ணால் அருவியாக நீர் பாய அழுதவள். தன்னைத் தானே கேட்கிறாள். இல்லை தனது கண்ணை முன்னிலைப் படுத்திக் கேட்கிறாள்.

"கண் தாம் கலுழ்வது எவன் கொலோ
தண்டா நோய் தான்காட்ட யான்கண்டது"

அவள் தனது கண்ணைக் கேட்டது வள்ளுவதேவரின் காதுக்குக் கேட்டு அவர் பாடிவைத்துள்ளார். அவளது கண்தான் காதலனை அவளுக்குக் காட்டியது. கண்ணே! நீ ஏன் அழுகிறாய்? நீ தானே அவரைக் காட்டித் தந்தாய். நீ காட்ட நான் கண்டேனே ஒழிய, நான் காட்ட நீ காணவில்லையே! காதலரைக் காட்டித் தந்த நீ அழுவானேன் என்று கேட்டாளாம். அப்படித் தன் கண்ணைக் கேட்டு அழுதவள் இரண்டொரு நாளில் மனந்தேறிவிட்டாள்.

கணவன் பொருள் தேடி பாலை நிலத்தைக் கடந்து போகின்றானே. நெருப்பாக ஆதவன் கொழுத்துகிறானே. அவன் போகும் வழியில் பருக்கைக் கற்கள் தழல் போலச் சிவந்து தீயைக் கனல்கின்றனவே. அந்தக் கற்கள் பூ மொட்டுகள் போல இருக்கவேண்டும். பாலை நில வெப்பம் நீக்கி வானம் மேகந்தவழ வேண்டும். நிலம் குளிர வேண்டும். தன் காதலன், முட்டின்றி அவ்வழியேக வேண்டும் என மழைதரும் செல்வனாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய தேவனை, அன்பு இன்னதென உணர்ந்த - அன்பு மயமாய் வாழப்பழகிய தலைவி வேண்டுகிறாள்.

பருக்கைக் கற்கள் மலர் மொட்டுக்கள் - இல்லை தேன் நிரம்பிய மொட்டுக்கள் போலக் குழைந்து குளிர்ந்துவிடுகின்றன. முகில்கள் சூழ்ந்து மழைத் துளிகள் சொட்டுகின்றன. நிலம் துவண்டு கசிந்து பாதம் பதியக்கூடிய மெதுமையடைகின்றன. அவளது அன்பு ஆதவனிலும் பூமியிலும் வானத்திலும் தெய்வீகமாய்ப் பரவுகிறது. அதனை அநுபவிக்கும் தலைவன் துன்பம் நீங்கி அன்பில் மிதந்து கொண்டு போய்ப் பொருள் தேடி மீள்கின்றான்.

இது சங்கச் சான்றோர் வடித்த அன்புச் செய்யுள். இதனை கால - நேர - தூரங்கடந்த இறைவன் - சங்கப் புலவனாக இருந்து ஆராய்ந்தார். இதனை மணிவாசகர்

"சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும்
என் சிந்தையுள்ளும்
உறைவான், உயர் மதில்க் கூடலின் ஆய்ந்த
ஒண் தீந்தமிழின் துறை"

என்கின்றார்.

தமிழ் மக்களின் வாழ்வு நெறியை - அன்பு வாழ்க்கையை இறைவன் ஆராய்ந்து சொக்கி மெலிந்து போனாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. கற்பின் பெருமை

[வீரகேசரி - 1940]

"அல்லல் மாக்கள் இலங்கையதாகுமோ எல்லை நீத்த உலகங்கள் யாவும் ஓர் சொல்லினால் சுடுவேன்" என்கிறாள் சிறையிருந்த செல்வி. என்ன பெருமை! எப்படி இந்தப் பெருமை அவளுக்குக் கிட்டியது! அவளே விடையும் பகருகின்றாள்.
"அது தூயவன் வில்லின் ஆற்றலுக்கு மாசென்று வீசினேன்!"
வேறு ஓர் ஆற்றல் அவளுடன் தொடர்பு. அந்த ஆற்றலன் அவளுடைய தெய்வம். அவன் ஒரு வில்லன் - ஆற்றல் பெற்ற வில்லன். அவனுக்கு களங்கம் - மாசு வரக்கூடாதே என்ற நாணம் நிரம்பிப் போய் இருந்தாள். அதனால் அவளுக்கு பேராற்றல் கிடைத்திருந்தது.

கைலையங்கிரியையும் பெயர்த்த பேராற்றல் வல்லான் இராவணேஸ்வரன். இந்தக் கற்பின் செல்வியை உலுப்பிக் கொண்டு போய்ச் சிறையிருத்திச் சீர்படுத்தலாமென அவன் மனப்பால் குடித்தான். ஆனால் அது பலிக்கவில்லை. அவ்வாறு அவன் நினைவு பதரானமைக்கு என்ன காரணம்? தனது கோபத்தை கணவனான இராமனை நினைத்து மடக்கினாளே அதனால் வந்த பேராற்றல் தான்.

கற்பின் பெருமையைப் பல கோணங்களில் நின்று சான்றோர்கள் ஆராய்ந்துள்ளனர்.

"வறமோடின் வையத்து வான் தரும் கற்பினாள்" - கலித்தொகை

என்று சங்கச் சான்றோரும் கற்பின் பெருமையைக் கண்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசுகி அம்மையாரும் அந்த வரிசையில் வாழ்ந்தவர். கொங்கணவர் கோபப் பார்வையுடன் அந்த அம்மையாரைப் பார்த்தார். "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா"? என்று கேட்டார் அந்த அம்மையார்.

முனிவர் குருவியை எரித்து மமதை அடைந்த குட்டல்லவா வெளிப்பட்டு விட்டது! கொங்கணவர் மரமாய்ப் போனார். அம்மையாரை வணங்கி இரந்து, "எப்படியம்மா இந்தச் சக்தி தங்களுக்குக் கிட்டியது" என்று மன்றாடினார். "காட்டுப்புறத்து இறைச்சிக் கடை வேட்டுவனிடம் போ! கேள்!" என்று அவரை அனுப்பினாளே அந்தக் கற்பரசி வாசுகி, அவளுக்கு எப்படி அந்தப் பெருமை கிட்டியது? வள்ளுவர் கற்பித்தபடி ஓரகத்துடன் நடந்தாள் சக்தி கைவந்திருந்தது. இரண்டகஞ் செய்வோருக்கு அந்தப் பெருமைக் கற்பு வராது.

பேய் வடிவு தாங்கிய அம்மை புனிதவதியாரும் கற்பின் பெருமையினால் இறைவனின் எடுத்த திருவடி நீழலில் என்றும் இருக்கப் பெற்றவர். கணவன் அனுப்பிய மாங்கனி இரண்டினுள் தன்பங்கென எண்ணி ஒருபழத்தை முனிவராய் வந்த விருந்தினர்க்கு அமுதாக அளித்திருந்தார். உண்ண வந்த கணவன் மாம்பழம் கேட்டான். ஒரு பழம் அளித்தாள். மறுபழமும் அவனுக்குத் தேவைப்பட்டது. 'கொண்டுவா!' என்றனன்.

கணவனின் கற்பனையை மீறமுடியாது வீட்டுட் சென்று பழம் வேண்டும் என வேண்டினாள். கொடுத்தாள் மீண்டும் ஒரு பழம்! மனையாளின் பெருமை கண்டான் கணவன். என் செய்வான்! பேய்பிடித்தவனானான். வணங்கினான் அம்மையாரை. என் செய்வார் அவர். அவனுக்காகத் தெய்வம் கொடுத்த அழகிய உடலை வெறுத்தார். பேய்வடிவு ஈகவெனப் பெருமானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிப் பெற்றுக் கொண்டார். அந்த அருட்செல்வியும் கற்பின் பெருமைக்குச் சிகரம் வைத்த சேயிழையன்றோ?

வேடனை நீறாக்கிய தமயந்தி, தீ குளித்து நீராக்கிய சந்திரவதி, எழுபரி தடுத்த நளாயினி இவர்களும் பெருமைக் கற்பரசிகளே. "கடவுள் ஒருமீன் சாலினி" எனச் சங்கச் சான்றோரால் புகழப்பட்ட அருந்ததியும் கற்பின் பெருமைக்கு ஒப்பற்ற உரைக்கல்லாவாள்.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்"
என்றாரே தமிழ்மறை தந்த தவமுனிவர். அவரது அமுதக்குறள் மலருக்கு இசைய வாழ்ந்து பொன்றாத நிலையை எய்திய புண்ணியவதிகள் அளவிறந்தோர் இருப்பர். எனினும் மக்களின் கண்முன் இன்றும் நின்று நிலவும் கற்பின் செல்வியரின் பெருமைகளைச் சிறிது ஆராய்ந்தோம்.

கற்பு என்பது பெண்ணினத்துக்கு மாத்திரம் உரிமையான பொருளா? எனின் இல்லை! அது ஆண்களுக்கும் உரியது. ஆண்களின் கற்புக்கு 'நிறை' என்று பெயர். இந்த உட்கு உடையவர்களாகக் காவியத் தலைவர்கள் பேசப்படுகின்றனர். கற்பினுக்கணியும் நிறையினுக்கணியுமான சீதையும் இராமனும் கானகத்தில் நடந்தனர்.

"காயெரி கனலும் கற்கள்
கள்ளுடை மலர்களே போல்
தூய செங்கமல பாதம் தோய் தொறும்
குழைந்து தோன்றும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார் மாகாகவி கம்பர். மக்களின் ஒழுக்க உயர்வு பாலையை மருதமாக்கி விட்டதாம். அவர்களை அந்த ஒழுக்கம் தெய்வங்களாக்கி விட்டதாம். பாருங்கள்! அது தான் வள்ளுவர் சொன்ன "வாழ்வாங்கு வாழ்தல்."

நிறை நிரம்பிய ஒழுக்க சீலனாகிய இராமனின் பாததூளிபட அகலிகைக் கல்லு கௌதமரின் மனைவியாகி எழுந்து அவரிடம் போய்ச் சேர்ந்துவிட்டதாம். எப்படி ஆண்கற்பு சிந்தியுங்கள்!

ஐந்தாங் குரவர் ஆறுமுக நாவலர் பெருமான் 'நிறை' வடிவினராகவே வாழ்ந்தாராம். சிதம்பரக் கோபுரத்திருந்து கல்வீழ்த்தி அவரை மாய்க்கவென இராமலிங்க அடிகளால் ஏவப்பட்ட கொலைஞர்கள் நாவலர் பெருமானது உட்கு ஒளியில் சிக்கி தாம் நினைத்தவாறு செய்ய இயலாது, அவரை வணங்கி உண்மையை உரைத்து தண்டனிடச் செய்தது.

விவேகானந்தரிடம் இருந்த ஆண் கற்பு சிக்காக்கோ நகரிலே கூடிய உலகச் சமயமகாநாட்டுத் தலைவர்கள் அனைவரும் அவரது பேச்சு முடியும் வரை அசையாது கேட்டிருப்பச் செய்தது. அன்றியும் அவருடன் வேறொருபொழுது கூடிச்சென்ற நண்பர்களை குழுமாடு இடறப்போனது, விவேகானந்தர் முன்பு சென்று நின்றதும் அது திகைத்து திரும்பி ஓடிப்போனது.

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவரிடம் இசைந்த நிறை எனும் ஆண்கற்பினால் இராவணன் கூட வணங்கி நடுங்கி வாழ்ந்தான் என்பர். மனதைச் சிதைய விடாது அடக்கி ஒருவழிப் படுத்தி இறையருளுடன் இயைந்து வாழும் சான்றோர் அந்த உயர்ந்த கற்பு நிலையைப் பெறுவர். அவர்களிடம் தெய்வத் தன்மை உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பின் பெருமையை நிலைநாட்டித் தெய்வத் தன்மையை அடைந்தவள் கண்ணகி. பெருந்துறவியும் உத்தமருமாகிய இளங்கோவடிகளே

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீன் திறம் இவன் திறம் என்றும்
மாதரார் தொழுது ஏத்த வயங்கிய பெருங்குணத்து
காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ"
எனப் பாராட்டுஞ் செய்யுளில்
"வடமீன் திறம் இவள் திறம்"
எனப் புகன்று கற்பின் பெருமைக்கு முளையிலே வித்திட்டு வைத்தார்.

கோவலன் நெறி தவறவும் தன்னெறி தவறாது, அவனது கற்பனைப் படி வாழ்ந்து அவன் கொலையுண்ட இடம் நண்ணி, அநீதியை எதிர்த்து - அந்நிய நாட்டில் ஒரு பெண் - தனிநின்று வாதிட்டு நீதியை நிலை நாட்டினாளே! அந்தத் திறலைக் கண்ணகி எவ்வாறு பெற்றாள்?

இறந்த கணவனை உயிர் பெற வைத்து அவனுடன் உரையாடினாள். சூரியனை நோக்கி நீதி கேட்டாள். இயற்கை ஏவல் கேட்டது. நீதியை உரைத்தது. அநீதி அழிய வேண்டுமென விரும்பினள். எனவே மதுரைமா நகரில் உள்ள அநீதிகள் கெடுக! என்றாள். கெட்டன. எரிக! என்றாள். எரிந்தது மதுரை.
தன் கணவனுடன் தெய்வத் தேரேறிச் சுவர்க்கம் புகுந்தாள். இன்றும் தொழுந் தெய்வமாம் கண்ணகியானாள். மாதர் உயர்வின் சிகரமான கண்ணகியால் மாதர் சமுதாயமே பெருமையடையும். கற்பின் பெருமைக்கு நிகரேது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. சிலேடைபாடிய நயினை நாகமணிப்புலவர்

[தினகரன் ஞாயிற்றுவாரமலர், கொழும்பு: 14 - 01 - 1951]

காளமேகப் புலவர் பல சிலேடைச் செய்யுட்கள் பாடியிருக்கிறார். அவர் சிலேடை பாடக்காரணமாக இருந்தவர்கள் அதிமதுரகவிராசரும், அவருடன் சேர்ந்த தண்டிகைப் புலவர்களுமாவர். தண்டிகைப் புலவர்களுள் ஒருவர் "எள்ளுக்கும் பாம்புக்கும்" சிலேடை பாடும்படி கேட்டார். காளமேகம் அப்பொழுது பாடிய செய்யுள் இது:

"ஆடிக்குடத்தடையும் ஆடும்போதே இரையும்
மூடித்திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றின் பரபரென்னும் பாரிற் பிண்ணாக்குமுண்டாம்
உற்றிடு பாம்பெள்ளெனவே ஓது"

பாம்பு: (குறவன் ஆட்ட) ஆடிமுடிந்தபின் தான் வழக்கமாக உறையும் கூடையைச் சேரும். (படம்விரித்து) ஆடும் பொழுது இரைச்சலிடும். மூடிவைத்தபின் (மூடியைத்) திறந்தால் தனது முகத்தை வெளியே காட்டும். அது கடித்தால் (பற்றின்) விஷம் தலைக்கேறி அதிர்ச்சியைக் கொடுக்கும். உலகில் பாம்புக்கு பிளவுபட்ட நாக்கு உண்டு.

எள்ளு: (செக்கிலிட்டு ஆட்ட) ஆடி எண்ணெய் குடத்தைச் சேரும். (செக்கில் எள்) ஆடும் பொழுது இரையும். மூடியைத் திறந்து எண்ணெய்யைப் பார்த்தால் (பார்ப்பவர் தம்) முகத்தைக் காணும்படி (மாசின்றித்தெளிந்து) காட்டும். எண்ணெய் தலையிற் பொருந்தினால் ஓடிப்பரபரெனச் சுவறும். உலகிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிண்ணாக்கும் கிடைக்கும். கட்செவியாக (கண்ணே செவியாக) நுணுக்கியுணரும் பாம்பை எள்ளெனச் சொல்லுக, என்கிறார்.

"வசைபாடக் காளமேகம்" எனப்புலவர்களால் பாராட்டப் பெற்ற பெரும் புலவரின் செய்யுளையும் அதன் சிலேடைப் பொருளையும் பார்த்தோம். இனி நாகமணிப்புலவர் பாடிய ஒரு சிலேடைச் செய்யுளைப் பார்ப்போம்.

அந்தச் செய்யுள் கொழும்பு மாநகரில் பாடப்பட்டது. புலவர் அப்பொழுதும் புலவராகவே இருந்தார். ஆனால் கொழும்பில் ஒரு செட்டியார் வீட்டுக்குப் பெரிய கணக்கப்பிள்ளையாக வேலை செய்து கொண்டிருந்தார். விவேகானந்த சபையில் ஒரு பிரசங்கம் நடக்கவிருந்தது. புலவரும் அறிந்து அந்த சபைக்குப் போயிருந்தார். பிரசாரகர் கூலிக்குப் பிரசங்கஞ் செய்ய வந்தவர் என்றும் ஏதோ ஒரு வாரிதி அவருடைய நாமம் என்றும் அறிந்தார். பிரசங்கம் நடந்தது. சபையோர் பேசாமல் சில நிமிடம் இருந்தார்கள். பின்னர் ஒருவரோடு ஒருவர் "இதென்ன பழைய பல்லவி!," "வெள்ளவத்தையிலும் இப்படிப் பேசினாரே!" "ஏன்! கதிரேசன் கோயிலிலும் இதைத்தானே பேசினார்!" "அநியாயக் காசு!" என்று கதைத்தார்கள்.

தமிழர்களின் - அறிஞர்களின் - தலைவர்களால் நடாத்தப்படும் சபையிலும் கூலிக்குப் பேச அந்த வாரிதி போயிருந்தமை புலவருக்குப் பிடிக்கவில்லை. எத்தனையோ பண்டித மணிகள், வித்துவ ரத்தினங்கள் சமூக உயர்வுக்காக உழைக்கத் தம்மையே தியாகஞ் செய்திருப்ப, பெரும் பொருள் கொடுத்து அந்தப் பிரசாரகரை ஒழுங்கு செய்த சபையாரின் பணப்பெருக்கை வியந்து கொண்டு புலவர் போய்விட்டார். போனாலும் "துருத்திச் சுடர்" போலப் பிரசங்கியாரில் புலவருக்குக் கோபம் கிடந்தது. அடுத்த நாட்காலை செட்டித்தெருவில் உள்ள கடைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார் புலவர். கடை முதலாளி எழுந்து, தான் இருந்த ஆசனத்தில் அவரை இருக்கச் செய்து பக்கத்தில் நின்றார். முதல் நாட் பிரசங்கியாரும் அப்பொழுது கடைக்கு வந்தார். வந்தவர் இருந்தவரைப் பார்த்து "ஒரு கட்டு வி. எஸ். ஏ சுருட்டுத்தாரும்" என்று கேட்டார். வியெஸ்சே என்ற ஓசை அடித்தாற் போல "வேசை" என்றே இருந்தவருக்குக் கேட்டது. அவர் சிரித்துக் கொண்டு "வேசைச் சுருட்டா வேண்டும்" என்று கேட்டார்.

சுருட்டை எப்படி வேசி என்பீர் என்ரு அந்தப் பிரசாரகர் கேட்டார். புலவர் அவருக்கு எழுதிக் கொடுத்த மறுமொழிகள் ஒரு சிலேடை வெண்பா ஆனது.

"எட்டிப்பிடித்தலால் ஏந்திமுத்தம் இடுதலால்
கட்டையறுத்து இதழ்வாயிற் கவ்வுதலால் - மட்டற்ற
ஆசைத்தீ மூளுதலால் ஆனபுகைச் சுருட்டை
வேசைப்பெண் என்றேன் விரைந்து"

பிரசாரகர் பார்த்துவிட்டு சுருட்டு ஒரு கட்டு வாங்கிக் கொண்டு போனவர்தான். போகட்டும்! நமக்கு! எம் தமிழன்னைக்கு! ஓர் அருமையான கவிதாமலர் கிடைத்துவிட்டது. இந்தச் செய்யுளில் உள்ள சிலேடைப் பொருளைச் சிறிது ஆராய்வாம்.

சுருட்டு: சுருட்டை வாங்குபவர் எட்டிப்பிடித்தலாலும் (அதன் குணமறியும் பொருட்டு) உயர்த்தி மோர்ந்து பார்த்தலாலும் பத்தாகச் சேர்த்து கட்டியுள்ள நூலை அறுத்து, தமது வாயிதழ்களாற் சுருட்டைக் கவ்வுதலினாலும், அளவு கடந்த ஆசையோடு நெருப்பை அதில் மூளச் செய்தலாலும் புகையினை உண்டாக்கும் சுருட்டு என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேசை: விலைமகளாதல் அறிந்தும் பொறுமையழிந்து அன்பின்றிப் பிடித்தலாலும், தாங்கி முத்தமிடுதலாலும் (வேசிக மனஞ்செய்யலாகாது என ஆன்றோர் கட்டிவைத்த) வரம்பை மீறி முருக்கிதழ் போன்ற அதரவாயிற் கவ்வுதலாலும், முறையற்ற ஆசை நெருப்பு மூளுவதாலும் தமது கல்வி, செல்வம், புகழ், ஆவி என்பன 'புகை'யக்காரணமான வேசை என்க.

சுருட்டு தீதாதல்:
கண்புகையும் நெஞ்சுலரும் கைகால் அயர்ந்துவிடும்
வெண்புகையால் மேனி வெளுத்துவிடும் - திண்புகையால்
ஈரற்கருகிவிடும் இந்திரியம் நட்டமாம்
பாழும் புகையிலையின் பண்பு"
என்னும் செய்யுள் மூலமும்

வேசை தீதாதல்:
"பொருட் பெண்டிர் பொய்மை முயக்கம்
இருட்டறையில் ஏதில்பிணந்தழீ யற்று"
என வள்ளுவ தேவரும்
"சேலை கொடுத்ததற்குச் சீமாட்டி என்கொடுத்தாள்
சூலை கொடுத்தாள் துயர்கொடுத்தாள் - மூலயரையாப்பு
கொடுத்தாள் இன்னுமின்னு மெத்தனையோ காப்புக்
கொடுத்தாள் கடிகொடுத் தாள்"

எனச் சுப்பிரதீபக் கவிராசரும் கூறியருளிய செய்யுட்கள் மூலம் உணரக்கிடக்கும் பொதுத் தன்மைகளை சிலேடைப்பாவிற் திரட்டி
"மட்டற்ற ஆசைத்தீ மூளுதலால் ஆன புகைச்சுருட்டை வேசைப் பெண்" என்றமையும் நோக்கி மகிழற்குரியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. உண்மைப்புலவன் உயிரினுஞ் சிறந்த வாய்மையைக் காத்து நீதி செலுத்துதல்

[தினகரன் ஞாயிற்றுவாரமலர், கொழும்பு: 21 - 01 - 1951]

## சிலேடை வெண்பாவால் சாதித் திமிரை அடக்கிய நயினை நாகமணிப் புலவரின் கவிதா விலாசம்

நாகமணிப்புலவர் அப்பொழுது நயினாதீவில் கிராமச்சங்க அக்கிராசனராக இருந்தார். அக்காலத்தில் சிறு குற்றங்களை விளங்கித் தீர்ப்புக்கூறச் சங்கத்துக்கு அதிகாரம் இருந்தது. அவருடன் கூடப்பிறந்த தம்பியாரின் மாடு யாரோ ஒருவருடைய பயிரை அழித்துவிட்டதென முறைப்பாடு ஒருவரால் கிராமச் சங்கத்தில் கொடுக்கப்பட்டது.

சங்கத்தாரின் கட்டளைப்படி எதிரி (தம்பியார்) சங்கத்துக்குப் போனார். வழக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டது. தனது மாடு பயிரை அழித்ததை எதிரி ஒப்புக்கொண்டார். எனவே பயிர் அழிவுக்கு ஐந்து ரூபாய் குற்றம் விதிக்கப்பட்டது. இவ்வளவில் வழக்கு முடியவில்லை.

தமையன் (அக்கிராசனர்) தம்பியாருக்குக் குற்றம் போடுவாரெனக் கனவிலும் எதிர்பாராத வழக்காளிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவர் அக்கிராசனரைப் பார்த்து, "ஐயா! நான் வழக்குப் போடுவேன், என்று சொல்ல, "நீ வழக்குப் போடு! என்னுடைய அண்ணர்தான் அக்கிராசனர். உனக்குத் திருப்பிக் குற்றம் போடுவிப்பேன்" என்றுஞ் சொன்னார் ஐயா!" என்று சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மீண்டும் பிந்திய முறைப்பாடு சாட்சிகளுடன் மெத்தக் கவனமாக விசாரிக்கப்பட்டது. அதிலும் எதிரி குற்றவாளியாகாக் காணப்பட்டார். அக்கிராசனரைச் சாட்டி வழக்காளியை எச்சரித்தற்காக, எதிரியை எச்சரித்து, மீண்டும் ரூபா ஐந்து அபதாரமும் விதித்தார் அக்கிராசனர். விதிப்பார் தானே! அற்ப பதவிக்காக உயிரினுஞ் சிறந்த வாய்மையை - நன்றியை - நீதியை விற்கும் மகா கனவான்களைச் சேர்ந்தவரா அவர்? உண்மைப் புலவரல்லவா?

பின்வரும் சிலேடைச் செய்யுள் பாடப்பட்ட காரணத்தில் இருந்தும் புலவரது பரந்த மனநிலை எம்மால் அறியக் கிடக்கின்றது. இவருக்கு முடிவெட்டும் நாவிதர் ஒருவர் நயினாதீவிலும் இருந்தார். அவரிடம் புலவருக்கு நல்ல நம்பிக்கை இருந்தது. (பவுடர் பூசி, தாடியைத் தடவிக் கொடுத்து, கதை சொல்லி - தலைசீவி - அழகுபடுத்தி, சிரித்து, விடை கொடுப்பவர்களில் அநுபவமுள்ள எவருக்கும் நம்பிக்கை இருக்குந்தானே.)

ஒரு நாள் வழக்கம் போல அந்த நண்பர் (நாவிதர்) புலவருக்கு முடிவெட்ட வந்தார். ஏனைய நாட்கள் போல அன்று அவருடைய நண்பர் கலகலப்பாக இல்லை, என்றாலும் முடிவெட்ட ஆரம்பித்து விட்டார்.

புலவர் அவரைப் பார்த்து, “சிரஞ்சீவியாரே! இன்று தூங்கிப் போய் இருக்கிறீரே! என்ன கவலையோ?” என்றார்.

அதற்கு அவர், “ஒன்றுமில்லை ஐயா! எந்தநாளும் கோயில் குருக்களுக்கு முடிவெட்டப் போனால், பேச்சும் புடைச்சலுந்தான், ஐயா! இன்றைக்கு அடிக்கவும் வந்துவிட்டார்” என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் அப்படியெல்லாம் நடத்துகின்றார்?" எனப் புலவர் கேட்டார். அதற்கு நண்பர், "அவர் மேல் நான் தொடாமல் முடிவெட்ட வேணுமாம். தற்சமயம் - அறிந்தறியாமல் கைமுட்டிவிட்டால் கோபிக்கின்றார், ஏசுகின்றார்" எனச் சொல்ல, புலவர், "சரி! இன்று ஏன் அடிக்கவந்தார்" என்றார்.

நண்பர் சிரித்துக் கொண்டு; "இல்லை ஐயா!இன்றைக்கு நான் வேண்டுமென்று கத்திப்பிடியில் நீளமான தடிவைத்துக் கட்டிக் கொண்டுபோய் மறைவில் வைத்துவிட்டு, குருக்களை முடிவெட்டக் கூப்பிட்டேன். அவர் வந்திருந்தார். நான் தடியின் அடிப்புறத்தில் பிடித்துக் கொண்டு எட்டத் தள்ளி நின்று கத்தியை நீட்டினேன். அது அவருக்குக் கோபமாம். நான் என்ன ஐயா செய்ய? கையும் முட்டக்கூடாது, முடியும் வெட்ட வேண்டும் என்கிறார்.

இந்தக் கதையைக் கேட்ட புலவர் சிரித்துவிட்டு, நாவித நண்பருக்கு பின்வரும் வெண்பாவைப் பாடினார்.

"அம்பட்டராதலினால் ஆனசிகை நீக்குதலால்
கும்பிட்டே எவரும் குனிதலால் - செம்பிட்டுப்
புன்னீர் பிடித்தலால் பூசுரரும் நாவிதரும்
தொன் நேரதென்றுலகிற் சொல்"

"வேங்கைப்புலியை ஒரு சிறிய எலி" என உவமித்துக் காட்டும் புலவர் வரிசையில் வந்த நயினைநாகமணிப் புலவர் இந்த வெண்பாவில் எடுத்துக்காட்டும் சிலேடைப் பொருளைச் சிறிது ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவிதர் (அம்பட்டர்):

அம்பட்டகளாயிருத்தலினால், வளரும் முடியை அகற்றுதலினால் மயிர்களைய விரும்பிய எவர்களும் இணங்கித் தலைதாழ்தலால் (அவர்கள் சொல்வதெற்கெல்லாம் இணங்கி இருத்தலால்) நீருள்ள உயிர்முயபாத்திரத்தில் (செம்பில்) விரல்களை அல்லது பிரஷை சொற்பநீரை முகத்தில் துவட்ட எடுத்தலால் நாவிதர் என்க.

பூசுரர் (குருக்கள்):

அழகிய பட்டர்களாய்ப் பிறந்துள்ளதனால் (பிறவிகள் தோறும்) உண்டான பாவக்குறிப்பு ஏட்டை (முத்தீபேணும் இருபிறப்பாளராகி) அழித்தலால், எவர்களும் தாழ்ந்து கும்பிட்டு அவர்களது ஆசீர்வதிப்பைப் பெற்றுக் கொள்ளுதலால் (உத்தம கிரிகைகளின் பொருட்டுச்) செம்பின்கண் தர்ப்பையும் நீரும் இட்டுப் பத்திரப்படுத்திக் கொள்ளுதலால் பூசுரர் என்க.

இவ்வாறு பூசுரரும் நாவிதரும் ஒரேவிதமான தொழில் செய்வோராய் இருக்க, எவர்களும் தலைதாழ்த்துதலால் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் நேரானோரே - சமமானவரே என்று உலகிற்கு சொல் என்கிறார்.

"காயமுடன் உயிர்முயலுங் கருமமெலாம் பரனருளாற்
தூயமனத்து ணர்ந்து வினைத்தொகை எழுதிநாடோறும்
ஆயதுயர் சுகமளிக்கும் யமன்கணக்கில் அரும்பாவத்
தீயசிகை இல்லார்க்குச் சிறந்தசிகை வருவித்தார்"

என்னும் திருவாதவூரடிகள் புராணச் செய்யுளில், 'அரும்பாவத் தீயசிகை' என ஏடும், 'சிறந்தசிகை' எனக் கொண்டையும், 'சிகை' என்ற ஒரு சொல்லே வெவ்வேறு பொருள்பட்டு வருதல் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. கடன்கொடுத்தால் அறவிடத் தெரியாதவர்களுக்கு..!

[தினகரன் ஞாயிற்றுவாரமலர், கொழும்பு: 28 - 01 - 1951]

வாங்கிய கடனைக் கொடுக்கும் போது, முகம் வேறுமாதிரியாக இருத்தலும், தங்கள் கஷ்டமெல்லாம் சொல்லி இரந்து கடன்படும் போது முகம் ஒருமாதிரியாக இருத்தலும் புதிய காரியம் அல்ல! அந்தக் காலத்திலும் இருந்தது இந்த வழக்கம். இந்தக் காலத்திலும் இருக்கிறது.

சங்க இலக்கியங்களில் ஒன்றான "கற்றாறிந்தார் ஏத்துங்கலி"த் தொகையில் ஒரு கற்பரசி பேசுகிறாள் தன்னுடைய கடன்காரனை.
அவள் பேச்சைப் பாருங்கள்.

"உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனும் தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்
பண்டும் இவ்வுலகத்தியற்கை யஃதின்றே
புதுவதன்று"
என்கிறாள்.

கடன் கொடுத்து வாங்கத் தெரியாதவள் அவள். கொடுத்த கடனை, இப்படிக் குளிரப்பேசி வாங்க நினைக்கின்றாளே. கடன் கொடுத்தால் கொடுங்கள். ஆனால் வாங்கும் மாதிரி வாங்கப் பழகவேண்டும். அப்படிப் பழக்கமில்லாத ஆட்கள் - பின்வருஞ் செய்யுளில் சிலர் எப்படிக் கடன்கொடுத்து வாங்குகிறார்கள் என்பதை நயினை நாகமணிப்புலவர் சொல்லித்தருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“காரைதீவுச் சுப்பர் ஆறுமுகமொடு
காத்தி கடனைக் கொடுத்துவிட்டு
காலனும் தூதனும் ஏமனும்
போலவே காலமே ஓடிவருவார்
நேரமில்லாமலே விடியற்புறந்
தன்னில் நித்திரைப் பாயதனிலே
நீயெழும்பேனென்று தலைமாடு
தன்னிலே நிலையாகவே குந்துவார்
பார இழவென்று கடனாளி
மனையாளும் பதைத்துத் துடித்தெழும்பப்
பயணமல்லோ காசுதாவே
இலாவிடிற் பயறுதாவே னெழுப்பேன்
கூரையிற் பூசனிக்காயொன்று
வாழைக்குலை கிடக்கிறதுதாவேன்
கூடாதண்ணேயெனக் கூறினுந்
தேங்காபோடும் என்பரிவர் தங்கள் குணமே”

சுப்பரும் அவருடைய நண்பர்களும் நல்ல பணக்காரர்கள். அவர்கள் கடன் கொடுத்தார்கள். பணத்தையும் வட்டியையும் இந்த உலகம் இலேசில் திருப்பிக் கொடுக்குமா? அவர்கள் தான் என்ன செய்வார்கள். கட்டி இருந்த பூனைக்குட்டியை அவிழ்த்துவிட்டுத் தேடுபவர்கள் போல பெட்டியில் இருந்த பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, காலையில் எழுந்து ஓடவேண்டியல்லவா இருக்கின்றது, அவர்கள் பாடு. ஓடினாலும் கடன் திரும்பிவிட்டதா? நீ எழும்பேன் என்று தலைமாட்டில் நிலைபெறவேண்டியும் வந்துவிடுகின்றது.

கடன்பட்டவர்களுக்கோ பெரும் வேதனை. அது பெரியபார இழவாக இருக்கிறது. கடனாளி மனையாள் பதைத்துத் துடித்து எழும்புகிறாள். அவர்களிடம் பணத்தையோ வட்டியையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வகையில்லை. என்றாலும் வந்தவர்கள் காலனும், தூதனும், எமனும் போன்றவர்கள் அல்லவா? உயிரைக் கொண்டுபோய்ச் சேர்க்கக் காலனும் தூதனுமே போதுமானவர்கள். பற்றாக்குறைக்கு எமனும் பிரசன்னமாகி இருக்கிறாரே! கட்டாயம் கடன் போய்த்தான் தீரும். கடன்பட்டவர்களின் உயிரைப்பிடித்துக் கொண்டு கிடக்கும் சில பொருட்கள் கால - தூத - எமர்களின் ஞாபகத்துக்கு வருகின்றன. "பயணமல்லோ காசுதாவேன்" என்று கூறிக் கொண்டே அல்லாவிடில் "பயறுதாவேன்" என்று இழுக்கிறார்கள்.

யமதூதர்: பஞ்சப்புலன்கள் உட்பட தொண்ணூற்றாறு தத்துவங்களிலும் (வைத்தியமரபு) இயங்கிநிற்கும் ஆத்மனை ஒவ்வொன்றாய் ஒடுக்கித் தனிக்கச்செய்து கொண்டுபோவது போல நித்திரை கொண்டது போதும் என எழுப்புகிறார்கள். [ஒன்றுமில்லையா? நீ குருடனா?] "கூரையிற் பூசணிக்காய்" "வாழையில் குலைகிடக்கிறது வெட்டிப் பிடுங்கித் தாருங்கள்" என்று நெருக்குகிறார்கள்.

கடனாளி, "வாழைக்குலை வெறும் பிஞ்சு; பூசனி பச்சைப்பூ! பாருங்கள்" என்கின்றான்.

"அப்படியா! பழுத்த தேங்காய் கிடக்கிறதே பறித்துத் தாருங்கள்" என்று எப்படியும் கடனை அரித்துக்கட்டிவிடுவார்கள்.
இப்படித்தான் கடன்கொடுத்தவர்கள் இருக்கவேண்டும், என்ற பொருளில் "இவர் தங்கள் குணமே" - அது அவர்கள் குணம் என்கிறார் புலவர்.

கடன் வாங்கி, அதைத்தொட்டு உயர்வடையாமல் - வீண்செலவு செய்து - குடித்து - வெறித்து - குட்டிச்சுவராகும் படி அவர்கள் சொல்லித்தந்தார்களா? அப்படிச் செய்பவர்களுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பராட்கள் போன போக்கு முக்காலுஞ் சரிதான். ஆனால் கடனை வாங்கியபின் வேறு இயற்கை ஏதுக்களால் அதனைக் கொடுக்கமுடியாதவர்கள் தமது கடனை நினைத்து நெஞ்சங் கலங்குவதை பின்வரும் பாடல் உலகத்தாருக்கு எடுத்துக் காட்டுகின்றது.

"விடங்கொண்ட மீனைப்போலும்
வெந்தழல் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள் வாயிற்
பற்றிய தேரைபோலும்
திடங்கொண்ட இராமபாணம்
செருக்களத் துற்றபோது
கடன்கொண்டார் நெஞ்சம் போலும்
கலங்கினான் இலங்கை வேந்தன்"

என்பதில் இலங்கை வேந்தன் - இராவணன் இராமபாணம் உறுத்தப்பட்ட போது கலங்கியமைக்கு "கடன்பட்டார் நெஞ்சம்" உவமிக்கப்படுதல் காண்க. இவற்றிலிருந்து உத்தமர்களிடம் கடன்காரர் கருணைகாட்டி நடக்கவேண்டும் என்பது புலவரது சித்தாந்தம் என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. புயலடித்துச் சென்ற வள்ளம்

[தினகரன் ஞாயிறுவாரமலர், கொழும்பு; 11- 02 -1951]

புயல் அடித்தது! பெரும் புயல்.
அது ஆயிரத்துத் தொளாயிரத்து இரண்டாம் ஆண்டு இருபதாந்தேதி அடித்தது.
நயினாதீவிலும் நல்ல புயல்.

எத்தனயோ தென்னை, பனை, வாழை இவையெல்லாம் முறிந்து பெயர்ந்து தரைமட்டமாயின. கடல் வீறிட்டுப் பெருகி அலைமோதியது. சனங்கள் வீட்டுக்கு வெளியே போகமுடியவில்லை. அப்படியே இருந்து விட்டார்கள். என்ன செய்வார்கள்? புயலுடன் பெரிய மழையும் 'சோ' எனப் பொழிந்தது.

அன்று இரவு புயலும் மழையும் இன்னும் மோசமான நிலையை அடைந்துவிட்டன. கடல் பெருகிக் குதித்து ஓடியது. ஆதலால் கடற்கரையில் வழக்கமாகக் கட்டிவைக்கும் வத்தைகள், வள்ளங்களைத் திரும்பவும் பெலமாகக் கட்டி வைக்கமுடியவில்லை.

இலங்கையில் முதற்தரமான குளிகாரர் நயினாதீவில் இன்றும் இருக்கிறார்கள். கீழைக்கரை ஓரக்காரர் இவர்களிடம்தான் குளியோடப்பழகியவர்கள் என்றுகூடச் சொல்வார்கள். அத்தகைய வீராதிவீரர் நயினாதீவில் உள்ள குளிகாரர். அவர்களால் கூட அந்த வள்ளங்களைப் பெலனாகக் கட்டி வைக்கக் கொந்தளித்த கடல் அன்று இடங்கொடுக்கவில்லை. இயற்கை சீறினால் அதனோடு மனிதவலிமை போராட முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே நடப்பதைக் கண்டு கொள்வோமெனப் பேசிக்கொண்டு அனைவரும் வீடுகளிலே இருந்தார்கள்.

"வெட்டி அடிக்குது மின்னல் - கடல்
வீரத்திரை கொண்டு விண்ணைப் பிளக்குது
கொட்டியிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையிது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!"

என்ற மகாகவி பாரதியார் பாடலை நயந்து உறுமிக்கொண்டிருந்தது அந்த இரவு.

அதிகாலையில் சேவல்கள் கூவவில்லை. மயில்கள் அகவவும் இல்லை. ஏன்! பட்சிகள் எல்லாம் குளிரில் நடுங்கும் ஓசையொழிய வேறு வழக்கமான ஆனந்தப் பாடல்கள் எவையும் நடைபெறவில்லை. ஆதலால் அன்று காலை சோகக்காட்சியையே இயற்கை சித்திரித்துக் கொண்டிருந்தது. அந்தப் பரிதாபமான நிலையைப் பார்த்துப் புயலும் மழையும் சிறிது ஓய்ந்தன. இரவு முழுதும் எப்பொழுது விடியுமென அவாவுடன் இருந்த வள்ளக்காரர் (பழய கறுப்பன் தன்னுடைய பணத்தைப் பார்க்கப் பாராங்கல்லைப் புரட்டப் போன) ஆசையோடு ஓடிப்போனார்கள். அவர்களுக்கு முன் மனங்கள் துடித்துக் கொண்டு போயின. அதிட்ட சாலிகளின் வள்ளங்கள் கட்டுப்பட்டபடியே கிடந்தன.

ஆனால் தெற்கு நயினாதீவில் 'நீலாத்தை'யுடைய வள்ளத்தைக் காணவில்லை. கட்டி இருந்த கயிறு அறுந்து கிடந்தது. நயினாதீவுக் கரையெல்லாம் ஓடியோடித் தேடினார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை. கண்ணுக்கு எட்டு மட்டும் பார்த்தார்கள் காணப்படவேயில்லை. இவர்களுடைய வள்ளம் 'முத்துக்கொம்பன்' - "அது அறுத்துக் கொண்டு போய்விட்டது." என்ற வதந்தி அவசர தந்தி போல் நீலாத்தை வீட்டிலுள்ளாருக்கும் எட்டியது. அவர்களும் கடற்கரைக்கு ஓடிப்போனார்கள். செகிடாத்தை கதிர்காமர் அவர்களுள் முக்கியமானவர். முத்துக்கொம்பன் வந்த பின்புதான் அவர்கள் குடும்பத்துக்கு ஊரவர்கள் பெரிதும் கடமைப்பட்டார்கள். கட்டப்பட்ட முத்துக்கொம்பன் கயிற்றை அறுத்துக் கொண்டு போய்விட்டது. அது இல்லாமல் அவர்கள் குடும்பம் இனி எப்படி வாழ்வது? என்ற கவலை நீலாத்தையை ஒரு உலுப்பு உலுப்பியது. கடற்கரையில் விழுந்து கதறினார். குடும்பத் தலைவன் நிலைதளர்ந்து போனால் மனைவி மக்கள் என்ன செய்வார்கள்? அவர்களும் விழுந்து கட்டி அழுதார்கள். அவர்களைச் சுற்றி ஒரு சனக்கூட்டம் அனுதாபத்துடன் கூடிவிட்டது.

அந்த நாளில் ஒரு செட்டியாரின் தாபனத்தில் நயினை நாகமணிப்புலவர் கணக்குப்பிள்ளையாக இருந்தார். அவரும் கடற்கரைக்குப் போனார். அவருடைய நண்பர் செல்லப்பரும் அங்கே போயிருந்தார். ஓர் இடத்தில் சனக்கூட்டம். அதிலிருந்து கூக்குரல் கேட்டது. புலவரும் செல்லப்பரும் விரைந்து போனார்கள். முத்துக்கொம்பனைக் காணவில்லை. அதனால் அதன் சொந்தக்காரரர் கதறுவதாக அறிந்தார்கள். அவர்களின் புலம்பலைப் பார்க்க இவர்களுக்கும் மனங்கசிந்தது. செல்லப்பர் தாராளமான பெரிய மனுசன். கொஞ்சம் நகைச்சுவையும் உடையவர். தனது நண்பரைப் பார்த்து "புலவரே! இந்தச் சோகக்காட்சியை ஒரு பாடலாக்கலாமே" என்றார்.

அப்போது பாடப்பட்டது பின்வரும் பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீர்கொண்ட கலியுகத் தொன்பான நூற்றாண்டில்
செகிடி கதிர்காம புதல்வன்
சென்ற நீலாத்தை மன்னார்ப் பகுதியால் நயினை
சேர்த்திட்ட சிதவல் அலவன்
ஊர்கொண்ட அவர்கள் குடிஉய்யவே தினமும்மீன்
உயிர் கொண்ட கங்காளமும்
ஒரு மாதமளவில் எட்டுத்தரம் பழுது பார்த்து
உற்ற வைரப் பொக்கிஷம்
கூர்கொண்ட ஆணியால் இடையெங்கும் இன்றியே
குழி கொண்ட கங்காளமும்
குடி சனத்தைத் திமிலரடி தேடவிடும் முத்துக்
கொம்பனெனும் நாமதேயன்
சூர்கொண்ட கதிர்காமரோடு மனைமக்களும்
சூழ்ந்து கட்டிப் புலம்பச்
சுபகிருது வருஷம் ஐப்பசி மாசம் இருபதில்
சொந்த ஊர் மருவினாரே"

நீலாத்தை ஆயிரத்துத் தொளாயிரமாம் ஆண்டு மன்னாருக்குப் போயிருந்தார். முத்துக்கொம்பனை மன்னாரிலே கண்டுவிட்டார். பேய்பிடித்தது போல முத்துக்கொம்பனை அவருக்குப் பிடித்துவிட்டது. நெடுங்காலம் மன்னாரில் தொழில் செய்து திரிந்தபடியால் முத்துக்கொம்பன் என்ற பெயர் அப்படியே இருக்க, வள்ளம் மெருக்காய் (சிதவல்) நண்டு போல கோதாகி இருந்தது. அப்படி இருந்தாலும் அதனை மன்னாரில் இருந்து நயினாதீவுக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டார்.

ஒவ்வொரு நாளும் அது தொழிலுக்குப் போய் மீன் வேட்டையாடி அவர்களின் குடியை உய்வித்துக் கொண்டு வந்திருக்கிறது. ஆக ஒரு மாசத்தில் எட்டே எட்டு முறை தான் கரைக்கு இழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டை உடைசல் அடைத்து வைரப் பொக்கிஷமாக்கிக் கொள்ளுவார்களாம்.

ஆனால் கூரான உளி கொண்டு அடிக்கடி நெடுங்காலங் கலப்பத்துப் பார்த்து வந்திருந்தபடியால் புறப்பக்கம் மாத்திரம் (எள்ளுப்போட இடமின்றி) குழியாக கங்காளம்போல இருந்தது. இவ்வளவு சித்திரமான முத்துக்கொம்பன் திமிலரடியை ஊர்ச்சனங்கள் தேடுமளவுக்குப் பெருஞ் செல்வாக்குடன் நின்றது. அந்த முத்துக்கொம்பனை அவர்களுடைய உயிருக்குச் சமானமாக நேசித்தார்கள்.

நன்றி இல்லாத முத்துக்கொம்பன் புயலடித்த சாட்டை வைத்துக்கொண்டு வந்த ஊரில் இருந்து மறைந்துவிட்டது. கதிர்காமர் பெரிய வீராதிவீரர்தான், என்றாலும் அவர் அதனிடத்தில் வைத்திருந்த மதிப்பும், அதனோடு பட்ட சிரமமும், அதனால் கிடைத்த புகழும் அவரையும் அவரது குடும்பத்தையும் நிலை தளர்த்து கட்டிஅழ வழி செய்தது. மறைந்து போகிறவர்களுக்கு தொல்லை தீர்ந்ததே என்ற நிம்மதி. அப்புறம் தம்மால் இன்பம் அநுபவித்தவர்களை திரும்பிப்பார்க்கும் நிலைமை உலக வழக்கில் இல்லைத் தானே.

போனவர் போய்விட்டாலும் அவரைத் தொட்டு அநுபவித்தவர்கள் இன்னும் கொஞ்ச நாள் அநுபவிக்க இருந்தாரில்லையே என்று துயரப்பட்டுக்கொண்டு இருப்ப, "சுபகிருது வருஷம், ஐப்பசி மாசம் இருபதில் சொந்த ஊர் மருவினாரே" என்றல்லவா! பாடுகிறார். ஆம், பிறந்த இடத்துக்கு - மன்னாருக்கு - வாங்கிய இடத்துக்கே போய்விட்டது. கட்டி வைத்த கட்டு அறுந்தால் வாங்கிய இடத்துக்குப் போகுந்தானே. அதனைப் புலமைக்கண் கண்டு நமக்குக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. ஊரைதீவு வரகவி முத்துக்குமாருப் புலவர்

கமத்தொழிற் சிறப்பைக்கூறும் அவரது பாடல்கள்
[தினகரன் ஞாயிற்றுவாரமலர், கொழும்பு: 03 - 08 - 1951]

கானகத்தின் மத்தியிலுள்ள தெளிவில்லாத குளத்தில் மலர்ந்த தாமரைமலர் போல முத்துக்குமாருப் புலவர் திகழ்ந்தார். அப்பொழுது ஒல்லாந்தரின் கீழைத்தேச அரசியல் வானத்தில் இரத்த மேகங்கள் பரவி, இலங்கையில் அவர்களின் அதிகாரப் பகலவன் அஸ்தமித்துக் கொண்டிருந்தது.

அதனாலும் அவர்களின் இயற்கைச் சுபாவத்தினாலும் அவர்கள் குடிமக்களின் சேமங்களையோ கல்வியையோ சிறிதும் கவனிக்கவில்லை. ஆதலால் தமது உணவு, உடை, கல்வி, சமயம் என்பவற்றை மக்கள் தாமே கவனிக்க வேண்டி இருந்தது. இந்த நிலைமையில் வறுமை நோயுற்ற குடியில் தோன்றிய புலவன், எவ்வாறு தனது புலமையின் பெருமையைப் பெருமக்கள் சமூகத்தில் நிலைபெறச் செய்யமுடியும்? உயிருள்ள புலமையல்லவா? ஆதலால் பண்ணைகளிலும் பாட்டாளி மக்களிடையேயும் அது கலந்து மலர்ந்தது.

நெல்லுவெட்டுகிறார்கள் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கரம்பனில். அங்கே அட்டஐஸ்வரியத்துடனும் உத்தியோகம் பார்க்கின்றார் ஒருவர். அவரை 'இராசகாரியர் ஆரியர்' என்கின்றார். உணவுக்கு அன்னியரை அவர்கள் கையேந்தவில்லை. கண்ணுங் கருத்துமாகச் செய்த கமம் அது.

தவம் திரண்டது போல முதிர்ந்து விளைந்து கிடக்கின்றது. மெத்த அழகுடன் காட்சி அளிக்கின்றது செந்நெல். அதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாமல் வெட்டி அடுக்காக வைக்கவேண்டும் என்கின்றார். வேளாண்மை பேராண்மை என்கின்றார். இதனைச் செய்யுள் வடிவில் பாருங்கள்.

"இலங்கைசேரும் கரம்பனில்வாழும்
இராசகாரியர் ஆரியர் வாரார்
அலங்கிர்தமாகிய செந்நெலரிந்து
அடுக்கில் வையுமென் ஆண்மைப்பள்ளாரே"

பசித்தவர்களின் நிச்சநிரப்பைப் [நித்திய வறுமையைப்] போக்கிச் சோர்வை நீக்கும் ஆண்மைத் தொழிலாம் கமத்தொழில். எனவே அதனைச் செய்வோரை ஆண்மைப் பள்ளாரே என்பதில் என்ன வியப்பு இருக்கின்றது.

தொழிலாளர் வெய்யிலில் கடினமான வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களின் சோர்வைப் புலவரின் பாடலாகிய மந்தமாருதம் வீசி நீக்கிக்கொண்டிருக்கின்றது.
"கறுத்தக் காளைகள் ஓறணை ஈரணை
கமுகடிவயல் உழையிலே
எருத்தைத் தெய்தெய் என்றுரப்பப் போனேன்
அவை எருத்துக்கொண்டது பள்ளாரே"

இது பழங்கதை - வெட்டிக்கொண்டிருக்கும் நெல்லு விதைக்க உழுதபோது நடந்த ஒரு சம்பவம் பேசப்படுகின்றது.

அப்பொழுது கமுகடி வயல் உழுதார்கள். அன்று உழுத காளைகள் எல்லாம் கறுத்தக் காளைகள். மூவணைக் காளைகள் அங்கே உழுதன. முன் ஏரில் நல்ல விடலைக் காளைகள் உழுதுகொண்டு போயின. அவற்றை விரைவாக நடத்தும் பொருட்டு 'தெய்! தெய்!' என்னும் ஓசையுடன் உரப்பி நெருக்கினேன். அவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகத்தைப் போட்டுவிட்டு என்னை முட்டும் பாவனையில் எதிர்த்துக்கொண்டன. அவற்றையும் அன்புடன் தடவி அடக்கி உழுதுதானே விதைத்தோம்.

விளைந்துஅரிந்து கிடக்கும் கழனியை வெட்டி எடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கின்றது. ஏன்! படாதபாடெல்லாம் பட்டு நாங்கள் வேளாண்மை செய்து கொடுத்தாலும் எத்தனையோ "கதிரைச் சுவாந்தார்"களுக்குச் சாப்பிடமுடிவதில்லையாம். இன்றைய உலகப் பொருள் போக்கு இப்படி இருக்கின்றது, என்கின்றார் புலவர்.

இன்னும் "எருத்தைத் தெய்! தெய்!" என்ற சொல்லடுக்குகள் அருவி வெட்டுவார் விரைந்து வெட்டக்கூடிய வகையில் முடுகுதாள அடைமானங்கள் பொதிந்து, பாட்டுக்கள் ஒரு புது நடையுடன் சோபித்தல் காண்க.

இன்றைய உலகில் ஏழாயிரம் நெல்லினங்கள் உண்டு. நமது பாரத நாட்டிலேயே நாலாயிரம் இனங்கள் வரையிற் பயிரிடப்படுகின்றன. அவற்றில் நூற்றுக்கணக்கான இனங்கள் இலங்கையில் பயிரிடப்படுகின்றன. சில நெல் இனங்கள் பின்வருமாறு

"குளவாழை கொக்குமூக்கன்
        கோங்கன் வெள்ளை நல்ல
குன்றிமணியன் பன்றிப் பீத்தன்
        குற்றாலச் சம்பா"

என்றும்

"அழகிய வாணான் இழகிய மூக்கன்
        பச்சைப் பெருமாள்
பழகவினிக்கும் இழங்கலையன்
        மிளகுச் சம்பா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே பேசப்பட்டுள்ள நெல்லினங்களில் ஆறுமாச நெல்லுத் தொடக்கம் எழுபது நாள் நெல்லுவரையில் இருக்கின்றன. பெருவேளாண்மை செய்வோர் இன்றும் மேலே கூறப்பட்ட இனங்களை வழக்கத்தில் விதைத்து வருவதை யாவரும் அறிவர்.

வரகவி முத்துக்குமாருப் புலவர் ஆயிரக்கணக்கான நெல்லினங்களை வைத்து அருவிவெட்டுப் பாடல்கள் பாடியிருக்கின்றார். எனினும் அவரது புலமைச்சுடர் அவ்வளவுடன் அணைந்து போகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. சனிபிடித்திடு காக்கையே!

அந்நாளைய வாழ்க்கை இயற்கையோடு இயந்ததால் நயினை நாகமணிப் புலவரும் இயற்கையில் கண்டவற்றை தமது பாடல்களில் பதிவு செய்திருக்கிறார். இனிமையையும் அழகையும் போற்றும் நாம் அழகின்மையைப் போற்றுவதில்லை. குயிலையும் மயிலையும் புகழ்ந்து ஆகா! ஓகோ! என்போம். அப்படி காகத்தையும் கூகையையும் சொல்வோமா? அது மனிதரின் குணம். புலவராய் இருந்தால் என்ன? யாராய் இருந்தால் என்ன? அது மாறுமா?

காகம் ஒன்று அதிகாலை நான்கு மணி வேளையில் கண்தூங்க விடாது 'கா கா' என்று கரைந்து புலவரின் நித்திரையை கெடுத்துக்கொண்டிருந்தது. புலவருக்கோ தாங்கமுடியாத ஆத்திரம் வந்தது. ஆத்திரத்தை அடக்கி அடக்கிப் பார்த்தார் அது அடங்கவில்லை. எழுந்து வந்து காகத்தை துரத்தினார். காகம் எழுந்து பறந்து சென்று ஒருவட்டம் இட்டு, மீண்டும் வந்து இருந்த இடத்திலே இருந்து கா கா என தன் சங்கீதக் கச்சேரிசையைத் தொடர்ந்தது.

காகத்தின் கச்சேரியை இரசித்துக் கேட்ட புலவர் அந்த மகிழ்ச்சியில் காகத்தின் பெருமைகளை நீண்ட பட்டியில் இட்டுகிறார். சூரிய ஒளியே படாது இருள் சூழ்ந்த அதிகலையில் கா கா எனக் கரைவது, நல்ல இனிமையான மா, பலா, வாழையாகிய முக்கனியும் இருக்க அவற்றை உண்ணாது வேப்பம் பழத்தை தின்பது, குப்பைக் குழியை தேடித்திரிவது, பிணத்தின் மணத்தை விரும்பிச் சென்று கண்ணைப் பிடுங்குவது, ராமர் விட்ட அருகம்புல் அம்புக்கு ஒருகண்ணைக் கொடுத்தது, நரியாரின் பேச்சை நம்பி வாயில் இருந்த வடையையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பவிட்டது; கற்பகதருவான பனைமரத்தில் முட்குவியலை வைத்து சண்டித்தனம் செய்வது. தன்முட்டை என நம்பி குயில் முட்டையை அடைகாப்பது என காகம் மிக்க புகழுடன் இருந்ததால் சனியனும் பிடித்து தன் வாகனமாக வைத்திருக்கிறார் என்பதை மிகநளினமாக 'சனிபிடித்திடு காக்கையே!' என நயினை நாகமணிப்புலவர் வாயாரம்புகழும் பாடலை நீங்களும் படித்து மகிழுங்கள்.

கருதுலகு விடியுமுன் வீடுவாசலில் வந்து
 கா காவெனுஞ் செருபே
கனிவர்க்கம் உண்ணாது வேப்பம்பழந் தின்னும்
 கடை கெட்ட மூதேவியே
பெருமையுடனே சந்தி எல்லாம் திரண்டு
 பல்பீக் குவியல்தேடு கழிவே
பிணமான மணமெங்கு அங்குசென்றே கண்
 பிடுங்கும் பெரும் பிசாசே
திருமேவு ராமர்விடும் அறுகானசரம் உருவ
 ஒருகண் கொடுத்த பதரே
தரைமீது நரியாரின் மொழிநம்பி ஏமாந்து
 வடைவிட்ட தனி மூடமே
தருவான மரமீது முட் குவியல் வைத்திடுஞ்
 சண்டித் தனத்துள் மாறே
தன்முட்டை யென்று சிறுகுயில் முட்டை
 காத்திடுஞ் சனிபிடித்திடு காக்கையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[எனது தந்தை பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள், நான் இலண்டனுக்கு வந்த பின்னர் எனக்கு எழுதிய சில கடிதங்களிலிருந்து......]

# 15. தெய்வ அருளும் வரும் தரும்.

19/04/1980

"எத்தனை தான் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத் தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவை போல்
மெய்த் துயர் வீட்டாவிடினும் வித்துவக் கோட்டமா என்
சித்தமிக உன்பாலே வைப்பன் அடியேனே"

இது நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம். பெரியாழ்வார் முதலாய ஆழ்வார்கள் செய்த பக்திப்பாடல்களின் திரட்டில் ஒன்று, குலசேகர ஆழ்வார் பாடியது.

வான் [முகில்] - ஆகுபெயர். வான் - மழை - வானிலிருந்து வழங்கப்படுவது. வான்மழை, எத்தனை தான் மறந்தாலும் - எவ்வளவு காலம் பெய்யாது வைத்து மறந்து போயினும் பயிர்களோ மொய்த்து [பைங்கூழ்களோ மைத்து] மாமுகில் வரும் - வரும் - பெய்யும் -பெய்யும் - வாழ்வோம் - வாழ்வோம் - என்று எப்போதும் வானத்தைப் பார்த்து நிற்பினுமாம். பைங்கூழ்கள் - பசியபயிர்கள்.

ஆண்டவனுடைய அருள் கிட்டாவிடினும் கிட்டும் - கிட்டும் - கிடைக்கும் - கிடைக்கும் என உயிர்கள், பயிர்கள் மழைபார்த்திருப்பது போல் இறைவனையே நினைத்துப் பார்த்துப் பார்த்து இருப்பினுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தனை தான் வான் மறந்த காலத்தும்" என்ற தொடர் எவ்வளவு ஆற்றல் வாய்ந்தது. வான்மழை நீண்ட காலத்திற்கு மறந்து போனாலும் வானால் - வான்மழையால் கிடைக்கும் பயனப்பெறும் பைங்கூழ்கள் சலிப்பதில்லையாம். "பார்த்திருக்கும்" பெய்யும் பெய்யும், துளிவிழும் துளிவிழும் என்று பார்த்திருப்பினுமாம். அவற்றின் நம்பிக்கை வீண்போவதில்லை. வான் ஒருநாள் அவற்றை வாழ்விக்க இரைந்து கொண்டு, விரைந்து கொண்டு ஓடிவந்து விடுமாம்.

தெய்வ அருளும் அப்படியே வரும் தரும். பயமேன்! வான்மழையாம் தெய்வ அருளுக்குக் காத்துக்கிடந்து, அவ்வருளைப் பெற்ற அருளாளர்கள் எத்தனையோ கோடியுளர்.

இராமாயனத்தில் கம்பன் பல நூற்றுக்கணக்கான இடங்களில் சிவபெருமானை எடுத்து ஆண்டிருக்கின்றான். தனது வலிமை என நினைத்து கைலையங்கிரியை இராவணன் தூக்கவில்லையாம். எனது அப்பன் எனக்கு எவ்வளவு இலேசாக இருப்பார் என எண்ணி, எடுக்க அந்தமலை அண்டமுகட்டில் முட்டும் அளவுக்கு உயர்ந்ததாம். தன் கைகளால் அந்த அளவுக்கு உயர்த்தினானாம். மெத்த இலேசாக உயர்த்தினான் என்கின்றார் கம்பர். அதற்குக் காரணம் சிவன். அவனது மந்திர சக்தியினால் அவன் நினைத்த அனைத்தையும் செய்ய உதவியாய் இருந்திருக்கிறார். சிவன் அருளாலேயே அவன் மலை எடுத்தான்.

அகத்தியர் இராவணனிலும் பக்தியில் உபாசனையில் கூடியவர் ஆதலால் அவரை இராவணனால் வெல்ல இயலவில்லை. இவ்வாறே வாலியாரும் சிவ உபாசனையில் இராவணனிலும் முன்னுக்கு இருந்தபடியால் வாலியாரையும் இராவணனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்ல முடியவில்லை. அவனது சகலவெற்றிக்கும் பெருமைக்கும் சிவ வழிபாடே காரணமாய் இருந்தது.

இராவணனைக் கொன்று அயோத்தி செல்ல நேர்ந்த போது 'வீரகத்தி' தோஷம் இராமனைத் தொடர்ந்தது. அதனை எவ்வாறு நீக்கலாம் என இராமேஸ்வர அந்தணர்களுடன் ஆலோசனை செய்த போது 'ஒரு சிவன் கோவில் கட்டி, சிவலிங்கப் பிரதிட்டை செய்து 'வீரகத்தியை' அடக்கம் செய்ய வேண்டும்" என்றார்கள். அவர்கள் சொன்ன படியே இராமன், இராமேஸ்வரத்தில் சிவன் கோவில் கட்டி, வீரகத்தியையும் ஒரு கிணற்றில் அடக்கம் செய்தான். ஒரு சிறு கிணற்றின் வாய்ப்புறம் இன்றும் அடைத்து மூடப்பட்டுள்ளது. இராமனும் சிவபக்கனாக இருக்கலாம். ஆதலால் தான் இராவணனைக் கொன்றான். இது இராமாயணம் சொல்லும் கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. மனிதர் அநுபவிக்கும் சுவைகள்

24 - 04 - 1980

"நீயார்! எல்லாவற்றையும் இயக்கிச் சரிவர ஓர் அணுவும் பிசகாது நடாத்த, அந்த (இறை) இயற்கை இருக்கிறது. அது சரியாய்த் தான் நடாத்துகின்றது. நீர் உம்முடைய வேலையைப் பாரும்" என்று மகரிஷிகள் உணர்ந்து சொல்கிறார்கள்.

இதனை - இந்த "மகாவாக்கியத்தைக்" கேட்டுக் கந்தருவர் வீண்வம்பு மேசாமல், வீண் விடயங்களில் தலை வைக்காமல், இந்த வானமண்டலத்தில் காதல் மீதுரக் கலந்து ஒருவரோடு ஒருவர் பின்னிப் பிணைந்து நீந்தி விளையாடி வீணை வாசித்து நடமாடி மகிழ்ந்து வாழ்கிறார்களாம்.

வீண்கதைகள் பேசி, வம்பு வளர்த்து, மனத்தாபப்பட்டுக் கொள்ளும் வழக்கம் படித்த குடும்பங்களிலும் இடையே நுழைந்து விடுகின்றது. அந்த வழக்கத்தை துணிவுடன் அகற்றிவிட்டு கணவன் மனைவியர் "கந்தருவர்" வாழ்வு வாழ வேண்டும். கந்தருவர் வாழ்வாவது பிறரைப் பற்றி வீண்வம்பு பேசாது, காதலொருமித்து இன்பமாக வாழ்தலே. இறைவனைச் சரணடைந்து வாழல் எனினும் மிகையாகாது.

எண்சுவை - மனிதன் அநுபவிக்கும் சுவைகள் எட்டுவகை. இவை நாவின் சுவையன்று. மனித உள்ளத்து உணர்வின் சுவை. ஒவ்வொரு மனிதரும் இச்சுவைகளை வெளிப்படுத்துவர். அதனை வள்ளுவர் மிகச்சுருக்கமாக அடுத்தது காட்டும் பளிங்கு போல என்கிறார். இச்சுவைகளைக் கொண்டு மனிதரை எடை போடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை:

1. நகை - சிரிப்பு
2. அழுகை
3. இழிவரல் - தீராநோய், வறுமை இவற்றால் உளதாகும் தாழ்வு மனப்பான்மை.
4. மருட்கை - அற்புதம்; பூனை ஒன்று ஆனையாகி நடந்து போதல். இப்படியே மனத்தை மருளப்பண்ணும் சத்துவம் [சுவை].
5. அச்சம் - பயம்
6. பெருமிதம் - அளவுக்கு மிஞ்சிய செல்வம் - கல்வி - அதிகாரம் - இவற்றால் வருவது. இறுமாப்பு எனினும் ஒக்கும்.
7. வெகுளி - கோபம்
8. உவகை - மகிழ்ச்சி - மேலே சொன்ன கந்தருவச்சுவை.

இந்த எண்சுவையும் தமிழர் கண்டது - தொல்காப்பியம் பகர்வது. மனிதரில் நிகழும் சுவைகளை - உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளை சத்துவங்கள் என்பர். இந்த எட்டுந்தாண்டிய நிலையில் ஒரு சுவை உண்டு. அது 'சமநிலை' - இந்தச் சமநிலை சான்றோரின் மனநிலை. மேலேயுள்ள எட்டில் ஒன்றும் இந்தச் சமநிலை உடையோனை அசைக்காது.

"செஞ்சா தெறியினும் செத்தினும் போழினும்
நெஞ்சஞ் சோர்ந்தோடா நிலை"

எல்லாம் அவன் செயல் என்று நன்றும் தீதும் அவன் தந்தவை. "எய்தவன் இருக்க அம்பை நோவானேன்" என்ற மெய்யுணர்வாளர் கண்ட உண்மை நிலை. இந்த நிலையை நாம் பழகிக் கொண்டால் கவலையற்று மகிழ்வோடு வாழலாம். பக்திவயப்பட்டு, தானே அவனான நிலையில் கேட்டதெல்லாம் இறை தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. தந்தையின் கடமை

12 - 05 -1980

"தந்தை என்பவர் மைந்தர் வாதை தவிர்ப்பதே கடனாதலால்
அந்தமின்றிய காதலன்பர் அழுங்கல் கண்டபின் நரியெல்லாம்
வந்து வெம்பரியாகவும் பரிவீரர் வானவர் ஆகவும்
சிந்தை கொண்டனர் அந்தமால் விதி தேடுவார் மதிசூடுவார்"

அந்தமால் - சிவனின் பாதமலர்களைத் தேடிய மகாவிஷ்ணுவும் விதி- பிரமனும் அடிமுடியறியாது தேடுவார் மதிசூடுவார். சிந்தை கொண்டனர். - என முடிக்க; மதிசூடுவாராகிய இறைவன் சிந்தை கொண்டனர். எப்படிச் சிந்தை கொண்டனரெனில் "நரியெலாம் வெம்பரியாகவும் வானவர் பரிவீரர் ஆகவும், உருவம் கொள்க எனச் சிந்தை கொண்டனர். ஏன் சிந்தை கொண்டார்? காதல் அன்பர் அழுங்கல் கண்டதால் - பக்தராகிய அன்பரது வருத்தம்[அழுங்கல்] கண்டு, வருத்தம் தீர்க்கவேண்டியும் [மைந்தர் வாதை தவிர்த்தல் வேண்டியும்] நரியப் பரியாகும் வண்ணஞ் சிந்தனை கொண்டனர்.

சிவன் தந்தையாய், மைந்தராய மணிவாசகரின் துன்பம் நீக்கச் சிந்தைகொண்டு நரியைப் பரியாக்கி மன்னனுக்குக் காட்டிப் பின் பரியைச் சிங்கமாக்கி அச்சுறுத்தி, மைந்தராய மணிவாசகரைக் கடைத்தேறச் செய்தாரே. அப்படி தந்தை என்பவர் தமது மைந்தரின் துன்பங்களை, அறிந்து நீக்கக் கூடியவனாக இருத்தல் கடமையாகும். அதைவிடுத்து தன்னுடல் வருந்தாது மைந்தர் உழைப்பில் வாழநினைத்து என்மகனை நான் படிப்பித்தேன், என் மகனுக்கு இத்தனை கோடி சீதனம் வாங்குவேன், என மனப்பால் குடிப்போரும் உண்டு. அப்படி வாழ்வோரை மனிதராய் மதிக்கவும் எண்ணவுமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. கீதை சொல்வதென்ன?

[11- 06 - 1980]

'வீரவேல் .... உண்டே துணை' என்பது எமது மூலமந்திரம். உருவென அருவென உளதென இலதென அருமறை இறுதியும் அறிவரு நிலையென நின்றவனைத் துணையென உணர்வீரேல் வேறு துணையை உலகில் எதிர் நோக்கத் தேவையில்லை. உயர்ந்த வேதாந்தத் தத்துவங்களைப் புகட்டும் நூலுக்கு "பிரஸ்தானத் திரயம்" என்று பெயர்.

பிரஸ்தானத் திரயம் என்றால் முத்தத்துவம் என்று பொருள். உபநிடதங்கள், பகவத்கீதை, பிரம்ம சூத்திரம் என்ற மூன்று நூல்களையும் பிரஸ்தானத் திரயம் என்பர். வேதாந்தம் சொல்வது இந்துசமயத் தத்துவம். சித்தாந்தம் என்பது சைவசமயத் தத்துவம். இந்த இரண்டு தத்துவங்களும் வெவ்வேறானவை.

பிரஸ்தானத் திரயம் கூறும் உண்மைகளிற் சில. "அர்ச்சுனா! ஆரியனுக்கு அடாததும், சுவர்க்கத்தைத் தடுப்பதும், புகழைப் போக்குவதுமான இவ்வளவு சோர்வு இந்நெருக்கடியில் எங்கிருந்து உன்னை வந்து அடைந்தது. பார்த்தா! அலியின் இயல்பை அடையாதே. அது உனக்குப் பொருந்தாது. எதிரியை வாட்டுபவனே! இழிவான உள்ளத் தளர்வைத் துறந்துவிட்டு எழுந்திராய்". வாழ்க்கைத் திறவு கோலை கிருஷ்ணன் இக் கோட்பாட்டில் கொடுத்துவிடுகின்றான்.

பிரபஞ்ச (உலக) வாழ்க்கை ஒரு முடிவில்லாத போராட்டம். எதைப் பெறவிரும்பினாலும் உயிர்கள் அதன் பொருட்டுப் போராடியாக வேண்டும். கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களும் சீவ தத்துவத்தையும் கர்மயோக தத்துவத்தையும் புகட்டிக் கொண்டு போகின்றன. எல்லாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்மங்களும் சங்கல்பத்தை அல்லது மனவுறுதியை அடிபடையாகாக் கொண்டிருக்கின்றன.

நடமாட - உண்ண - உறங்க - எழுந்திருக்க மனிதன் முதலில் சங்கற்பத்தைச் செய்கிறான். பின்பு தான் எண்ணியதைச் செய்கிறான். சிருஷ்டி முழுவதும் சங்கற்பத்தில் இருந்து விரிந்தது.

ஸத், சித், ஆனந்தம் - சச்சிதானந்தம். இந்த சத்து, சித்து, ஆனந்தம் என்பனவற்றை விளக்கும் நூலே பகவத்கீதை.

ஸத்:-
சொரூபத்தை விளக்குவதற்கான சாஸ்திரமாகும். உணர்ச்சியைப் பயன்படுத்தும் அளவுக்கு மனிதன் மேலோன் ஆகிறான். ஸத், ஆகிய 'சீவனைப்' பற்றி பகவத்கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களும் விளக்குகின்றன.

சித்:-
கடவுள் தன்மையைப் பற்றியது. பகவத்கீதையின் ஏழாம் அத்தியாயம் முதல் பன்னிரெண்டாம் அத்தியாயம் முடிய 'சித்' ஆகிய கடவுள் தன்மையைப் பற்றி விளக்குகிறது. பக்தியையும் அப்பகுதி வளர்க்கிறது. 'தூய உணர்ச்சியின் திரள்' பக்தி என்னும் பெயர் பெறுகிறது. தீய [கேடுடைய] உணர்ச்சிகள் எல்லாவற்றையும் நலம் வாய்ந்த உணர்ச்சிகளாக மாற்றுவது பக்தியாகும். கடவுளுடைய மகிமை விளங்குமளவிற்கு அன்பை ஊற்றெடுக்கச் செய்வதும் பக்தியே. கீதையின் இந்த இரண்டாவது ஷட்கம் அதாவது ஏழாவது தொடக்கம் பன்னிரெண்டாவது அத்தியாயம் வரை 'சித்'தைப்பற்றி விளக்க ஈசுவர இலக்கணங்கள் அவற்றில் பேசப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தம்:-

அன்புடைய உயிர் தெய்வத்திடம் கவரப்படுகின்றது. அன்பே கடவுள் என்பதை அது உணர்கிறது. அன்பு என்னும் கவர்ச்சி ஓங்குதற்கு ஏற்ப இனிமை மிளிர்கிறது. அது ஆனந்தமாகப் பரிணமிக்கிறது. ஆனந்தம் வளர வளர அது உவப்பிலா ஆனந்தமாகிறது. ஆனந்தமே இறைவன். இறைவனின் உருவமே ஆனந்தம். இந்த ஆனந்தத்தை நாடியே உயிர்கள் வாழ்க்கையில் பற்று வைக்கின்றன. ஆனந்தம் இல்லாவிட்டால் உயிர்கள் கணப்பொழுதும் வாழ்ந்திருக்க மாட்டா. ஆக ஆனந்தம் எப்போதும் ஆத்ம சொரூபத்தை வளர்ப்பது.

பதின்மூன்றாவது அத்தியாயம் தொடங்கி பதினெட்டாவது அத்தியாயம் முடியவுள்ள மூன்றாவது ஷட்கம் ஞானத்தை வளர்ப்பதற்கான வழிகளைப் பகர்கின்றது.

அத்வைதம் என்பதற்கு இரண்டல்ல என்பது பொருள். நதி கடலில் லயமாவது போல ஞானமடைந்த சீவன் பரத்தில் கலக்கிறான். இது அத்துவிதம் புகட்டும் முத்தி. அதை இன்னும் நன்றாகப் புகட்டுமிடத்து கடலில் தோன்றி கடலில் நிலை பெற்றிருக்கும் அலையானது தனது நாம ரூபத்தை அழித்து விடும் பொழுது பழையபடி கடலாகி விடுகிறது. அப்படி, முத்தி நிலையில் சீவன் இறைவனுடன் கலந்து விடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. சொல்லும் பொருளும்

18 - 06 - 1980

- நிமித்தம் - குறி - சகுனம் இவை ஒரு பொருட் சொற்கள். நாடிய கருமம் ஒன்று ஒரு குறித்த வேளையில் அல்லது இடத்தில் நிறைவேறும் அல்லது நிறைவேறாது என்பதற்கு இயற்கையில் இதர உயிர்களின் செயல்கள் முன்னறிகுறிகளாக வந்தமைகின்றன. மனக் கலக்கமே அபசகுனங்களுக்குக் காரணம். [சகுனம் பார்க்க வேண்டியதில்லை - அது நம்மிடையே புரையோடிப்போய் இருக்கும் ஒரு மூடநம்பிக்கையாகும்.] மன உறுதி இருந்தால் எதனையும் எப்போதும் செய்யலாம்.

- ஆத்தாயிகள் என்றால் மகாபாவிகள் என்று பொருள். ஒருவன் குடியிருக்கும் வீட்டில் தீவைத்தல், உணவில் விஷத்தைக் கலந்து வழங்கல், உருவிய வாளோடு ஒருவனைக் கொள்ளப் பாய்தல், ஒருவனுடைய செல்வத்தை - நிலத்தை - மனைவியை திருடவும் கைப்பற்றவும் முயலுதல் போன்றன ஆத்தாயிகளின் செயல்.

- கன்மம்: பசுக்கூட்டத்திற்குள் ஓர் இளங்கன்றை விட்டாலும் அது தன்னை ஈன்ற பசுவைத் தேடியடைந்து பால் குடிக்கும். அது போல கன்மமும் தான் செய்தவினை [பாவ புண்ணியங்களும்] செய்தவனைச் சென்று அடைந்தேவிடும்.

- வாழ்வின் கோட்பாடு: கோட்பாடு எனினும் கருதுகோள் எனினும் ஒன்றேயாம். வாழ்வின் கோட்பாடுகள் பல வகைகளில் மனித இனத்துக்கு இனம் மாறுபடும். சமயக் கோட்பாடுகளின் வேறுபாடுகளால் பல்வகைச் சமயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றின. சான்றோர் தாம் கண்ட அநுபவத்தால் 'பொருளாசையும் மக்கள் வாஞ்சையுமாகவே இந்த உலகம் நடக்கிறது' என்று சொன்னதும் ஒரு கோட்பாடே. தர்மம் எவை? அதர்மம் எவை? நீதி எது? அநீதி எது? போன்ற வேறுபாடுகளை எடுத்துரைப்பதும் வாழ்வின் கோட்பாடுகள் தாம். 'அதர்மம் மிகுதலால் குலப்பெண்கள் கற்பிழக்கின்றனர்' என்ற வாழ்வின் கோட்பாடு, உலகெங்கும் நடக்கும் கற்பழிப்புகளை அதர்மம் மிகுதலால் நடக்கிறது எனக்கூறி கற்பழிப்புக்கு வழிகோலுகிறது.

கிருபையாவது - தன்மனதை முழுதிலும் தன்வசமாய் வைத்திருக்கும் ஒருவன் பிறர்படும் துயரத்தைப் போக்க முயல்வது கிருபை எனப்படும். கௌரவர் சேனையில் உற்றாரைக் கண்டு இரங்கி, அம்பையும் வில்லையும் எறிந்துவிட்டு அர்ச்சுனன் தேர்த் தட்டில் இருந்தானே அச்செயல் கிருபையின் பாற்பட்டதல்ல. உணர்ச்சியானது அவனது உடைமையாய் இருப்பது போய், அவன் உணர்ச்சிக்கும் மனத்தளர்ச்சிக்கும் அடிமையாய் விட்ட நிலையே அது. சிபிச் சக்கரவர்த்தி புறாவுக்காகத் தன்னுடலைப் பருந்துக்குக் கொடுக்க முன் வந்தது கிருபையின் பாற்பட்டது. இக் கதையை புறநானூற்றில்

> கூர் உகிர்ப் பருந்தின் ஏறு குறித்து ஓரீஇத்
> தன் அகம் புக்க குறு நடைப் புறவின்
> தபுதி அஞ்சிச் சீரை புக்க
> வரையா ஈகை உரவோன்"
> என தாமப்பல் கண்ணனார் கூறு முகத்தால் அறியலாம்.

[இந்தச் சங்கப் புலவரின் பெயரில் 'தாமப்பல்' என இருப்பதைப் பார்த்தீரா! தாமப்பல் - தாரப்பல் - அது வெள்ளிப்பல். ஆக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமப்பல் கண்ணனார் சங்ககாலத்தில் வெள்ளிப்பல் கட்டியிருந்தார்].

- பூரணம்: தோற்றத்துக்கு அப்பால் இருப்பது பூரணம். தோன்றியுள்ளதும் பூரணம். பூரணத்தினின்று பூரணம் வந்தபின்பு எஞ்சி நிற்பது பூரணம் என்று உபநிஷதம் துவங்குகிறது. உபநிஷத்தின் மூலக்கருத்து முழுவதும் இதில் அடங்கி இருக்கிறது. பிறகு விரிந்து வருவதெல்லாம் இதன் விளக்கமாகும். தமிழரின் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, யோகசூத்திரம் முதலியவைகளிலும் இக்கருத்தைக் காணலாம்.

- ஆரியன்: உயர்ந்தோன் என்னும் பொருளில் வரும் 'ஐயன்' என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபே ஆரியன். ஆரியன் என்ற பதம் நம் சாஸ்த்திரங்களில் வந்தமைவது ஒரு தேசம், ஒரு சாதிக்குரியவனைக் குறிப்பதற்கன்று. பண்பட்டதும் சிறந்த வாழ்க்கை முறையும் எவனிடத்துள்ளதோ அவன் ஆரியன். இது போன்று துரை, அந்தணன், சாகிப் முதலிய சொற்கள் மேன்மக்களது பண்பைக் குறிப்பனவாகும். அறநெறி நிற்பவன் ஆரியன் ஆகின்றான். மனத்தகத்து மாசு படிந்திருப்பவன் ஆரியன் ஆகான். மனுஸ்மிருதியின் கோட்பாடுகலில் ஒன்று "தவம்புரிந்து பெறும் பிள்ளைகள் ஆரியர் ஆகின்றனர். காமத்துக்கு ஆட்பட்டவர் பெறும் பிள்ளைகள் ஆரியர் ஆவதில்லை" என்று இயம்புகிறது. தமிழர், ஆரியன் என்ற சொற்பதத்தை 'மிலேச்சன்' - அந்நியன் - நாடோடி - போன்ற கருத்திலும் கையாண்டுள்ளனர்.

- ஆத்மபலம்: "இந்த ஆத்மா பலகீனனால் அடையப்படுவதன்று" இஃது உபநிஷத வாக்கியம். மூல மந்திரம் போன்றது. உடல் வலிவு, உள்ளத்தின் உறுதி, ஆன்மசக்தி ஆகிய அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தின் வெவ்வேறு வடிவங்கள். பலம் உடையவனுக்கு இவ்வுலகம் உண்டு.அவ்வுலகம் உண்டு. நெறி உண்டு, நேர்மை உண்டு, யோகம் உண்டு, கடவுள் உண்டு, மோட்ஷம் உண்டு, அனைத்தும் உண்டு ஆத்மபோதம் பெற்று எழுந்து இருப்பவனுக்கு புதிய பெருவாழ்வு தொடங்குகிறது. பலம் மேலிடுகிறது.

- பிரபஞ்சம்: பிரபஞ்சம் - பஞ்சபூதம் இரண்டும் ஒன்றே எனினும் பொருந்தும். பிருஹதாரண்ய உபநிஷதம் பிரபஞ்சத் தோற்றத்தை இருபத்தைந்து கோட்பாடுகளால் விளக்கும். முதல் ஐந்தும் பஞ்சபூதம் பற்றிப் பேசும். இந்த பஞ்சபூதங்களின் சேர்க்கை பிரபஞ்சம் அல்லது பேரண்டம். பிரபஞ்சத்தின் பிரமாண்டத்திற்கு காரணமாய் இருக்கும் ஐந்து காரணிகள் - பஞ்சபூதம். தமிழரின் ஐம்பெரும்பூதமே பஞ்சபூதமாயிற்று. அதனை பின்னர் நோக்குவாம்.

- பஞ்சபூதம்: பரப்பிரம்மம் பஞ்சபூதமாய் பரிணமிக்கிறது. அது உபநிஷதக் கோட்பாடு. ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய ஐந்து பூதமும் பஞ்சபூதமாகும். பூதம் - பூதாகாரத் தோற்றமுடையது. அதன் உருவை கனபரிமானத்துள் வரையறுக்க முடியாது. அத்தகையதை தமிழர் பூதம் என்றனர். இறைவனும் பூதனானான். 'பூதம் பாட நின்று ஆடுவார்' - ஐம்பூத அசைவே இறையாடல்.

- ப்ருதிவி: கிரகங்களின் தோற்றப்பாட்டை ப்ருதிவி கோட்பாடு இயம்புகிறது. உலகம் நிலைபெற - உலகவுயிர் நிலைபெற ப்ருதிவி அவசியம். ப்ருதிவி இச்சொற்பதம் புடை எனும் அடிச்சொல் - வேர்ச்சொல் கொண்டு பிறந்த 'புடவி' யெனுந் தமிழ்ச் சொல்லின் திரிபு. கிரகங்களின் மேற்பரப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிமலையாய்ப் புடைத்து - கிளர்ந்து - எழுந்து - வெடித்துச் - சிதறி மண்ணாவதால் அது புடவியாயிற்று.

வாயு: வாய் - வாய்வு அது 'வாயு' ஆயிற்று. இதுவும் தமிழ்ச் சொல்லே. தமிழ் மருத்துவ வாகடம் 'வாய்வு' என்றே பகரும். எமக்கு ஏற்படும் பல்வகை நோய்களுக்கு வாய்வுத் தொல்லை காரணியாகும். நம் உடலில் இருக்கும் வாய்வு - பிராணன், உதானன், வியானன், சமானன், அபானான் ஐந்து வகையாக இயங்குகிறது. இவ்வைந்து வாய்வுகளின் பெயரின் முடிவில் வரும் 'அன்' விகுதி தமிழுக்கே உரித்தான 'ன்' றன்நகரத்தைக் கொண்டிருப்பது அவை தமிழ்ச்சொற்கள் தாம் எனப் பறைசாற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. வாழ்வாங்கு வாழ

16 - 07 80

மனிதன் வாழ்வாங்கு வாழ முதலில் தேவையானது அழகோ - பொருளோ - கல்வியோ அல்ல. நல்ல பண்பட்ட மனமும் நோய் இல்லா உடலுமேயாம். பண்பட்ட மனதை உருவாக்கும் வல்லமை அவரவர் கையிலேயே இருக்கின்றது.

அதற்கு பெரியோர் நேயம் மிக மிக அவசியம். நிலத்தை உழுது மண் வளத்தை பண்படுத்தல் போல மனதை உழுது உளத்தை பண்படுத்த வேண்டும். மண்ணில் உள்ள கல் - முள் - வேண்டாத செடி, கொடி போன்றவற்றை எடுத்து எறிந்து உழவர் பண்படுத்துவரே! அதே வேலையை நாம் நம் உளத்திற்கும் செய்ய வேண்டும். நம்மிடம் உள்ள இழிவான போட்டி - பொறாமை - வஞ்சனை - சூது - வாது - காமம் - கோபம் - மூர்க்கம் - பேராசை யாவற்றையும் தூக்கி குப்பையோடு குப்பையாகப் போட்டு எரித்துவிட வேண்டும். அப்படி பக்குவப் படுத்திய மனதில் அன்பை - கருணையை - பரிவை - காதலை - பக்தியை - அமைதியை - வீரத்தை - தீரத்தை வளர்த்துக் கொண்டால் உள்ளம் எங்கும் மகிழ்ச்சி வெள்ளம் பாய்ந்தோடும். அந்த வெள்ளத்தில் தழைத்த இன்ப மலர்கள் வாழ்க்கையின் வசந்தமாய் வீசும்.

"சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்" நன்கு சித்திரம் வரையும் எனக்கே சித்திரம் பற்றி சொல்வதாக எண்ணற்க. இப்பழமொழி சொல்வது வாழ்க்கைச் சித்திரம். நாம் வாழும் வாழ்வை ஒவ்வொரு கணமும் சித்திரமாக வரைந்தபடி இருக்கின்றோம். வாழ்வெனும் சித்திரத்தை மிக அழகாக வரைய உடல் தேவை. அதற்கு நோயற்ற யாக்கை [உடல்] வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவான நித்திரை - அளவான உணவு - அளவான உடலுழைப்பு இருக்க வேண்டும். எதுவும் அளவு மீறிப் போகக் கூடாது.

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

வளி - காற்று. அது வாதம். வளி முதலா எண்ணுதல்: வாதம் - பித்தம் - சிலோத்துமம் என கையின் நாடித்துடிப்பை எண்ணுதல். பித்தம் - சூடு - சூட்டால் வருவது. சிலோத்துமம் - சேடம் - நீர்த்தன்மையான தாதுக்களால் வருவது. இந்த மூன்று நாடிகளில் துடிப்பின் எண்ணிக்கை கூடினும் குறையினும் நோய் உண்டாகும். வள்ளுவர்

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுஉடம்பு
பெற்றன் நெடிதுய்க்கும் ஆறு"

எனவும் "துய்க்க துவரப் பசித்து" எனவும் சொல்வர். உண்ட உணவு அற்றுப்போய் நன்றாகப் பசித்த பின்னர் உண்ண வேண்டுமாம்.

படிப்படியாக ஏறி உயரவேண்டும். கல்வியோ, பொருளையோ தேடுதலில், தன்னைப் பேணிக் கொண்டு - தானாகிய முதலைப் பாதுகாத்துக் கொண்டு - நடக்கவேண்டும். நல்ல நண்பர்களையும் பெரியோர்களையும் தேடிக்கொள்ளலும் ஒரு பெரிய செல்வந்தான். மனிதரில் பதரில்லை. எவர்களையும் வெறாது, பகையை வளராது, விரோதம் பாராட்டாது, ஒப்புரவொழுகிப் பழக வேண்டும். ஆபத்துக்கு உதவுவோரை நன்றிமறவாது நினைத்து வாழவேண்டும். என்ன இவை எல்லாம் எமக்குத் தெரியுந்தானே என்று நினைக்க வரும். என்றாலும் மீட்டுப்பார்பதும் நன்றல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. இரு மருந்து

03 - 09 - 1980

மருந்து - நோய் தீக்க வல்லது. மருந்து செய்வோன் - மருத்துவன். இறைவனுக்கு பிறவிப்பிணி மருத்துவன் என்று ஒரு பெயர் அழகிய உண்டல்லவா?

உலக உயிர்களுக்கு பிறவிப்பிணி இருப்பது போல் பசிப்பிணியும் இருக்கின்றது. பிணி - நோய். பிறவிப்பிணி - உயிர்களை மீண்டும் - மீண்டும், பிறந்து - பிறந்து, வாழ்ந்து - வாழ்ந்து இறக்கத் தூண்டும் நோய். பசிப்பிணி - உயிர்கள் எவ்வளவுதான் ஆசையோடு உணவை தேடி உண்ணினும் மீண்டும் - மீண்டும் பசியைத் தூண்டி உண் - உண் என உண்ணச் செய்யும் நோய். இவ்உலக உயிர்களின் வாழ்க்கைப் போராட்டத்திற்கு முதன்மைக் காரணியாய் இருப்பது பசிநோயே.

இயற்கையோடு உலகவுயிர்கள் ஒன்றும் வரை இவ்விருபிணிகளும் தொடரும். ஆனால் பிறவிப்பிணியை நீக்க தேவர்கள் கண்டுபிடித்து அருந்திய தனிமருந்தே அமிர்தம். தேவர்கள் அமிர்தத்தை உண்ண - அம்பலத்தே ஆடும் மருந்து நஞ்சை உண்ட கதை அறிவீர்கள். அதனால் அவன் பிறவிப்பிணி மருத்துவனானான்.

பசிப்பிணியைப் போக்க இதுவரை மருந்து காண்பாரில்லை. எனினும் நேரத்துக்கு நேரம் ஓரளவு உணவை உண்டு பசியைப் போக்கி, பசி நோயைக் கொஞ்சம் கட்டுக்குள் வைக்கலாம். உண்ணாமல் தின்னாமல் பொருள் - பொருள் என்று உழைத்து மாளவேண்டியதில்லை. முதலில் உண்டு, உடுத்து வாழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் வாழ்வதற்கு - பசிப்பிணியைப் போக்க உணவு மட்டும் போதுமா? இல்லை - தண்ணீரும் வேண்டும். உணவையும் நீரையும் தருவோர் யார்? உழவர் அல்லவா! ஆதலால் உழவரை பசிபிணி மருத்துவர் என்பர்.

"உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படத்திசி னோரே"

நிலன் - நிலத்தில் விளையும் உணவுகள். நீரும் நிலனும் என்றாலும் நீரும் நெல்லும் என்றாலும் ஒக்கும்.

உயிர்களின் பசியை ஓரளவு போக்கவல்ல மருந்துகள் இரண்டு. அவ்விரு மருந்தையும் 'நீரும் சோறும்' - 'நீரும் நிலனும்' - 'நீரும் நெல்லும்' எனப் போற்றினர். நீரும் உணவும் என இரு மருந்துகள் பசியைத் தீர்ப்பதால் அவை இருமருந்தாயிற்று.

"இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்"
புறநானூறு, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை நீர் - உணவு - இருமருந்து விளைவிக்கும் நல்ல நாட்டுத் தலைவன் என்று புகழ்கிறது. அவன் நீரையும் விளைவித்தான் - குளங்களைக் கட்டினான் - குளத்து முற்றத்திலே துஞ்சினான் - இறந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. பகையை வெல்லுதல்

12 - 09 1980

தாய் தந்தையற்கு பொருளல்ல முக்கியம். மக்களின் சுகமுட அவர்களின் நல்ல மகிழ்வான வாழ்வுந்தான் அவர்கட்கு பொரும் பொருள்.

"தம் பொருள் என்ப தம் மக்கள்" அல்லவா?

"மனத்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்"

'தூவா' என்பது 'செய்யா' என்னும் வாய்பாட்டில், 'தூவி' வரும் என்பது தூவி - தொடர்ந்து - சேர்ந்து - பற்றி என்னும் பொருளின. மனத்தூய்மையும் வினைத்தூய்மையும் நாம் சேர்ந்து வாழ்வோரைப் பற்றி - அடுத்து - தொடர்ந்து வரும். அதனால் "சேரிடம் அறிந்து சேர்ந்தொழுகுக"

கண்ணபரமாத்மாவைச் சேர்ந்து - அவன்றாள் பற்றி, அவனை நினைந்து அவனுக்கு தொண்டு செய்ய பாண்டவர் புனிதர் ஆனார். துரியோதனனாகியோர் - தீமைகளை நினைந்து, தீமைகளைச் செய்து திருதராட்டிரனின் மொழிகளைக் கேட்டு - வீஷ்மர், துரோணர் ஆகிய உயர்ந்தோரை ஏழனஞ் செய்து - நிந்தித்து, அவமதித்து, மனம் அழுக்கேறிய செயல் - "அழுக்காறாய்" ஆற்றினமை, மனத்தூய்மை இன்மையால் செய்வினைத்தூய்மை இன்மையாயிற்று.

ஔவையார் ஒரு நாள்

"மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர்தமைத் தாம் மருவில் - பலியேல்
கடவுள் அவிர்சடைமேல் கட்செவி அஞ்சாதே
படர்சிறை அப்புள்ளரசைப் பார்த்து"

எனப் பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெலிதாகிய கட்செவி [நாகம்] வலிதாகிய, பறவை அரசனாகிய கருடனைப் பார்த்து பயப்படவில்லையாம். ஏன்? பலியேல் கடவுளின் - பிச்சை ஏந்தும் கடவுளின் கழுத்திலல்லவா! தவஞ்செய்த தவப்பயனால் ஏறிச்சுற்றி லாவகமாக படமெடுத்து ஆடிச்சிரித்துக் கொண்டிருக்கிறது. கருடனோ பலியேல் கடவுளை வணங்க வந்த விஷ்ணு மூர்த்தியைச் சுமந்து பறந்து திருக்கைலயங்கிரியில் இறக்கி விட்டு, அவர் வணங்கி விடைபெற்று வரும் வரையும் அவரைச் சுமந்து செல்லக் காத்து நிற்கும். அதாவது குருவிப்போய் - சோர்ந்து போய் நிற்கும். கருடனுக்கு நாதர் முடிமேல் இருக்கும் நல்லபாம்பு பயப்படவா வேண்டும்? என்று நினைத்துக் கொண்ட ஔவையார்; இந்தப் பாம்பு போல "மெலியோராயினார்" அதாவது வீரம் -கல்வி - செல்வம் - அதிகாரம் இவற்றில் மெலியோர் ஆயினார் வலியோருடன் நல்லுறவு வைத்துக் கொண்டால் வலிய விரவலராகிய [பகைவருக்கு அஞ்சார்] பகைவருக்கு அஞ்சவேண்டியதில்லை. எது போல எனில் கடவுளைத் தவஞ்செய்து அடைந்து கொண்ட நாகம் போல என்கிறாள். அதைத்தான் படப்பாட்டுக்காரர் "பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது" என்று விளாசி விடுவதெல்லாம்.

வள்ளுவன் 'பகைத்திறம் கெடுதல்' என்ற அதிகாரத்தில்
"தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இந்துணையாக் கொள்கவற்றுள் ஒன்று"
என உபாயங்கூறுகிறார்.
"பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகம் நட் பொரீஇ விடல்"

பகைத்திருந்தோர் வலிய நற்பாடி வந்தால் "நம்பாதே" நீயும் முகத்தளவு பல்லை இழித்து, மனத்தில் "உன்னைத் தெரியும்" என நினைத்து கவனாமாய் இருந்து கொள். என்றும் சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. பொருளின் தேவை

17 - 09 -1980

இவ்வளவு காலமும் கல்வி - கல்வி, பண்பு - பண்பு, தெய்வம் - தெய்வம் என்றெழுதி வந்தேனே இம்முறை பொருளின் அருமையும் அது பொருளார்க்குச் செய்யும் மேன்மையும் பற்றிய தத்துவங்களச் சிறிதறிவாம்.

நான்கு புருஷாத்தம் என்பன அறம், பொருள், இன்பம், வீடு. சிந்தையும் மனமும் செல்லா நிலையது. மனத்தால் அநுபவிக்க இயலாது. அது போக, அறம் - பொருள் - இன்பம் என்பன மனிதனை மனிதனாக வாழச் செய்வன. அந்த மூன்றனுள் நடு நிற்பது பொருள். ஏனெனில் அறம்செய்யப் பொருள் வேண்டும். அடுத்த, இன்பம் அநுபவிக்க 'பொருள்' இன்றியமையாதது. அதனால் பொருள் நடுநின்று முன்னதாய அறத்தையும் பின்னதாய இன்பத்தையும் ஊக்குவித்து முற்றுவிக்கின்றது.

"முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்"

முனிவர் முன்னுவது வேள்வி - யாகம் என்பன. அவற்றை நன்கு செய்து முடிக்க பொருள் வேண்டும். மன்னர் முன்னுவது பகையை வெல்லுதல். பகைவர் நாட்டைப் பிடிக்கப் பெரும் படையும், தமக்குச் சமமான மன்னரின் நட்பும் வேண்டும். அவை இரண்டுக்கும் பெரும் பொருள் வேண்டும். மன்னனுக்கு மிக்க அறிவும் துணிவும் உள்ள மந்திரிச் சுற்றம் வேண்டும். எந்நேரமும் எவ்விடத்தும் விளிப்போடு இருக்கும் மெய்க்காப்பாளர் வேண்டும். புலவர்கள் புகழக்கூடிய பெருமையுடன் வாழவேண்டும். அப்படியெல்லாம் வாழ மட்டற்ற பொருள்வேண்டும். எனவே தான் பொருள் நடுநின்று இரண்டினையும் முற்றுவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியெல்லாம் வாழ்வைப் பூரணப்படுத்த - நிறைவுபடுத்தத் தேவைபடும் பெரும்பொருளை அற்பமாக - அலட்சியமாக நினைக்கக் கூடாது.

"சிறுதுள்ளி பெருவெள்ளம்" போல் பெருகும். "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்கிறார் வள்ளுவர்.

உலகம் இங்கு ஆகுபெயரால் உலக இன்பத்தைக் குறித்து நிற்கிறது. பொருளைப் பெருகின்ற முறையில் பெற்று, விடுகின்ற முறையில் விடுதலில் தான் இன்பம் அநுபவமாகின்றது. ஈத்துவக்கும் இன்பம் இது ஓர் அற்புத இன்பம். இல்லாதோருக்குக் கொடுக்க கொடுப்பவனுக்கு ஒரு பெருந்தன்மையும் இன்பமும் விளைகின்றதாம். பொருளைப் பெருகின்ற வழியில் பெற்று முறையாகச் செலவு செய்வதில் உண்டாவதோர் பேரின்பம் அப்பொருளால் அடையலாமே தவிர வேறு வகையில் அடைய முடியாது.

பொருளைப் பெறுகின்ற முறையில் பெறல் என்றால் என்ன என்று உணர வேண்டும். எமது முயற்சியால் நல்ல வழிகளால் பெறுவது. நல்ல தொழில் துறைகளைச் செய்து, அவற்றில் கொள்ளையடியாது ஏழைகளின் உழைப்பின் வருத்தத்தைத் தாம் உறிஞ்சி எடுக்காது, வரும் இலாபத்தில் பெறும் பொருளைச் சேர்ப்பது. பகைவர் இன்றியும் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் யாம் செய்யும் பொருளுக்கு இடையூறு வராது. அடங்காத பகையை அடக்கவும் வேண்டும். அடக்குவதும் அரச முறைகளினால் அடக்க வேண்டும்.

"சாம - பேத - தான - தண்டம்" சாமம் - இனிய மொழி பேசி அடக்குதல், பேதம் - பேசாது விடுதல் அல்லது எதிராகப் பேசுதல். தானம் - கொடுத்தல். பகையை நண்பினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கலாம். அது தானம் கொடுத்து அடக்குதல் - நண்பனாக்குதல். தண்டம் - தண்டித்தல். தண்டிக்கும் செயலை நாம் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது. அதை அரசிடம் விட்டுவிட வேண்டும். ஆனால் சிலருக்கு வள்ளுவன் சொன்ன 'கொடுறு உடைக்கும் கூன்கையராய்' இருக்கவும் வேண்டும். "கெட்டார்க்கு நட்டார் இல்லை" என்பது பழமொழி.

ஆதலால் பொருளாதாரத்தை உயர்த்திக்கொண்டு கவனமாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக உண்ணாது, உறங்காது, ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ளாது, பொருள் பொருளென பேயாய் அலைய வேண்டியதில்லை. இல்லிக்குடம் போல - நிரப்பும் நீர் முழுவதையும் ஒழுகவிட்டு வெறுமையாய் இருப்பது இல்லிக்குடம். அது போல இராது தனக்குக் கண்டு தானம் செய்யவேண்டும்.

"தென்புலத்தர் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

இக்குறள் 'கடைநிலைத் தீபம்' என்ற ஓர் அணிக்கு எடுத்துக் காட்டாகும். இறுதியில் - முடிவில் கூறுவதே முதலாவதாகாக் கொள்ளப்பட வேண்டியது. தான் -> ஒக்கல் -> விருந்து -> தெய்வம் -> தென்புலத்தார் என நிரைப்படுத்திக் கொள்க.

வாழ்வு நெறியில் ஒருவன் முதலில் தான் நிறைவாக இருந்து கொண்டே ஒக்கல் [இனசனம்], விருந்தினர், தெய்வம், தென்புலத்தார் [பிதுரர்] ஆய எனை நான்கு நிலையினரையும் முறையே பேணுக. தான் என நிமிர்ந்து, தலைவனாக இருப்பவன் தான் இனசனத்தைக் கவனிக்கலாம். தான் நொந்துபோயிருந்து இனசனத்தைக் கவனிக்கப் போனால் மேலும் நொந்து வாழ முடியாதவனாகிவிடுவான். ஆதலால் தனக்குக் கண்டு மிஞ்சினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தபடி செய்ய வேண்டியது - இனசனத்துக்கு - அதுவும் நிரம்பிய பின்னரே விருந்தினரை உபசரிப்பது. அதுவும் நிரம்பிய பின்தான் தெய்வத்திருப்பணிகள் செய்யப் புகுதல். அதுவும் நிரம்பிய பின்னரே தான தருமம், யாத்திரை செய்தல்.

"ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை"
அறிவிலிகளுக்குச் செல்வங் கிட்டினால் தமது பகைவர் வாழ விருந்து செய்து தமராயினார் பசியிருப்ப விடுவராம். இவையெல்லம் உங்களுக்குத் தெரியுமெனினும் ஞாபகப்படுத்தினேன்.

"திரைகடல் ஓடியுந் திரவியந் தேடல் வேண்டும்" பொருளை தனக்குக் கண்டு தானம் வழங்க வேண்டும். பொருளும், கல்வியும், வீரமும் ஒன்றாய்ச் சேர்ந்து இருப்பவனது சொல்வதையே இவ்வுலகம் விரைந்து கேட்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. வள்ளியைக் கெஞ்சி மணந்தவண்டா!



எங்கும் நிறைந்த இயற்கையெடா - தம்பி
எட்டாத எண்ணத்து இறுதியெடா
சங்கத் தமிழர் தம் வாழ்வினிலே - அன்று
தழைத்து வளர்ந்த தருமமெடா

உமையவள் தந்த முருகனெடா - பெரும்
ஓங்காரத்துள் ஒளியானவண்டா
இமயச்சரவணப் பொய்கையிலே - உல
கின்புறத் தோன்றிய மைந்தனெடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் கொண்ட பாலனெடா - பர
மானந்த வெள்ளத்திறுதியெடா
மாறுமுகம் கொண்ட சூரனுமே - அன்று
மாய மரம் தொட்ட வேலனெடா

மூவர்க்கும் மூத்த முதல்வனெடா - எங்கள்
மூவா முதல்வர் புதல்வனெடா
தேவர்கள் மாதை மணம் புரிந்தே - நற்
திருப்பரம் குன்றம் அமர்ந்தவன்டா

ஆணிப் பொன்னான கதிரமலை - அன்று
ஆண்டருள் நம்பீ மகளாய்
மாணிக்க கங்கையில் ஆடிமகிழ் - குற
வள்ளியைக் கெஞ்சி மணந்தவண்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. அருள்மிகு திருக்கோணேஸ்வர நாதர் வணக்கப் பாமலர்



வெண்பா

காராள பிள்ளை கருதுவிமானப் படையில்
பேராரும் போமனெனும் பேராளன் - சீராரக்
கோணேசர் தாழ்பரவுங் கோதில் தமிழ்செய்யக்
காணேச ஐங்கரனே காப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியப்பா

கைலாச மலையமர்ந் துமைபாக மருவவே
கருதுலகு காக்கு மையர்
காளத்தி யப்பனார் கண்ணப்பனார் செயும்
கனபூசை ஏற்றுவ கைதந்தார்
பயிலாக மங்கூறு பக்திமுறை வழிநின்று
பரவு சிவ கோசரிக்கு
பாதிநிசி கனவினில் திண்ணனார் இட்டவூன்
பசிதீர்த்த தென்ற வமுதர்
மயிலான தேறியிவ் வுலகேழு வலமாயும்
மாங்கனி பெறாது நொந்த
மைந்தனைப் பழநீ யெனக்கூறி யன்புடன்
மார்போ டணைத்த எந்தை
அயிலான ஓங்கார விசைபாடி யடிபரவும்
ஆழி சூழ் கோணாசலம்
அமர்ந்தருளி யிராவணற் கருள்பூத்த பரமசிவம்
அடியமைக் காத்தருள் கவே

பொன்னழகி யாடக சவுந்தரி குளக்கோட்டன்
பூசித் துவந்த பெருமான்
போகர்முதல் முனிவோர்கள் ஆகம விதிப்படி
போற்றிசைப் பார்க ளென்றும்
அன்னமென் நடையம்மை வாமபாகம் மருவ
அரியபத் மாசனத் தில்
அரியய னடிதொழ நவரத்ன பீடத்
தமர்தருளு கோணா சலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைகைகசி லிங்கம் அரிசிமா விற்செய்து
அர்ச்சித்த தற் குவந்து
அரியதிசை பத்தாண்ட இராவணே சனைமக
னாகவீந் தருளு மையர்
தென்மொழித் தமிழ்மக்கள் உன்பத மடைக்கலம்
செய்யபொற் றாள்துதித் தோம்
செல்வமுங் கல்வியும் நல்லரசு மீந்தருள்
தென்கயிலை மலை வள்ளலே

நான் மறையி னாரந்த நால்வரந் தணருய்ய
நலமேவு வடாஆல் நிழல்
ஞானநிறை வானவொரு யோகநிலை தாமருவி
மோனத் திருந்த குருவே
மேன்மைதரு கனகசபை யிரதசபை யதனுடன்
மெத்தென்ற ரதன சபையும்
மேவரிய தாமரம் கோணாசலந் திகழ்
சூடா மணிச் சபையிலும்
ஆன்மகோ டிகளுய்ய அடியாரு ளத்திலும்
அனவரத நடன மாடும்
அன்னமென் நடையம்மை பங்கனார் கங்கைவார்
அனலென்ன செஞ் சடையினார்
தேனன்ன செந்தமிழ் தெரிந்த சங்கப்புலவ
தென் பொதிகைமலை வள்ளலே
தெண்டனிட் டனமெங்கள் பண்டையர சீந்தெமைச்
சிறப்புறக் காத்த ருள்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சவடி இராமன் பதைத்திடச் சீதையைப்
படர் சிறையிட்ட திறலோன்
பசுநிரை கவர்ந்துபோர்ப் பகவரை அழைத்திடும்
பண்டைமுறை யரசு செய்தோன்
அஞ்சுமற் றஞ்சுமெனுமத் திசைகள் முடிசூடி
அகிலம் புரந்த சைவன்
ஆகாய மானந் தடுத்தஅக் கைலைமலை
அதிரப் பெயர்த்த வண்ணல்
பஞ்சின்மெல் லடிமங்கை பங்கன் மகிழ்ந்திடப்
பாவீணை செய்த புலவன்
பாரோர் புகழ்ந்திடும் இராவணே சற்கருள்
பாலித்த கருணா கரன்
தஞ்சமென வுன்பதம் நம்பிப் பிடித்தனம்
தந்தருள் சுதந்திர மையா
தரையுதிரு சருகிற்கு முயிரீயு சித்தனே
தமிழர் தொழுகுல தெய்வமே

எத்தனை சென்மங்கள் அழுது தொழுதேன் ஐயா
இதயம் கசிந்த துண்டோ
இறைவனே செல்வமருள் என்றே யிரந்தவற்
கிழிவான வறுமை ஈந்தீர்
முத்தான வாழ்வை யான்வாழ முடியாமலே
முயற்சி செய்தே பிழைத்தேன்
முதல்வனே முயல்வார் படும்பாடு கண்டுயான்
முன்னின்று தொண்டு செய்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தவுடல் நொந்தநான் வீரமருள் என்றேன்
மேலுமெனை மெலிய வைத்தாய்
மேதினியிலென் செய்வேன் பணிந்தே நடந்தனன்
மேலோர் தம்வரிசை யீந்தார்
அத்தனே உன்னையான் கேட்டவை யளித்திடின்
அகந்தையால் அழிந் திருப்பேன்
ஆதியே தென்கைலை அப்பனே அடைக்கலம்
அறிந்துநீ அருள்க நன்றே

கோணை நாயகர்திருப் பாதமலர் தழுவியே
குளிர்ந்து குழையும் மாவலி
கோடானு கோடி யலைக்கரங் கொண்டுனைக்
கும்பிட்டு வாழ்த்தும் உததி
வேணுகானஞ் செய்து ஆடியும் பாடியும்
விரும்பித் துதிப்ப புட்கள்
வேதாந்தி போல்நின்று கண்ணீர் சொரிந்தன்பு
மலர் தூவுமே மரங்கள்
காணுமிவ் வுலகினைக் கட்டுமைம் பூதமும்
கடன்மையைச் செய்து வக்கும்
கர்த்தனே உடுக்களும் மதியமும் இரவியும்
கண்கொண்டு பார்க்கு மையா
கோணை நாயகவிந்த மானிடர்க ளறிவென்ன
கும்பிட நின்னருள் வேண்டுமாம்
கொடுத்தருள் சுதந்திரம் சுயமதி செல்வம்
கொடுத்தருள் பெரும் வள்ளலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைப் பெற்றுமகிழ் மகராசியற்கு கொரு
வார்த்தை சொலக் கேண்மினே
மானுடப் பிறவியிது தேடுதற் கரிதுபெறின்
மாண்புபெறு கல்வி வேண்டும்
பக்கத்தி லுள்ளவரும் வாழவேண்டும் நீவீர்
பகையா திருக்க வேண்டும்
பரமனடி தொழவைத்து மதலையரை வளருங்கள்
பண்புதான் உயர் செல்வமாம்
மிக்கநிதி நீண்டிடில் நீதிக்கு மீயுங்கள்
மிஞ்சுவது புகழொன்று தான்
மயனாரின் மகளாய் மாந்தைபதி வாழ்ந்தவருள்
மங்கை மனமகிழ் நாதராய்
தக்கனையும் எச்சனையும் தடித்த பெருநீதியாய்த்
தழைத் துலகமான தருவே
தர்மவுரு வாய்வந்து தென்கையிலை மேவிவளர்
சச்சிதா னந்த மலையே

நினைத்தபடி வாழநீர் விரும்பிடிற் கேளுங்கள்
விண்ணவரை ஏவல் கொளலாம்
நீதிவடி வாகவொரு சோதியுளதா மன்பு
நிறைந் துலக உயிர்கடோறும்
வானைநிக ராகப்பரந் துலகு முடிமுட்டி
வளரமுத மழை பொழியுமாம்
வாழத்தெ ரிந்ததும் தெரியாததும் அதன்
வளர்ப்புக் குழந்தை தானாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானைத் தொடர்ந்த பெருமானைத் தவஞ்செய்ய
வைத்துள நெருப்பு மலையின்
மாதவம் பேணுங்கள் நீதிவழி நில்லுங்கள்
மக்களை மதித்து வாழ்மின்
சேனைக்கொர் தலைமையும் தேசத்தார் தலைமையும்
தேகத்தர் தலைமையின் பின்
சேவகஞ் செய்யவொரு தேவன் நமக்குளன்
தென்கயிலை மலை யண்ணலே

வாழ்வின் பயன்பெரும் பணமென்று சாதிக்கும்
மக்களே மகிழ்ந்து கேண்மின்
வாழப் பெரும்பணம் வேண்டுமோ அன்றியே
வளர்பண்பு வேண்டுமோ சொல்
ஏழேழு தலைமுறை இழிவைத் தரும்வகை
இயற்றும் பெரும் பணங்காண்
ஏதேனும் மற்றவர்க் கீயா திருப்பினும்
இகழா திருத்தல் நன்று
பாழான பணமுளார் பலரையுந் தூஷிப்பர்
பசித்தவர் முகங்கள் பாரார்
பணமென்ற மமதையில் தம்நிலை மறந்திடுவர்
பரம்பொருள் தனயு மெண்ணார்
வாழ்வாங்கு வாழவே வளர்கல்வி அன்புடன்
வண்மையுள மனது வேண்டும்
வடிவாம்பிகை கேழ்வ மாதுமை மணாளனே
வழங்குகோ ணாசல வள்ளலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதால தடாகம் மலர்ந்தருளு பாதமலர்
பலகோடி உயிர்கள் காக்கும்
பண்பொழுகு செம்பவள திருமேனி உலகேலாம்
பரந் தண்ட கோளமூடும்
வேதவொலி வீணையொலி யோதிமுனி வோர்தொழ
விளங்கி யருள் நடராசனார்
வீசுகரங்கள் திசை யாவுநிறை வாகவொரு
யாமள சவுந்தரி தொழ
நாதவடி வானபர மானந்த நயனமும்
நால்வேத மோது வாயும்
நவரத்ன கிரீடமும் குண்டலந் தோடசைய
நலமேவு குமிழ் மூக்குமாய்
காதலொ டமர்ந்தழகு வடிவான மாதுமை
கலந்தபுன் சிரிப்பி னுடனே
கைலாச தரிசனந் தந்தெம்மை யாண்டருள்
கோ ணாசலத் தமுதனே

விருத்தப்பா

அந்தமாதி யிலா இறைவனை
அருளுதென் கயிலாயத்தெம் அப்பனை
நொந்த பேர்க்கமு தாகமுழைத்தவர்
நோவை நீக்கும் வைத்தியனாதரை
வந்தனை செய்துவாழ்த்திய செந்தமிழ்
வள்ளலா மெங்கள் காரளபிள்ளையை
அந்தமின்றி அரனடி நீழலில்
அமரவைக்கு மஃதுஐ யுறவில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. புங்குடுதீவு மடத்துவெளி பாலமுருகன்



## வணக்கப் பாமலர்

வெண்பா

தேங்குபுகழ் பொன்கைநகர் சேரும் மடத்துவெளி
ஓங்க எழுந்தருளும் உத்தமனார் - பாங்கா
மயிலேரும் பால அழகன் பதம்பாட
கயிலாய ஐங்கரனே காப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடஆழியில் தோன்றி நடமாடி வளர்தென்றல்
வலம்வந்து துதி பாட
மங்கையர்கள் நிறைகுடங் கொண்டு நன்னீர்மொண்டு
மயிலன்ன மென நடப்பர்
மடமாது வள்ளியும் மகிழ்தெய்வ யானையும்
மருவியிரு பாக மேவ
மணமார்ந்து பொன்கைநகர் வடபால் மடத்துவெளி
வாழ்வா யமர்ந்த பெருமான்
நடமாடு வரதர்கட் பொறியாகி நளினமலர்
வந்தசர வண வமுதனே
நம்பியமும் அடியவர்துயர் வெம்பிவிழ வேல்தொடும்
நாதமுடி வான பொருளே
மடமானைத் தொடரென்ற மடமானின் சொற்கேட்ட
ரகுராமற் கொரு மருகனே
மங்கலம் தங்கிவிளை அதிகாரி புலமேவி
வளருமொரு இள வழகனே!

கங்காசலந் திகள் செஞ்சடைக் கடவுளின்
கருணைமழை பொழியு நெற்றிக்
கண்ணில்வரு மாறுபொறி காற்றுச் சுமந்துபோய்
கருதினைய சரவண மிசை
பொங்கிவளர் செங்கமல மலர்மீது பெய்திடப்
பூரித்த புத்த ழகுடன்
போக்குவரவற்ற பொருள் புனிதமுறு புதல்வராய்
பொய்கை தவழ்ந்த பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலம் பதினாறு மன்னிவளர் பொன்கைநகர்
வடபால் மடத்து வெளியில்
மருவுமொரு திருமுருக சண்முக சடாச்சர
சரவண பவாய நமவே
எங்குமொலி செய்ய இகபர இரண்டிடை
எமையாள வந்த பாலா
எஞ்ஞான்றுங் காத்திட அதிகாரி புலமேவி
இருந்தருளு இள வழகனே!

சங்கத் திருந்துதென் தமிழாய்ந்த புலவனே
தமிழர்தொழு குல தெய்வமே
சகலகலை அறுபத்து நான்கும் சமைத்திட்ட
சண்முகத் தொரு முதல்வனே
பொங்கு செல்வங்கண்டு பூரித்து சிவதொண்டு
புரிகின்ற புண்ணியர் பதியாம்
பொன்கைநகர் வடபால் மடத்துவெளி நன்னி
பக்தர்வாழ அருள் பெருமான்
அங்கத் திருந்திடும் அருநோய்கள் தீர்த்தெம்மை
ஆண்டருள வேண்டி நின்றோம்
ஆறுபடை வீடமர்ந் தருள்புரியு திருவுருவொடு
அடியரைக் காக்க வருவாய்
செங்கை வனவேடனாய் வள்ளிமலர் கண்டு
சொக்கி மரமாகி நின்றாய்
செந்நெல் பொலியு மதிகாரி புலமேவு
சிங்கார இள வழகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. கிளிநொச்சி கந்தவேள் வணக்கப் பாமலர்



காப்பு

ஏழேழ் பிறவி யிசைகல்வி நன்குதரும்
வாழ்வாங்கு வாழும் வழிகாட்டும் - ஊழின்
முறிதின்று நின்ற முறிகண்டி யானை
அறிகின்றார்க் காகாத தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய விருத்தப் பாக்கள்

அன்புருகு செந்தமிழில் அருணகிரி நாதருக்கு
அடியெடுத்துக் கொடுத்தும்
ஆராய்ந்த களவியலில் நம்பிமகள் ஈடேற
அருங்கா மகிழ்ந்தணைந்தும்
என்புருக நோற்ற நக்கீரன் சிறைமீள
ஏந்துவேல் ஏவிநின்றும்
ஏழுலகும் அடிதொழப் பேரருள் புரிந்துசீ
ரலைவாய் மகிழ்ந்திருந்தும்
இன்புதவு குஞ்சரியை இந்திரனிடந் திருப்
பரங்குன்றி லேற்றருளியும்
ஏகுநீர் ஓங்கார இசைமருவு இரணைமடு
எழில் வளர்க்குங்கழனியிற்
செந்நெல்விளை கிளிநொச்சி சேர்கந்த கோட்டம்
திருமருவ வீற்றிறிருக்குஞ்
செவ்வேளெனும் பெயர்கொள் செல்வனே!
திருவருள்செய் கந்தவேளே!

அருணகிரி தருதமிழ் தேனினில் மனமுருகி
அடிமையை மறக்கலாமோ
ஔவைக்கு நாவலின் கனியுதவு சூட்டிலே
அன்புறைந் துருகலுண்டோ
கருணையுள முருகனே அழகனே கந்தனே
கலியுகக் கடவுளென்றும்
காங்கேயனே குகா வள்ளிகுஞ் சரிபாகா
கார்த்திகை மைந்தனென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருணமிகு சண்முகா சற்குரு சடாட்சரா
தழலுருவ மானவேலா
தக்கோர் மனக்குகையில் மிக்கஒளி வீசியே
தலைமுறைவிளங்க அருள்வாய்
திரணமென வருதீங்கு தீருநின் சேவடி
சேவித்து வாழ்பவர்க்கே
செல்வர்மலி கிளிநொச்சி நன்னகர் மேவிவளர்
திருத்தளி உவந்தவேளே!

தன்கை வருந்தியே முயல்கின்ற வாக்கம்
தான்பயன் பெறுமுன்னரே
தயவின்றி யிரவினிற் றுயில்விழித்தே திருடி
தம்வயிறு கழுவு கயவர்
பொன்பொருள் பறித்துமே போகங்கள் செய்புலையர்
போக்கிலாச் சண்டாளர்கள்
போகவிட்டே புறங் கூறித் திரிந்திடும்
புற்றுநோய் வாயர்களையும்
இன்பந்தரும் பெரிய கனவான்கள் போலவே
இளித்துவாய் பகல்கழித்து
ஏழைகள் தேனியெனத் தேடு செல்வத்தை
எத்திப்பிடுங்கும் எத்தர்
துன்பந் துடைக்கவோ வடிவேல் பிடித்தனை
தூக்கியழி வேலினாலே
துட்டநிக் கிரகமருள் கிளிநொச்சி நன்னகர்
துலங்க வளர் கந்தவேளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமுதிர் சோலைக் கள்ளழகர் பண்பில்
வளர்ந்த வள்ளிமலர்
பரவப் பரிந்து பரங்குன்றப் பதியைநீக்கி
யுவந்து வந்து
கிளமுதி ரிளமை வேட் டுருவங் கிளரத்
தாங்கி மரமாகிக்
கீதம்பாடும் நாரதரின் கேலிக் கிரங்கி
அலந்து நொந்து
மழமுதிர் களிறா வரும்வண்ணம் வனத்தே
தமையன் றனையழைத்து
மன்னன் நம்பிமகள் மணத்தை மருவி
மகிழ்ந்த மணவாளா!
வளமுதிர் நன்னீ ரிரணைமடு வாய்க்கால்
வழிந்தே நெல்விளையும்
வளஞ்சூழ் நகரக் கிளிநொச்சி மருவும்
கோயில் மகிழ்ந்தருளே!

ஒருமுருக மந்திர முச்சரித் தனுதினம்
உள்ளன்போ டோதிவந்தால்
ஊன்கண் திறந்துநல் லொளிவருங் கண்ணிலே
உண்மைநிலை நெஞ்சமுணரும்
திருநடஞ் செய்திளமை சேர்கல்வி சேரும்
செல்வச்செகம் மதிக்கும்
தீராதவினை தீரும் மருத்தீடு பேய்பில்லி
தீர்ந்துடல் பொன்னாகுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருளகன்றே நல்ல மனிதநிலை தந்திடும்
மனைமக் களுஞ்சிறக்கும்
மாபுகழினோ டிந்த மண்ணாளளாங் காண்
மதிப்பவர் மனத்திருந்து
இருளகன்றிடநல் லொளிவீசு வேலனே
ஏழைகட் கருளுகந்தா
இலங்கு கிளிநொச்சிநக ரெங்குமும் மாரிபெய
இரங்கியருள் கந்தவேளே!

அகரத்தின் ஒலிபோல அகிலங் கலந்தநீ
அரியயன் அண்டர் முதல்வன்
அடிபரவ அருள்செய்யும் புனிதநீ யடியவர்க்
கன்புருவ மான பொருளே
இகரத்தின் இனிமையாய் இகபர மிரண்டினும்
இசைந்த மர் பாலனே
இணையிலா அன்பினொடு உருகு மவர்தம்
இதயத்தில் இழை யோடுவாய்
உகரத்தின் வடிவான சிவனுக்கு முபதேசம்
உரைசெய்த குரு நாதனே
ஓங்கார நாதற்கு மொருதம்பி யாகியே
உலகுவல மாக வந்தீர்
மகரத்தின் கொடியுயர மதுரையினை யாண்டழகு
தமிழாய்ந்த இள முருகனே
மங்கலம் பாதினாறு தங்கிவளர் கிளிநொச்சி
மருவு மொரு கந்தவேளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராத பேர்வாழ உத்தமர் மனம்நோவ
உவத்தல் நின்னியல்பு தானோ
ஒருமாவின் வடிவான முதுசூ ரழித்தவா
ஓங்கார ஒளி ரூபனே
பாராத பார்வையை என்மீது வைப்பதோ
பாவி மீதருளி ல்லையோ
பிரமனைச் சிறையிட்டு உலகம் படைத்தருள்
பன்னிரு விழிக் கருணையே
ஆராதனை செய்தயர்ந்தே னலால் நின்
அடியிணை பிடிக் கிலேனே
அண்டங் கடந்தபர வெளியாகி ஒளியாகி
ஆனந்த மான முருகா
தீராத வினையெலாந் தீர்த்தருளி நிறைசெல்வம்
சித்திக்க அருள் ஈகுவாய்
திருமருவு கிளிநொச்சி சேர்கந்த கோட்டத்து
இருந்தருளு கந்த வேளே!

செல்வகுஞ்சரி பாக நல்ல திருவேரக
சீர்ப்பழனி வாசவென்றுன்
திருவடி பிடிபோர்க் கெழுபிறவி யுந்தொடர்
செல்வமே எனையாதரி!
தொல்லுல கெலாமான நல்லிறை மகிழ்ந்திடத்
திருத்தணியிற் குருவாகியே
சோர நிட்டூர நயவஞ்ச கரழிந்திடத்
தொடுவேல் தரித்த அரசே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லகதிர் காமவளர் மாணிக்க நதியாடி
நயந்து பூசித்து வைகும்
நலமருவு முத்துலிங் கர்பெற்ற நல்லருள்
நாயினேற்கும் வாய்க்குமோ!
செல்வமலி கிளிநொச்சி சேர்கந்த கோட்டத்
திகழவரு மெழுகோபுரம்
திக்கெங்கு மொளிரவே ஒளிவீச அருளுவாய்
செயமோங்கு கந்தவேளே!

நிலநீண் டிடாயாழ் நகர்நீங்கி வந்தினிய
நீர்நீமு கிளிநொச்சியில்
நிலையாய் வதிந்தழகு நெல்லோடு பலசெல்வ
நிறைவோடு குடிவாழ்ந்துமே
குலநீண் டுயர்ந்தருட் குணநீண் டகன்றநற்
கூடல்வளர் தமிழ்வளர்ப்போம்
கூடாத கூட்டங்கள் குடிவகை கடிந்துளோம்
குலவுபல கலைவளர்ப்போம்
பொலநீண்ட வாலிபர்கள் நங்கையர் படிக்க
திட்டங்கள் செய்து
பாலோடு நெய்யுடன் தேனோடு செஞ்சோறு
பழமோடு வந்தளிப்போம்
தலநீண்டுயர்ந் தழகுபொலி சோலை கனியுதிர்
தரநீண்ட கோபுரமுயர்
தவமான நன்னகர்க் கிளிநொச்சி மகிழ்தரத்
தங்கியருள் கந்தவேளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணோடு மண்ணாக மாய்ந்தே வருந்திடும்
மக்களின் துயர்துடைப்பாய்
மனிதரை மாடாக மறந்தும் மதிப்பவர்
மானந் தகர்த்தெறிகுவாய்
நண்ணியே நின்பாத நற்பூசை செய்திடும்
நல்லவர்க் கருளீகுவாய்
நாடெலாஞ் செஞ்நெல் விளைந்தே சிறந்திட
நல்லமழை பொழிய வைப்பாய்
கண்ணோடு கண்ணான குஞ்சரி மணாளனே
கல்விசெல் வந்தருகுவாய்
காதார வேழைக ளழுங்குரல் கேட்டுமே
கசியாத தென்னமுருகா
வண்ணமயில் வாகனா ஆயுள்தந் தேயெமை
வாழ்விக்க வேண்டுமையா
வணங்கார் வணங்கிடும் கிளிநொச்சி நன்னகர்
வாழ்வுதரு கந்தவேளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. பள்ளி எழுச்சி

எழுந்திரடா மகனே எழுந்திரடா - என்
கண்மணியே நீ எழுந்திரடா

ஏழ்கடல் முத்தாய் வந்தவனோ அன்றி
இமய மலை தந்த சந்தனமோ
வாழுனர் மகிழ வாசித்திடும் நல்ல
மாணிக்க வீணையாய் வாய்த்தவனோ

- எழுந்திரடா

மாழை மணி வடிவானவனே என் வயிற்றில்
வளர்ந்து நிறைந்து ஓடி வந்தவனே
சொல்லுவார் சொல்லு கேழாதே கெட்ட
துட்டரை நன்கு அறிந்து கொண்டு
மெல்ல நிமிர்ந்து சிரித்துக் கொண்டு நீயும்

- எழுந்திரடா

சோம்பல் உலகமெடா என் செல்வமே அது
சும்மா இருந்து சுகங்காண நிற்குது
ஆம்பல் மலர் போன்ற ஆணழகா என் அருந்தவமே
வீம்புகள்பேசிப் பழகாதே மேன்மை தெரிந்து
மாம்பழம் பெறாத முருகனைப் போல் என்
வாழ்வில் மலர்ந்த செந்தாமரையே

- எழுந்திரடா

[என் மகன் வாகீசனுக்கு தாலாட்டு எழுதும்படி நான் கேட்க, அவனைத் தூங்க வைக்காதே! விழிப்பொடு இருக்கவை! எனக் கூறி 'பள்ளி எழுச்சி' எழுதித் தந்தார். 21 - 04 -1982]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. ஏழிசைச் சுரங்களும் பிறந்தன இங்கே

- தமிழரசி -

இசை என்பது ஓர் இன்ப ஊற்று. இவ்வுலகின் உயிர்ப்பே இசையிற்றான் தங்கியிருக்கிறது. இயற்கையின் உயிர்த் துடிப்பாகிய இசை கல்லிலும் மண்ணிலும் நெருப்பிலும் நீரிலும் காற்றிலும் எங்கனும் இருப்பதை மனிதன் கண்டான். இன்பங் கொண்டான். இயற்கையோடு இசைந்து அவன் போட்ட கூக்குரல் மொழியாக மாறிற்று. காட்டிலும் மேட்டிலும் குகையிலும் மலை முகட்டிலும் அவன் மிருகங்களுடனும், பறவைகளுடனும் சேர்ந்து பாடினான், ஆடினான். அந்தப் பாடலும் ஆடலும் அவனை மகிழ்வுறச் செய்தன. இப்படிப் பேச்சு, பாடல், ஆடல் என முக்கூறுகளை இயற்கையிடம் இருந்து பண்டைய மனிதன் கற்றுக்கொண்டான்.

ஆதிமனிதன் தான் உருவாக்கிய மொழியிலே இயற்கையிடம் இருந்து கற்ற முக்கூறுகளையும் புகுத்திக் கொண்டான். இயற்கையாக, இயல்பாக வந்த மொழி, இயல்மொழியாய், இயல் தமிழானது. இயற்றமிழில் இருந்து இசைத்தமிழும், அவற்றிலிருந்து நாடகத் தமிழும் உருவாயிற்று. பண்டைய மனிதன் இயற்கையிடம் இருந்து கற்ற பேச்சு, பாடல், ஆடல் மூக்கூறுகளையும் முறையே இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் போற்றிப் பாதுகாப்போர் தமிழரே. அதனால் இயற்கையில் இருந்து பிறந்த மொழியாய், உலகின் முதன் மொழியாய் தமிழ் விளங்குகின்றது. உலகின் மற்ற மொழிகளில் காணமுடியாத இந்தத் தனிச்சிறப்பு தமிழுக்கே உரியதாகும்.

தமிழின் குற்றெழுத்து நெட்டெழுத்தாக உருமாறும் போது இயல்பாகவே இசை பிறக்கிறது. அ...ஆ, இ...ஈ, உ...ஊ, எ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ, ஐ, ஒ...ஓ, ஔ என ஒருக்கால் பாடிப்பாருங்கள் இசையின் இயல்பை நீங்கள் உணர்வீர்கள். தமிழ் என்று தோன்றியதோ அன்றே இசைத்தமிழாகிய தமிழிசை தோன்றிவிட்டது. அதனால் பண்டைத் தமிழர்கள் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற தமிழின் நெட்டெழுத்துக்களை ஏழு சுரங்களின் எழுத்துக்களாகாக் கொண்டனர். அதனைப் பிங்கல நிகண்டு

"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ வென்
றேழு மேழிசைக் கெய்தும் அக்கரங்கள்"

- (பிங்கல நிகண்டு: 1415)

எனச் சொல்லும். திவாகரம் போன்ற மற்ற நிகண்டுகளும் இதனையே சொல்கின்றன. அக்கரம் என்பது எழுத்து. பண்டைய தமிழர்கள் ஆலாபனையை ஆளத்தி என்று கூறினர். இந்த ஆளத்தி - நிற ஆளத்தி, காட்டாளத்தி இருவகைப்படும். உயிரெழுத்துக்களைக் கொண்டு செய்யப்பட்ட ஆளத்தியே நிற ஆளத்தியாகும். இன்றும் தமிழின் நெட்டெழுத்துக்களை கர்நாடக சங்கீதகார்கள் இராக ஆலாபனை செய்யும் போது பயன்படுத்துவதைக் கேட்டிருப்பீர்கள்.

ஏழு இசைச்சுரங்களின் தன்மைகளையும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற சொற்களால் குறித்து 'ஏழிசை' என்றனர். அதனை காரைக்கால் அம்மையார்

"துத்தம் கைக்கிளை விளரி தாரம்
உழை இளி ஓசை பண் கெழுமப் பாடி"

- (ப.திருமுறை: 11: 1: 9)

இறைவன் ஆடியதாகக் கூறுகிறார். இந்த ஏழு இசைச்சுரங்களின் தன்மைகள் மாறுவதாலேயே பண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கின்றன. அம்மையாரும் இசைச்சுரங்களின் தன்மையைக் கொண்டு பண்கெழுமப் பாடி இறைவன் ஆடியதாகக் கூறுகிறார். இளங்கோவடிகளும், நிகண்டுகளும் குரல் என்று கூறும் சுரத்தின் இயல்பை இப்பாடலில் காரைக்கால் அம்மையார் ஓசை என்கிறார். உயிரினங்களே குரல் எழுப்பும். ஆனால் ஓசையை உயிரற்றனவும் எழுப்ப வல்லன. உலகஇயற்கையெங்கும் இசை விரவிக்கிடப்பதால் அந்த இசைச்சுரத்தின் தன்மையை ஓசை என்று காரைக்கால் அமையார் சொன்னது போல் சொல்வதே பொருந்தும் என்று என் தந்தை கூறுவார்.

ஏழிசைச் சுரக்களின் குறியீடாக 'ச ரி க ம ப த நி' யைக் கொண்டனர். அதனை அறிவனார் எழுதிய 'ஐந்தொகை' என்னும் நூல் கூறும். இந்நூலின் பாடல்களை அடியார்க்கு நல்லாரின் உரையில் காணலாம். [குறுந்தொகை, நெடுந்தொகை போன்ற தொகைநூல்கள் வந்த காலத்தைச் சேர்ந்ததாய் இந்நூல் இருக்கலாம் என்பது என் தந்தையின் கருத்தாகும்]. அந்நூலை இன்று நாம் பஞ்சமரபு என வடமொழிவாய்ப்பட்டு அழைக்கின்றோம். அதில் இன்று கர்நாடக சங்கீதத்தில் பாடப்படும் ஏழிசைச் சுரங்களை

"சரிகம பதநிஎன்று ஏழெழுத்தால் தானம்
வரிபார்த்த கண்ணினாய் வைத்து - தெரிவரிய
ஏழிசையும் தோன்றும் இவற்றுள்ளே பண்பிறக்கும்
சூழ்முதலாம் சுத்தத் துளை"
என அறிவனார் குறித்துள்ளார்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் [கி பி 1210 - 1241] வாழ்ந்த சாரங்கதேவர் தமிழகம் வந்து, தமிழிசையை - தமிழ்ப்பண்களை - தேவாரம், திவ்வியப்பிரப்ந்தம் போன்றவற்றின் பண்களின் துணைகொண்டு நன்கு ஆராய்ந்து வடமொழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய நூலே சங்கீத ரத்னாகரம். அவர் ச ரி க ம ப த நி என்னும் ஏழு சுரங்களையும் வடமொழியில் மாற்றி எழுதினார். இன்றைய கர்நாடக இசைக்கு அதுவே ஆதாரம். சாரங்க தேவர் சங்கீத ரத்னாகரத்தை எழுதுவதற்கு ஆயிர வருடங்களுக்கு முன்னரே இளங்கோவடிகள் தமிழிசையின் நுட்பங்களையும், இசைக்கலைஞர்களின் அமைதிகளையும் மிகவிரிவாகவே தந்திருக்கிறார்.

இரண்டாயிரத்து ஐஞ்ஞூறு ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்டது தமிழிசை. அந்தத் தமிழிசையின் ஏழிசையாகிய குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன எங்கே பிறந்தன என நம்முன்னோரும், அவர்களைப் பார்த்து எழுதிய சாரங்கதேவரும், பிறரும் எழுதிவைத்திருக்கிறார்கள். இந்த ஏழிசையும் ஏழு தீவுகளில் பிறந்தனவாம். இந்த ஏழுதீவுகளையும் ஏழ்பொழில் என்றும் கூறுவர்.

தீவகம் - தீவம் - தீவு எனும் சொற்கள் நாற்புறமும் நீரால் சூழப்பட்ட நிலத்தைக் குறிப்பனவாகும். அதன் உண்மையைப் புரிந்து கொள்ளாத வடமொழியாளர்கள் 'தீவம்' என்னும் தமிழ்ச்சொல்லை 'த்வீப' என்கிறார்கள். த்வீப என்றால் என்ன? இருபுறமும் நீரால் சூழப்பட்டது என்ற பொருளையே தரும். தமிழர் இருபுறமும் நீரால் சூழப்பட்ட நிலத்தை ஆற்றிடைக்குறை - இலங்கை - அரங்கம் போன்ற பெயர்களால் அழைத்தனர்.

"நாவலந்தீவே இறலித்தீவே
குசையின்தீவே கிரவுஞ்சத்தீவே
சான்மலித் தீவே தெங்கின் தீவே
புட்கரத்தீவே எனத்தீவேழே
ஏழ்பெருந்தீவும் ஏழ்பொழில் எனப்படும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஏழிசை பிறந்த தீவுகளைத் திவாகர நிகண்டு கூறும். ஏழு பெருந்தீவையும் ஏழு பொழில் எனவும் சொல்கிறது. இவற்றை இன்னும் பல நூல்களும் சொல்கின்றன.

நம்மவர்களில் பெரும்பாலானோர் ஒவ்வொரு வருடமும் கந்தசஷ்டி விரதம் இருந்து கோயிலுக்குச் சென்று சூரன்போர் பார்ப்பார்கள். அப்படிப்பவர்களுக்கும் கோயிற்பூசகர்களுக்கும் நான் சொல்லப்போகும் விடயம் நன்றாகவே தெரிந்திருக்கும். தெரியாதவர்களுக்காக மேலோட்டமாகச் சொல்கிறேன். முருகப்பெருமான் தனது வேலாயுதத்தை எறிந்து கிரவுஞ்ச மலையை தகர்த்ததை பரிபாடலில் கடுவனிளவெயினனார்

"நாவலந் தண்பொழில் வடபொழில் ஆயிடை
குருகொடு பெயர்பெற்ற மால்வரை உடைத்து"
- (பரிபாடல்: 5: 7 - 9)

எனக்குறிப்பிடுகிறார். இதிலே நாவலந் தண்பொழிலுக்கும் வடக்கே இருந்த பொழிலுக்கும் இடையே இருந்த குருகாகிய அன்றில் பறவையின் பெயரைடைய கிரவுஞ்சம் என்னும் பெரிய மலையை உடைத்தர் என்கிறார். கடல்நடுவே இருந்த கிரவுஞ்ச மலையை உடைத்த போது அதன் சிகரம் ஏழு துண்டுகளாக சிதறிவீழ்ந்தன. நாவலந்தண் பொழிலில் வீழ்ந்தது நாவலந்தீவாகியது. இப்படி வீழ்ந்த ஒவ்வொரு சிகரமும் கடலின் அடியே இருந்த மலைத்தொடரில் தங்கித் தீவுகளாயின.

இதில் ஒரு துண்டு கிரவுஞ்சமலையிலேயே வீழ்ந்து தங்கியது. அது கிரவுஞ்சத் தீவாயிற்று. இதுவே கந்தபுராணம் சொல்லும் கதையாகும்: கிரவுஞ்சமலை சிதறிவீழும் போது எழுந்த இசையே ஏழிசையாயின. அதனால் ஏழியையும் பிறந்த தீவுகளாக இத்தீவுகள் நிகண்டுகளிலும், கர்ணாமிருதசாகரம், போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்இசைநூல்களிலும் மட்டுமல்லாமல் சங்கீதரத்னாகரம் போன்ற சமஸ்கிருத நூல்களிலும் சொல்லப்படுகின்றன.

| ஏழிசை | ஏழிசைச் சுரங்கள் பிறந்த தீவுகள் | எழுத்து | ஒலிக் குறியீடு - கி பி |
|---|---|---|---|
| குரல் | நாவல் தீவு/சம்புத்தீவு - நயினா தீவு | ஆ | ச |
| துத்தம் | இறலித்தீவு/சாகத்தீவு - காரை தீவு | ஈ | ரி |
| கைக்கிளை | குசைத் தீவு/குசத்தீவு - [ஊர்கவற்றுறை, வேலணை, மண்ட தீவு] | ஊ | க |
| உழை | அன்றில் தீவு/கிரவுஞ்சத்தீவு- புங்குடு தீவு | ஏ | ம |
| இளி | இலவந்தீவு/சால்மலித்தீவு - அனலை தீவு | ஐ | ப |
| விளரி | தெங்கின் தீவு/சுவேதத் தீவு - எழுவ தீவு | ஓ | த |
| தாரம் | புட்கரத்தீவு/புஷ்கரத் தீவு - நெடுந் தீவு | ஔ | நி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீவுகளை கம்பராமாயணத்தின் படைக்காட்சிப் படலத்தில் நீங்கள் காணலாம். இராமருடன் யுத்தம் செய்ய வந்திருக்கும் தனது படையினரை கோபுரத்தில் இருந்து இராவணன் பார்க்கின்றான். இராவணனுக்கு படைவீரர்களைக் காட்டுபவன், முதலில் காட்டியது சாகத் தீவாராகிய காரைநகர்ப் படையினரை அடுத்து குசைத்தீவாரான வேலணைப் படையினரைக் காட்டி, இலவந்தீவாரான அனலதீவுப் படையினரைக் காட்டியே அன்றில்தீவான புங்குடுதீவாரைக் காட்டுகிறான். இப்படி மற்றத்தீவுப் படையினரும் காட்டப்படுவதாக கம்பர் கூறுகிறார். கம்பராமாயணமும் கந்தபுராணமுமே எந்தெந்த தீவுகள் இன்றைய பெயர்களுடைய தீவுகளுக்குப் பொருந்தும் என்ற முடிச்சை அவிழ்க்கின்றன. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழிசையும் முறையே நயினாதீவு, காரைதீவு, வேலணை-மண்டைதீவு, புங்குடுதீவு, அனலதீவு, எழுவதீவு, நெடுந்தீவு ஆகிய தீவுகளில் பிறந்தன என்பதை காருணாமிர்தசாகரம் என்ற நூலும் சொல்கிறது.

எனது தந்தை தீவங்கள் மேற்கொண்ட தீராக்காதல் தீவகங்கள்பற்றி தான் இலக்கியங்களில் கற்றவற்றை எல்லாம் சேர்த்து ஏழுதீவின் பெருமையையும் ஒரு பாடலாக எழுதி தினகரனில் வெளியிட்டிருக்கிறார். இப்பாடலில் நெடுந்தீவில் தொடங்கி வலஞ்சுழியாக ஒவ்வொரு தீவின் பெருமையையும் கூறுகிறார்.

"ஆழியங் கடலின் வலம்புரி முழக்கம்
ஏழிசை மானும் நெடுந்தீவெனும் பதி
பணியெந்து செல்வி அணியுற விளங்கும்
மணித்தீவகமெனும் நயினைமா நகரும்
நிலநலம் பொதுளிக் கனியுயிர் சோலை
கலகல வெனமிளிர் அனலையம் பதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிதி தருநிதி பெண்ணையம் பெருநிதி
ஓரிரு நிதியமுங் குறைவிலா எழுவை
நீரகம் பொலிந்து சீரிய செல்வர் வாழ்
ஏரகம் மலிந்துள்ள காரை மாநகர்
எண்டிசைப் புகழும் இன்புற அடக்கும்
மண்டைதீ வகமெனும் மாண்புறு நகரும்
பாற்கடல் நடுவண் முத்தென விளங்கும்
பொன்கொடு தீவகமெனும் பெரு நகரும்
பாற்கடற் பூங்கா வனமெனு மேழு
தீவகங் காக்கும் ஊர்காவற் றுறையே"

பண்டைய தமிழர்களால் தாரம் என்று அழைக்கப்பட்ட சுரத்தில் (நிசாதத்தில்) இருந்து மற்றய சுரங்கள் பிறப்பதால் தாரம் பிறந்த இடமாகிய நெடுந்தீவை ஏழிசைமானும் எனவும், நாகணையில் பள்ளி கொள்ளும் நாகபூசணி அழகுதரும் என நயினாதீவையும், பசுமையும் காய்கனியும் சேர்ந்து குலுங்கும் அனலைதீவையும், கடலாலும் பனையாலும் பெறும் பெரியநிதி இருப்பதால் எந்தவொரு நிதியும் குறையாதது என எழுவதீவையும், நீர் வளம் உள்ளதால் உழவுத்தொழில் நிறைந்தது என காரை நகரையும் எட்டுத் திக்கின் புகழையும் தனக்குள்ளே அடக்கி வைத்திருக்கும் என மண்டைதீவையும், பாற்கடல் நடுவில் இருக்கும் முத்து எனத் தான் பிறந்த புங்குதீவையும் புகழ்ந்ததோடு பாற்கடல் நடுவே இருக்கும் இந்த ஏழு தீவுகளாகிய பொழில்களையும் ஊர்காவற்றுறையே காக்கின்றது என்று ஊர்காவற்றுறையின் பெருமையை எடுத்துச் சொல்கிறார்.

குறிப்பு: பண்டிதர் மு ஆறுமுகன் - எனது தந்தை எனக்குக் கூறியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. மாந்தையில் எழுந்த தூங்கெயில்

தமிழரசி

இயற்கை வளம் கொஞ்சிவிளையாடும் இலங்கையின் மாந்தை பற்றியும், பண்டைத் தமிழ் மன்னர்கள் நாட்டைக் காப்பதற்காகக் கட்டிய அரண்கள் பற்றியும் விளக்கிய பின்னர் மாந்தையில் எழுந்த தூங்கெயில் பற்றியவிளக்கத்தைத் தருதல் நன்று என நினைக்கிறேன்.

பண்டைய இலங்கையின் வடமேற்குப் பகுதியில் இருந்த புகழ் பெற்ற கடற்கரைப் பட்டனம் மாந்தை என அழைக்கப்பட்டது. அது உலகமக்களால் பெரிதும் விரும்பப்பட்ட பெரு நகராக விளங்கியது. அது கடற்கரையில் இருந்ததை அம்மூவனார் என்னும் சங்ககாலப் புலவர்

"கடல்கெழு மாந்தை அன்ன" - (நற்றிணை: 395: 9)

என நற்றிணையில் குறிப்பதால் அறியலாம்.

அங்கே துறை - துறைமுகம் இருந்ததை

"துறை கெழு மாந்தை" - (நற்றிணை: 35: 7)

என நற்றிணையில் அம்மூவனாரே பதிவு செய்திருக்கிறார்.

அது தலைநகராக இருந்ததை அகநானூற்றில் மாமூலனார்

"நன்னகர் மாந்தை முற்றத்து" - (அகநானூறு: 127: 6)

எனக் குறிப்பிட்டுள்ளார். சங்ககாலத்தில் அது புகழோடு இருந்த நிலையை இவை எடுத்துச் சொல்கின்றன.

செல்வம் மிக்க ஒரு நாட்டிற்குப் பாதுகாப்பைத் தருவது அரணாகும். அதனைத் திருவள்ளுவரும்

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்" - (குறள்: 742)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார்.

அதனால் தலைநகரங்கள் பெரும் பாதுகாப்புடன் விளங்கின. அவை வள்ளுவர் சொன்ன நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் ஆகிய நான்கு அரண்களோடு மனிதர் கட்டிய மதிலரணும் சேர்த்து ஐந்து வகையான அரண்கள் உடையனவாக இருந்தன.

தத்தமது நாட்டைச் சுற்றி அரசர்கள் நான்கு வகையான மதிலரண்களைக் கட்டினர்.

1. மதில் அரண்: இந்த நால்வகை அரண்களில் உயரம் மட்டும் உடையது மதில் என அழைக்கப்பட்டது.

2. எயில் அரண் : உயரமும் அகலமும் உடைய மதிலரண் எயில் என அழைக்கப்பட்டது. மதிலரண்களின் அடிப்பகுதி 72' முதல் 84' அகலமுடையதாக இருந்ததைக் குடிலரின் அர்த்த சாஸ்திரம் சொல்கிறது. எயில் அரணின் மேற்பகுதி தானே இயங்கி அம்பு எய்யும் விற்களும், படைவீரர்களாகிய எயினரும் இருக்கக் கூடியதாக அகலமாகக் கட்டப்பட்டன. மேற்பகுதியில் மறைந்திருந்து அம்பு எய்யும் தொழிலை எயினர் செய்ததாலும், வில்லை எய்யும் 'இல்' [வீடு] அங்கு இருந்ததாலும் எயில் என அழைக்கப்பட்டது. அம்பெய்யும் புழை ஏப்புழை என்றும் ஏவறை என்றும் அழைக்கப்பட்டது.
3. இஞ்சி அரண்: இஞ்சுதல் என்றால் இறுகுதல். கருங்கற்கள் ஒன்றன் மேல் ஒன்றாக அடிக்கிவைக்கப்பட்டு அதன் மேல் செம்பை உருக்கி வார்த்துக் கட்டப்பட்ட அரண், இஞ்சி அரண் என அழைக்கப்பட்டது. உறுதியுடையதாக இஞ்சி அரண் இருந்தது. எயில் அரணில் இருப்பவை யாவும் இஞ்சி அரணிலும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சோ அரண்: உயரம், அகலம், திண்மை மூன்றுடன் பிறரால் எளிதில் கைப்பற்றமுடியாத பல இயந்திரப் பொறிமுறைகள் கொண்டதாய் சோ அரண் இருந்தது.

செம்பைச் சேர்த்து மதில்கள் கட்டினார்கள் என்பதை
"செம்பு உறழ் புரிசை பாழி நூறி" - (அகநானூறு: 375: 13)
என அகநானூறும்
"செம்புறழ் புரிசை செம்மல் மூதூர்" - (புறநானூறு: 37: 11)
எனவும்
"செம்பு புணைந் தியற்றிய சேணெடும் புரிசை"
- (புறநானூறு: 201: 9)

எனவும் புறநானூறும்,
"செம்படுத்த செழும்புரிசை" - (திருஞானசம்பந்தர்: 3)
என தேவாரமும் இன்னும் பல நூல்களும் சொல்கின்றன. மதில் அரண் புரிசை எனவும் அழைக்கப்பட்டது.

செம்பிட்டுச் செய்த 'இஞ்சி அரண்' இலங்கையில் இருந்ததை திருஞானசம்பந்தரும் அவர் அடியொற்றி கம்பரும் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். இருவரும் இராவணன் ஆண்ட இலங்கையின் அரணையே குறிப்பிட்டுள்ளார்கள்.

"செம்பைச் சேர் இஞ்சிசூழ் செறிந்திழங்கு பைம்பொழிற்
சேரே வாரா வாரீசத் திரை எறி நகர்க்கு இறைவன்"
- (பன்னிருதிருமுறை: 1: 126: 8)

இத்தேவாரத்தில் திருஞானசம்பந்தர், செம்பு சேர்த்துக்கட்டிய இஞ்சிமதிலரண் சூழ்ந்த, பசுமையான சோலைகள் நிறைந்த, பெரிய கடலலைகள் மோதுகின்ற [இலங்கை] நகரின் தலைவன் இராவணன் என்கிறார்.

கம்பரும்
"செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர் செல்வம் தேறி ..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிட்டு வாழ்கிலேன் கூற்றையும் ஆடல் கொண்டேன்"

- (கம்பராமாயணம்: 7431)

எனக் கும்பகர்ணன் கூறுவதாக இலங்கையைக் இஞ்சித் திருநகராய் காட்டுகிறார். இன்றும் இலங்கையிலிருக்கும் இராவணன் கோட்டையை 'செம்புக் கோட்டை' என அழைக்க இவையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அரண்களிலே சிறந்த அரணான சோ அரண் இராவணனின் இலங்கையில் இருந்ததையும் இலக்கியங்கள் தொட்டுக்காட்டத் தவறவில்லை. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் திருமாலின் பெருமையைக் கூறும் இடத்தே

"சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த"

என்கிறார்.

மாந்தைப்பகுதி சோபட்டனம் எனவும் எயிற்பட்டனம் எனவும் அழைப்பட்டது. இதைக் கிரேக்க மாலுமிகளும் கூறியதைக் காணலாம்.

"மதிலொடு பெயரிய பனிநீர்ப் படுவின் பட்டனம்'

- (சிறுபாணா:153)

என எயிற்பட்டனத்தைப் பற்றிச் சிறுபாணாற்றுப்படை சொல்கிறது. எயிற்பட்டனத்தின் பண்டைய சிறப்பை எமக்கு எடுத்துக் கூறும் 'தூங்கெயில்' மாந்தைநகற்கடலில் இருந்தது. தூங்கு + எயில் + தூங்கெயில். தூங்கு, தூங்கல் என்பன உறங்கல், தாழ்தல் என்ற கருத்துக்களில் வரும். மாந்தை நகர்க் கடலுள் கட்டப்பட்டிருந்த எயில் [மதில்] தூங்கெயில் என எமது முன்னோரால் அழைக்கப்பட்டது. தூங்கெயில் கடலினுள் தாழ்ந்தும், தேவையான போது எழுந்தும் தொழிற்படக் கூடிய விதத்தில் கட்டப்பட்டிருந்தது. அதை ஏறக்குறய லண்டனில் உள்ள தேம்ஸ் பரியர் [Thames Barrier] போன்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை மயன் கட்டினான் என்பதை மாந்தைமாண்மியம், மாந்தைப்பள்ளு மட்டுமல்ல விஸ்வபுராணமும்

"உத்தர திக்கினமிக்க ஊசிக் காந்தத்தினாலே
சுற்றிலுமகல நாலைந்தோ சனை தூரமுள்ள
முத்திரை மிகுந்த கோட்டை சிருட்டித்தார்"

எனச் சொல்கிறது.

இலங்கை அந்நாளில் இந்தியக்கண்டத்துடன் சேர்ந்திருந்தது. பின்னாளில் இந்தியாவிலிருந்து பிரிந்து கண்டத்தீவாய் மாறியது. அப்போது இலங்கை செல்வங்கொழிக்கும் குபேரபட்டினமாக இருந்தது. அங்கே இரத்தினங்களும் செம்பு போன்ற கனிமப் பொருட்களும் நிறைந்திருந்தன. அதன் காரணமாக மாந்தையில் புஸ்பகவிமானம் பறந்தது. தூங்கெயில் எழுந்தது.

இலங்கையில் வாழ்ந்த இயக்கரும் நாகரும் வானிலும் நீரிலும் இயங்கித் திரியவல்ல கப்பல்களையும் விமானங்களையும் செய்தனர். அதனை

"வானினொடு நீரும் இயங்குவோருக்கு இறைவனாய இராவணன்" - (ப. திருமுறை: 1: 53: 7)

எனத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இராவணன் புகழைச் சொல்வதால் நாம் அறியலாம்.

அக்காலத்தில் இந்தியாவின் மேற்கு மலைத்தொடரின் நீட்சியாய் குமரிமலைத்தொடர் இருந்தது. அந்தக் குமரிமலைத் தொடர் இலங்கையின் மேற்குக் கடலின் எல்லையாக இருந்ததால் அது இலங்கைக்கு அரணாக இருந்தது. அப்போ பனிஉருக கடல் நீரின் மட்டம் உயர்ந்ததுடன் இந்தியத் துணைக்கண்டத்தட்டு ஆசியக் கண்டத்தட்டின் கீழ்புகுந்ததால் இமயமலை உருவானது. அகத்தியர் பொதிகை மலைக்கு வந்ததற்குச் இதிகாசங்களும் புராணங்களும் சொல்லும் கதை கண்டத்தட்டுக்களின் இடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ச்சியை எனலாம். இதனால் இந்தியாவின் மேற்குமலைத் தொடரின் ஒருபகுதி கடலினுள் மூழ்கியது. குமரிமலையிலிருந்து வடகிழக்காக இன்றைய மாந்தைக்கு அருகாமைவரையிருந்த கோடு [மலை] மூழ்கி அதங்கோடு ஆகியது.

கடல் நீர் உட்புகுந்த வழியால் இலங்கையின் வளத்தைக் கொள்ளையடிக்க இலங்கைக்கு மேற்கிலிருந்தும் வடமேற்கில் இருந்தும் வெளிநாட்டார் வரத்தொடங்கினர். அவர்களிடம் இருந்து நாட்டைக்காக்க இந்தியாவுக்கும் குமரிமலைக்கும் இடையே மயன் கடலினுள் வடக்குத் தெற்காக காந்த அரணைக் கட்டினான்.

தூங்கெயில் வடக்குத் தெற்காக இருந்ததை சோழர் புகழ்பாடும் குலோத்துங்க சோழன் உலா

"தூங்கெயில் கொண்ட சுடர்வாளோன் - ஓங்கிய
மால் கடல் பள்ளி வறிதாக மண்காத்து
மேல்கடல் கீழ்கடற்கு விட்டகோன்"

எனச்சொல்ல

"தூங்கு எயிலெறிந்த சோழனும் மேல்கடலில்
வீங்குநீர் கீழ்கடற்கு விட்டோனும்"

- (விகிரமசோழன் உலா: 9)

என விக்கிரம சோழன் உலாவும் சொல்கிறது.

தூங்கெயில் வடக்குத் தெற்காக இருந்ததால் மேற்குக்கடல் நீர் கிழக்குக் கடலுக்கு வரமுடியாதிருந்தது. அதனை உடைத்து மேற்குக் கடல் நீரை கிழக்கு கடலுக்கு விட்டனர். முற்காலச் சோழரால் தகர்த்து அழிக்கப்பட்ட அந்தத் தூங்கெயிலில் வெண் சங்குகள் பதித்து இருந்ததை

"கடவுள் அஞ்சி வானத்திழைத்த
தூங்கெயிற் கதவம் காவல் கொண்ட"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- (பதிற்று: 31)

எனப் பதிற்றுப்பத்து கூறுகின்றது.

வானத்திழைத்த என்பதை வானத்து + இழைத்து என்று பிரித்து வானத்திலே தூங்கெயிலைக் கட்டியதாகப் பலர் கூறுவதோடு அதனை தொங்கு எயில் எனவும் திரித்துச் சொல்கின்றனர். அவர்கள் சொல்வது பிழையான கருத்தாகும். உண்மையிலே வால் + நத்து + இழைத்த = வானத்திழைத்த எனப்புணரும். வால் என்பது வெண்மையையும் நத்து என்பது சங்கையும் குறிக்கும். கொள்ளையடித்துச் செல்லும் தேவர்கட்கு பயந்து வெண்சங்கு பதித்துக் கட்டிய, தூங்கெயிலைக் கைப்பற்றி வெற்றி கொண்டான் என்பதையே பதிற்றுப்பத்து சொல்கிறது.

இந்த தூங்கெயில் கடலினுள் இருந்து மேலே எழுந்து வரும் பொழுது இடிபோன்ற சத்தத்துடன் உருமி நெருப்பைச் சொரியும் என்கிறது சிறுபாணாறுப்படை.

"ஓங்கு எயில் கதவம் உருமுச்சுவல் சொரியும்
தூங்கெயில் எறிந்த தொடி விளங்கு தடக்கை"

- (சிறுபாணா: 80 - 81)

சோ அரண் அழலைக் கக்கும் என்பதை புறப்பொருள் வெண்பாமாலை

"சுழல் அழலுள் வைகின்று சோ"

- (பு.வெ.228)

எனச் சொல்கிறது.

பெரிபிளஸ்சும் [peripilus] கி மு 3ம் நூற்றாண்டிலேயே சோபட்டனத்தை [Sopatna] குறிப்பதை 'Trade and Merchants in Ancient Tamilakam' என்ற நூலில் குருசரண் தாஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது இப்படி நெருப்பைக் கக்கவும் இடிபோன்ற சத்தத்தை எழுப்பவும் கடலினுள் இருந்து எழுந்தும் தாழ்ந்தும் இயங்கவும் தேவையான சக்தியை எப்படி எங்கிருந்து எம் மூதாதையர் பெற்றார்கள்? அதுவும் மாந்தையில்? என்ற கேள்விகள் உண்டாவது இயல்பே.

தமிழர் பன்னெடுங்காலமாக பொன்னைப் பயன்படுத்தினர். அதன்பின் அவர்கள் அறிந்து கொண்ட கனிம உலோகங்களை பொன்னின் பெயர் கொண்டே அழைத்தனர். அவர்கள் சிவந்த பொன்னை செம்பொன் என அது செம்பு என்றும், இருண்ட பொன்னை இரும் பொன் என அது இரும்பு என்றும் இப்போ மருவிற்று. பாதரசம், செம்பு, இரும்பு, கந்தகம் போன்ற கனிமப்பொருட்களை பண்டைய தமிழர் பயன்படுத்தியமையை அகழ்வாராச்சிகளும் தொல்பொருள் சான்றுகளும் கோடிட்டு எமக்குக் காட்டுகின்றன. ஆதலால் மாந்தையில் வாழ்ந்த தமிழரும் இக்கனிமங்களால் தூங்கெயிலைக் கட்டினர்.

உலகிலுள்ளோர் வானத்திலிருந்து வீழும் கற்களைக் கொண்டு இரும்பைப் பிரித்தெடுக்க, தமிழர்களாகிய நம் முன்னோர் கடற்கரை ஓர மணலிலும், பாறைகளிலும் இருந்து வார்ப்பு இரும்பைப் பிரித்து எடுத்தனர் என்பதை Calcutta Asiatic Society il ல் H M Heath என்பவர் 1794 லிலேயே பதிவு செய்து வைத்துள்ளார்.

பண்டைக்காலத்தில் செம்புத்தாதை உலையில் இட்டு பிரித்து எடுத்த போது மிதந்த கழிவுகளின் [copper slag] சுவடுகள் மாந்தையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தொல்லியல் ஆய்வாளரான சிரான் தரணியகல [Deraniyagala] கி மு 1800ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தையில் செம்பு பயன்படுத்தியதற்கான சுவடுகள் இருந்ததைக் கூறியுள்ளார்.

அத்துடன் அங்கு கண்டுபிடிக்கப்பட்ட கண்ணாடி மணிகளும் தமிழ்நாட்டு கொடுமணல், அரிக்கமேடு போல் இல்லாமல் நீலப்பச்சை நிறத்திலும் இருப்பதால் இந்நிறமணிகளைச் செம்பு, இரும்பு கலந்தே செய்திருக்க வேண்டும். எனவே பண்டைய நாளில் மாந்தையில் வாழ்ந்த தமிழர் செம்பையும் செம்பை பிரித்து எடுக்கும் வழிமுறையையும் அறிந்திருந்ததோடு செம்பை எதற்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்பதையும் அறிந்து வைத்திருந்தனர் என்பது தெளிவாகிறது.

மாந்தைப்பள்ளு
"காந்தமுறு தடமதிலும் கமழுமலர்ப் பொழிலுமுற்ற
மாந்தை நகர்"
எனச்சொல்வதால் தூங்கெயில் காந்தத்தன்மை உடையதாய் இருந்தமை தெரிகிறது. சீன யாத்திரியர்களும், கிரேக்க மாலுமிகளும் அரேபிய நாடோடிக் கதைகளும் இலங்கையில் இருந்த காந்தக்கோட்டை பற்றிய குறிப்பைத் தருவதைக் காணலாம். இலங்கைக்கு வெளியே இருந்து வரும் கப்பல்கள் காந்த மதிலில் உள்ள காந்தத்தால் கவர்ந்து இழுக்கப்படுவதால் அவை அம்மதிலில் மோதி உடைந்து சிதைவடைய, இலங்கையர் வந்து சிதைந்து போன கப்பலில் உள்ள பொருட்களை கொள்ளை அடித்துச் செல்வார்கள் என்று கூறவும் தவறவில்லை. எனவே மாந்தையில் காந்த்தன்மையுள்ள மதில் இருந்ததை பண்டைய மேலைத்தேச, கீழைத்தேச மக்கள் அறிந்திருந்தனர் என்பது தெளிவாகின்றது.

எம்முன்னோர்கள் தூங்கெயிலின் தொழிற்பாட்டிற்குத் தேவையான மின்காந்தசக்தி, வெப்பசக்தி, இயக்கசக்தி, எரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி போன்றவற்றை செம்பிலிருந்தும், பாதரசத்தில் இருந்தும், நீரிலிருந்தும் கந்தகத்திலிருந்தும் பெற்றிருப்பார்கள் என்பதில் வியப்பில்லை.

புறநானூற்றில் நப்பசலையாரும் தூங்கெயிலின் சிறப்பைக் கூறுமிடத்து பகைவர்களும் அஞ்சி நெருங்கமுடியாத அரிய வலிமையுடையது என்பதை

"...................................சார்தல்
ஒன்னார் உட்கும் துன்னரும் கடுந்திறல்
தூங்கெயில்" - (புறம்: 39: 4 - 6)

எனச் சொல்கிறார்.

பழந்தமிழர் மரபுப்படி இரு அரசர்களுக்கு இடையிலோ அல்லது கொள்ளைக்காரர்களாலோ போர் ஏற்படும் போது கோட்டையுள் நுழைய முற்படுபவர் உழிஞையர் என்றும் கோட்டையைக் காப்பாற்றுபவர் நொச்சியர் என்றும் அழைக்கப்படுவர். உழிஞைப் போர்கள் நீருக்குள்ளேயே நடைபெற்றன. தொல்காப்பியர் இதை

"நீர்ச்செரு வீழ்ந்த பாசியும்" பொரு- (தொல்: பொரு: 69)

எனச்சொல்வதைக் கொண்டு நாம் உணரலாம். நீரில் எப்படி பாசி தள்ளத்தள்ள படர்ந்து வருமோ அப்படி போர்வீரர் நீருக்குள் படர்ந்து கோட்டையுள் நுழைய முற்படுவர். இப்படி கோட்டையுள் நுழைவோரைத் தடுக்க அரண்களில் இயந்திரப் பொறிகளைச் செய்து வைத்திருந்தனர்.

தூங்கெயிலிலும் இப்படியான இயந்திரபொறிகள் பல இருந்தன. அதில் இடங்கணி என அழைக்கப்பட்ட கல்லுமிழ் கவண், செம்பு உருக்கும் மிடா [பகடு குழிசி], மதிலில் பற்றிப்பிடித்து ஏறுவோர் கையில் குத்தும் ஊசி [கைபெயரூசி], எஃகு உலை [காய்பொன் உலை], தானே வளைந்து எய்யும் விற்கள் [எந்திரவில்],



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்கணிக்கு தேவையான கல்லைப் போட்டுவைக்கும் கூடை [கல்லிடு கூடை], அகழியைக் கடந்து மதிலில் ஏறுவோரைப் பிடிக்கும் தூண்டில், ஏவறைகள் [புழை], அம்பு தொங்கவிடப்படும் விட்டம் [ஐவித்துலாம்], கழுகுப்பொறி, புலிப்பொறி, தகர்ப்பொறி போன்ற பலவற்றோடு குடப்பாம்பு, தேனீ, குளவி, கண்கொத்தும் பறவை [சென்றெறி சிரல்] போன்ற உயிரினங்களும் இருந்தன என்பதை சிலப்பதிகார உரையால் அறியமுடிகிறது.

பகைவரை நோக்கி அம்பு எய்வதற்காகக் கட்டப்பட்ட துளைகள் ஞாயில் என அழக்கப்பட்டன. அதனை
"இஞ்சி சூழ்வன எந்திரப் பந்திசூழ் ஞாயில்"
என்கிறது பெரியபுராணம்.

கடலினுள் மூழ்கி இருக்கும் தூங்கெயில் பிறநாட்டு கப்பல்கள் வரும்பொழுது இடிபோன்ற சத்தத்துடன் மேலெழுந்து வரும். தூங்கெயிலின் காந்த அலைகள், கப்பல்களை மதிலை நோக்கி இழுக்க, தூங்கெயிலில் உள்ள நாகத்தலைகள் கப்பல்களை நோக்கி நெருப்பைக் கக்கி, அவற்றை எரித்தன. அதற்குப் பயந்து பிறநாட்டவர் இலங்கையினுள் நுழைய அஞ்சியிருந்தனர் என்பதை பண்டைய உலக மாந்தரால் அறிகிறோம்.

மயனால் மாந்தையில் எழுந்த தூங்கெயிலின் சிறப்பை இன்றைய உலகிற்கு எடுத்துச் சொல்லவேண்டிய கடமை தமிழ் இனத்திற்கு அதிலும் ஈழத்தமிழ் இனத்திற்கு இருக்கின்றது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பு: இந்தக் கட்டுரையில் உள்ள சில கருத்துக்கள் என் தந்தை பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள் எழுதிய 'மறைந்த மாநகரம்' என்ற நூலில் அவரால் எழுதப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள்

பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை, கலாசாலை வீதி,
திருநெல்வீதி - 1982

இலக்கிய வழியில் செல்பவர்கள் சிலராவர். அதிலும் சங்கத் தமிழ்ச் சான்றோர் சொன்ன வழியில் சென்று முந்தையோர் தந்த இலக்கிய வழியை மறந்து போகாமல் வாழ்ந்தவர் பண்டிதர் ஆறுமுகன் அவர்கள். இலக்கிய இரசனைப்பெருக்கு எழுந்து ஓடும் நல் ஆசிரியனாய், ஈழமண்டலம் எங்கும் தலைசிறந்த மாணாக்கரை உருவாக்கியவராவார்.

ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன் என்னைச் சந்தித்து, தமது புதிய ஆராய்ச்சிகள் பலவற்றை அவர் கூறியபோது, மிகவும் வியப்புண்டானது. தேன் நீர் அருந்துவேன் என்பதால் என்னைக் காணவரும்போது தேனுடன் வருவார். அண்மையில் அவர் மாணவர் வித்துவன் சி ஆறுமுகம், அவரது புதுமையான ஆராய்ச்சித் துறையைக் காட்டும் முகமாக ஒரு தொடரை எடுத்துக் கூறியது நினைவிலிருக்கின்றது.

எத்தனையோ வருடங்களுக்கு முன், அவர் உபாத்தியாரான காலத்தில், என்னை அழைத்துச் சென்று, மண்டைதீவு தொடக்கம் எல்லாத் தீவுகளையும் தரிசிக்கச் செய்து, ஆங்காங்குள்ள விசேடங்களுக்கு விளக்கம் தந்து பிரமுகர் பலருடன் பழகவைத்து, நீண்ட தலயாத்திரை செய்தது போன்றதொரு உணர்ச்சியை என்மனசில் இருத்தியது. அது இன்றும் பசுமையாய் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. பண்டிதர் ஆறுமுகனார் மிகத்தெள்ளியனே!

சரவணமுத்து அடிகள், திருவாசகமடம், திருக்கேதீஸ்வரம்
[1982]

திரு பண்டிதர் அவர்களை குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்களின் ஆற்றலையும் பண்பையும் அறிவேன். அவர் பண்டிதமணி ஐயா அவர்களிடம் படித்துக்கொண்டிருக்கும் போதே லீவு நாட்களில் ஊரில் வந்தால், தனது படிப்பின் தன்மையையும் பண்டிதமணி ஐயா அவர்களின் சீரிய நெறியையும், தங்களை வழிப்படுத்தும் முறையையும் சொல்லி மகிழ்வார். அடியேன் அவைகளைக் கேட்டு ஆனந்தம் அடைவேன்.

அடியேன் 1944ம் ஆண்டு ஈழத்துச்சிவனடியார் திருக்கூட்டத்தை ஆரம்பித்தது முதல் 1948இல் திருகேதீஸ்வரத்தில் கூடிய சைவ மகாநாட்டுக்கு சொல்லாலும் செயலாலும் அளப்பரிய தொண்டு செய்தவர். 1962ம் ஆண்டு திருவாசக மடத்தில் ஆரம்பித்த திருவாசக விழா தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் எத்தனை சிரமம் இருந்தாலும் அவைகளை மறந்து அருமைக்குழந்தை தமிழரசியுடன் வருகைதந்து சொற்பெருக்காற்றியும் புராணத்துக்குப் பயன் சொல்லியும் தொண்டு செய்ததுடன் கடந்த 1981ம் ஆண்டு திருவாசக விழாவிற்கு தனது சுகவீனத்தைக் கூட மறந்து ஆஸ்பத்திரியில் இருந்துகொண்டு திருவாசக விழாவிற்கு வருகைதருவேன் என எழுதிய கடிதம் அவர்களின் தமிழ்த்தொண்டு, சமயத்தொண்டு, திருவாசகத்தில் கொண்ட அன்பு அடியேனிடத்துக் கொண்ட பாசம் இத்தனையும் எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் குணம், செயல், பண்பு, பணிவு, தொண்டு இவைகளை எழுதுவதற்கு தனியே ஒரு நூல் உருவம் வேண்டும். அவர்களைப் போற்றும் பணியல்லாது நூல் எழுதும் வல்லமை எனக்கில்லை. சமீபத்தில் அவர்களின் மைத்துனர் மறைவுக்கு அவர்கள் திருக்கோணேசப் பெருமான் மீது பாடிய பாக்கள் உள்ளத்தைத் தொடுவனவாகும்.

ஒழித்தேன் பிறவியை ஊர்ந்தேன்
அறுபகை ஓங்கிற்றுள்ளம்
இழித்தேன் உடம்பினை ஏலேன்
பிறரிடை இம்மனையும்
பழித்தேன் பழியே விளைக்கும்
பஞ்சேந்தியக் குஞ்சரமும்
தெழித்தேன் சிவனடி சேர்ந்தேன்
இனிமிகத் தெள்ளியனே!

என்ற பொன்வண்ணத்தந்தாதிப்படி சென்றவரைப் போற்றி வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. பொன்னாடு புக்க புங்கை ஆறுமுகன்

திரு நா முத்தையா, ஆசிரியர், ஆத்மஜோதி - 1982

புங்குடு தீவுசெய் தவத்தால் உதித்தோய்!
எங்கள் எல்லோர்க்கு மினிய நண்பினோய்!
ஆறு முகவன் அருள்கொடு வந்தோய்!
ஆறு முகனின் பெயருந் தாங்கினோய்
உவப்பத் தல்கூடி உள்ளப் பிரிதல்
பவப்பிணி அறுப்போர் யார்க்குமுள வாயினும்
மலைபோல் நின்றநின் மாண்புறு தோற்றமும்
கலையுளங் கொண்டநின் கருத்தின் ஆழமும்
அன்பும் அறிவும் அருளுங் கூடிய
இன்ப நலன்களின் இணையிலாச் சேர்க்கையும்
எம்மால் எப்பவும் மறக்கவும் படுமோ?
இம்மா நிலத்தவர் எய்தும் இயற்கை
சும்மா என்றுதான் சுகித்து இருந்தோம்
தம்மால் எய்திய தனிப்பெரும் பிரிவு
என்ன செய்தால் தீரும் என்று
பன்னூற் புலவோர் பாடினர் இலையே!
பண்டிதன் ஆறு முகவன் என்றும்
பண்டித மணியின் அருமைச் சீடனென்றும்
நண்பினர் யாவரும் நானிலம் முழுதும்
பண்பொடு உரைத்த உரையும் போமோ?
பொன்னாடு புக்குப் புகழினை எய்தினோய்
என்னாடு தானும் மறக்குமோ உன்னை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. தமிழ் ஈழத்துக்கும் தமிழ் இனத்துக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு

திரு கா பொ இரத்தினம் - நாடாளுமன்ற உறுப்பினர் - 1982

தமிழ் மறைக் கழகத்தை 1952 இல் கொழும்பில் நிறுவுவதற்கு என்னுடன் சேர்ந்து அயராது உழைத்த பதினொருவரில் பண்டிதர் மு ஆறுமுகன் அவர்களும் ஒருவராவார். தமிழ்மறைக்கழகம் தொடங்கிய காலம் தொடக்கம் ஐந்தாண்டுகள் பொருளாளராகப் பணிபுரிந்த பெருமைக்கும் அவர் உரியவர்.

கிளிநொச்சி பாரளுமன்ற உறுப்பினராக நான் பணியாற்றிய பொழுதும் பண்டிதர் ஆறுமுகம் அங்கு வதித்து எனக்கு உசாத்துணையாகவும் உறுதுணையாகவும் விளங்கினார்.

திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாவினையும் தமிழ் மறைக்கழகத்தின் பதினாறாவது திருக்குறள் மகாநாட்டினையும் கிளிநொச்சியில் 1969 வைகாசித் திங்களில் சிறப்பாக நடத்துவதற்கும் அவர் அயராது உழைத்தவர். அவ்விழாவிலும் மகாநாட்டிலும் வெளியிடப்பட்ட திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலரின் ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார்.

அந்த மலரில் அவர் எழுதிய மூன்று வாக்கியங்கள் இன்றும் நினைவுகூரத் தக்கன. "வாழ்வில் துன்பம் தொடும்போதெல்லாம் அறிஞர்கள் வள்ளுவதேவரைச் சரணடைகின்றனர். அவர்திருவாய் மலர்ந்த ஆயிரத்து முன்னூற்று முப்பது அருந்தேன் குறள் மலரிலும் அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கின்றது. எமது குழந்தைகளும் சீரிய வாழ்வு வாழவேண்டுமானால் வள்ளுவர் தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்மறையைப் போற்றி அதன்படி ஒழுகி எல்லா உயர்வுகளையும் அடைவார்களாக."

புங்குடுதீவுக்கு புகழ் சேர்த்த சிலப்பதிகார விழாவினைச் சிறப்பாக அறிஞர்கள் வியக்கத்தக்க முறையில் நடத்துவதற்கும் முன்னணியில் நின்று உழைத்தவர் ஆவார். ஆன்றவிந்தடங்கிய கொள்கையும், துறைபழுத்த நறைத்தீந்தமிழின் சுவையில் பேரீடுபாடும் உடையவராக அவர் வாழ்ந்தார்.

முற்போக்கான கொள்கைகளை ஆதரித்து அவற்றைப் பரப்புவதற்கு சிறிதும் அஞ்சாமலும் அசையாமலும் அவர் உழைத்தவர். அவருடைய எழுத்தும் பேச்சும் இதற்குச் சான்று பகர்கின்றன. புங்குடுதீவிலோ யாழ்நகரிலோ வாழ்வதற்குப் போதிய வசதிகள் இருந்தும் அவர் கிளிநொச்சியில் குடியேறி வாழ்ந்தார். கிளிநொச்சியில் மக்கள் குடியேறி அதனை முன்னேற்ற வேண்டுமென்றும் ஆசைகொண்டார். அதற்காகவும் அயராது உழைத்தார்.

தமிழ்த் தாயின் வாழ்வுக்கும் வளத்துக்கும், தமிழ்மக்களின் விடுதலைக்கும், விருத்திக்கும் ஆர்வத்துடன் உழைத்த இப்பெருந் தொண்டனின் மறைவு தமிழ் ஈழத்துக்கும், தமிழ் இனத்துக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. செயற்றிறன் மிக்க பண்டிதர் அவர்கள்

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், நீர்வேலி -1982

மதிப்புக்குரிய தமிழறிஞரும், எங்கள் குடும்பத் தலைவரின் உற்ற நண்பருமாகிய பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள் ஆழ்ந்த புலமையும், சமயப்பற்றும் உடையவர். சமூகப்பணிகளில் சந்தர்ப்பம் வாய்த்தபொழுதெல்லாம் அடக்கத்துடன் முன்னின்று உழைத்தவர். தமது நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், உற்றவிடத்து உதவி செய்து வாழ்ந்தவர். சைவ விருத்திச் சங்கம் தனது பொற்காலத்தில் தயாரித்தளித்த நல்லாசிரியர்களுள் பண்டிதரும் ஒருவர். ஆசிரியராயும் அதிபராயும் ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் கல்விப்பணி புரிந்து நாடெங்கிலும் நற்பிரசைகளைத் தோற்றுவித்து இருக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினரும், பண்டிதருமாகிய உயர்திரு கா பொ இரத்தினம் அவர்கள் தொடங்கி நடாத்திய தமிழ்மறைக் கழகத்தில் பண்டிதர் மு ஆறுமுகன் அவர்கள் முக்கிய உறுப்பினராய் இருந்து பணியாற்றி வந்தார். அக்கழகத்தின் சார்பில் ஒருமுறை அநுராதபுரம் விவேகானந்தா வித்தியாலய மண்டபத்தில் திருக்குறள் மகாநாடு நடைபெற்றது. இந்திய அறிஞர்களும் இலங்கை அறிஞர்களும் அம்மகாநாட்டிற் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள். அங்கு வரவேற்பாளராக இருந்த பண்டிதர் ஆறுமுகன் அவர்கள் எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்று தமது இல்லத்தில் அனைவருக்கும் உணவும் தங்குமிடமும் கொடுத்து உதவிய காட்சி இன்றும் மனக்கண் முன் நிழலாடுகின்றது. அவருடைய அருமை மனைவியாரும் அவருடன் சேர்ந்து அனைவரையும் உபசரித்தமை எல்லோரது மனத்தையும் கவர்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36. பண்டிதமணியின் வழியில் வாழ்ந்த பண்டிதர் மு ஆறுமுகன்

கா க சிவசுந்தரம், ஆசிரியர், முன்னாள் கிராம அதிகாரி

1982

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் கலந்து கொண்ட பண்டிதர் மு ஆறுமுகன் அவர்களை நினைக்கும் போது நெஞ்சம் இறும்பூது எய்துகிறது. தனெக்கெனத் தனியான தொரு பாணியை வகுத்துக் கொண்டு பண்டிதமணியின் சீரிய வழிநெறியில் வாழ்ந்தவர். மாணவர் தொடங்கி மதிப்புக்குரிய பெரியோர்கள் வரை மதிக்க வாழ்ந்தார்கள். சிந்தனையான கற்றல் - செயலூக்கமான கற்பித்தல் - நிறைவான பயன் இவைகளைத் தன் வாழ்வில் கண்டு மகிழ்ந்தவர்கள்.

எவரையும் தன் இனிமையான சுபாவத்தால் தன்வசப்படுத்தி மகிழ்ந்தார்கள். தமது குடும்பத்தவர்களுக்கும், நண்பர்களுக்கும், சுற்றத்தவர்களுக்கும், அன்பர்களுக்கும் ஒரு வழிகாட்டும் ஒளிவிளக்காய்த் திகழ்ந்தார்கள். பாரதியார் கூறிய நண்பனாய்த், தோழனாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய்த் திகழ்ந்து வழிநடத்தினார்கள். அவரது இனிய அன்பான தன்மைகள் நம்மையெல்லாம் சுற்றி வளைய வந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37. வாரித் தமிழ் வழங்கும் வள்ளல்

சி குமாரசாமி, விரிவுரையாளர், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை,
கோப்பாய் - 1982

நீலயினார் பரம்பரையில் ஆயுள்வேதம்
நிலைத்திட்ட புகழ்முத்துக் குமாரு செல்வப்
பாலகனாம் ஆறுமுக புங்கை செய்த
பாகியமாம் சதாசிவனார் குருவாய் வாய்க்கச்
சாலவுமே இளவயதிற் றமிழை மாந்தித்
தமிழ் மதுரைப் பண்டிதனாய்த் தருக்கி நின்றாய்
காலமெலாங் நிலைத்திடுநற் சேவை யாற்றிக்
கற்றோர்தம் உளம்பிணித்த கலைவ லோனே.

சைவவித் தியாவிருத்திச் சங்கம் காத்த
தவராச ரத்தினம்நின் தகைமை கண்டே
ஐயவுனை அழைத்தன்று முத்துத் தம்பி
ஆசிரியப் பணிதந்து அருமை சேர்த்தர்
செய்தனையோர் தனிவிடுதி தீவு வந்தோர்
திருந்து கல்வி கற்றிடவே சிறந்தவன்பு
பெய்தவர்க்கு முன்னோடி யாக நின்ற
பெருமையெலாம் எடுத்திங்கு பேசப் போமோ.

பண்டிதமா மணியுடன் தொடர்பு கொண்டாய்
பாங்காக நயங்க ளெல்லாம் விரிக்கும் பண்பு
கொண்டனைநின் உரைவன்மை தருக்கவன்மை
கோலமுரு கவிவன்மை மேடையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுவந்தோம் பிறவியா சிரிய னென்று
காட்டி நின்றாய் கற்குமா ணவர்க்கெல்லாம்
மண்டுபெருங் காதலோடு தமிழை உண்ண
வாரிவா ரிக்கொடுத்த வள்ளல் நீயே.

இல்லறத்தில் ஓவசியர் தம்பிப் பிள்ளை
உதவு செல்வி துணையாக இன்புகூர்ந்து
நல்லறங்கள் புரிந்திட்ட பயனாய்த் தோன்றும்
நன்மகட்கு தமிழரசி நாமம் சூட்டி
எல்லையிலாத் தமிழன்பு காட்டி நின்றாய்
ஏந்திழையாள் மணம்புரிந்தே யிங்கிலாந்து
செல்லவன்று பெருமையொடு பிரிவுத் துன்பம்
சேர்ந்தலைத்த தந்தையாய் திகைத்து நின்றாய்.

ஆறுமுக வாழ்க்கையினை உயர்ந்த கொள்கைக்
காக்கியுயர் புகழெல்லாந் தேக்கி நின்றாய்
பேரரன்றாள் அடைவதுவே என்று செய்கை
பேச்சுநினை வெலாமவனாய் பேணி நின்றாய்
தேறரிய துன்பத்தில் யாரும் மூழ்கச்
சென்றனைஇவ் வுலகதனைத் துறந்தே சென்னி
ஆறுமதி பாம்பிதழி அணிந்தோன் பாத
ஆனந்தத் தேனருந்தி அமர்ந்து வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. புங்குடுதீவின் முதற் பண்டிதர்

வித்துவான் சி ஆறுமுகம், 'தமிழகம்' புங்குடுதீவு - 1982

நல்லாசிரியர்கள் நல்வழிகாட்டி - தமிழகத்தில் சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர்கள் 'சான்றோர்கள்' என அழைக்கப்பட்டனர். இன்றும் நம்மிடையே வாழும் பண்டிதமணி உயர்திரு. சி கணபதிப்பிள்ளை, பேராசிரியர் உயர்திரு சி இ சதாசிவம்பிள்ளை போன்ற பெரியோர்கள், சான்றோர் வரிசையைச் சார்ந்தவர்கள். இவ்விருவரும் ஆறுமுக நாவலர் பெருமானின் மாணவ பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்களின் மாணவரே அண்மையில் அறுபத்தெட்டு வயதில் அமரரான பண்டிதர் திரு மு ஆறுமுகனார் அவர்கள். இவர் புங்குடுதீவு பெற்ற முதற்பண்டிதர். தலைசிறந்த சைவசித்தாந்தப் புலவர், சித்திர வித்தகர், சித்தவைத்தியர், இசைக்கலை வல்லுநர், நல்லாசிரியர், எம்போன்ற ஆசிரியர் பலரை உருவாக்கிய ஆசிரியர், சோதிடக்கலை வல்லுநர். வைத்தியக் கலையிலும் பட்டம் பெற்றவர்.

வைத்தியமும் , கவிதையும், நாடகமும் பரம்பரையாக வளர்ந்த குடும்பம். நிலையான குடும்பம். பண்டிதர் அவர்கள் முத்துடையார் பரம்பரையின் ஐந்தாவது தலைமுறையில் உதித்த வித்தகர். அவர் ஒரு வழிகாட்டி. பண்டிதரின் தந்தை சிறந்த சித்த வைத்தியர். இலக்கிய இரசிகர். புராண விற்பன்னர். இராமாயணமும், பாரதமும் அவருடைய உயிர். அவர் என்னுடைய அன்பு மாமா. எனக்கு ஏடு தொடக்கி, என்னை வாழ்த்தி வாணாள் முழுவதும் மதித்து வாழ்ந்தவர். என் தாயாரின் இரண்டாவது அண்ணனார் அவர். பண்டிதர் என் குரு, வழிகாட்டி, மாமா மகன். என் வாழ்வு சிறப்புற வேண்டுமென்று சதா நினைந்து உதவி புரிந்து வாழ்த்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் அவர்கள் என்னை எப்பொழுதும் 'தம்பி' என்றே அழைப்பார். நானும் அவரை ஆசிரியர் என்றே மதித்து வருபவன்.

புங்குடுதீவில் ஐம்பது ஆண்டுகளின் முன் தன் வீட்டிலேயே ஒரு படிப்பகம் உண்டாக்கி, மாணவர் பலருக்கு இலவசமாக சனி, ஞாயிறு நாட்களிலும், இரவு வேளைகளிலும், விடுமுறை காலங்களிலும் பாடம் நடத்தித் துணைபுரிந்தவர் ஆறுமுகனார். மகாவித்துவான் கணேசையரிடம் இலக்கண நூல்களை ஐயம்திரிபு இன்றிக் கற்றவர் பண்டிதர் ஆறுமுகனார். பண்டிதமணி அவர்களிடம் சங்க நூல்களையும், காப்பியங்களையும், புராணங்களையும், பிரபந்தங்களையும் நன்கு கற்றுத்தெளிந்த பண்டிதர் ஆறுமுகனார், சங்க நூல்களில் ஒன்றாகிய அகநானூற்றில் வரும் விளக்கத்திற்கு அரிய பாடற்பகுதிகளைத் தம் நுண்மதி கொண்டு விளக்கிப் பிறருக்கும் எடுத்துக்கூறிப் பாராட்டும் பெற்றவர். "வேளாப்பார்ப்பான்" என்று வரும் அகநானூற்றுப் பாடற்பகுதிக்கு இவர் கூறிய உரைப்பொருத்தங் கண்டு அறிஞர் மு வரதராசன் அவர்கள் எழுந்து பண்டிதர் ஆறுமுகனாரைக் கட்டித் தழுவியமை உண்மை வரலாறு.

பண்டிதர் ஆறுமுகனாரின் பிறப்பிடம் புங்குடுதீவு. வழிகாட்டியாக விளங்கிய பண்டிதர் ஆறுமுகனார் கலங்காத உள்ளம் படைத்தவர், அச்சம் அறியாதவர், மரபுக் கவிதைகள் வரைவதில் பேராற்றல் படைத்தவர். தீவுப்பகுதி, திருநெல்வேலி, இணுவில், விடத்தல்தீவு, கொழும்பு, கிளிநொச்சி, பொலநறுவை, வவுனியா, அனுராதபுரம் முதலாம் இடங்களில் அவர் வாழ்வின் பெரும்பகுதி பயன் பெற்றது. அவர் தெளிவுறப்பேசுவார். கட்டுரை வரைவார். எந்நேரமும் எப்பொருள்பற்றியும் பேசவும் எழுதவும் வல்லவர் ஆறுமுகனார். படிப்பித்தற்கலை அவருடன் கூடப்பிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்தெட்டு ஆண்டுகள் நிரம்பிய பண்டிதர் அமரராகிவிட்டார். எல்லோரையும் நினைக்கவைத்துப் பிரிந்து விட்டார்.

பண்டிதர் ஆறுமுகனார் பெரும் பிரிவு - இயற்கையானது! 'அழவேண்டாம்' என்றார்; 'ஆடம்பரம் வேண்டாம்' என்றார்; 'இயற்கை எய்துதல் நியதி' என்றார்; 'ஈந்து உவந்து வாழுங்கள்' என்றார்; 'உலகம் உயர்ந்தது, உண்மையானது' என்றார்; 'ஊக்கம் ஆக்கம் தரும்' என்றார்; 'எதிரியையும் நேசித்து வாழ்' என்றார்; 'ஏறு போல் நட' என்றார்; 'ஐயம் அகற்றி வாழ்' என்றார்; 'ஒற்றுமை உயிர்' என்றார். அவர் அமுதம் போன்று கூறிய பத்துக் கற்பனைகள் - படிப்பினைகள் என்றும் எம் இதயத்துள் குடியிருக்கும்.

அவர் மறைவதன் முன் எழுதிய கடிதம் என்கையில் இருக்கின்றது. அதுவும் அச்சில் வெளிவரக்கூடும். அதனுள் ஒரு வாக்கியம். "ஒரு மரம் தோப்பாமோ" என்பது. பல ஆண்டுகளின் முன்னரே அவர் எனக்கு அறிவுறுத்திய தொடர் இது! இஃது அவருடைய பொன் போன்ற தொடர் மொழி. அவர் ஓர் ஆலமரம். எம்மைப்போன்ற பல மரங்களை உருவாக்கினார். அவருடைய தோப்பில் வளர்ந்து ஓங்கிச் செழித்து நிற்கும் மரங்கள் பலப்பல. அவர் உண்டாக்கிய தோப்பில் நானும் ஒரு நன்மரமாக நிற்கவேண்டும் என்பது என் ஆசை. இன்னும் பல நன்மரங்கள் தோன்றும். அவர் ஆசை நிறைவேறும். அவர் ஆன்மா அப்போதுதான் சாந்தி அடையும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39. தமிழ்த் தாயின் தவப்புதல்வன்

ஏ கே இராசேந்திரம், அதிபர்; 1982

அமரர் பண்டிதர் ஆறுமுகன் அவர்கள் தமிழ்த்தாயின் தவப்புதல்வன். கிளிநொச்சியில் முத்தமிழ் மேடையில் முன்வரிசையில் வீற்றிருக்க முற்றும் தகுதி பெற்ற மூதறிஞர். அன்னார் மல்லாவி அரசினர் பாடசாலை அதிபராக இருந்த போது "தமிழ் விழா" அலுவலாக அன்றைய வித்தியாதரிசி அமரர் கனகசபாபதியும் அடியேனும் பண்டிதரைக் கண்டு பலன் பெற்றோம். அவர் உருத்திரபுரத்திற்கு மாறி வந்த பின் புனித திரேசா மகாவித்தியாலயத்தில் எமது சங்கச் சார்பில் நடைபெற்ற பால பண்டிதர் வகுப்பிலும், வளர்ந்தோக்கான உயர்கல்வி வகுப்பிலும், போட்டிப் பரீட்சைகளுக்கான வகுப்புகளிலும் ஒருசதமேனும் வாங்காது ஒழுங்காகத் தமிழ் இலக்கிய இலக்கணம் கற்பித்தார். இந்நாள் "ரியூசன்" ஆசிரியர்களுக்கு அவர் சிம்ம சொப்பனம். "கல்வி புகட்டக் காசோ? என்று பேசுவார்.

எட்டு ஆண்டுகள் எம்மோடிணைந்து அவர் செய்த தமிழ்த் தொண்டை இறைவன் அறிவார். பழைய மாணவர் அறிவர். தமிழை நினைக்கத் தம் ஒரே மகளுக்குத் தமிழரசி என்று பெயர்சூட்டிய தமிழறிஞரவர். முத்திறம் கண்ட வித்தகர். தமிழ்த்தொண்டு, சமயத்தொண்டு, சமூகத்தொண்டு என்று வாழ்ந்து காட்டிய வள்ளல் பண்டிதர் வளர்த்த பைந்தமிழை, இன்பத்தமிழை இனியும் வளர்ப்போம். இதுவே நாம் செய்யும் கைமாறு. வாழ்க அவர் நாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40. குருவும் சீடனும்

திருப்பூங்குடி வி வி கே ஆறுமுகம் - 1982

பண்டிதர் என்றால் அவர் ஒருவர்தான்
பாண்டித்தியம் உடையவரும் அவரேதான்
புங்குடுதீவு தந்த ஞானச் செல்வர்களில்
புகழ் பூத்த பொது நலத்தொண்டன்
சிறியேனைப் பெரியோனாக்கினார்
சேவையே வாழ்வாக வாழ்ந்தார்
பண்டிதமணி என்றால் போதும்
பலமுறையும் பக்தி ததும்ப வணங்குவார்
இளையப்பர் என்றால் இன்பம் ஓங்குவார்
அ பரம்பரைக்கோர் கோதிலாச் சீடர் அவர்
சிந்திப்பார் தெளிந்து பேசுவார்
வந்திப்பார் வாழ்பவரை வாழ்த்துவார்
எந்தப் பொருளையும் எளிதாய் விளக்குவார்
எதிலுமே பற்றில்லா இல்லற ஞானி
இறுதிக் காலத்தில் இதயத்தில் என்கைவைத்து
இன்பமாய் உணர்வு தந்தார்
கருகிகருகிச் சிவப்பேற வேகின்ற கட்டையிலே
உருகிக் கிடக்கின்ற போதிலும்
உன் அன்பை மறப்பேனோ உத்தமனே!
உலகம் உள்ளளவும் உன்புகழ் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41. தமிழ்ப்பயிர் வளர்க்கும் தனிமுகிலொப்பாய்!

வே கந்தையா, ஓய்வுபெற்ற ஆசிரியர், நயினாதீவு - 1982

ஆறுமுகனெனும் அரும் பெயர்ப் பண்டித
வேறுமுகமின்றி மாறுமுகமின்றி சீறுமுகமின்றி
நகைமுகமே உடையாய்
இயற்கையோடு இயைந்ததே வாழ்வு என்பை
சீரிய பதி அது திருநெல்வேலி
அங்கோர் ஆச்சிரமம் அமைந்துள்ளது அதுதான்
பண்டிதமணி (சி க) அது பண்பார் மனையாம்
அந்தமனையிடை இருந்தனை மாசறக் கற்றனை
இதற்கு முன்னரும் புராண இதிகாசங்களில் பொருள்
நயம் உரைப்பை
இதனால் தமிழ்ப்பயிர் வளர்க்கும் தனிமுகிலொப்பாய்
நயினாதீவிலே நாகபூசணித்தாய் பெயர்பெறும் பாடசாலையில்
உடன் ஆசிரியராய் உறைந்தனம் அன்றோ
அந்தநாள் பயனுடை நாளாம் பாக்கியம் படைத்தது
கம்பன் காவியத்திடை கருத்து மிகஉடையனாய்
இராவணன் பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டாய்
அதுதான் முடிந்ததோ இல்லையோ அறியோம்
பண்டித மரபின் பண்பறிந்து ஒழுகுயோய்
மண்ணிடை வாழ்வு மாயமாம் என்பதை
நின்னுடைப் பிரிவால் நிலைபெற உணர்ந்தோம்
அமைவோம் அமைவோம் ஆத்ம சாந்திக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 42. பொற்புடைய புகழ் உடம்பு

கவிஞர் நாக சண்முகநாதபிள்ளை
அதிபர், நயினை மகாவித்தியாலயம் - 1982

அன்புருவம் அருள்ஞானத் திருவுருவம்
        அகத்தினுள்ளே பழுத்த தமிழ்(ப்)
பண்புருவம் பான்மைபெறு பயனுருவம்
        பரந்தபெரும் சிந்தையுள்ளே
என்புருகும் படியாக இயங்குருவம்
        எவர்க்கும் அன்பாய் இனிக்கப்பேசி(த்)
தன்புருவம் நெகிழ்ச்சிதரும் தனியுருவம்
        தலைசாய்த்ததன்றே தலைவன் தாளே!

வித்துவனாய் பண்டிதனாய் விரிக்கும் நூல்கள்
        விளக்கும் போக்கில்விரிவுரையின்
தத்துவனாய்(த்) தர்க்கநூல்கள் சார்ந்தவனாய்
        தனித்துவமாய் தகைசான்ற
அற்புதமாம் ஆய்வுரைகள் ஆற்றும் ஆறு
        அருள்முகமாய் ஆண்டமேனி
பொற்புறவே புகழுடம்பாய் புனிதபாதம்
        போந்ததுவே பொலிவு தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43. என்றுமே மறக்கமுடியாதவர்

பண்டிதர் நா கந்தசுவாமி, அதிபர், நாகபூஷணி வித்தியாலயம்

1982

எனது நல்லாசான் பண்டிதர் திரு மு ஆறுமுகன் அவர்களுடைய ஆஜானுபாகுவான தோற்றமும், மலர்ந்த முகமும், புன்சிரிப்பும் எம்மைவிட்டு என்றும் நீங்கா.மாணவர்களின் கலங்கரை விளக்கு அவர். அவர்களின் நல்வாழ்வே தனது வாழ்வின் இலட்சியமாக வாழ்ந்தவர். கற்பித்தலில் வல்லுநர். இலக்கிய ரசனை மிக்கவர். அந்த ரசனையை மாணவருள் புகுத்துவதிலும் தன்நிகரற்றவர்.

பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்களின் உத்தம மாணாக்கருள் ஒருவர். அவரது வாழ்க்கை நெறிகளையும், குறிக்கோள்களையும் அடியொற்றி நடந்தவர்.அநீதிகளை எதிர்ப்பதில் முன்னிற்பவர். சிறந்த சமுக சேவையாளர்.

தனது பேச்சுத்திறத்தாலே எல்லோரையும் வசீகரிப்பவர். தேடிச் சென்று உதபுபவர். பிரச்சனைகளில் எப்போதும் நீதியின் பக்கமே நிற்பவர். அத்தகைய பெருமகன் இன்று நம் மத்தியில் இல்லை. இந்தப் பேரிழப்பு அறிஞர் உலகத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44. பெருமையாக நினைந்து வாழ்கிறோம்

சிவபாதம் நவமணி

நாம் புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலையில் கல்விகற்ற காலத்தில் எமது வகுப்பாசிரியராய் இருந்து பண்டிதர் ஆறுமுகன் அவர்கள் தமிழ், சைவசமயத்தோடு காந்தீயத்தையும் போதித்தார். அவர் எமது மனதில் பதித்த நல்லொழுக்கம் இன்றும் எம்மைக் காத்திருக்கிறது. அவர் குருவாய் மட்டும் அல்லாமல் தாயாய்ப் பரிந்து தந்தையாய் வழிநடத்தினார்.

அவர் யாழ்ப்பாணம், புங்குடுதீவு மட்டுமல்லாமல் கொழும்பு முதலிய இடங்களில் படிப்பித்து மாணவர்களைப் பண்பாக வாழவைத்தவர். அந்த மாணவர்கள் வெளிநாடுகளிலும் நல்ல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாம் கண்கூடாகக் காணக்கூடிய அவரது உன்னதமான செயல் இது.

அவரிடம் படித்த மாணவர்கள் நல்ல நிலையில் வாழ்ந்தாலும் இன்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி விளையாடுவதோடு, முன்னின்று மற்றவர்களுக்கும் உதவி செய்கிறார்கள். இவற்றை நாம் பெருமையாக நினைந்து வாழ்கின்றோம். இப்பெரியாரின் நூற்றாண்டு இனிதே நிறைவேறப் பிரார்த்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45. ஈழத்து முத்தாவார்

யாழ்ப்பாணத்தை அன்மித்துள்ள புங்குடுதீவின் தவப்புதல்வனாய்த் தோன்றிய எமது சிறிய தந்தையார் சீரும் சிறப்புமாய்ப் பேரும் புகழுமாய், பார்ப்போருக்கு கம்பீரமான தோற்றமும் அழகிய சிவந்த மேனியும் எந்நேரமும் வாயில் அழகிய புன்சிரிப்புடன் காட்சிதருவார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்"

என்று கூறுகின்ற வள்ளுவர் குறளையடுத்துப் புகழ்கொண்ட பண்டிதர்; உள்ளத்தில் உண்மை, செயலில் தூய்மை, பேச்சில் வாய்மை இத்தனையும் உடையவர். எல்லோராலும் மதித்துப் போற்றப்பட்டவர். தோல்விகளில் விருப்பம் இன்மை உடையவர். இவர் புங்குடுதீவு திரு இளையப்பா மாஸ்டரிடம் படித்து, தமது கல்வியை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் தொடர்ந்து கற்று அங்கு ஆசிரியராய் இருந்தவர்.

இவர் புங்குடுதீவு சிறார்கள் - வறுமைக் கோட்டுக்குகீழ் உட்பட்ட பிள்ளைகளை முத்துத்தம்பி வித்தியாசாலையில் சேரவைத்து அவர்களுக்குக் கல்விபுகட்டிய ஒரு பெரியார். இக்காரணத்தல் புங்குடுதீவுப் பிள்ளைகள் பாண்டித்தியம் அடைவதை இன்றும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அவர் புங்குடுதீவில் கல்வி கற்பித்த நாட்களில் ஒரு நாள் புங்குடுதீவிலுள்ள வெட்டுக்குளத்திற்கு நீந்திக் குளிப்பதற்குச் சென்றார். அங்கே ஓர் இளைஞன் இனிய குரலில் அழகாகப் பாடுவதைக் கண்டார். அவ்விளைஞனை மீண்டும் மீண்டும் பாடும்படி கேட்டு மகிழ்ந்தார். அவ்விளைஞனைப் பற்றி தன் நண்பர்களுக்கும், பெரியோர்களுக்கும் கூறி கணேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசாலையில் பாடவைத்து, பொற்கிழி வழங்கி சங்கீதம் கற்க இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். அந்த இளைஞனே, பின்னாளில் புங்குடுதீவின் சங்கீத ஆசிரியராக இருந்து பல இசைக்கலைஞர்களை உருவாக்கிய இராசலிங்கம் ஆசிரியர்.

பண்டிதருக்கு முத்தமிழும் கைவந்தது. அவர் இளமைக்காலத்தில் புங்குடுதீவின் 'அடப்பனான் வளவு' எனும் இடத்தில் அரிச்சந்திரன் நாடகம், சாவித்திரி சத்தியவான் நாடகம் போன்ற பல நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்தார். அந்நாளைய நாடகங்களைப் போல அவரெழுதிய நாடகங்களும் பாடல்கள் கலந்தே இருந்தன. அவரது கம்பீரமான கணீரென்ற குரல் பாடல்கள் பாட ஏற்றதாக இருந்தது.

புங்குடுதீவில் பெரிய விழாக்கள் கொண்டாடுவதற்கு அத்துமீறிய விருப்பமுடைவராய் இருந்தார். இதற்காக புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோயிலில் சிலப்பதிகாரம் என்னும் பெரிய விழாவை இந்தியாவில் இருந்தும், இலங்கையிலிருந்தும் பெருமக்களை அழைத்து நடாத்த ஒரு ஊன்று காலாக இருந்திருக்கிறார். அக்காலத்தில் ஓரளவு விடயம் தெரிந்தவளாகவே நான் இருந்திருக்கிறேன். எனக்கும் குறைந்த வயதுடையவர்கள் இப்போது தங்களின் சொல்லுக்கு ஏற்றார் போல இல்லை என்கின்ற அளவுக்கு தட்டிக்கழிக்கக் கூடிய அளவில வெளிநாடுகளில் ஒருசிலர் இருக்கலாம். இதை நான் வேதனையுடன் உங்களுக்குக் கூறுகிறேன்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்னுமாறு அன்னதானம், மற்றவர்களுக்கு கொடுக்கும் தன்மை, கல்வியில் சீர்தூக்கி விடுதல், பாடசாலையில் பிள்ளைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சேர்த்தல் ஆகிய இவற்றில் எல்லாம் வலும் ஆர்வம் உடையவர். பேச்சாற்றலும் சுறுசுறுப்பும் எல்லோரையும் சுண்டியிழுக்கும் இவரின் பாவனையால் மக்களிடையே ஓர் ஆசிர்வதிப்பைப் பெற்றவர். இதனால் புடம்போடப்பட்ட தங்கமாக மக்களிடையே பிரகாசித்தார்.

எனது சிறிய தந்தை பண்டிதர் மு ஆறுமுகன் அவர்களிடம் நான் படித்தேன். எனது சிறுபிராயத்தில் அவர் அடிக்கடி எமக்குச் சொன்ன அவரது பொன்னான சொற்றொடர் ஒன்றை இங்கு சொல்லலாம் என நினைக்கிறேன்.

"பணத்தை செலவு செய்தாலும் மனத்தை செலவு செய்யாதே
மனம் வாசனையானால் வாய்ப்பது முத்து"

பணம், பொருள் போன்றவை கள்வராலும், நயவஞ்சகராலும் எம்மிடமிருந்து சூரையாடப்படலாம். அதை நினைத்து நினைத்து வருந்தி மன உளைச்சலால், நமது மனதைப் பேதலிக்கச் செய்து, மனநோயாளர்களாக நாம் ஆகிவிடக் கூடாது.

நம் மனதில் வஞ்சகம் பொறாமை போன்ற அழுக்குகள் சேர்ந்து கெட்ட வாசம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மனத்தை அன்பு, கருணை போன்ற நல்ல பண்புகளால் நிறைத்து எந்நேரமும் வாசமுள்ளதாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி வைத்திருப்போருக்கு மன அழுத்தங்கள் இருப்பதில்லை. இனிமையாய் அவர்களது வாழ்க்கை முத்தாய் ஒளிரும். இப்படிச் சொல்லி எம்மை வாழ்வாங்கு வாழ வழிநடத்திய அவர் 'ஈழத்து முத்தாவார்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46. பண்டிதர் மாமா!

திரு நா கனகலிங்கம், ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர்(கனடா)

தமிழறிஞர், பண்டிதர், தமிழ் ஆராச்சியாளர். அவர் எம் தாயின் ஒன்றவிட்ட சகோதரர். எமது குடும்பத்தில் என்ன நடந்தாலும் அவர் அங்கு சமுகமளித்திருப்பார். அவரின் ஆலோசனையின் பிரகாரம் தான் யாவும் நடைபெறும். இவர் எம் குடும்பங்களின் தலைவர் மட்டுமல்ல, எமது சமுதாய தலைவருமாவார்.

1953ம் ஆண்டளவில் நானும் எனது மூத்த சகோதரரும் அண்ணாமலை சர்வகலாசாலையில் இசை பயின்று கொண்டு இருந்தோம். அப்போது எமது விடுமுறையின் போது இலங்கை வந்த நானும் எனது மூத்த சகோதரர் திரு.சண்முகலிங்கம் அவர்களும், இந்தியா செல்வதற்கு நடுநிசி நேரத்தில் மதவாச்சி புகையிரத நிலையத்தில் தலைமன்னார் செல்லும் புகையிரதத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் வேளை எமது பண்டிதர் மாமாவை அங்கு சந்திக்க நேர்ந்தது வியப்பிற்குரியதே.

எங்களைக் கண்டதும் கட்டியணைத்து ஆனந்தப்பட்ட அவர் பல புத்திமதிகளைக் கூறினார். அவர் கூறியவற்றில் முக்கியமானது கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் ஏற்புடையதல்ல அது ஆண்களுக்கும் பொதுவானதே! அவர்களும் கற்பைப் பேணிக் காக்க வேண்டியவர்களே. எனவே முக்கியமாக நீங்கள் கலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் இள வயதினர், அழகானவர்கள் மிக, மிக அவதானாகமாக உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இது மிக முக்கியமானது என்று அவர் கூறினார். அவர் அன்று கூறிய அறிவுரைகள் என்றும் எங்களால் மறக்க முடியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் ஆறுமுகன் அவர்களின் தோற்றம் யாவரையும் கவரக் கூடியது. அவருடைய நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, மற்றும் அவரது தோற்றத்திலேயுள்ள கம்பீரம் (அது அவரது பரம்பரைச் சொத்து) பேச்சு வன்மை என்ற எல்லாவற்றையும் அவரது உறவினர், நண்பர்கள் கூடிப் பேசி மகிழ்வதை நானறிவேன்.

பண்டிதர் மாமா, பாடக்கூடிய பிள்ளைகளைப் பாடச் சொல்லிக் கேட்டு பரிசில்கள் வழங்கி ஊக்குவித்தார். கல்விகற்க ஆர்வமுள்ள பிள்ளைகள், குடும்ப நிலைமையால் கல்விகற்க முடியாதிருப்பின் அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் கொடுத்தும், தூரத்தில் இருந்து பாடசாலைக்கு வரமுடியாதவர்க்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்தும் கல்விகற்க வைத்தார்.

இன்று பண்டிதர் அவர்கள் இவ்வுலகில் இல்லாதிருப்பினும் அவரின் புதல்வி தமிழரசி கடந்த வருடம் கனடாவில் மொன்றியல் மா நாகரிலுள்ள கொன்கோடியா பல்கலைக்கழகத்தில் நடை பெற்ற ஓர் இசை அரங்கேற்றத்திற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பான ஓர் உரையாற்றினார். இசை சம்பந்தமான அவரது உரை யாவராலும் பாராட்டப்பட்டதை அந்த விழாவிற்கு சென்றிருந்த நானும் அறிவேன். அவரது தமிழறிவு மட்டுமல்ல இசை சம்பந்தமான அறிவும் பாராட்டுக்குரியதே.

பண்டிதர் மாமா வளர்த்த, வளர்க்க விரும்பிய தமிழையும், இசையையும் கல்வியையும் தொடர்ந்து வளர்ப்பதே, நாம் நம் தாய் மொழியாம் தமிழுக்கும் இசைக்கும் செய்யும் கைமாறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47. தனக்கென வாழாத் தன்மையாளன்

அண்ணன் மகன் நீ மு க சீவரத்தினம், 370 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

புங்குடுதீவில் புகழ் பூத்த குடும்பத்தில் பிறந்த, இணைபிரியாத வாணிப விவசாய சகோதரர்களே நீலையனார், பிள்ளையனார் ஆவர். அவர்களிருவரும் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்கள். நீலையனாருக்கு வைத்திலிங்கம் [மூத்தவர்], முத்துக்குமாரு [இளையவர்] என இரு ஆண் மக்களும் நான்கு பெண்பிள்ளைகளும் இருந்தனர். அவர்கள் 20ம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை வாழ்ந்தனர்.

இளையவர் முத்துக்குமார் தலைசிறந்த சித்த வைத்தியர், சோதிடர், சங்கீத விற்பன்னர், தானாகவே வாத்தியக்கருவிகளை வாசித்துப் பாடுவார். தொகையான விவசாய நிலங்களின் சொந்தக்காரன். அதன் காரணமாக பெருந்தொகையான பொதுமக்களுக்கு உதவி புரிந்ததால் அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார்.

1952ல் இவ்வுலக வாழ்வை நீக்கிய போது அவரது மகன்மார் அறுவரையும் மகள்மார் இருவரையும் கல்வி புகட்டி, ஊர்புகழ நற்சந்ததியினராய் உலகறிய விட்டுச்சென்றார். மூத்த புதல்வர்களான குமாரசுவாமி, தியாகராசா, கணபதிப்பிள்ளை மூவரும் கொழும்பு தெமட்டகொடையில் பிரபல வர்த்தகர்கள். மூத்த மகள் பொன்னம்மா ஊரின் சிறந்த தனவந்தர் செல்லத்துரை அவர்களின் பிரியபத்தினி. ஐந்தாவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதரித்தவர் தான் பண்டிதர் ஆறுமுகன். அவரின் பின் Dr கிருஷ்ணபிள்ளை. அடுத்த இளைய சகோதரி நாகரத்தினம் பொறியியலாளர் காராளபிள்ளை அவர்களின் அன்பு மனைவியாயார். கடைசியாகப் பிறந்தவரே பாலசுந்தரம். அவர் இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாண வட்டாரக் கல்வியதிகாரியாய் நுண்கலைப் பகுதிக்கு இருந்தார்.

இந்த எட்டுக் குடும்பமும் கூட்டுக் குடும்பமாக வாழவேண்டுமென அரும்பாடுபட்டவர்தான் பண்டிதர் மு ஆறுமுகன். பண்டிதர் தமது கல்வியை இலங்கை - இந்தியாவில் பெற்றிருப்பினும் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்களிடம் அபார பற்றுடையவர். அதன் காரணமாக முத்தமிழ் ஆர்வம் இவரிடத்து மேலோங்கி இருந்தது. நன்கு பாடுவார். சிறந்த பேச்சாற்றல் மிக்கவர். சமூக, சமய சொற்பொழிவுகளை, சபையினர் சலிக்காதிருக்க அபிநயங்களுடன் பல உபகதைகளையும் சேர்த்து மணிக்கணக்காக ஆற்றும் வல்லமை பெற்றிருந்தார்.

அத்துடன் பரம்பரையாய் காத்து வந்த சோதிடம், சித்த ஆயுள்வேத வைத்தியம், விவசாயம், பாற்பண்ணை போன்றவை இவருக்கு கைவந்த கலைகளாகும். அதன் காரணமாக 1950ல் பொன்னிலம் என்ற உழவு இயந்திரத்தை கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அறிமுகம் செய்ததுடன், நவீன வேளாண்மை செய்கையில் ஈடுபட்டு மக்களிற்கு வழிகாட்டினார். கொழும்பில் தமிழ் மறைக்கழகம் உருவாகப் பாடுபட்டவர். புங்குடுதீவில் சிலப்பதிகார விழாவை நடாத்த முன்னின்று உழைத்ததுடன் புதைபொருள் - வரலாற்று ஆய்விலும் த கவனத்தைத் திருப்பி இருந்தார்.

தனது வம்சத்தின் பதினாறு தலைமுறையை வரிசையாகச் சொல்லும் ஆற்றல் இவரிடமிருந்தது. பரம்பரையாகக் காத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த புராதன வைத்திய சோதிட வானசாத்திர ஏட்டுச்சுவடிகள், நூல்கள், பாரம்பரிய குடும்பச்சின்னங்களையும் பேணிப் பாதுகாத்தும், பயன்படுத்தியும் வந்தார். உருத்திரபுரம் சிவாலயப் புனர்நிர்மாணம் செய்வதற்கு வேலாயுத சுவாமியாருக்கு உதவினார்.

1961ம் ஆண்டு வவுனிக்குளம் பாடசாலையில் அதிபராக இருந்த போது வவுனிக்குளம் சிவாலயத்தைக் கண்டுபிடித்ததோடு அதனைப் புனருத்தாரணஞ் செய்யவும், சிவராத்திரி விழாபோன்ற சமய விழாக்களை நடாத்தவும் அரும்பாடுபட்டார். அனைத்திற்கும் மேலாக இவர் மல்லாவி மத்திய மகாவித்தியாலயத்தை குடியேற்றத்திட்ட ஆரம்பப் பாடசாலையாக முதன் முதலில் பொறுப்பேற்று அதிபராக இருந்து அரும்பணியாற்றினார்.

மல்லாவிக் குடியேற்றமும் பாடசாலையும் சமகாலத்தில் ஆரம்பித்த போது பெரும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. இருந்த ஒரு சில பொதுக்கிணறுகள் மிகவும் ஆழமானவை. ஊர்மக்களும் பாடசாலை மாணவர்களும் பாடசாலைக் கிணற்றைப் பாவித்து வந்தனர். பாடசாலையின் கிழக்குத் தெற்கு எல்லைகள் அடர்ந்த காடாக அப்பொழுது இருந்தது. மாலையானதும் மான்கூட்டங்கள் கிணற்றின் தளத்தில் தேங்கிநிற்கும் நீரைக்குடிக்க கூட்டம் கூட்டமாக வரும். இரவானால் பன்றிக்கூட்டமும் யானைகளும் கூட வந்துவிடும். அப்படிப்பட்ட சூழலில் பாடசாலை வளாகத்திருந்த அதிபர் மனையில் குடும்பத்தோடு பண்டிதர் தங்கியிருந்தார். 1956ல் இருந்தே அனுமதிப்பத்திரம் பெற்ற துப்பாக்கியை அவர் வைத்திருந்ததால் அவரையும் குடும்பதையும் கொடியவிலங்குகளிடமிருந்து காத்துக் கொள்ள அது உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அனுமதியானது இவர் பாடசாலை நேரம் முடிந்ததும் பின்னேரங்களில் சமய, சமூகப் பணிக்காக துணுக்காய், நட்டாங் கண்டல், வவுனிக்குளம் சென்று பணியாற்றப் பேருதவியாக இருந்தது.

இவர் மீது ஊர் மக்கள் அபார அன்பு காட்டுவதால் அவர் எங்கு சென்றாலும் அவருடன் துணையாகப் பலர் கூடவே செல்வர். ஊர் மக்களின் பிணக்குகள், பிரச்சனைகளை மிகவும் சாதுர்யமாக தீர்ப்பதையும் பாடசாலை மாணவர்களை வீடு வீடாக சென்று வரவை ஊக்குவிப்பதையும் தன் அரும்பணியாக ஆற்றியவர். வறிய குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், நொந்து போன குடும்பங்களில் இருந்து மாணவர்களை இனங்கண்டு அவர்களிற்கு தமது செலவிலேயே உண்டியும் உறையுளும் வழங்கி கல்வி புகட்டியவர். அவருக்கு ஜெயந்திநகர் குருகுலத்துடன் நெருக்கமான தொடர்பிருந்தது.

1958ல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து அநுராதபுரத்தில் இருந்த தமது சொத்துக்களில் ஒரு பகுதியை விற்று, நூற்றுகணக்கான சிந்து இன பண்ணை மாடுகளுடன் தமது மாமனாரின் குடும்பத்தாரையும் அழைத்து ஜெயந்திநகரில் குடியேறியதுடன் தமது இறுதிக்காலம் வரை பாற்பண்ணையை பரிபாலித்து வந்தார்.

1948ம் ஆண்டு மிகப்பாதுகாப்பான "சில்வர்ஸ்பிறே" என்ற படகு நெடுந்தீவு - ஊர்காவற்றுறை மக்கள் பயன்பாட்டிற்காக (சோல்பரிப்பிரபு) அரசு வழங்கிய போது, நயினாதீவு - புங்குடுதீவு புளியடித்துறைக்கும் பாதுகாப்பான படகுச் சேவை வேண்டுமென்ற ஆர்வத்தால் தமது மூத்த சகோதரர்கள் மூலம் சுவீடன் தயாரிப்பான விவியன் என்ற படகை (ரோயல் நேவியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கப்பட்டது) கொழும்பில் கொள்வனவு செய்வித்து தனியார் சேவையாக சேவையில் ஈடுபடுத்தினார்.



(விவியன் [vivian] பயணிகள் படகின் மேல்தளத்தில் ஆறுமுகனாரும் அவரருகே அவரின் அண்ணன் மகன் சீவரத்தினம் அமர்ந்திருக்க படகு நயினாதீவிலிருந்து புளியடித்துறைக்கு வரும் காட்சி)

திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவதில் அபார ஆற்றல் புங்குடுதீவு மக்களுக்கிருந்தது. அதன் காரணமாக பண்டிதரின் உறவுகளும் இலங்கையின் பல்வேறு இடங்களில் வேலை செய்தனர். அந்நிலையில் அக்குடும்பங்களின் பிள்ளைகளைத் தானே பொறுப்பேற்று தன்னுடன் வைத்து கல்விபுகட்டி உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்குக் கொண்டு சென்ற பெருமகனார். அவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமை அடைகிறேன்.

அழகிய சிறிய புங்குடுதீவிற்குள் அடங்கிக்கிடந்த எம்மை இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் சுற்றிக் காண்பித்ததுடன் நாட்டின் முன்னனிப் பாடசாலைகளில் கல்வி பயில வைத்தார். பாடசாலை விடுமுறைக் காலங்களில் தாம் கடமையாற்றிய பிரதேசங்களுக்கு எம்மை அழைத்துச் சென்று பாடம் சொல்லித் தருவதில் ஆறுதல் அடைந்தார். அதற்காக நாம் இவ்வுலகில் வாழும்வரை நன்றிக்கடன் பட்டவர்களாக இருக்கின்றோம். இவரது ஆசிரியச் சேவையின் சிறப்பால் "ஐயா மாஸ்ரர்" என்றே அறியப்பெற்றார்.

இவ்வாண்டு பண்டிதர் முத்துக்குமார் ஆறுமுகனாரின் நூற்றாண்டு ஆயினும் அவரது புகழும் சேவையும் பலநூறாண்டுகள் தொடர்ந்தே செல்லும் என்பதை உறுதியாக நம்புகிறேன்.
"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48. எம்நாட்டிற்கு பெருமை தேடித்தந்தவர்

திருமதி ராதா டி சில்வா

காலங்கள் கடந்து போய்விட்டது ஆனாலும் பண்டிதரைப் பற்றிய பசுமையான நினைவுகள் எனக்கு இன்றும் உண்டு. புங்கைமாநகரில் படித்து, வேலைசெய்த போதும் எமது ஊரை மறந்துவிட முடியாது. "பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் நற்றமிழ் வானிலும் நனி சிறந்தனவே" என்ற பொன்வாக்குப்படி என் தாய்நாட்டை நினைக்கும் போதெல்லாம் பெருமை.

எனது சிறுவயதில் என் தாயாருடன் பாடசாலை விடுமுறை நாட்களைக் கழிப்பதற்காக புங்குடுதீவு செல்வது வழக்கம். அந்த நாட்களில் பண்டிதர் தன்னுடைய சிறுகுழந்தையான தமிழரசியை கொண்டு விடுமுறைக்கு புங்குடுதீவு வருவார். என் இருதயத்தில் நினைவாக நிழலாடும் பண்டிதர் ஆறுமுகன் அவர்கள் அழகான தோற்றம், படிப்பறிவு, பண்பாடு எல்லாம் ஒருங்கே கொண்டவர். என் தாயாரிடம் கல்விபயின்றவர், உறவினரும் கூட. எனவே என் தாயாரைக் காணவருவார். அவர்கள் இருவருமே கல்வியில் தேர்ச்சி பெற்றபடியால் கல்விசம்பந்தமாயும் குடும்பவிடயம் பற்றியும் உரையாடுவர். புங்குடுதீவுக்கு வரும் போதெல்லாம் எம்மையெல்லாம் கண்டு தான் போவார்.

எம் நாட்டுக்குப் பெருமை தேடித்தந்த எம்முடைய பண்டிதரின் ஆக்கங்கள் எல்லாம் என்றும் பசுமையாக தமிழ்மக்களிடையே பேணப்படவேண்டும். தமிழரசி, தந்தையாருடைய ஆக்கங்களைப் பேணி, ஊக்கமாக தமிழ் மொழிக்கெனத் தன்னை அர்பணித்துக் கொண்டிருப்பதும் எமக்குக் கிடைத்த பாக்கியமே. பண்டிதர் அவர்களின் நூற்றாண்டு கொண்டாடும் இவ்வேளையில் தமிழரசியை வாழ்க! வழ்க! என வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49. மறவாத நினைவுகள்

முகுந்ததாசன் செல்வத்துரை, கனடா.

பண்டிதர் என எல்லோராலும் பாசத்துடன் அழைக்கப்பட்ட திரு ஆறுமுகன் முத்துக்குமார் அவர்களை எனது தாய் மாமன் என்று கூறுவதைவிட மாமேதை என அழைப்பதை விரும்பினேன். விரும்புகிறேன். ஏனெனில் இவரின் அறிவும் ஆற்றலும் பலமுக சமுதாய நோக்கும், சமயத்தின் மீதும், தமிழின் மீதும் கொண்டகாதலும் இவற்றை மேம்படச் செய்ய அவர் ஆற்றிய தொண்டும் இன்னும் பலவுமாகும்.

இறைவன் இவரை பூமிக்குத் தந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்நிலையில் இவரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது எனது நோக்கமல்ல. மாறாக இவரைப்பற்றியும் இவர் எமது சமூதாயத்திற்குச் செய்த பல சேவைகளில் எனக்குத் தெரிந்த சிலவற்றையும் இரத்த உறவுகள் வாழ்ந்த நிலை, கற்ற கல்வி, ஆற்றிய ஆசிரியப்பணி என்பனபற்றியும் கூற விழைந்திருக்கின்றேன். இவை, இவரோடு சமகாலத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற பலருக்குத் தெரிந்திருந்தாலும் அவர்களுக்கு நினைவூட்டவும், இளம் சந்ததியினரும் வருங்காலச் சந்ததியினரும் சிந்திக்கவும் தொண்டுகள் செய்யவும் தூண்டும் என்ற நம்பிக்கையோடு தொடர்கின்றேன்.

இலங்கையில் வடபால் அமைந்த பெருமை நிறைந்த புங்குடுதீவில் பாரம்பரிய உயர்குலத்தில் பிறந்த இவரின் தந்தை நீலையினார் முத்துக்குமாரு ஆவார். ஆயுள்வேத வைத்தியரான இவரது வீட்டு வளவில் மருத்துவ மூலிகைச்செடிகள் வளர்ந்து பூத்துக் குலுங்கும். இவரை நாடிவரும் நோயாளிகளுக்கு இலவசமாகவே வைத்தியம் செய்தவர். இந்த இலவசசேவையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததிச்சுவடுகள் தான் பலமுகம் கொண்ட ஆறுமுகனுக்கும் (பண்டிதர்) இருந்திருக்க வேண்டும். அதனாற்றான் என்னவோ பல சேவைகளை தேவையானோர்க்கு தேவையானபோது செய்து உயர்ந்து நிற்கிறார்.

நீலயினார் முத்துக்குமாரு - சிதம்பரநாயகி என்னும் மங்கை நல்லாளை மணம் முடித்து எட்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். அவர்களில் மூன்று அண்ணன், ஒரு அக்கா, ஒரு தங்கை, இரண்டு தம்பி என நடுவே பிறந்தார் பண்டிதர். இவரின் கடைசித் தம்பியார் பிறந்த போது தாயார் நோய்வயப்பட்டு காலமானார். இதனால் குடும்பத்தின் மூத்த சகோதரியும் எமது தாயுமான திருமதி செ.பொன்னம்மா (பொன்னு) அவர்கள் குடும்பப் பொறுப்பை ஏற்றுத் தன் உடன் பிறந்தோரை பண்புடையவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் வளர்த்தெடுத்தார்.

பண்டிதர் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை புங்குடுதீவில் கற்றபின்னர் தொடர்ந்து படிக்க யாழ்ப்பாணம் செல்லவேண்டி இருந்தது. இன்றைய இளம் தலைமுறையினருக்கு பல ஆண்டுகளுக்கு முன் இருந்த பிரயாணச் சிரமங்கள் தெரிந்திருக்காது. பாலங்கள் [பண்ணைப்பாலம், வாணர்பாலம்] கட்டப்படாத காலம் - இயந்திர வள்ளங்கள் இல்லாத காலம். யாழ்ப்பாணம் செல்வதானால் கடல் மார்க்கம் ஒன்றே வழி. சிறிய வத்தைகளின் மூலமே யாழ்ப்பாணம் செல்லமுடியும். கடல் பெருக்கெடுக்கும் காலங்களில் அதுகூட முடியாமல் போகும். இப்படியான சிரமங்களுக்கிடையிலே சிறுவயதிலே [11வயதுச் சிறுவனாய் - 1925] யாழ்ப்பாணம் சென்று கல்விகற்றார். 15வயதில் ஆசிரியராகி, அவருக்கு வயதில் மூத்தோருக்கும் கல்வி கற்பித்தார். அதைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் வள்ளத்திலே சென்று ஹோமியோபதி மருத்துவமும், சங்கீதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றார். தமிழும் சமயமும் கற்று, மதுரைத் தமிழ்ப் பண்டிதராய் பட்டம்பெற்று, புங்குடுதீவின் முதற்பண்டிதர் என்ற பெருமையை புங்குடுதீவுக்கு வாங்கித் தந்தார்.

ஆசிரியராயும் அதிபராயும் யாழ்ப்பாணம், புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, அனலதீவு, விடத்தல்தீவு, மன்னார், பொலநறுவை, கொழும்பு என இலங்கையின் பல பகுதிகளிலும் சேவை ஆற்றியுள்ளார். இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற் போல கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிலும், திருநெல்வேலி (தின்னவேலி) பண்டித ஆசிரியர் கல்லூரியிலும் விரிவுரையாளராகவும் சேவை செய்துள்ளார். எந்தெந்தக் காலப் பகுதியில் ஆசிரியராக, அதிபராக, விரிவுரையாளராக சேவை செய்தார் என்பதைக் காலப்போக்கில் மறந்துவிட்டேன்.

அவர் இந்தியாவில் படித்த காலத்தில் கண்ட கேட்ட இலக்கிய, ஆத்மீகச் சொற்பொழிவுகள் தமது ஊர் மக்களும் அநுபவிக்க வேண்டும் என்ற கனவு, புங்குடுதீவு கண்ணகி அம்மன் திருவிழாவில் நனவாகியது. அம்மன் கோவில் வீதியில் பெருமேடை அமைத்து சிலப்பதிகார விழா எடுக்க முன்னின்று உழைத்தார். அதற்காக ம பொ சி, கி வா ஜகந்நாதன், ஆ முத்துசிவன், அ ச ஞானசம்பந்தன் போன்ற தமிழ்இலக்கிய அறிஞர்களை இந்தியாவில் இருந்து அழைத்து வந்து பேருரைகளை நிகழ்த்த வைத்தார்.

நெடிய சிவந்த உருவம், எல்லோரையும் தன்வசம் இழுக்கும் வசிகரம், எல்லோரையும் கவர்ந்ததால் பங்குபற்றிய பட்டிமன்றங்களிலும் சொற்பொழிவுகளிலும் அவரை பண்டிதர் என்ற பெயர் கொண்டே அழைத்தனர். இச்சிறப்புக்களுடன் அவரிடம் ஒருவித ஆத்மசக்தியும் காணப்பட்டது. அதற்கு, 'முகுந்ததாசன்' என எனக்கு அவர் வைத்த காரணப்பெயரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லலாம். நான் பிறந்து மூன்று நான்கு மாதங்களாக பார்வை அற்றவனாக, கண் இமை திறவாமலே இருந்தேன் என எனது பெற்றோர் கூறுவர். எனது மாமா (பண்டிதர்) வந்து எனது தலையைத் தடவி கண்ணா! என்று அழைக்கவும், நானும் இமை திறந்து அவரைப் பார்க்க, கண்ணனின் இன்னோர் பெயரான முகுந்தனை நினைத்து எனக்கு முகுந்ததாசன் எனப்பெயர் வைத்தாராம். கைபட கண்திறந்தது அவரிடமிருந்த ஆத்மீக சக்தியாகும். அதுமட்டுமல்ல பண்ணிசைப் பாடல்களான திருமுறைப் பாடல்களைப் பாடவும் எனக்குக் கற்றுத்தந்தார்.

இவர் ஓவசியர் தம்பிப்பிள்ளையின் மகள் மகேஸ்வரிதேவியை திருமணம் செய்து ஒரு பெண்குழந்தையைப் பெற்றார். தமிழின் மேல் கொண்ட காதலால் அக்குழந்தைக்கு தமிழரசி எனப் பெயர்சூட்டி மகிழ்ந்தார்.

பண்டிதர் அதிபராய் இருந்து ஓய்வு பெற்றபின்னரும் மனிதருக்குச் செய்யும் தொண்டுகளில் இருந்தும் கல்வி புகட்டுவதில் இருந்தும் ஓய்வுபெறவில்லை. ஓய்வு பெற்ற பின்னர் கூட வடமாகாண போதனா ஆசிரியர்களுக்கும் விரிவுரை நிகழ்த்தினார். அவரின் மாணவனான திரு வே கதிரவேலு (அப்பு) அவர்கள் நடாத்திய குருகுலத்தில் ஒரு சதமேனும் வாங்காது கல்வி கற்பித்தார். 'குருகுலப்பணியாற்றிய பண்டிதர் ஐயா' என குருகுல அப்புவே பண்டிதரின் கல்வெட்டில் எழுதியிருக்கிறார்.

பண்டிதர் ஆறுமுகன் அவர்களை மாமேதை என்பதா? நல்ல பேச்சாளன் என்பதா? ஆத்மீகவாதி என்பதா? இன மத மொழிப்பற்றாளன் என்பதா? இன மதம் கடந்த மனிதநேயம் உள்ளவன் என்பதா? எப்படிக் கூறினாலும் 'பண்டிதர்' என்ற பெயரே நிலைத்து நிற்கிறது. வாழ்க அவர் புகழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50. பண்டிற் மாமா

மருமக்கள்

எமது மாமனாரின் நூற்றாண்டு நினைவாக அவரின் சிறப்புக்களை இச்சிறப்பிதழில் எழுதுவதில் மகிழ்ச்சி கொள்கிறோம். அவரின் சிறப்புகளை, சைவத் தொண்டுகளை எழுதுவதற்கு வசனங்கள் போதாது.

அவர் மாணவர்கட்கு கல்வி கற்பிப்பதற்காகவே இவ்வுலகில் வித்தானவர். பார்வைக்கு உயர்ந்த நெடிய கம்பீரமானவராய், எப்போதும் வெள்ளை உடையில் பளிச்சென்று இருப்பார். எதற்கும் ஒரு சிரிப்புச் சிரிப்பார். அதனைப் பார்த்தால் "This task is nothing or Mission impossible" என்ற மாதிரி.

அவர் இலங்கையின் பல இடங்களில் அதிபராய்ப் பணியாற்றியவர். அவர் கொழும்பு நெல்வீதி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் ஆகப் பணியாற்றிய வேளையில் நம்மவர்களின் பிள்ளைகளை அங்கு கூட்டிச் சென்று, தன்னுடன் வைத்திருந்து கல்விகற்க வைத்தார். எந்த மாணவன் கூடியதுடியாட்டத்துடன் விவேகமாக இருப்பானோ அவனை அவர் பெரிதும் விரும்புவார். அப்படிப்பட்டோரை இனங்கண்டு கெட்டுப் போகாது நல்வழிப்படுத்துவார்.

இன்று கம்பீரமாக எழுந்து நிற்கும் வவுனிக்குளச் சிவாலயத்தில் இருக்கும் ஆதிசிவலிங்கம் 1961 ஆண்டு, வவுனிக்குளக் காட்டினுள் மேலே நான்கு கிடுகு போட்ட ஒரு சிறு கொட்டிலில், ஆவுடையார் இன்றிக் கிடந்தது. காட்டினுள் கிடந்த சிவனை நாட்டு மக்களுக்கு கண்டெடுத்துக் கொடுத்தவர் பண்டிற் மாமாவே. அந்தச் சிவாலயம் கட்டத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியை காணிஅமைச்சிடம் இருந்து பொற்றுக் கொடுத்து, இந்தியாவிலிருந்து கணபதி தபசியை அழைத்து வந்து ஆகமவிதிப்படி கோயில் வேலைகளைத் தொடக்கி வைத்தவரும் அவரே.

காடாய் இருந்த கோயிற்காணியைத் திருத்திக் கோயிலை கட்டி எழுப்பவேண்டிய செலவுகளுக்காக 1962, 1963, 1964 ஆண்டுகளில் முத்தமிழ் கலைவிழாக்களை Fund Raising முறையில் முன்னின்று நடத்தி வைத்தவர் என்ற பெருமை இவரைச் சார்ந்தது. தமிழகம் சென்று படித்து அப்போதுதான் இந்தியாவிலிருந்து பட்டம் பெற்று வந்த நடனக்கலைஞர் வேலானந்தம், இசைக்கலைஞர் பொன் சுந்தரலிங்கம் போன்றோரை கலையுலகிற்கு அறிமுகம் செய்து வைப்பதற்காக இக்கலைவிழாக்களில் அவர்களையும் பங்கேற்க வைத்தார்.

எனது நினைவுகளில் 1964ம் ஆண்டு நிகழ்ச்சிகள் பெரிதும் மனதுக்கு உவகை ஊட்டுவதாக இருந்தது. பெரிய திறந்த வெளியரங்கில் நடந்த முத்தமிழ் விழாவில் யாழ் மாகாணசபை அரசாங்க அதிபர் திரு நெவில் ஜயவீர, நீதியரசர் கலாநிதி H W தம்பையா (Q C), இன்னும் பலர் கலந்து சிறப்பித்தனர். நான் அவ்விழாவின் வரவேற்பில் கலந்து கொண்டு, அங்கு வருகை தந்த பெரியோர்களுக்கு மாலை அணிவித்தமை நினைவுகூறத் தக்கது.

இக்கலைவிழாவில் எனது அம்மாவின் பெறாமகன் V K ஆறுமுகம் "நரியைப் பரியாக்கியமை" என்ற தலைப்பில் வில்லுப்பாட்டை நடாத்தி தான் பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்த்தார். இவை யாவும் பண்டிற் மாமாவின் ஊக்குவிப்பால் நடந்தேறியவையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"
என்ற குறளுக்குத் தக்கதாக மாமாவின் தர்ம பத்தினியாராகிய எமது மாமி மகேஸ்வரிதேவியின் பெருமையைக் கூறலாம்.

ஆங்கிலேயர் இலங்கையை ஆண்ட காலத்தில் கொழும்பு வைத்தியசாலையில் M D யாய் இருந்த Dr கனகசபையின் பேத்தியாரே எங்கள் மாமி. அவரது தாயின் மாமன் 'கப்டின் முத்தையா' அவர்களின் பெயருடன் இன்று கூட கொழும்பில் 'முத்தையா றோட்' இருக்கிறது. அப்படி இருந்தும் தற்பெருமை கொள்ளாதவர்.

அவ அநுராதபுரத்தில் இருந்தோ, கொழும்பிலிருந்தோ புங்குடுதீவு வரும்போதெல்லாம் வயிலினுடனேயே வருவாராம். வயலினில் கீர்த்தனைகள், பாரதியார் பாடல்களையெல்லாம் வாசித்துக் காட்டுவார் என்று எனது அண்ணன் நினைவு கூறுவார். ஒரு குடும்பத்தில் 'The lady of the house' என்பார்கள் அப்படி வாழ்ந்தவர் மாமி.

தனது மைத்துனர், மைத்துனி பிள்ளைகளை மட்டுமல்ல தனது உடன் பிறப்புக்களையும், அவர்களது பிள்ளைகளையும், தன் தாய்வழிச் சொந்தங்களையும், சொல்லாமல் கொள்ளாமல், நட்டுநடு இரவில் கூட மாமா அழைத்து வரும் பிள்ளைகளையும் வளர்த்த பெருமை அவரைச் சார்ந்தது. மாமா பிறருக்கு உதவி செய்வதையிட்டு ஒருநாளும் முகம் சுழிக்க மாட்டார். அங்கு ஒரே வேலையாட்கள் மயமாயிருக்கும். தண்ணீர் இறைக்க, சமையல் செய்ய, தோட்ட வேலை செய்ய, மாடுமேய்க்க என்று அநேகம் பேர் வேலை செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமி அழகழகாக உடைகள் தைத்துத் தருவார். விடுதலை நாட்களில் மற்ற மாமிமார் - பட்டுமாமி, காசுமாமி, சாவகச்சேரி மாமி எல்லோரும் வருவார்கள். இரவிரவாக விளையாட்டுக்கள், சித்த மருந்து தயாரித்தல் எல்லாம் நடைபெறும்.

பண்டிற் மாமா கற்பித்தலுடன் மட்டும் இருந்துவிடவில்லை. அவர் பழமரங்களையும் பூமரங்களையும் பெரிதும் காதலித்தார். ஒரு மரத்தில் இன்னொரு மரத்தை ஒட்டி ஒரே மரத்தில் விதவிதமாகப் பூக்கவும் காய்க்கவும் வைப்பார். புங்குடுதீவில் அவர் வாழ்ந்த காலத்தில் நல்ல தண்ணியை விலைக்கு வாங்கி பூமரங்களுக்கு ஊற்றி வாளர்த்தவர். அதனால் 'பூவாத்தியார்' என்றும் அன்றைய மாணவர்கள் அவரை அழைத்தனர். முக்கியமாக காடுகளைத் திருத்தி வயலாக்கி, நூற்றுக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடிக் கொடுத்தார்.

கோணேஸ்வரர் கோயிலுக்கு வருபவர்களை, கோட்டை நுழை வாசலில் வரவேற்பவை இரட்டைக் கயல்மீன் இலச்சினைகளே. பதினைந்து அடி உயர்ந்த தூண்களில் கயல்மீன் இலச்சினையைக் கண்டு முன்னோரான பாண்டியர் காலத்தை நினைத்துப் பார்க்கிறோம். திருக்கோணேசர் கோயிலை போர்த்துக்கீசர் இடித்து பின்னர் அந்த இடிபாடுகளைக் கொண்டு பிரடெரிக் கோட்டையை போத்துக்கீசர் கட்டிய போது கோயிலுக்குரிய இத்தூண்கள் நுழைவாயிலில் இடம் பெற்ற அற்புதம் பாருங்கள்.

இத்தகைய அற்புதம் வாய்ந்த கோணேசர் நாதனுக்கு மாமா இயற்றிய இந்த ஆசிரியப்பா ஒன்றே அவரது கவித்துவத்தையும், தமிழாற்றலையும் ஆன்மீக நிறைவையும், தமிழ்மக்கள் மேலும், பண்டைய தமிழ் அரசின் மேலும் அவருக்கு இருந்த பற்றுதலையும் சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மறையி னாரந்த நால்வரந் தணருய்ய
நலமேவு வடாஆல் நிழல்
ஞானநிறை வானவொரு யோகநிலை தாமருவி
மோனத் திருந்த குருவே
மேன்மைதரு கனகசபை யிரதசபை யதனுடன்
மெத்தென்ற ரத்ன சபையும்
மேவரிய தாமரம் கோணாசலந் திகழ்
சூடா மணிச் சபையிலும்
ஆன்மகோ டிகளுய்ய அடியாரு ளத்திலும்
அனவரத நடன மாடும்
அன்னமென் நடையம்மை பங்கனார் கங்கைவார்
அனலென்ன செஞ் சடையினார்
தேனன்ன செந்தமிழ் தெரிந்த சங்கப்புலவ
தென் பொதிகைமலை வள்ளலே
தெண்டனிட் டனமெங்கள் பண்டையர சீந்தெமைச்
சிறப்புறக் காத்த ருள்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51. Pandit M Arumugan

Mrs L Arulalingam.

Late, honourable, Pandit Arumugan, was a well-known gentleman, scholar, teacher & principal. I have had the privilege to go with him to Nilveethi Central College in Colombo where he taught during the 1950's. I truly felt proud and honoured, as he was one of the most intelligent, and respected teachers there.

I now realise that he must had been inspired by Mahakavi Subramaniya Bharathiyar, as his character reminds me the following verse of one the poems by Bharathiyar:

"Nimirntha nannenjum naer konda paarvaiyum

Nilathinil yaarukkum anjaatha nerigalum"

"With upright heart and steadfast look and ideals that are not afraid of anyone in the world"

He was a kind-hearted person and had the habit of aiding individuals in times of need, without fear or hesitation. He was a loveable man as well as a very strict administrator.

I appreciated the way he maintained his relationship with loved ones. He cared for and assisted various children with their education as if each child was his very own.

He encouraged everybody to do the right thing no matter what.

My mother—he called her Anniyammah, took advantage of his tremendous ability to influence others to teach us valuable lessons including differentiating between right and wrong acts. He respected our family & our family



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

reciprocated this respect, as he was father's cousin; we called him "Asai Iyah". I loved his dynamic personality and consider him my role model and my inspiration.

He was a spiritual man, and participated in various spiritual programs. During the latter part of my life I was fortunate enough to meet him and his daughter often at Thirukketheeswaram Temple where my Thaththa had a madam called Thiruvasagamadam.

He was very helpful regarding Swamigal and conducted spiritual programs at many occasions.

At her young age, his daughter experienced her father's ability to love and care. He always took his daughter with him anywhere & everywhere he travelled. I was amazed at the way she cooperated with her father in any situation.

Now we can see that she is following her father's footsteps. We should also wish her the best of luck during the 100$^{th}$ year celebration.

There are so many articles that are available, published by colleagues, friends, but surely I am invalid to write about him.

Finally, I would like to thank Thamilarasi for allowing me the opportunity to reveal my thoughts and reflections regarding Pandit Arumugan that are still in my conscious mind.

LOVE IS GOD.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 52. Inaugurating memories of Late Shrimath Pundit M Arumugan

Nephew, Ramachandran Karalapillai

Since years have gone by, but memories remains with us. I would like to contribute this, in remembrance of my Late uncle who's One hundredth Years of memories

Although he passed away in his late middle ages, his contributions to the society, as well as to the family was very exemplary.

He was born as fifth child to Late Mr and Mrs N Muthukumar (My grand parents) the Muthudaiyar family hails from East Punguduthivu.

He is a very well articulated, high scholar and great poet Lot of articles were published by him in various papers. He has taught various pupils lives all over the world.

I could remember when I was in reception stage, he used to bring books for year two, likewise always very well ahead. His resemblance a tall person always very neat and he use to wear the the National attire always with a smile on his face.

Below the photo depicts, was taken at Donalds Studio in Maradana Colombo soon after my Grandfathers 31st day Ash Ceremony has taken place in Rameshwaram in 1951 .

I recall mum used to tell me there wasn't any high school locally in Punguduthivu, so he took my mother to Uduvil girls High school in Uduvil. Bordered over there. It was very unusual in 1930 s girls from village to go to high



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

school to get higher education. One of my paternal aunt Mrs Emily GUNARATNAM, later she was Principal for Methodist Girls High School in Trinco, used to praise my uncle. Whilst his visits to see my mum at Uduvil, she was studying in English medium and my mum was in Tamil medium, he brings books and magazines she recalls..

1937-1941 It was an era of world war II my mother recalled the days, she use to tell us it was very hard to commute from one place to another Japan was bombing Ceylon at that time, most people were starving amidst that my uncle use to stock all the food items and was issuing to under privileged people.



Also his architectural calibre was envisaged by the house he built, shown below at that time my mother was engaged to my father and, he took this photo. Standing by right to my grandfather is my mum, and to the left is cousin sister Kanthi akka. This house was given as a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

dowry to my mother by my uncle. I would like to mention this was joint effort by other uncles as well, especially other uncle kasu mama (Mr M Thiagarajah the third in the family.)

My farther was serving Royal Ceylon Air force, we have to live in Guarded quarters, uncle use to come to china bay to visit us, he is very good at hunting both my father and him,

Whether it may be a Happy or unhappy event, my uncle will be at our door step in no time, I think it was 1963 my father had tuberculosis, while he was serving as a civil foreman who use to oversee building maintenances for Royal Ceylon air force buildings and structural engineering, where he was exposed to Asbestos made him fallen ill with TB, then he was admitted to the private nursing home in Trincomalee.

My mother was all alone, we all were very young my smaller brother must be an infant. She couldn't manage all the children. He came for help took my smaller brother and other sister and left with my aunty in Malavi, where he was based as principal for Malavi school. At the same time he returned back to Trincomalee where my father was admitted to Syamala Hospital, visited the nursing home, he met the TB Specialist Dr Viravanthan it was very difficult effort to meet the specialist, who treated my farther and he was back home in few months. At that time I was bordered in Scandavarodaya College. Again uncle came to Scanda, and we flew back to Trincomalee to see my dad.

He had a Ford Tractor and his Brother In Law Mr.Vithiyanthan who is residing now in Chennai was very



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

helpful to him in cultivating farmland and irrigation, which in turn helped lot of people in Agriculture, and raised lot of work opportunities. He had lot of stamina, everytime when you see him he will be doing something.

I have come to London in early seventies at that time I saw him last in Dematagoda Mart Place, where there was another family house in Colombo. After that I heard his voice over the Telephone conversation, When My farther had the accident and my uncle was running up and down to Anuradapura and lastly Jaffna hospital, where my father had passed away. He gave me a Phone call about my farther's departure. I had collapsed to the floor, that was the last I heard his voice.

I cannot forget him for my lifetime. His soul may with lord, but the memories remains with us all the time.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 53. Aasai Aiyaa

Nithy Sivasandiran

Aasai Aiyaa was respected and dear to my family as he was my father's brother and mentor as well as being my mother's teacher. My earliest memory of him is actually one my mother used to repeat when I was younger. My parents wanted Aasai Aiyaa to eedu thodakka [vithtiarampam] me so drove to his house in Killinochchi. Aasai Aiyaa then took me to Murgandi Pillayar temple for eedu thodakka and Aasai amma made a special mothagam to give as an offering to Pillayar. I always used to look forward to their visits and going to their house. Although, I was sometimes a bit scared of Aasai Aiyaa, I loved listening to his stories as well as Aasai amma's stories about her childhood in Sinhala villages. He used to also show me all the plants they had and teach me about them before feeding me roasted cashew nuts. He was a very knowledgeable person and had varying fields of expertise such history, astrology and herbal medicine.

Thamilarasi acca learnt more from Aasai Aiyaa than she did at school and he ignited her passion for knowledge. Aasai Aiyaa used to take her around India, not as a holiday but as an educational trip, using it as opportunity to study things they discussed first hand. Aasai Aiyaa was a fountain of information and it is unfortunate that he did not get the time to pass on all his experience and knowledge to acca and her children. The best way Thamilarasi acca can keep his memory alive is to continue learning and passing her knowledge onto future generations. I will never forget Aasai Aiyaa was and I am fortunate to have spent time with this extraordinary man.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 54. தந்தையின் குளிர் நிழலில்..........

தமிழரசி

அன்புடன் அணைக்கும் தந்தையாய்; அறிவுரை கூறுவதில் மந்திரியாய்; தூக்கிச்சென்று, குளிப்பாட்டித் தூங்கவைக்கும் சேவகனாய்; கதைகள் பரிமாறும் தோழனாய்; வேதநுட்பமும், சைவநுட்பமும் விளங்கவைத்த சற்குருவாய்; சங்கத்தமிழை ஆராய்ந்து சொன்ன அருந்தமிழ்ப் புலவனாய்; இலங்கையிலும் இந்தியாவிலும் காட்டிலும் மேட்டிலும் கடலிலும் தன் நிழலாய்த் தொடரவைத்து, ஏட்டையும், கல்வெட்டையும் வாசிக்க கற்றுத் தந்த ஆய்வாளனாய்; கோயில்களை, சிற்பங்களை, சிலைகளை, சித்திரங்களை மிகநுணுக்கமாய் கற்பித்த சிற்பியாய்; நோயுற்ற போது வைத்தியம் செய்யும் வைத்தியனாய்; ஓடவும், பாயவும், நீந்தவும் கற்றுத்தந்த விளையாட்டு வீரனாய் எத்தனை பிறவி எடுத்தார்? இந்த விழா மலரின் நாயகன்.

பொலநறுவைக் காட்டிற்குள் அவர் தமிழரின் பண்டைய சுவடு தேடி நடந்த காலம் அது. எனக்கும் அவருக்கும் தனித்தனியே head light வாங்கியிருந்தார். அதை இயக்குவது எப்படி என்று சொல்லித் தந்தார். அப்போ எனக்கு அவரின் தோளில் இருக்கும் வயது. அவரும் நானும் இரண்டு வேட்டைக்காரரும் இரண்டு கூலியாட்களுமாக  மலைப்பாங்கான பகுதிக்குச் சென்றோம். அங்கே சிறியவெளி. அதில் மிகப்பழைய கட்டிடம் ஒன்று இடிந்து கிடந்தது. அந்த இடிபாடுகளைக் கிளறி குறிப்பெடுத்தார். அவர் சொல்லித் தந்ததுபோல் head lightஐப் போட்டு அங்கு கிடந்த சிலையை மெல்ல மெல்லத் துடைத்து, அவர் செய்வது போல நானும் ஏதோ குறிப்பெடுத்தேன். அங்கே ஒரு சிறுத்தையைக் கண்ட வேட்டைக்காரர் எங்களை யானை அதருக்குள் [அடர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுக்குள் யானை செல்லும் வழி tunel போலிருக்கும்] போகச் சொன்னார். யானை அதருக்குள் புலிகள் நுழையப் பயப்படுமாம். மற்ற வேட்டைக்காரர் முன்னே போக என்னைத் தோளில் வைத்துக்கொண்டு பண்டிதர் பின்னே சென்றார். மற்றவர்கள் எங்களைத் தொடர்ந்தனர். யானையொன்று அதருக்குள் எம்மை நோக்கி ஓடிவந்ததால் வேகமாகாக் காற்று வந்து எங்களை மோதியது. எங்களுக்கு முன்னே சென்ற வேட்டைக்காரர் தன்னிடம் இருந்த கத்தியால் அதரைவெட்டி பண்டிதரை அதருக்கு வெளியே போகச்சொன்னார். அவர் சிரித்தபடி என்னை அதருக்குள் வெளியே இருந்த மரக்கிளையில் வைத்தார்.

"ஒருகையுளது எறிவலோ யானும் இருகை சுமந்து வாழ்வேன்" என்ற பழையபாட்டை எனக்குக் கூறிபடி அதருக்குள் நின்றார். யானைவந்தது. துவக்கினுள் இருந்த தோட்டாவை வெளியே எடுத்த வேட்டைக்காரர் துவக்கின் நுனியில் வாய்வைத்து ஊதினார். அது சங்குபோல் ஒலித்தது. வேகமாக எங்களுக்கு மிக அருகே வந்தயானை பிளிறியவாறு ஒருபக்கத்து அதரை சிதைத்து, துதிக்கையை நீட்டியபடி ஓடியது. அப்படி ஓடும் போது அந்த யானை ஒரு மூஞ்சூறு போலவே இருந்தது. அவரது குளிர்நிழலில் அஞ்சாமையை, தமிழை, எம்தமிழர் வரலாற்றை மண்ணுக்குள் ஆராய்ந்து எடுக்கும் முறையையும் கற்றேன். அநுராதபுரம் மண்ணிலும், வன்னி மண்ணிலும் கூட எம்மூதாதயர் அடிச்சுவடு தேடி தந்தையின் குளிர் நிழலில் நடந்திருக்கிறேன்.

'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்னும் பழமொழி சொல்லும் உண்மையை எனக்குக் கற்றுத் தந்தவர் என் தந்தை. அதை நினைக்க என்சிறுவயது ஞாபகம் கூடவே வருகிறது. அப்போ எனக்கு நான்கு, ஐந்து வயதிருக்கும். அம்மா பாசிமணிகளைக் கொண்டு அழகழகாக cushion covers க்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூப்போடுவார். அதற்காகக் குளக்கரைக் காட்சி கீறித்தரும்படி தந்தையிடம் கேட்டிருந்தார். அதனை அவர் வரைய, நான் கதிரையின் கைப்பிடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.



குளக்கரையில் நிற்கும் ஒரு கலைமானையும் [ஆண்], பிணைமானையும் [பெண்] கீறினார். அவர் படம் வரைந்த தாளில் கண்ணீர்த் துளிகள் வீழ்ந்தன. 'ஏன் அழுகிறேங்க?' என்றார். 'உங்களையும் அம்மாவையும் கீறி இருக்கிறேங்க என்னைக் கீறவில்லையே!' என்றேன். 'யார் சொன்னது உங்களைக் கீறவில்லை என்று?, முழுமையாய் ஓவியம் வரைய முன் பார்க்கக் கூடாது என்பார்கள். நான் வரைந்து முடிக்கமுன்னர் எப்படி நீங்க சொல்லலாம்? நீங்க என் மகள் தானே? என்னோட தானே இருக்கவேண்டும், என்று கூறியபடி கலைமானின் வயிற்றின் கீழே மூன்று, நான்கு கோடுகள் கீறினார். என்ன ஆச்சரியம்! ஒரு குட்டிமான் அங்கே நின்றது. அதுவும் கலைமானின் கால்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே நின்றது. நான் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தேன். அவரது நிழலாயிருந்து சித்திரம் வரையக் கற்றேன்.

அதற்குப்பின் எத்தனையோ படங்கள் கீறித்தந்திருப்பார். ஆனால் அந்த மான்குட்டியை நான் மறக்கவில்லை. 1982ல் அங்குபோய் வரும்பொழுது அதை என்னுடனே எடுத்து வந்து விட்டேன். என் எண்ணத்தை மதித்து உடனே மான்குட்டியாய் என்னைக்கீறிய பாங்கு, என்னைக் கவர்ந்தது. குழந்தை வளர்ப்பில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய மிகச்சிறந்த பண்பு இது.

பாற்கடல் என்றால் என்ன? எனக்கு, திருப்பாற்கடல் கடைந்த கதையை எனது தந்தை, சொன்ன நாளில் நான் அவரைக் கேட்ட கேள்வியே 'பாற்கடல் என்றால் என்ன?' என்பதாகும்.
அது ஓர் இரவு நேரம். முற்றத்தில் நிலவு காய்ந்து கொண்டு இருந்தது. எங்கள் வீட்டு முற்றத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். நிலவைக் காட்டி அது என்ன? என்று என்னைக் கேட்டார். "சந்திரன்" என்றேன்.
"வேறு என்ன என்று எல்லாம் சொல்வார்கள்?" என்று கேட்டார்.
"நிலவு, மதி, திங்கள்" என்று எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன்.

"இந்த நிலவு எப்படித் தெரிகிறது?" என வினவினார்.
"வட்டமாய்ப் பால்போலத் தெரிகிறது" என்றேன்.
"இப்போ பாற்கடல் புரிந்ததா?" என்று சிரித்தார்.
எனக்கு ஏதும் புரியவில்லை.
"நிலவுக்கும் பாற்கடலுக்கும் என்ன தொடர்பு?" என்றேன்.
"மகள்! கொஞ்சம் முந்தி நீங்க தானே சொன்னீங்க பால் நிலவு" என்று. "ஏன் பால்நிலவு என்று சொன்னீங்க?" "நிலவு என்ன பசுப்பாலாய் சிந்துகிறதா?" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிலவு பால் போல வெள்ளையாய் இருப்பதால் அப்படிச் சொன்னேன்" என்றேன்.

"கடலும் பால் போல வெள்ளையாய் இருந்ததால் பாற்கடல் என்றார்கள்" என்றார்.

"கடல் எங்கே வெள்ளையாய் இருக்கிறது?" என்றேன்.

"வடதுருவம் தென்துருவம் எங்கும் கடல் வெள்ளையாக இருக்கிறது தானே"என்றார்.

"அது பனிப்பாறை அல்லவா?" என்றேன்.

"பனிப்பாறைக்குக் கீழே கடல் இல்லையா?" என்றார். "கடல் கடுங்குளிரால் உறைந்து மெல்ல பனிப்பாறையாய் - பாற்கடலாய் மாறி இருக்கும்" என்றார். தொடர்ந்து கதை சொன்னார்.

"இப்போ வடதுருவமும் தென் துருவமும் இருப்பது போல அந்தக் காலத்தில் நம்ம வங்கக் கடலிலும் இடையிடையே பனிப்பாறை இருந்தது. அதைக் கண்ட பண்டைய தமிழர் பாற்கடல் என்று அழைத்தனர். கால நிலை மாற்றத்தல் குமரிமலைக்குக் கிழக்கே பெரிய பனிப் பொழிவு ஏற்பட்டது. மக்கள் குடிக்க நீரின்றி அவதிப்பட்டனர். அதனால் தமிழரும் ஆரியரும் சேர்ந்து வங்கக்கடலைக் கடைந்தனர். ஆண்டாள் "வங்கக் கடல்கடைந்த மாதவனை" என்று சொல்கிறாள் அல்லவா? அவர்கள் அன்று கடைந்தது பனிக்கடலையே. பனிப்பாறையைக் கடைய நல்ல தண்ணீர் - குடிநீர் வருந்தானே! தண்ணீரைக் கண்டதும் தமிழரும் ஆரியரும் ஒருவரோடு ஒருவர் அடிபட்டு, போர்செய்து தமிழரில் ஒருபகுதியினர் இறந்தனர். இருந்த தமிழரில் சில அடிவருடித் தமிழரும் ஆரியரும் சேர்ந்து உண்டாக்கிக் கொண்டதே பாற்கடல் கடைந்த கதை'.

சங்க காலத்தமிழருங்கூட கிழக்குக் கடலைத் 'தொடுகடல்' என்பர். தொடுகடல் என்றால் தோண்டிய கடல். பனிக்கடலை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடலைத் கடையக் கடைய அது தோண்டப்படும் தானே? அதனால் அதற்கு தொடுகடல் என்று பெயர். அதுமட்டுமல்ல இந்தப் பனிக்கடல் கடைந்த கதை கிழக்கே சுமத்திரா, யாவா, இந்தோனேசியா, தாய்லாந்து, கம்பூசியா போன்ற நாடுகளிலும் பன்னெடுங்காலமாகச் சொல்லப்படும் கதையாகும். மேற்கே இருக்கும் நாடுளுக்கு அவ்வளவாகத் தெரியாது'

மகள்! இங்க நீங்க இரண்டு விடயத்தை கவனிக்க வேண்டும். ஒன்று பாற்கடல், மற்றது தண்ணீர். தண்ணீரைத் தமிழர் அமிழ்தம் என்றனர். அதனையே திருவள்ளுவர் 'வானின்று உலகம் வழங்கி வருதலால் தான் அமிழ்தம் என்று உணர்' என்றார். இக்குறளில் மழையே உலகத்தை வாழ்விக்கும் அமிழ்தம் என்கிறார் அல்லவா? தண்ணீர் என்ற அமிழ்தத்தையே தேவர்கள் உண்டார்கள். தண்ணீர் இல்லாவிட்டால் உலக உயிர்கள் எத்தனை நாளைக்கு உயிர்வாழும்?

பாற்கடல், தண்ணீர் போன்ற தமிழ்ச் சொற்களின் உண்மைக் கருத்துக்கள் ஆரியருக்குத் தெரியாது. ஆரியர் பழந்தமிழரின் ஆகுபெயரின் கருத்துத்தை அறியாது பாற்கடலாய்ச் சொல்ல, நம்மை ஆளவந்த ஆங்கிலேயரும் Milky Ocean என்று சொல்கிறார்கள். அது தொடர்கதையாய் நீள்கிறது. பண்டைய தமிழர் மிகத்தெளிவாய் ஆராய்ந்து அறிந்ததை எல்லாம் போட்டு மூடி சமாதிகட்டுகிறோம்' என்றார். அதன் உண்மையை இன்று நான் நேரில் காண்கிறேன். இன்னும் நம்மவர்க்கு பாற்கடல் என்றால் என்ன? அமிழ்தம் என்றால் என்ன? என்ற உண்மைகள் தெரியவில்லையே!

இதுபோல் எத்தனையோ விடயங்களை எனக்குச் சிறுவயதில் மிகவிரிவாய்ச் சொல்லித் தந்ததுடன் இந்தியாவின் எல்லோரா வரை என்னை அழைத்துச் சென்று, அஜந்தா ஓவியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பநுட்பத்தை, இராவணனைக் காட்டி பண்டைய உலகின் பாரம்பரியங்களை என்னுள் விதைத்தார். நான் இராமநாதன் கல்லூரி விடுதியில் தங்கிப் படித்ததால் அவருடன் இருந்து நான் கற்ற காலம் மிகமிகக் குறைவே. எனினும் நான் எழுத்தில் வடிப்பனவற்றில் என் தந்தையின் குளிர்நிழலில் கற்றவை மின்னிக்கொண்டே இருக்கின்றன. அவை தமிழுக்கு ஒளியூட்டும்



திருமதி சிவஞானம் தியாராஜா
[பண்டிதரின் இரண்டாவது அண்ணி]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு நீ மு கணபதிப்பிள்ளை. திருமதி நல்லம்மா கணபதிப்பிள்ளை
[பண்டிதரின் மூன்றாவது அண்ணனும் அண்ணியும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு காராளபிள்ளை, திருமதி நாகரத்தினம் காராளபிள்ளை
[பண்டிதரின் தங்கையும் கணவனும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு நீ மு பாலசுந்தரம், திருமதி புனிதவதி பாலசுந்தரம்
[பண்டிதரின் தம்பியும் மனைவியும்]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதரின் மருகன் திரு செ சிவபாதசுந்தரம்,
மகள் தமிழரசி,
பேரன் வாகீசன், பேத்தி ஆரணி - 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பண்டிதரின் பேரன் வாகீசன், அலிஸ், பூட்டன் ஷீனோமயன்



பண்டிதரின் பேத்தி ஆரணி சிவபாதசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழுபெருந் தீவகமும் ஏத்தெடுப்ப
இனிதோங்கி எழுந்த நல்லோன்"




பாற்கடற் பூங்கா வனமெனும் ஏழு
தீவகங்காக்கும் ஊர்காவற்றுறையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org